ஜூன் - 2022

WINMEEN.COM

LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்

வ. எண்	பொருளடக்கம்	பக்க எண்
01.	பரமானந்தா – மீத்திறன் கணினி	02
02.	உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாள்	03
03.	உலக புகையிலை நாள்	09
04.	தகவல் தொடர்பு செயற்கைக்கோள் – ஜிசாட் – 24	11
05.	மாநில கல்விக்கொள்கைக்கான குழு	15
06.	பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்	21
07.	குழந்தை இறப்பு விகிதம்	22
08.	'ஜன் சமர்த்' வலைத்தளம்	26
09.	SAMPRITI–X – இராணுவப் பயிற்சி	33
10.	உணவுத் தரக்கட்டுப்பாடு: தமிழ்நாடு முதலிடம்	35
11.	பல்முனை சரக்குப் போக்குவரத்துப் பூங்கா	44
12.	செஸ் ஒலிம்பியாட்	47
13.	விலங்குகளுக்கான இந்தியாவின் முதல் COVID தடுப்பூசி	48
14.	'எண்ணும் எழுத்தும்' திட்டம்	51
15.	'அக்னிபத்' திட்டம்	61
16.	சர்வதேச யோகா நாள்	65
17.	தேசிய தடகளம்: தமிழ்நாடு ஒட்டுமொத்த சாம்பியன்	66
18.	வேலையின்மை விகிதம்: 4.2%	71
19.	BRICS உச்சி மாநாடு	80
20.	ஆபரேஷன் 'சங்கல்ப்'	87

1. பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டமானது (PMEGP) எந்த ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது?

அ. 2023-24

ஆ. 2024-25

இ. 2025-26 ☑

ஈ. 2029-30

✓ பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை (PMEGP) 2025-26 வரை தொடர ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்தச்செலவு ₹13,554.42 கோடியாகும். இந்தத் திட்டத்தின் நீட்டிப்பு 2021-22 முதல் 2025-26 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு 15ஆவது நிதி ஆணைய சுழற்சியில் உள்ளது. ஐந்து நிதியாண்டுகளில் சுமார் 40 இலட்சம் பேருக்கு நிலையான வேலைவாய்ப்புகளை இத்திட்டம் உருவாக்கும். இது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது.

2. அண்மையில், 'பரமானந்தா' என்னும் மீத்திறன் கணினியை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. ஐஐடி கௌகாத்தி

ஆ. NIT திருச்சிராப்பள்ளி

இ. ஐஐடி காந்திநகர் ☑

ஈ. ஐஐடி மெட்ராஸ்

✓ அதிநவீன கணினி மேம்பாட்டு மையமும் (C-DAC) காந்திநகரில் அமைந்துள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து 'பரமானந்தா' என்ற புதிய மீத்திறன் கணினியை அறிமுகப்படுத்தியுள்ளன. இது மத்திய அரசின் தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் இயக்கத்தின் இரண்டாம் கட்டத்தில் தொடங்கப்பட்டது. இந்த மீத்திறன் கணினி 838 டெரா பிளாப்கள் என்ற உச்சபட்ச செயல்திறனை வழங்கும் திறன்கொண்டது. இதன்மூலம், மொத்தமாக 24 பெட்டா பிளாப்கள் செயல்திறன்திறன்கொண்ட 15 மீத்திறன் கணினிகளை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது.

3. 'Tobacco: Poisoning Our Planet' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. NITI ஆயோக்

ஆ. உலக சுகாதார நிறுவனம் ☑

இ. UNICEF

ஈ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

World Health Organization

✓ உலக புகையிலை ஒழிப்பு நாளையொட்டி உலக சுகாதார நிறுவனம் 'புகையிலை: நமது கோளை நஞ்சாக்குகிறது' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. எட்டு மில்லியன் மனித உயிர்கள், 600 மில்லியன் மரங்கள், 200,000 ஹெக்டேர் நிலம், 22 பில்லியன் டன் நீர், மற்றும் 84 மில்லியன் டன்கள் கரியமில வாயுவை பூமியின் வளிமண்டலத்தில் வெளியிடும் ஓர் ஆண்டைய இழப்புகளுக்கு புகையிலைத் தொழிலே காரணம் என்று அந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.

4. 2021-22-இல் இந்தியாவின் சர்க்கரை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

அ. கேரளா

ஆ. மகாராஷ்டிரா ☑

இ. அஸ்ஸாம்

ஈ. ஹிமாச்சல பிரதேசம்

- ✓ ஐந்தாண்டு இடைவெளிக்குப்பிறகு, 2021–22ஆம் ஆண்டில், மகாராஷ்டிரா, உத்தர பிரதேசத்தை பின்னுக்குத்தள்ளி, இந்தியாவின் முதல் சர்க்கரை உற்பத்தியாளராக மீண்டும் தனது இடத்தைப் பிடித்துள்ளது.

- ✓ 2021–22ஆம் பிழியாண்டுக்கான (அக்–செப்) மகாராட்டிர மாநிலத்தின் உற்பத்தி 138 இலட்சம் டன்களாக இருந்தது. இது 2018–19ஆம் பிழியாண்டின் முந்தைய 107.21 இலட்சம் டன்களை விட அதிகமாகும். மகாராஷ்டிராவை தொடர்ந்து உத்தரபிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

5. ஐக்கிய அரபு அமீரகத்துடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் சமீபத்தில் கையெழுத்திட்ட நாடு எது?

அ. ஆஸ்திரேலியா

ஆ. இஸ்ரேல் ☑

இ. பிரான்ஸ்

ஈ. இத்தாலி

- ✓ ஐக்கிய அரபு அமீரகத்துடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இஸ்ரேல் கையெழுத்திட்டுள்ளது. இது அரபு நாடொன்றுடன் இஸ்ரேல் மேற்கொள்ளும் முதல் பெரிய வர்த்தக ஒப்பந்தமாகும். இரு மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையே வர்த்தகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட இந்த ஒப்பந்தம், ஐக்கிய அரபு அமீரகத்தில், குறிப்பாக துபாயில் அலுவலகங்களை அமைக்க அதிக இஸ்ரேலிய நிறுவனங்களை ஊக்குவிக்கும். பிப்ரவரியில் இந்தியாவுடன் இதேபோன்ற ஓர் ஒப்பந்தத்தை ஐக்கிய அரபு அமீரகம் மேற்கொண்டது.

6. 'கதிசக்தி சஞ்சார்' வலைத்தளத்தை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?

அ. ரெயில்வே அமைச்சகம்

ஆ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

இ. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்

ஈ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

- ✓ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் 'கதிசக்தி சஞ்சார்' வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அது, நாட்டில் 5G சேவை தொடங்குவதற்கு முன்னதாக, கண்ணாடியிழை வடங்கள் மற்றும் கோபுர நிறுவல்களை அமைப்பதற்கான அனுமதிகளை விரைவுபடுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

- ✓ இந்த வலைத்தளம் தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கான மையப்படுத்திய வழியுரிமை (RoW) அனுமதிகளை செயல்படுத்துவதோடு 5G சேவைகள் உட்பட RoW அனுமதிகளுக்கு விண்ணப்பிக்க பயன்படுத்தப்ப–டும். இது ஒப்புதலுக்கான நேரத்தை கிட்டத்தட்ட 100 நாட்களிலிருந்து சுமார் 22–ஆகக்குறைக்கிறது.

7. 2022 – உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Impact of Light Pollution on Migratory Birds ☑

ஆ. Impact of Air Pollution on Migratory Birds

இ. Impact of Noise Pollution on Migratory Birds

ஈ. Impact of Pandemic on Migratory Birds

- ✓ உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாளானது மே.14 அன்று கொண்டாடப்படுகிறது. இது புலம்பெயர்ந்த பறவைகளின் வாழ்விட இழப்பு, காலநிலை மாற்றம், நச்சூட்டு நோய் மற்றும் சட்டவிரோதமாகக் கொல்லுதல்போன்றவற்றை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

- ✓ உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் இரண்டு நாட்களில் கொண்டாடப்படுகிறது. அவை மே மற்றும் அக்டோபர் 2ஆவது சனிக்கிழமைகளில் கொண்டாடப்படுகிறது. "Impact of Light Pollution on Migratory

Birds" என்பது இந்த ஆண்டில் (2022) வரும் உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாளுக்கானக் கருப்பொருளாகும். ஆண்டுதோறும் 229 வகையான பறவைகள் இந்தியா நாட்டிற்கு வலசை வருகின்றன.

8. 2022 போர்ப்ஸ் பட்டியலின்படி, உலகில் அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டு வீரர் யார்?

அ. லியோனல் மெஸ்ஸி ☑

ஆ. விராட் கோலி

இ. லீப்ரான் ஜேம்ஸ்

ஈ. கிறிஸ்டியானோ ரொனால்டோ

✓ 2022ஆம் ஆண்டுக்கான போர்ப்ஸின் அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியலின்படி, கடந்த 12 மாதங்களில் உலகிலேயே அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டு வீரராக கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி உள்ளார். லியோனல் மெஸ்ஸி, கால்பந்து விளையாடுவதன்மூலம் ஆண்டுக்கு 75 மில்லியன் அமெரிக்க டாலர்கள் சம்பாதிக்கிறார். விளம்பர ஒப்பந்தங்கள்மூலம் அவர் மேலும் $55 மில்லியன் அமெரிக்க டாலர்களைப் பெறுகிறார். அவர் பட்டியலில் லீப்ரான் ஜேம்ஸ் மற்றும் கிறிஸ்டியானோ ரொனால்டோவைவிட முன்னணியில் உள்ளார். முன்னதாக 2019ஆம் ஆண்டு போர்ப்ஸ் பட்டியலில் லியோனல் மெஸ்ஸி முதலிடத்தில் இருந்தார்.

9. 'Roy: Going for Broke' என்பது எந்தக் கிரிக்கெட் வீரரின் சுயசரிதையாகும்?

அ. ஷேன் வார்ன்

ஆ. ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் ☑

இ. ரிக்கி பாண்டிங்

ஈ. ஆடம் கில்கிறிஸ்ட்

✓ ஆஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரரும், 2 முறை உலகக்கோப்பையை வென்றவருமான ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் சமீபத்தில் மகிழுந்து விபத்தில் உயிரிழந்தார். பேட்டிங் ஆல்-ரவுண்டரான அவர் கிரிக்கெட்டின் மூன்று வடிவங்களிலும் விளையாடியுள்ளார். 46 வயதான அவர் 198 ஒருநாள் போட்டிகளில் 6 சதங்கள் மற்றும் 30 அரை சதங்கள் அடித்துள்ளார். 133 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். 'Roy: Going for Broke' என்பது ஸ்டீபன் கிரேவுடன் இணைந்து எழுதிய அவரது சுயசரிதையாகும்.

10. இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) எத்திட்டத்தின் பாகமான திட இராக்கெட் பூஸ்டர் HS-200-ஐ வெற்றிகரமாக பரிசோதித்தது?

அ. ககன்யான் ☑

ஆ. ஆதித்யா-L1

இ. சந்திரயான்-3

ஈ. ஆதித்யா-L2

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையமானது மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் 'ககன்யான்' திட்டத்தின் முக்கிய அங்கமாக இருக்கும் திட இராக்கெட் பூஸ்டர் HS-200-ஐ வெற்றிகரமாக பரிசோதித்தது. ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. 203 டன் திட உந்துபொருளுடன் கூடிய HS-200 பூஸ்டர் 135 வினாடிகளுக்கு பரிசோதிக்கப்பட்டது. இந்த ஏவுகலம் பல்வேறு தொழிற்துறைகளுடன் இணைந்து ISRO-ஆல் உருவாக்கப்பட்டதாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மாநிலங்களுக்கு GST இழப்பீடு ₹86,912 கோடி: தமிழகத்துக்கு ₹9,602 கோடி

மாநிலங்களுக்கு சரக்கு சேவை வரியின் (GST) இழப்பீட்டுத் தொகையாக ₹86,912 கோடி முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. மே.31ஆம் தேதி வரையிலான இந்த இழப்பீட்டுத் தொகையில், தமிழகத்துக்கு ₹9,602 கோடி வழங்கப்பட்டுள்ளதாகவும் மத்திய நிதி யமைச்சர் நிர்மலா சீதாராமன் சார்பில் அத்துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய GST இழப்பீட்டுத் தொகை ₹25,000 கோடியாக உள்ளது. இருப்பினும் மாநிலங்களின் மூலதனச் செலவுகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் கூடுதல் வரி மூலம் மற்றும் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும் ₹61,912 கோடியையும் சேர்த்து விடுவிப்பதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. GST இழப்பீட்டு தொகை வழங்கப்படாதது குறித்து சர்ச்சை எழுப்பப்பட்டு வந்த நிலையில், மத்திய அரசு தற்போது நிலுவையின்றி அனைத்து தொகையையும் முழுமையாக விடுவித்துள்ளது.

2017–ஆம் ஆண்டு ஜூலை முதல் GST அமலுக்கு வந்தபோது, மாநிலங்களுக்கு ஏற்படும் வரி வருவாய் இழப்பீட்டை ஈடுகட்ட அடுத்த 5 ஆண்டுகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க சட்டம் கொண்டுவரப்பட்டது. இருப்பினும், இந்த வரி இழப்பீட்டை மாநிலங்களுக்கு கூடுதலாக வழங்க மத்திய அரசு மேலும் நிதி ஆதாரங்களுக்கு சில சரக்குகளில் கூடுதல் வரி (செஸ்) விதித்து மாநிலங்களின் வருவாயை மத்திய அரசு பாதுகாத்தது. இது கூட்டு வளர்ச்சி விகிதத்தில் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 2017–18, 2018–19 நிதியாண்டுகளில் குறிப்பிட்ட நேரத்தில் GST இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே கரோனா நோய்த் தொற்றால் மத்திய அரசுக்குரிய கூடுதல் வரி அதிகரிக்கவில்லை என்பதுடன், கூடுதல் வரி வருவாயில் வீழ்ச்சியும் ஏற்பட்டது. இந்த வீழ்ச்சிக்கான இடைவெளியை நிரப்பவும், மாநில அரசுக்கு வழங்க வேண்டிய GST இழப்பீட்டுக்காக நிதி ஆதாரங்களின் இடைவெளியைப் போக்கவும் வெளிச்சந்தையில் மாநிலங்கள் கடன் பெற மத்திய அரசு அனுமதித்தது. பின்னர், அனைத்து மாநிலங்களும் ஒப்புக்கொண்ட நிலையில், கடந்த 2020–21 நிதியாண்டில் ₹1.1 லட்சம் கோடி, 2021–22 நிதியாண்டில் ரூ.1.59 லட்சம் கோடி என சந்தையில் கடனைப் பெற்றுக் கொள்ள மாநிலங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. இதுதவிர வழக்கமான GST இழப்பீட்டு தொகையையும் மத்திய அரசு விடுவித்து வந்தது.

ஆனால், நிகழாண்டில் GST வரி, கூடுதல் வரி வருவாய் படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதை முன்னிட்டு கடந்த நிதியாண்டிற்கும் நடப்பு நிதியாண்டிற்கும் வழங்க வேண்டிய இழப்பீட்டு தொகையின் நிலுவைத் தொகையை முழுமையாக உடனடியாக வழங்க மத்திய அரசு முன் வந்துள்ளது. இதன்படி சரக்கு சேவை வரியின் இழப்பீட்டை பெறும் 21 மாநிலங்களுக்கு கடந்த ஜனவரி 2022 வரையிலான தொகை ரூ.47,617 கோடி; 2022, பிப்ரவரி–மார்ச் ஆகிய மாதங்களுக்கு ₹21,322 கோடி; இறுதியாக ஏப்ரல் – மே மாதங்களுக்கு ரூ.17,973 கோடி என மே 31–ஆம் தேதி வரை மொத்த நிலுவைத் தொகை ₹86, 912 கோடியாக கணக்கிடப்பட்டது. இந்தத் தொகை முழுமையாக இந்த மாநிலங்களுக்கு செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில், மகாராஷ்டிர மாநிலத்தை (₹14,145 கோடி) அடுத்து தமிழகம்தான் அதிக அளவாக ₹9,602 கோடி பெற்றுள்ளது. மற்ற மாநிலங்களில் உத்தர பிரதேசம் ₹8,874 கோடி, கர்நாடகம் ₹8,633 கோடி, தில்லி ₹8,012 கோடி பெற்றுள்ளது.

இதில் தமிழக அரசு தரப்பில் ரூ.11,600 கோடி வரை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், முன் கணக்கீட்டின்படி ரூ.9,602 கோடி கிடைத்துள்ளது. இறுதிக் கணக்கீடுகளில் எதிர்பார்த்த தொகை முழுமையாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

---

2. சொற்குவையில் 7.64 இலட்சம் கலைச்சொற்கள் உருவாக்கம்: விரைவில் கட்டணமில்லா தொலைபேசி சேவை

தமிழக அரசின் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில் தொடங்கப்பட்ட சொற்குவை திட்டத்தின்கீழ் இதுவரை 7 லட்சத்து 64 ஆயிரத்து 824 கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்க்கலைச்சொல் தொடர்பான ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி சேவை விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இது குறித்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் செய்திக்குறிப்பு:

600–க்கும் மேற்பட்ட துறைகள்: இன்றைய கல்விப்புலத்தில் உள்ள 600–க்கும் மேற்பட்ட துறைகளில் புழங்கும் கலைச்சொற்கள் அனைத்தையும் திரட்டி அவற்றுக்கு நிகரான தமிழ்க்கலைச்சொற்களை வடிவமைத்து இணைய தளத்தின் பொதுவெளியில் வெளியிடுவதும், இதுவரை தமிழில் வெளிவந்துள்ள அகராதிகளில் இடம்பெற்றுள்ள அனைத்துச்சொற்களையும் ஒன்று திரட்டி, நிரல்படுத்தி தமிழின் சொல்வளத்தை உலகறியச் செய்வதுமே சொற்குவைத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட "sorkuvai.com" என்ற இணையதளத்தின் வாயிலாக தமிழ்க்கலைச்சொல் தொடர்பான ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. விரைவில் தொடங்கப்படவுள்ள 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லாத் தொலைபேசி வாயிலாகவும் தமிழ்க்கலைச்சொல் தொடர்பான ஐயங்களைத் தீர்த்துக்கொள்ளலாம்.

---

3. ₹3,000 கோடிக்கு அஸ்திரா ஏவுகணை கொள்முதல்: பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம்

இராணுவத்தளவாட உற்பத்தியில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் விதமாக பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன் ₹2,971 கோடியில் அஸ்திரா எம்கே–1 ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

அஸ்திரா எம்கே–1 ஏவுகணை, இந்திய கடற்படையிலும் விமானப்படையிலும் விண்ணில் இருந்து விண்ணில் உள்ள இலக்கைத்தாக்கி அழிக்கும் வலிமைகொண்டது.

பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்திடம் இருந்து 248 அஸ்திரா ஏவுகணைகள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. அவற்றில், 200 ஏவுகணைகள் இந்திய வான்படையிலும், 48 ஏவுகணைகள் கடற்படையிலும் பயன்படுத்தப்படும். DRDO வடிவமைத்த அஸ்திரா ஏவுகணை முதன்முதலில் கடந்த 2003–ஆம் ஆண்டு மே மாதம் பரிசோதிக்கப்பட்டது. அதன்பிறகு அந்த ஏவுகணைகள் பல முறை பரிசோதிக்கப்பட்டு சுகோய் போர் விமானத்தில் சேர்க்கப்பட்டன. அந்த ஏவுகணைகள், அடுத்த சில ஆண்டுகளில் தேஜஸ் மார்க்–1ஏ போர்விமானத்திலும் மேம்படுத்தப்பட்ட மிக்–29 ரக போர்விமானங்களிலும் சேர்க்கப்படும்.

---

4. உக்ரைன்–ரஷியா போர் எதிரொலி! இந்தியா பொருளாதார வளர்ச்சி 4.1%–ஆக குறைவு

உக்ரைன்–ரஷியா போர் எதிரொலியால் ஜனவரி முதல் மார்ச் வரையிலான 4ஆவது காலாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 4.1 சதவீதமாக குறைந்துள்ளது என மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புள்ளியியல் அமைச்சகம் மேலும் கூறியுள்ளதாவது:

உக்ரைன்–ரஷியா போர் காரணமாக இந்திய பொருளாதாரம் நான்காவது காலாண்டில் குறைந்த அளவிலான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அதன்படி, ஜனவரி–மார்ச் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 4.1% அளவிற்கே வளர்ச்சி கண்டுள்ளது. பணவீக்கம் பொருளாதார மீட்சிக்கு பெரும் தடையை ஏற்படுத்தியுள்ளது. அதன் காரணமாக, 2021–22 முழு நிதியாண்டில் (2021 ஏப்ரல் முதல் 2022 மார்ச்) நாட்டின் பொருளாதாரம் 8.7 சதவீத வளர்ச்சியை மட்டுமே எட்டியுள்ளது. இது, அமைச்சகம் மூன்று மாதங்களுக்கு முன்பாக மதிப்பீடு செய்திருந்த 8.9 சதவீதத்தைக் காட்டிலும் 0.2 சதவீதம் குறைவாகும். அதேசமயம், முந்தைய 2020–21 நிதியாண்டில் நாட்டின் பொருளாதாரம் 6.6 சதவீதம் பின்னடைவைக் கண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜனவரி–மார்ச் காலாண்டில் சீனா பொருளாதாரம் 4.8% வளர்ச்சியை எட்டிய நிலையில், இந்திய பொருளாதாரம் அதைவிட குறைவாகவே வளர்ச்சியடைந்துள்ளதாக புள்ளியியல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

1. NSOஇன் சமீபத்திய அறிக்கையின்படி (2022 ஜூன்), 2021–22இல் இந்தியாவின் GDP வளர்ச்சி மதிப்பீடு என்ன?

அ. 8.5 சதவீதம்

ஆ. 8.7 சதவீதம் ☑

இ. 8.9 சதவீதம்

ஈ. 9.2 சதவீதம்

✓ தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) அதன் ஆண்டுக்கு ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியை 8.7 சதவீதமாகக் குறைத்துள்ளது. இது கடந்த பிப்ரவரியில் மதிப்பிடப்பட்ட 8.9 சதவீதத்திலிருந்து குறைந்துள்ளது. நான்காவது காலாண்டில் (ஜனவரி–மார்ச் காலம் 2021–22) GDP வளர்ச்சி 4.1 சதவீதமாக பதிவாகியுள்ளது. 2020–21இல் பொருளாதாரம் 6.6 சதவீதச் சுருக்கத்தைக் கண்டது. அண்மைய GDP வளர்ச்சி மதிப்பீடானது 8.9 சதவீதம் (பிப்ரவரியில் வெளியிடப்பட்டது) மற்றும் முதல் முன்கூட்டிய மதிப்பீடு 9.2 சதவீதம் (ஜனவரியில் வெளியிடப்பட்டது) ஆகியவற்றை விடக் குறைவாக உள்ளது.

2. முறையே 2022 ஜூன்.1 முதல் அமலுக்கு வரும் PMJJBY மற்றும் PMSBY–இன் புதிய வருடாந்திர பிரீமியம் விகிதங்கள் என்ன?

அ. ரூ.520 மற்றும் ரூ.40

ஆ. ரூ.436 மற்றும் ரூ.20 ☑

இ. ரூ.400 மற்றும் ரூ.40

ஈ. ரூ.350 மற்றும் ரூ.30

✓ பிரதமர் ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY) மற்றும் பிரதமர் சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY) ஆகியவற்றின் பிரீமியத்தை அரசாங்கம் உயர்த்தியுள்ளது. PMJJBY–இன் பிரீமியம் விகிதம் நாளொன்றுக்கு ₹1.25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆண்டுப் பிரீமியம் ₹330இலிருந்து ₹436ஆக உயர்கிறது. PMSBY–க்கான வருடாந்திர பிரீமியம் ₹12லிருந்து ₹20ஆக உயர்த்தப்பட்டுள்ளது. புதிய பிரீமியம் கட்டணங்கள் ஜூன் 1, 2022 முதல் அமலுக்கு வருகின்றன.

3. 2021–22இல் (GDPஇன் சதவீதத்தில்) இந்தியாவில் பதிவான நிதிப்பற்றாக்குறை எவ்வளவு?

அ. 7.51%

ஆ. 7.01%

இ. 6.71% ☑

ஈ. 6.21%

✓ 2021–22ஆம் ஆண்டிற்கான நிதிப்பற்றாக்குறையை கன்ட்ரோலர் ஜெனரல் ஆப் அக்கவுண்ட்ஸ் வெளியிட்டது. இது, 6.9 சதவீதம் என்ற திருத்தப்பட்ட பட்ஜெட் மதிப்பீட்டைவிட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.71 சதவீதமாக மேம்பட்டுள்ளது. முழுமையான நிதிப்பற்றாக்குறை ₹15,86,537 கோடி (தற்காலிகமானது) ஆகும். 17.65 டிரில்லியன் மதிப்பிலான திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு எதிராக நிதியாண்டில் வரி வரவுகள் 18.2 டிரில்லியனாக இருந்தது.

4. NARCL (National Assets Reconstruction Company Ltd)–இன் MD மற்றும் CEOஆக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. உர்ஜித் படேல்

ஆ. நடராஜன் சுந்தர் ☑

இ. அஸ்வனி பாட்டியா

ஈ. நிதின் சுக்

✓ பாரத வங்கியின் முன்னாள் துணை நிர்வாக இயக்குநர் நடராஜன் சுந்தர், NARCL (National Assets Reconstruction Company Ltd)–இன் நிர்வாக இயக்குநராகவும், CEOஆகவும் MD & CEOஆக நியமிக்கப்பட்டுள்ளார். NARCL என்பது பொது மற்றும் தனியார்துறை வங்கிகளின் கூட்டு முயற்சியாகும். இது வங்கிகளிடமிருந்து வாராக்கடன்களை எடுத்துக்கொள்வது மற்றும் தீர்வு மற்றும் மீட்டெடுப்புகளில் கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. NARCL ஆனது 15 இந்திய வங்கிகளின் பங்குகளைக் கொண்டுள்ளது. இதன் ஸ்பான்சர் வங்கியாக கனரா வங்கி உள்ளது.

5. 2022 – உலக புகையிலை ஒழிப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Tobacco: A Threat to our Humanity

ஆ. Tobacco: A Threat to our Environment ☑

இ. Tobacco: A Threat to Health

ஈ. Dangers of smoking

✓ புகைபிடிப்பதால் ஏற்படும் ஆபத்துகள், புகையிலை நிறுவனங்கள் மற்றும் அவற்றின் வணிக நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மே.31ஆம் தேதி உலக புகையிலை ஒழிப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Tobacco: A Threat to our Environment" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் உலக புகையிலை ஒழிப்பு நாளிற்கான கருப்பொருளாகும்.

✓ புகையிலையைப் பயிரிடுவதற்காக ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 3.5 மில்லியன் ஹெக்டேர் நிலம் அழிக்கப்படுகிறது. ஐநா சபையின் கூற்றுப்படி, புகையிலை நுகர்வானது ஆண்டுதோறும் எட்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் மரணத்திற்குக் காரணமாக அமைகிறது.

6. 2022 – ஒருபாற்சேர்க்கைவிரோதம் (Homophobia), திருநங்கை வெருளி (Transphobia) மற்றும் இருபாலுறவு வெருளி (Biphobia) ஆகியவற்றுக்கு எதிரான உலக நாளின் கருப்பொருள் என்ன?

அ. Our Bodies. Our Lives. Our Rights ☑

ஆ. Fundamental Rights of LGBTIQ+

இ. Bodily Autonomy

ஈ. Decriminalise Diversity

✓ ஒவ்வோர் ஆண்டும் மே.17 அன்று ஒருபாற்சேர்க்கைவிரோதம் (Homophobia), திருநங்கை வெருளி (Transphobia) மற்றும் இருபாலுறவு வெருளி (Biphobia) ஆகியவற்றுக்கு எதிரான உலக நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாள் பன்முகத்தன்மையைக் கொண்டாடுகிறது மற்றும் மாயிழை, ஓரினச்சேர்க்கை, இருபாலினம், திருநங்கைகள் மற்றும் இருபாலுடல் (LGBTIQ+) மக்களின் மனித உரிமைகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. "Our Bodies. Our Lives. Our Rights" என்பது இந்த ஆண்டு (2022) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

7. நவீன் ஸ்ரீவஸ்தவா என்பார் எந்த நாட்டுக்கான தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்?

அ. அமெரிக்கா

ஆ. நேபாளம் ☑

இ. இலங்கை

ஈ. உக்ரைன்

✓ நேபாளத்துக்கான அடுத்த தூதராக வெளியுறவுத்துறை கூடுதல் செயலர் நவீன் ஸ்ரீவஸ்தவாவை நியமிப்பதாக இந்தியா அறிவித்துள்ளது. இந்த மாதம் வெளியுறவு செயலாளராக பதவியேற்ற வினய் குவாத்ராவைத் தொடர்ந்து ஸ்ரீவஸ்தவா இந்தப் பதவியை ஏற்கவுள்ளார். பிரதமர் நரேந்திர மோடியின் நேபாள பயணத்தின்போது இந்தியாவும் நேபாளமும் ஆறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன, இதில் 490 MW அருண்–4 நீர்மின் திட்டமும் ஒன்று.

8. எந்த அமெரிக்க அதிபரின் உரையின் நினைவாக உலக எய்ட்ஸ் தடுப்பூசி நாள் கொண்டாடப்படுகிறது?

அ. ஜார்ஜ் புஷ்

ஆ. பில் கிளிண்டன் ☑

இ. பராக் ஒபாமா

ஈ. ஆபிரகாம் லிங்கன்

✓ பாதுகாப்பான மற்றும் பயனுள்ள HIV தடுப்பூசியைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ள சுகாதார வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், தன்னார்வத்தொண்டர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களை கௌரவிப்பதற்காக ஆண்டுதோறும் மே.18 அன்று 'உலக எய்ட்ஸ் தடுப்பூசி நாள்' அனுசரிக்கப்படுகிறது. 1997ஆம் ஆண்டு மே.18ஆம் தேதி அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் HIV பரவுவதைக் கட்டுப்படுத்தும் பயனுள்ள HIV தடுப்பூசியின் அவசியத்தை வலியுறுத்தியதையும் இந்நாள் நினைவுகூருகிறது. 2020ஆம் ஆண்டின் இறுதியில், 37.7 மில்லியன் மக்கள் HIVஆல் பாதிக்கப்பட்டிருந்தனர். மேலும் 0.68 மில்லியன் மக்கள் எய்ட்ஸ் தொடர்பான நோய்களால் இறந்துள்ளனர்.

9. என்டோசல்பான் பாதிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு கீழ்க்காணும் எந்த மாநிலத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது?

அ. ஒடிஸா

ஆ. கேரளா ☑

இ. கர்நாடகா

ஈ. மேற்கு வங்கம்

✓ எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற 2017ஆம் ஆண்டு ஜனவரி உத்தரவைக் கடைப்பிடிக்கத்தவறியதால், கேரளாவை உச்சநீதிமன்றம் கடுமையாகச் சாடியது. பாதிக்கப்பட்டவர்களை அடையாளங்காணுதல், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ₹5 லட்சம் இழப்பீடு வழங்குதல், எண்டோசல்பான் பாதிப்பால் ஏற்படும் நீண்டகால உடல்நலப் பாதிப்புகளைச் சமாளிக்க மருத்துவ வசதிகளை அமைத்தல் ஆகிய மூன்று படிநிலைகளை அந்தத் தீர்ப்பு செயல்படுத்தச் சொல்லியிருந்தது. கடந்த 2012ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றம் எண்டோசல்பான் மருந்தைப் பயன்படுத்த தடை விதித்திருந்தது குறிப்பிடத்தக்காது.

10. இந்தியாவில் தேசிய டெங்கு நாள் அனுசரிக்கப்படுகிற மாதம் எது?

அ. அக்டோபர்

ஆ. ஜனவரி

இ. ஜூலை

ஈ. மே ☑

✓ ஒவ்வோர் ஆண்டும் மே.16 அன்று, தேசிய டெங்கு நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்நாள், டெங்கு நோய் பரவும் விதம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. ஆண்டுதோறும், உலகளவில் சுமார் 400 மில்லியன் டெங்கு நோய்த் தொற்றுகள் ஏற்படுகின்றன. சுமார் 96 மில்லியன் பேர் இதன் கடுமை நிலையை எதிர்கொள்கின்றனர். டெங்குக் காய்ச்சல் என்பது நான்கு ஏடிஸ் கொசு இனங்களுள் ஏதேனும் ஒன்றால் பரவும் நோயாகும். இந்தக் கொசுக்கள் மேற்கு நைல் வைரஸ் நோய் மற்றும் மஞ்சள் காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ்களையும் கொண்டுள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் 8,023 பேருக்கு 4ஆவது நிலை யானைக்கால் நோய் பாதிப்பு:

தமிழ்நாட்டில் 8,023 பேருக்கு நான்காவது நிலை யானைக்கால் நோய் பாதிப்புக்கான சிகிச்சை பெற்று வருவதாக மருத்துவத்துறை அமைச்சர் மா சுப்பிமணியன் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அமைச்சர் மா சுப்பிரமணியன் கூறியது: "யானைக்கால் நோய் ஆரம்பத்தில் காய்ச்சல், நெரிகட்டுதல், கைக்கால் வலி, தோல் சிவந்து காணப்படுதல், தோல் தடித்து காணப்படுதல் போன்ற அறிகுறிகளுடன் இருக்கும். நோய் முற்றும்போது கால்களில் வீக்கம் (யானைக்கால்), விரைவீக்கம், கைகள் மற்றும் மார்பகங்களில் வீக்கம் போன்றவை ஏற்படும்.

இந்தத் தாக்கங்களுக்கு ஏற்ப யானைக்கால் நோய் நான்கு நிலைகளில் அழைக்கப்பட்டு வருகிறது. யானைக்கால் நோயின் தாக்கம் தமிழகத்தில் 29 மாவட்டங்களில் காணப்பட்டது. யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் 1957–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 44 இரவுநேர இரத்தப் பரிசோதனை மையங்களும், 25 யானைக்கால் நோய் கட்டுப்பாட்டு மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் மூலம் ஆங்காங்கே பொது மக்களுக்கு இரவு நேர ரத்தத் தடவல் பரிசோதனை மற்றும் கொசு ஒழிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யானைக்கால் நோயை ஒழிக்கும் பொருட்டு ஒட்டு மொத்த டிஇசி மாத்திரை வழங்கும் திட்டம் 1998 முதல் 2014 வரை 2 வயது முதல் 60 வயது வரை உள்ள அனைவருக்கும் வருடந்தோறும் மாத்திரைகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு அரசின் மேற்கண்ட நடவடிக்கைகளால் இந்நோய் தற்பொழுது பரவக்கூடிய நிலையில் இல்லை என்ற இலக்கை நோக்கி தமிழ்நாடு செல்கிறது.

தற்பொழுது யானைக்கால் நோய் முற்றிலும் ஒழிப்பு என்ற இலக்கினை நோக்கி சென்றபோதிலும், ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்பு யானைக்கால் நோய் நிலை 4–இல் தமிழகத்தில் 8,023 நபர்கள் தற்போது பாதிப்பில் உள்ளனர். நிலை 4–ல் உள்ளவர்களுக்கு கால் வீக்கம், தோலில் புண்கள் மற்றும் நீர்வடிதல் ஆகியவை காணப்படும்.

இதனால் இவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் உதவித்தொகையாக மாதம் ரூபாய்.1000/– மற்றும் யானைக்கால் பராமரிப்பு உபகரணங்கள் 2010–ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் யானைக்கால் நோய் பாதித்தவர்களுக்கு மாதம்தோறும் ரூபாய் 1000 வங்கிக் கணக்கிலேயே மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம் மூலமாக செலுத்தப்படுகிறது என்று தெரிவித்தார்.

---

2. தகவல் தொடர்பு சேவைக்கான ஜிசாட்–24 செயற்கைக்கோள் – ஜூன் 22–இல் விண்ணில் ஏவப்படுகிறது

இஸ்ரோவின் தகவல்தொடர்பு சேவைக்கான அதிநவீன ஜிசாட்–24 செயற்கைக்கோள் ஏரியன் 5 ராக்கெட்மூலம் பிரெஞ்ச் கயானாவில் இருந்து ஜூன் 22ஆம் தேதி விண்ணில் ஏவப்படுகிறது.

நம் நாட்டின் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஜிசாட்–24 என்ற அதிநவீன செயற்கைக்கோளை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்துள்ளது. 4,180 கிலோ எடை கொண்ட ஜிசாட்–24, இஸ்ரோவின் 42ஆவது தகவல்தொடர்பு செயற்கைக்கோளாகும்.

அதிக எடை உடைய செயற்கைக்கோள் என்பதால் ஐரோப்பிய நாடான பிரான்சின் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரெஞ்ச் கயானாவில் உள்ள கொரு ஏவுதளத்தில் இருந்து கனரக இராக்கெட்டான ஏரியன்–5 மூலம் ஜூன் 22–ம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இதற்காக, விமானப்போக்குவரத்துமூலம் செயற்கைக்கோள் கடந்த மே 17ஆம் தேதி கொரு ஏவுதளத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த ஜிசாட்–24 செயற்கைக்கோளில் கியூ பேன்ட் டிரான்ஸ்பாண்டர் உள்ளிட்ட நவீன அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இது டிடிஎச் டெலிவிஷன் மற்றும் செல்போன் சேவைக்குப் பயன்படும்.

மத்திய விண்வெளி ஆய்வுத்துறையின்கீழ் இயங்கும் நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (என்எஸ்ஐஎல்) நிறுவனம் மூலம் இந்த இராக்கெட் ஏவுதல் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், ஜிசாட்–24 செயற்கைக்கோள் பயன்பாட்டு சேவைகள் அனைத்தும் 'டாடா பிளே' நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர். ஏரியன் 5 இராக்கெட்டில் மலேசியாவுக்குச் சொந்தமான மீசாட் – 3டி செயற்கைக்கோளும் ஏவப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

1. முழுமையான COVID-19 தடுப்பூசி செலுத்தலை (2022 ஜூனில்) உறுதிசெய்வதற்காக தொடங்கப்பட்ட திட்டத்தின் பெயர் என்ன?

அ. ஹர் கர் தஸ்தக் திட்டம் 2.0 ☑

ஆ. ஆத்மநிர்பார் தடுப்பூசி திட்டம் 2.0

இ. பிரதான் மந்திரி தடுப்பூசி திட்டம்

ஈ. கரீப் கல்யாண் தடுப்பூசி திட்டம் 2.0

✓ தகுதியுள்ள அனைவருக்கும் COVID-19 தடுப்பூசியை முழுமையாக வழங்குவதை உறுதிசெய்வதற்காக, 'வீடு தேடி சென்று தடுப்பூசி 2.0' நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 12-14 வயதிற்குட்பட்டோர் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான முன்னெச்சரிக்கை தவணைமீது சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. ஜூன்.1 முதல் ஜூலை 31 வரை 2 மாத காலம் வீடு வீடாகச்சென்று இத்திட்டம் மேற்கொள்ளப்படும். கடந்த 2021 நவம்பரில் முதல் 'வீடு தேடி சென்று தடுப்பூசி 2.0' நடத்தப்பட்டது. நாடு முழுவதும் இதுவரை 193.6 கோடி டோஸ்கள் போடப்பட்டுள்ளன.

2. எந்த நிறுவனத்தை வாங்குபவர்களாகப் பதிவுசெய்ய அனுமதிக்கும் வகையில், அரசு இ-சந்தை தளத்தின் (GeM) நோக்கத்தை மத்திய அமைச்சரவை விரிவுபடுத்தியுள்ளது?

அ. அஞ்சல் நிலையங்கள்

ஆ. கூட்டுறவு சங்கங்கள் ☑

இ. சிறு நிதி வங்கிகள்

ஈ. பொது சேவை மையங்கள்

GeM Government e Marketplace
Efficient • Transparent • Inclusive

✓ கூட்டுறவு அமைப்புகளை வாங்குவோராக அனுமதிக்கும் வகையில் அரசு இ-சந்தை கொள்முதல் விரிவாக்கத்திற்கு பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது கூட்டுறவு அமைப்புகளை வாங்குவோராக அனுமதித்திருப்பதன்மூலம் 27 கோடி உறுப்பினர்களைக் கொண்டுள்ள 8.54 இலட்சத்திற்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் பயனடையும்.

3. 2022ஆம் ஆண்டுக்கான 'வாங்கரி மாத்தாய் வன சாம்பியன்' விருதை வென்றவர் யார்?

அ. செசிலி ஜெபெட் ☑

ஆ. டேவிட் அட்டன்பரோ

இ. கிமிகோ ஹிராடா

ஈ. ஷரோன் லெவிக்னே

✓ காடுகளைக் காப்பதிலும் காடுகளைச் சார்ந்த மக்களின் வாழ்வை மேம்படுத்துவதிலும் அவராற்றிய பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக, 2022ஆம் ஆண்டுக்கான 'வாங்கரி மாத்தாய் வன சாம்பியன்' விருதை கேமரூனின் ஆர்வலர் செசிலி ஜெபெட் வென்றார். ஐநா சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) தலைமையிலான காடுகளின் கூட்டுப்பங்காளித்துவம் (CPF) இந்த விருதை வழங்குகிறது. கொரிய குடியரசின் சியோலில் நடைபெற்ற XV உலக வனவியல் மாநாட்டின்போது நடந்த விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது.

4. உயிரி எரிபொருள் மீதான தேசிய கொள்கையின் அண்மைய திருத்தத்தின்படி, பெட்ரோலில் 20% எத்தனாலைக் கலப்பதற்கான இலக்கு ஆண்டு எது?

அ. 2024-25 **ஆ. 2025-26 ☑**

இ. 2029-30 ஈ. 2039-40

✓ பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவை, உயிரி எரிபொருள் மீதான தேசிய கொள்கையில் திருத்தங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. பெட்ரோலில் 20 சதவீத எத்தனாலை கலக்கும் இலக்கை 2030-இலிருந்து 2025-26-க்கு

அது முன்னேற்றியுள்ளது. தற்போது பெட்ரோலில் 10 சதவீதம் எத்தனால் கலக்கப்படுகிறது. உயிரி எரிபொருள் தயாரிப்பதற்கான கூடுதல் மூலப்பொருட்களை இருப்பு வைக்கவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

5. இரு இருக்கைகள்கொண்ட புதிய தலைமுறை பறக்கும் பயிற்சி வானூர்தியான, 'HANSA–NG'ஐ உருவாக்கிய நிறுவனம் எது?

அ. CSIR-NAL ☑

ஆ. BRO

இ. DRDO

ஈ. HAL

✓ HANSA–NG, இரு இருக்கைகள்கொண்ட புதிய தலைமுறை பயிற்சி வானூர்தியை அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் கழகத்தின் (CSIR) தேசிய விண்வெளி ஆய்வகங்கள் (NAL) வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இந்த வானூர்தி தனது எஞ்சின் பரிசோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. கர்நாடக மாநிலத்தின் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பின் (DRDO) ஏரோநாட்டிகல் டெஸ்ட் ரேஞ்சில் இச்சோதனை நடத்தப்பட்டது.

6. உரத்துறையில் ஒத்துழைப்புக்காக இந்தியா எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

அ. ஆஸ்திரேலியா

ஆ. பிரான்ஸ்

இ. ஜப்பான்

ஈ. ஜோர்டான் ☑

✓ மத்திய வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தலைமையிலான உயர்மட்டக்குழு, உலகளாவிய உர நெருக்கடிக்கு மத்தியில் உரத்துறையில் மேம்பட்ட ஒத்துழைப்பிற்காக ஜோர்டானுக்குச் சென்றது. நடப்பாண்டிற்கு 30 LMT இராக் பாஸ்பேட், 2.50 LMT DAP, 1 LMT பாஸ்போரிக் அமிலம் வழங்க ஜோர்டானுடன் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

7. உலக தேனீக்கள் நாள் அனுசரிக்கப்படுகிற மாதம் எது?

அ. மே ☑

ஆ. ஜூன்

இ. ஆகஸ்ட்

ஈ. செப்டம்பர்

✓ மக்களையும் சுற்றுச்சூழலையும் வளர்த்தெடுப்பதில் தேனீக்கள் வகிக்கும் முக்கியப்பங்குபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் மே.20 அன்று உலக தேனீக்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. நவீன தேனீ வளர்ப்பின் முன்னோடியான ஸ்லோவேனிய தேனீ வளர்ப்பவர் அன்டன் ஜான்சாவின் பிறந்தநாளில் உணவு மற்றும் உழவு அமைப்பால் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. "Bee Engaged: Celebrating the diversity of bees and beekeeping systems" என்பது இந்த ஆண்டு (2022) வரும் உலக தேனீக்கள் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

8. மிகவும் அருகிவிட்ட உயிரினத்தைப் பாதுகாப்பதற்காக, 'இராஜாளி மரபணு வங்கி' அமையவுள்ள நகரம் எது?

அ. தென்காசி **ஆ. மைசூரு ☑**

இ. முக்கூர்த்தி ஈ. களக்காடு

✓ மைசூரு பல்கலைக்கழகத்தின் மரபியல் & மரபணுத்தொகுதியியல் ஆய்வுத்துறையானது கர்நாடக மாநில வனத் துறையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

✓ இராமநகரத்தில் உள்ள இராமதேவரபெட்டா மலைப்பகுதியிலுள்ள கழுகுகளின் பல்லுயிர் பெருக்கம்குறித்து DNA விவரக்குறிப்பு நுட்பங்களைப்பயன்படுத்தி, 'இராஜாளி மரபணு வங்கி' மைசூருவில் நிறுவப்படவுள்ளது. இந்த மரபியல் துறை, கழுகு இனத்தை அழிந்து விடாமல் காப்பாற்றுவதற்காக கழுகுசார் மரபணு ஆய்வுகளை விரைவில் தொடங்க திட்டமிட்டுள்ளது.

9. 'தேசிய அருகிவிட்ட உயிரினங்கள் நாளானது' மே மாதத்தில் வரும் எந்தத்தேதியில் அனுசரிக்கப்படுகிறது?

அ. மே மாதத்தில் வரும் முதல் ஞாயிறு

ஆ. மே மாதத்தில் வரும் கடைசி சனிக்கிழமை

இ. மே மாதத்தில் வரும் கடைசி ஞாயிறு

ஈ. மே மாதத்தில் வரும் மூன்றாவது வெள்ளிக்கிழமை ☑

✓ தேசிய அருகிவிட்ட உயிரினங்கள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தின் மூன்றாவது வெள்ளிக்கிழமை அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு மே.20 அன்று இந்நாள் அனுசரிக்கப்பட்டது. அருகிவிட்ட உயிரினங்கள் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கு நாம் எடுக்கக்கூடிய பல்வேறு நடவடிக்கைகள்குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும். 1973ஆம் ஆண்டு அருகிவிட்ட உயிரினங்கள் சட்டம் டிசம்பர்.28 அன்று நடைமுறைக்கு வந்தது. வனவுயிரி பாதுகாப்பு மற்றும் அருகிவிட்ட உயிரினங்களின் மறுவாழ்வு ஆகியவற்றின் தேவையை உயர்த்துவதை இந்தச் சட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

10. உலக குடும்பங்கள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. மே.15 ☑

ஆ. மே.30

இ. ஜூன்.01

ஈ. ஜூன்.03

✓ ஐநா அவையானது மே.15 அன்று உலக குடும்பங்கள் நாளைக் கொண்டாடுகிறது. ஐநா பொதுச்சபை 1993–இல் இந்த நாளைக் கொண்டாடுவதாக அறிவித்தது. 2022ஆம் ஆண்டுக்கான உலக குடும்பங்கள் நாளிற்காக, ஐநா பொதுச்செயலாளர், "Families and Urbanization" என்ற கருப்பொருளைத் தேர்ந்தெடுத்துள்ளார். குடும்ப உறவு மற்றும் நிலையான நகர்ப்புற கொள்கைகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதே இந்த ஆண்டிற்கான கருப்பொருளின் நோக்கமாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஜூன்.3 – உலக மிதிவண்டி நாள்

---

2. மாநில கல்விக் கொள்கை: நீதிபதி முருகேசன் தலைமையில் குழு அமைப்பு

தமிழ்நாடு அரசின் மாநில கல்விக்கொள்கையை வகுப்பதற்கு தில்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி முருகேசன் தலைமையில் 13 வல்லுநர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பள்ளிக்கல்வித்துறை வெளியிட்ட அரசாணை:

மத்திய அரசின் தேசிய கல்விக்கொள்கை 2020–ஐ தமிழ்நாடு அரசு தொடர்ந்து எதிர்த்துவரும் நிலையில், அதற்கு மாற்றாக தமிழ்நாட்டின் மரபுக்கேற்ப மாநில கல்விக்கொள்கை ஒன்று உருவாக்கப்படும். அதற்காக குழு அமைப்பதாகவும் கடந்த ஏப்ரலில் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

அதன்படி மாநில கல்விக்கொள்கையை வடிவமைக்க ஓய்வுபெற்ற நீதிபதி முருகேசன் தலைமையில் 13 பேர் கொண்ட குழுவை அமைத்து பள்ளிக்கல்வித்துறை அரசாணை வெளியிட்டுள்ளது. குழுவின் உறுப்பினர் செயலராக மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர் செயல்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. இந்தியா–செனகல் இடையே 3 ஒப்பந்தங்கள் கையொப்பம்

இந்தியா–செனகல் இடையே கலாசார பரிமாற்றம், இளைஞர் விவகாரங்களில் ஒத்துழைப்பு மற்றும் அதிகாரிகளுக்கு விசா இல்லாத நடைமுறை ஆகிய 3 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

தூதரகம் மற்றும் பணி தொடர்பான கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு விசா இல்லாத நடைமுறையைக்கொண்டு வருவது தொடர்பான ஒப்பந்தம், 2022–26 ஆண்டுகாலத்தில் இருநாடுகளிடையேயான கலாசார பரிமாற்றத் திட்டத்தை புதுப்பித்தல் மற்றும் இருநாடுகளிடையே இளைஞர் விவகாரங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பான ஒப்பந்தங்களில் இருநாட்டு தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

---

1. மத்திய கல்வியமைச்சகத்தால் முன்மொழியப்பட்ட புதிய மாதிரி பள்ளிகளின் பெயர் என்ன?

அ. PM மாதிரி பள்ளிகள்

ஆ. PM ஸ்ரீ பள்ளிகள் ☑

இ. ஆத்மநிர்பார் பள்ளிகள்

ஈ. பாரத் கௌரவ் பள்ளிகள்

✓ மத்திய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் குஜராத் மாநிலத்தின் காந்திநகரில் நடந்த தேசிய கல்வியமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றினார். புதிய தேசிய கல்விக்கொள்கை 2020–ஐ செயல்படுத்துவதை மையமாகக்கொண்டு அவர் பேசினார். கல்வி அமைச்சகமானது தேசிய கல்விக்கொள்கை 2020–இன் சோதனைக் கூடமாக, 'PM ஸ்ரீ பள்ளிகளை' நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அவர் அறிவித்தார். மாணாக்கரை எதிர்காலத்திற்குத் தயார்படுத்தும் விதமாக இந்தப் பள்ளிகள் அமையவுள்ளன.

2. ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்புக்கொள்கையில் சேர அண்மையில் வாக்களித்த நாடு எது?

அ. சுவிச்சர்லாந்து

ஆ. டென்மார்க் ☑

இ. மால்டா

ஈ. வாடிகன் நகரம்

✓ டென்மார்க் ஆனது ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்புக் கொள்கையில் அதற்கான வாக்கெடுப்பை நடத்திய பிறகு, அதில் இணையவுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுப்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கொள்கையின் (CSDP) பகுதியாக இல்லாத ஒரே ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் டென்மார்க் மட்டுமே. டென்மார்க் அரசாங்கம் 1993ஆம் ஆண்டு மாஸ்ட்ரிச் உடன்படிக்கையின் மீதான வாக்கெடுப்பில் பெறப்பட்ட ஒரு விலக்கை இரத்து செய்வதில் வெற்றி பெற்றுள்ளது. சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகியவை நேட்டோவில் சேருவதற்கான இசைவைத் தந்துள்ளன.

3. இந்தியா எந்த நாட்டுடனான, 'பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான தொலைநோக்கு அறிக்கையில்' கையெழுத்திட்டது?

அ. ஆஸ்திரேலியா

ஆ. இஸ்ரேல் ☑

இ. இத்தாலி

ஈ. பிரான்ஸ்

✓ இந்தியாவும் இஸ்ரேலும் எதிர்காலத்தில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, 'தொலைநோக்கு அறிக்கையை' ஏற்றுக்கொண்டன. இந்த அறிக்கை இருநாடுகளுக்கும் இடையிலான 30 ஆண்டுகால அரசியல் ரீதியான உறவுகளைக் குறிக்கிறது. புது தில்லியில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் மற்றும் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். இருதலைவர்களும் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் உலகளாவிய மற்றும் பிராந்திய பாதுகாப்புச் சூழ்நிலை குறித்து விவாதித்தனர். சர்வதேச சோலார் கூட்டணியை அங்கீகரிக்கும் ஒப்பந்தத்தில் இஸ்ரேல் சமீபத்தில் கையெழுத்திட்டது.

4. உலக மிதிவண்டி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஜூன்.1

ஆ. ஜூன்.3 ☑

இ. ஜூன்.5

ஈ. ஜூன்.7

- ✓ உலக மிதிவண்டி நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.3 அன்று கொண்டாடப்படுகிறது. அடிப்படை போக்குவரத்து, உடல் மற்றும் மன நலத்தை வலுப்படுத்துவதற்காக மிதிவண்டி ஓட்டுதல் கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், உலக மிதிவண்டி நாளன்று தில்லியில் உள்ள மேஜர் தியான் சந்த் மைதானத்தில் இருந்து நாடு தழுவிய 'பிட் இந்தியா பிரீடம் ரைடர் சைக்கிள்' பேரணியைத் தொடங்கி வைத்தார்.

5. இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) சமீபத்திய வழிகாட்டுதல்களின்படி, அட்டையில்லா பணப்பரிவர்த்தனைகளுக்கு விதிக்கப்படும் கட்டணம் எவ்வளவு?

அ. ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.0.50

ஆ. ஒரு திங்களுக்கு ரூ.10

இ. ஒரு திங்களுக்கு ரூ.25

ஈ. கட்டணம் எதுவும் விதிக்கப்படாது ☑

- ✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) அனைத்து வங்கிகள் மற்றும் ATM ஆபரேட்டர்களை, இந்தியாவிலுள்ள அனைத்து வங்கிகளிலும் உள்ள அனைத்து ATM–களிலும் ICCW (Interoperable Card–less Cash Withdrawal) எனப்படும் அட்டையில்லா பணம் எடுக்கும் வசதியை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. அத்தகைய பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர் அங்கீகாரத்திற்காக UPI பயன்படுத்தப்படும். மேலும் நேஷனல் பினான்சியல் சுவிட்ச் (NFS) / ATM நெட்வொர்க்குகள்மூலம் பைசல் செய்யப்படும். அட்டையில்லா பணப் பரிவர்த்தனைகள் யாதொரு கட்டணமும் பெறப்படாமல் செயல்படுத்தப்படும்.

6. 'Mujib – The Making of a Nation' என்ற திரைப்படத்தைத் தயாரித்த நாடுகள் எவை?



அ. வங்காளதேசம் மற்றும் நேபாளம்

ஆ. வங்காளதேசம் மற்றும் சீனா

இ. வங்காளதேசம் மற்றும் இந்தியா ☑

ஈ. வங்காளதேசம், மியான்மர் மற்றும் இந்தியா

- ✓ ஸ்ரீ ஷியாம் பெனகல் இயக்கிய, 'முஜிப் – தி மேக்கிங் ஆப் எ நேஷன்' திரைப்படத்தின் 90 வினாடிகள் கொண்ட முன்னோட்டம் அண்மையில் வெளியிடப்பட்டது. இந்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் மற்றும் வங்கதேச அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவை படத்தின் தயாரிப்பாளர்களாகும். கடந்த 2020–இல் வங்கபந்து ஷேக் முஜிபுர் இரகுமான் குறித்த படத்திற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவின் தேசிய திரைப்பட மேம்பாட்டுக்கழகமும் (NFDC) வங்காளதேசத்தின் திரைப்பட மேம்பாட்டுக் கழகமும் (FDC) கையெழுத்திட்டன.

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற யாகச்சி ஆறு பாய்கிற மாநிலம் எது?

அ. கர்நாடகா ☑

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கேரளா

ஈ. மகாராஷ்டிரா

- ✓ கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் அமைந்துள்ள யாகச்சி நீர்த்தேக்கம் முதல்முறையாக மே மாதம் நிரம்பியது. நீர்பிடிப்பு பகுதியில் பெய்த கனமழையால், அதிகபட்சமாக 3164.90 அடியாக இருந்த நீர்மட்டம், 3164.06 அடியை எட்டியது. யாகச்சி ஆறு, சிக்மகளூரு அருகே மேற்குத்தொடர்ச்சிமலையில் உருவாகி, ஹாசன் மாவட்டம், பேலூர் வழியாகப் பாய்ந்து, ஹேமாவதி ஆற்றின் கிளையாறாக மாறுகிறது.

8. உலகளாவிய உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்காக $30 பில்லியன் டாலர் நிதியளிப்பதாக அறிவித்துள்ள அமைப்பு எது?

அ. உணவு மற்றும் விவசாய அமைப்பு

ஆ. உலக வங்கி ☑

இ. உலகப் பொருளாதார மன்றம்

ஈ. பன்னாட்டு செலவாணி நிதியம்

✓ உலகளாவிய உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்குத் தற்போதுள்ள மற்றும் புதிய திட்டங்களில் $30 பில்லியன் டாலர்கள் வரையிலான நிதியுதவியுடன், உலகளாவிய திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிட்டுள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது. விவசாயம், ஊட்டச்சத்து, சமூகப்பாதுகாப்பு, நீர் மற்றும் நீர்ப்பாசனம் போன்ற துறைகளில் அடுத்த 15 மாதங்களில் இந்த நிதியுதவி உணவுப்பாதுகாப்பின்மைக்குத் தீர்வுகாண செயல்படுத்தப்படும். உணவுப் பாதுகாப்பு நெருக்கடியை எதிர்த்துப் போராட $12 பில்லியன் டாலர் புதிய திட்டங்களைத்தயாரிக்க உலக வங்கி மற்ற நாடுகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

9. இந்தியாவில், 'CSIR–மத்திய தோலாராய்ச்சி நிறுவனம்' அமைந்துள்ள இடம் எது?

அ. புனே

ஆ. சென்னை ☑

இ. லக்னோ

ஈ. மைசூரு

✓ சென்னையில் உள்ள CSIR–மத்திய தோலாராய்ச்சி நிறுவனத்தின் பவள விழா கொண்டாட்டத்தில் நடுவண் அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சர் Dr ஜிதேந்திர சிங் உரையாற்றினார். இந்தியாவில் தோல் தொழிற்துறையானது நிகர–சுழிய கரிம அடித்தடத்தை இலக்காகக் கொண்டிருக்கும் என்று அவர் அறிவித்தார். 2021ஆம் ஆண்டில், தோல் துறையின் ஏற்றுமதித் தீர்வை மதிப்பு ₹40,000 கோடியாக இருக்கும். முப்பரிமாண தொழினுட்பத்தைப் பயன்படுத்தி இந்தியர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட பாதணிகளைத் தயாரிப்பதற்கான முயற்சிகள் குறித்தும் அமைச்சர் அப்போது அறிவித்தார்.

10. உலக தேநீர் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. மே.21 ☑

ஆ. மே.30

இ. ஜூன்.01

ஈ. ஜூன்.03

✓ மே.21 அன்று உலகம் முழுவதும் 'உலக தேநீர் நாள்' கொண்டாடப்படுகிறது. 2019ஆம் ஆண்டில், ஐநா பொதுச் சபையானது தேநீரின் உற்பத்தி மற்றும் நுகர்வை மேம்படுத்துவதற்காக தேநீருக்கான உலக நாளாக மே.21–ஐ அறிவித்தது. தனிநபர் நுகர்வு ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கும் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் தேயிலை தேவையை விரிவுபடுத்துவதற்கு அதிக முயற்சிகளை மேற்கொள்ள உணவு மற்றும் உழவமைப்பின் அரசுகளுக்கு இடையேயான குழு வலியுறுத்தியது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி 8.1%–ஆக குறைப்பு

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான (EPF) வட்டியை 8.1 சதவீதமாக மத்திய அரசு குறைத்துள்ளது. இதுகுறித்து தொழிலாளர் வருவங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) தெரிவித்துள்ளதாவது:

கடந்த 2021–22–ஆம் நிதியாண்டுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கு வழங்கப்படும் வட்டி விகிதம் 8.1 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதலை மத்திய அரசு வழங்கியுள்ளது. கடந்த 2020–21–ஆம் ஆண்டுக்கு 8.5 சதவீத வட்டி விகிதம் வழங்கப்பட்ட நிலையில் தற்போது அது 8.1 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என EPFO தெரிவித்துள்ளது.

ஐந்துகோடி தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ள EPFO அமைப்பில், கடந்த 1977–78 நிதியாண்டில் வருங்கால வைப்புநிதிக்கான வட்டி விகிதம் 8 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது. இதையடுத்து, சுமார் 40 ஆண்டுகளுக்குப்பிறகு குறைந்தபட்ச அளவாக 2021–22 நிதியாண்டுக்கு 8.1 சதவீத வட்டி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதம், 2017–18 நிதியாண்டில் 8.55 சதவீதமாகவும், 2016–18–இல் 8.65 சதவீதமாகவும், 2018–19–இல் 8.65 சதவீதமாகவும், 2019–20–இல் 8.5 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

2. 6 எழுத்தாளர்களுக்கு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள்: ஒதுக்கீட்டு உத்தரவுகளை வழங்கினார் முதல்வர்

ஆறு எழுத்தாளர்களுக்கு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கான உத்தரவுகளை முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார். இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்திய அகாதெமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ்பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகளைப் பெற்ற எழுத்தாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுமூலமாக வீடு அளிக்கப்படும் என்ற திட்டத்தை கடந்த ஆண்டு ஜூன்.3–ஆம் தேதி முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார். இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், ஆறு எழுத்தாளர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

எழுத்தாளர்கள் யார் யார்? 'வணக்கம் வள்ளுவ' எனும் கவிதை நூலுக்காக சாகித்திய அகாதெமி விருதையும், கலைஞர் மு கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதையும் எழுத்தாளர் ஈரோடு தமிழன்பன் பெற்றுள்ளார். இதே போன்று, தமிழ் இலக்கியப் பணிகளுக்காக கலைஞர் மு கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதை முனைவர் இ சுந்தரமூர்த்தியும், 'அஞ்ஞாடி' என்னும் நாவலுக்காக பூமணியும், 'செல்லாத பணம்' நாவலுக்காக இமையமும் சாகித்திய அகாதெமி விருதுகளைப் பெற்றுள்ளனர். இந்த நான்கு எழுத்தாளர்களுக்கும் சென்னை கோயம்பேட்டில் உள்ள தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டு கிராமக் கோட்டத்தில் உயர்வருவாய்ப் பிரிவு அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

'கையொப்பம்' என்னும் கவிதை நூலுக்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற கவிஞர் புவியரசுக்கு, கோவை வீட்டுவசதி பிரிவு கணபதி திட்டப் பகுதியில் உயர்வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளில் அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியப் பணிகளுக்காக கலைஞர் மு கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது பெற்ற கு மோகனராசுவுக்கு, சென்னை அண்ணாநகர் சாந்தி காலனி நடுவாங்கரை திட்டப்பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

3. 'ஸ்பெல்லிங் பீ' போட்டி: மீண்டும் இந்திய வம்சாவளி மாணவி வெற்றி

அமெரிக்காவில் நடைபெற்ற 'ஸ்பெல்லிங் பீ' எனப்படும் ஆங்கிலச் சொற்களுக்கான எழுத்துகளைப் பிழையின்றி சொல்லும் போட்டியில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஹரிணி லோகன் வெற்றி பெற்றார்.

இந்தப் போட்டியில் இதுவரை இல்லாமல் முதல்முறையாக நடைபெற்ற 90 விநாடி மாரத்தான் பிரிவில், 26 வார்த்தைகளில் 22 வார்த்தைகளுக்கு பிழையில்லாமல் எழுத்துகளைக் கூறி அவர் முதலிடத்தைப்பிடித்தார். 19 வார்த்தைகளில் 15 வார்த்தைகளுக்கு சரியாக எழுத்துகளைக் கூறி, விக்ரம் ராஜு (12) என்ற மற்றொரு இந்திய வம்சாவளி சிறுவர் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

---

4. ரேங்கிங் சீரிஸ் மல்யுத்தம்: சாக்ஷி, மான்சி, திவ்யாவுக்கு தங்கம்

கஜகஸ்தானில் நடைபெறும் சர்வதேச மல்யுத்த அமைப்பின் ரேங்கிங் சீரிஸ் போட்டியில் இந்தியாவின் சாக்ஷி மாலிக், மான்சி, திவ்யா கக்ரான் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்று அசத்தினர்.

முன்னதாக, ஆடவருக்கான 63 கிலோ பிரிவில் இந்தியாவின் நீரஜ் வெண்கலப்பதக்கம் வென்றார். தற்போதைய நிலையில் இந்தியாவுக்கு இப்போட்டியில் 3 தங்கம், 1 வெண்கலம் கிடைத்துள்ளன.

---

5. கோவேக்ஸின், கோவிஷீல்ட் பயனாளிகளுக்கு பூஸ்டர் தடுப்பூசியாக கோர்பிவேக்ஸ்: டிசிஜிஐ ஒப்புதல்

கோவேக்ஸின், கோவிஷீல்ட் கரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்பவர்களுக்கு பூஸ்டர் (மூன்றாவது தவணை) தடுப்பூசியாக கோர்பிவேக்ஸை செலுத்த இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக கோர்பிவேக்ஸ் தடுப்பூசியை உருவாக்கி தயாரித்துவரும் பயாலஜிக்கல்–இ நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கோவேக்ஸின் அல்லது கோவிஷீல்ட் தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்ளும் பயனாளிகளுக்கு பூஸ்டர் தடுப்பூசியாக கோர்பிவேக்ஸை செலுத்த மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் பரிசோதனையில், பூஸ்டர் தடுப்பூசியாக கோர்பிவேக்ஸ் செலுத்தப்படும்போது உடலில் குறிப்பிடத்தக்க அளவு நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிப்பது தெரியவந்தது. அந்தப் பரிசோதனைகள் தொடர்பான விவரம் டிசிஜிஐயிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை சம்பந்தப்பட்ட நிபுணர் குழு விரிவாக மதிப்பிட்டு ஆலோசனை மேற்கொண்டது.

அதனைத்தொடர்ந்து 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் கோவேக்ஸின் அல்லது கோவிஷீல்டின் 2 தவணைகளையும் செலுத்திக்கொண்ட 6 மாதங்களுக்குப் பின்னர், பூஸ்டர் தடுப்பூசியாக கோர்பிவேக்சை அவசரகாலங்களில் செலுத்த டிசிஜிஐ ஒப்புதல் அளித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இரண்டு தவணைகளாகச் செலுத்திக்கொண்ட தடுப்பூசிக்குப் பதிலாக வேறொரு தடுப்பூசியை பூஸ்டர் தவணையாகச்செலுத்திக்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள முதல் தடுப்பூசி கோர்பிவேக்ஸ் ஆகும்.

---

6. பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: ஸ்வியாடெக் சாம்பியன்

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் போலந்தின் இகா ஸ்வியாடெக் சாம்பியனானார். இப்போட்டியில் அவர் வென்ற 2–ஆவது கோப்பை இதுவாகும். இதற்குமுன் 2020–இல் அவர் இங்கு சாம்பியன் ஆகியிருந்தார்.

பாரீஸில் சனிக்கிழமை நடைபெற்ற இறுதிச்சுற்றில், உலகின் நம்பர் 1 வீராங்கனையான ஸ்வியாடெக் 6–1, 6–3 என்ற நேர்செட்களில் அமெரிக்காவின் இளம் வீராங்கனையான கோகோ கௌபை மிக எளிதாக வீழ்த்தினார்.

மேலும், இந்த வெற்றியின்மூலம் தொடர்ந்து 35 ஆட்டங்களில் வெற்றியைப் பதிவு செய்திருக்கும் ஸ்வியாடெக், வீனஸ் வில்லியம்ஸின் சாதனையை சமன் செய்துள்ளார். இப்போட்டியில் 4–ஆவது சுற்று தவிர்த்து இதர அனைத்து சுற்றுகளிலுமே நேர்செட்களில் வென்றிருக்கிறார் ஸ்வியாடெக்.

---

7. துப்பாக்கி சுடுதல்: இந்தியா 2–ஆம் இடம்

அஜர்பைஜானில் சனிக்கிழமையுடன் நிறைவடைந்த உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியா 2ஆம் இடம் பிடித்து நிறைவு செய்தது. இந்திய போட்டியாளர்கள் 2 தங்கம், 3 வெள்ளி என 5 பதக்கங்களை இதில் வென்றுள்ளனர்.

இப்போட்டியின் கடைசி நாளன்று நடைபெற்ற 50 மீ ரைபிள் 3 பொசிஷன்ஸ் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் ஸ்வப்னில் குசேல்/ஆஷி சௌக்சி கூட்டணி பங்கேற்றிருந்தது. முதல் நிலையில் 900–க்கு 881 புள்ளிகளும், 2–ஆம்

நிலையில் 600–க்கு 583 புள்ளிகளும் பெற்றது இந்திய இணை. பின்னர் இறுதிச்சுற்றில் கடும் சவால் அளித்த உக்ரைனின் செர்ஹி குலிஷ்/டரியா டைகோவா கூட்டணியை 16–12 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி தங்கத்தை வசமாக்கியது ஸ்வப்னில்/ஆஷி ஜோடி.

இப்போட்டியில் ஸ்வப்னிலுக்கு இது 3–ஆவது பதக்கமாகும். ஏற்கெனவே தனிநபர் 3 பொசிஷன்ஸ், அணிகள் 3 பொசிஷன்ஸ் ஆகிய இரு பிரிவுகளிலும் அவர் வெள்ளி வென்றிருந்தார்.

---

8. நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 28–ஆகக் குறைவு

நாட்டில் பிறக்கும் 1,000 குழந்தைகளில் ஓராண்டுக்குள் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 28–ஆகக் குறைந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் பிறக்கும் 1,000 குழந்தைகளில் ஓராண்டை எட்டுவதற்குள் எத்தனை குழந்தைகள் இறக்கின்றன என்பதே குழந்தை இறப்பு விகிதம் எனக் கணக்கிடப்படுகிறது. கடந்த 2020–ஆம் ஆண்டுக்கான புதிய தரவுகளை இந்தியப் பதிவாளர் இயக்குநரகம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் குழந்தை இறப்பு விகம்த 28–ஆகக் குறைந்துள்ளது. 1971–ஆம் ஆண்டில் இது 129–ஆக இருந்த நிலையில், தற்போது நான்கில் ஒரு பங்காகக் குறைந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் குழந்தை இறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. 10 ஆண்டுகளுக்கு முன்பு குழந்தை இறப்பு விகிதம் 44–ஆக இருந்த நிலையில், தற்போது 28–ஆகக் குறைந்துள்ளது.

அதே காலகட்டத்தில் கிராமப்பகுதிகளில் குழந்தை இறப்பு விகிதம் 48–இல் இருந்து 31–ஆகவும், நகரப்பகுதிகளில் 29–இல் இருந்து 19–ஆகவும் சரிவடைந்துள்ளது. கிராமம் மற்றும் நகரப் பகுதிகளில் கடந்த 10 ஆண்டுகளில் குழந்தை இறப்பு விகிதம் சுமார் 35 சதவீதம் குறைந்துள்ளது.

எனினும், 36 குழந்தைகளில் ஒரு குழந்தை ஓராண்டுக்குள் இறக்கும் சூழல் நிலவுவதாகத் தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2020–ஆம் ஆண்டில் மத்திய பிரதேசத்தில் அதிக குழந்தை இறப்பு விகிதமும் (43), மிஸோரத்தில் குறைந்த இறப்பு விகிதமும் (3) பதிவானதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பிறப்பு விகிதமும் தொடர்ந்து குறைந்து வருகிறது. கடந்த 1971–ஆம் ஆண்டில் 36.9–ஆக இருந்த பிறப்பு விகிதம், 2020–ஆம் ஆண்டில் 19.5–ஆகக் குறைந்துள்ளது. அதேவேளையில், நகரப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் கிராமப்பகுதிகளில் பிறப்பு விகிதம் அதிகமாகவே உள்ளது.

கடந்த 2011–இல் பிறப்பு விகிதம் 21.8–ஆக இருந்தது. 2020–ஆம் ஆண்டில் அது 19.5–ஆகக் குறைந்துள்ளது. அதே காலகட்டத்தில் கிராமப்பகுதிகளில் பிறப்பு விகிதம் 23.3–இல் இருந்து 21.1–ஆகவும், நகரப்பகுதிகளில் 17.6–இல் இருந்து 16.1–ஆகவும் குறைந்துள்ளது.

தமிழ்நாட்டில் / இந்தியாவில் பிறப்பு விகிதம்; இறப்பு விகிதம் (பொது); குழந்தை இறப்பு விகிதம்

தமிழ்நாடு: 13.8; 6.1; 13

இந்தியா முழுவதும்: 19.5; 6; 28

---

1. "Scheme for Residential Education for Students in High Schools in Targeted Areas" (SHRESTHA) திட்டத்தை அறிமுகப்படுத்திய நடுவண் அமைச்சகம் எது?

அ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

ஆ. கல்வி அமைச்சகம்

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம்

✓ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது "Scheme for Residential Education for Students in High Schools in Targeted Areas" (SHRESTHA) திட்டத்தைத் தொடங்கியது. இது ஏழை பட்டியல் இன மாணவர்களுக்கு தரமான கல்வி மற்றும் வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் SHRESHTA (NETS)–க்கான தேசிய நுழைவுத் தேர்வின் மூலம் ஆண்டுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான திறமையான SC மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் CBSE உடன் இணைக்கப்பட்ட நல்ல தரமான தனியார் உண்டு உறைவிடப் பள்ளிகளில் சேர்க்கப்படுவார்கள்.

2. சுற்றுலா அமைச்சகமானது எந்த நிறுவனத்துடன் இணைந்து, 'நிலையான சுற்றுலாவுக்கான தேசிய உத்தி'யை அறிமுகப்படுத்தியது?

அ. FAO

ஆ. UNEP ☑

இ. உலக வங்கி

ஈ. உலகப் பொருளாதார மன்றம்

✓ மத்திய சுற்றுலா அமைச்சகம், ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) மற்றும் இந்திய பொறுப்பு சுற்றுலா சங்கம் (RTSOI) ஆகியவற்றுடன் இணைந்து, புது தில்லியில் 'நிலையான மற்றும் பொறுப்பான சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவ –தற்கான தேசிய உச்சிமாநாட்டை' ஏற்பாடு செய்தது. இச்சந்தர்ப்பத்தில், சுற்றுலா அமைச்சகம் 'நிலையான சுற்றுலா மற்றும் பொறுப்பான பயணிகள்' திட்டத்திற்கான தேசிய உத்தியை' அறிமுகப்படுத்தியது.

3. 2022 – உலக சுற்றுச்சூழல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Invest in our Planet

ஆ. Only One Earth ☑

இ. 50th Environment Day

ஈ. Live with the Nature

✓ மதிப்புக்கேடான சுற்றுச்சூழல் நிலைகள் மற்றும் சூழல் பாதுகாப்புகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.5 அன்று உலக சுற்றுச்சூழல் நாள் கொண்டாடப்படுகிறது. ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) என்பது உலகெங்கிலும் உள்ள நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடத்தும் ஒரு மைய நிறுவனமாகும். 2022 ஆம் ஆண்டு 50ஆவது உலக சுற்றுச்சூழல் நாளைக் குறிக்கிறது. சுவீடன், இந்த ஆண்டு நிகழ்வின் தொகுப்பாளராக உள்ளது. 'Only One Earth' என்பது 2022 – உலக சுற்றுச்சூழல் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

4. கர்ப்பிணிப்பெண்களுக்காக, 'அஞ்சல்' என்ற சிறப்பு சுகாதாரத்திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு **ஆ. இராஜஸ்தான் ☑**

இ. உத்தர பிரதேசம் ஈ. கேரளா

✓ கர்ப்பிணிப் பெண்களுக்காக கரௌலி மாவட்டத்தில், 'அஞ்சல்' என்னும் சிறப்பு சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தை இராஜஸ்தான் மாநிலம் அறிமுகப்படுத்தியது. இந்தச்சமயத்தின்போது, 13000 கர்ப்பிணிப்பெண்களுக்கு அவர்களின் ஹீமோகுளோபின் அளவைப் பரிசோதித்து, சரியான மருந்துகளை உட்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

5. 2021–22–க்கான 'தொழிலாளர்' வருங்கால வைப்புநிதி (EPF) வைப்புகளுக்கு அரசாங்கத்தால் ஒப்பளிக்கப்பட்ட புதிய வட்டி வீதம் என்ன?

அ. 8.7%

ஆ. 8.5%

இ. 8.1% ☑

ஈ. 7.5%

✓ 2021–22ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) வைப்புகளுக்கு முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட 8.5 சதவீதத்திற்கு மாற்றாக 8.1 சதவீத வட்டி வீதம் வழங்குவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. 8.1 சதவீத EPF வட்டி வீதமானது 1977–78இல் வழங்கப்பட்ட 8 சதவீதத்திற்குப் பின் வழங்கப்படுகிற மிகக் குறைந்த வட்டிவீதமாகும். EPF வைப்புத்தொகைக்கான வட்டி வீதம் மத்திய அறங்காவலர் குழுவால் முடிவு செய்யப்பட்டது மற்றும் 2021ஆம் ஆண்டில் நிதி அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

6. சமீபத்தில் உலக சாம்பியன்ஷிப்பில் இந்தியாவிற்காக தங்கப்பதக்கம் வென்ற நிகத் ஜரீன் சார்ந்த விளையாட்டு எது?

அ. டேபிள் டென்னிஸ்

ஆ. பூப்பந்து

இ. குத்துச்சண்டை ☑

ஈ. ஸ்குவாஷ்

✓ தெலங்கானாவைச் சேர்ந்த 25 வயதான குத்துச்சண்டை வீராங்கனை நிகத் ஜரீன், பெண்களுக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பின் பிளைவெயிட் (52 கிலோ) பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார். சாம்பியன்ஷிப்பை வென்ற ஐந்தாவது இந்தியப்பெண்மணி என்ற பெருமையையும் அவர் பெற்றார். கடந்த 2009ஆம் ஆண்டில் தனது குத்துச்சண்டை பயணத்தைத் தொடங்கிய அவர், 2011இல் இளையோர் உலக சாம்பியன்ஷிப்பை வென்றார் மற்றும் 2016–இல் மூத்த உலக சாம்பியன்ஷிப்பின் காலிறுதி வரை சென்றார்.

7. இந்தியாவின் முதல், 'போர் விளையாட்டுக்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம்' (WARDEC) அமையவுள்ள நகரம் எது?

அ. மும்பை

ஆ. புது தில்லி ☑

இ. கொச்சி

ஈ. விசாகப்பட்டினம்

✓ இராணுவப் பயிற்சிக் குழு, காந்திநகரில் உள்ள ராஷ்ட்ரிய ரக்ஷா பல்கலைக்கழகத்துடன் இணைந்து புது தில்லியில் 'போர்–விளையாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தை' உருவாக்குதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. 'WARDEC' எனப்பெயரிடப்பட்ட இத்திட்டம், நாட்டின் முதல் உருவகப்படுத்துதல் அடிப்படையிலா–ன பயிற்சி மையமாக இருக்கும். இது மெய்நிகர் அடிப்படையிலான போர்–விளையாட்டுகளை வடிவமைக்க செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தும்.

8. 'கலாம்–100 ஏவுகணை' சோதனையை வெற்றிகரமாக நடத்திய விண்வெளி நிறுவனம் எது?

அ. NSIL

ஆ. ஸ்கை ரூட் ☑

இ. பிக்ஸ்ஸெல்

ஈ. அக்னிகுல்

✓ ஹைதராபாத்தைச் சார்ந்த விண்வெளி தொழில்நுட்ப துளிர் நிறுவனமான ஸ்கை ரூட் ஏரோஸ்பேஸ் அதன் 'கலாம்–100' ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. இது விக்ரம்–1 ஏவுகணையை இயக்கும். இதன் 3ஆம் கட்டத்திற்கு, முன்னாள் குடியரசுத்தலைவர் ஆபஜெ அப்துல்கலாமின் நினைவாக கலாம்–100 எனப்பெயரிடப்பட்டது. விக்ரம்–1 கலம் தாழ் சரிவு வட்டணையில் 480 கிகி முதல் 500 கிலோமீட்டர் வரை சரக்குகளைக் கொண்டுசெல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

9. அந்தோனி அல்பானீஸ் என்பார் எந்த நாட்டின் அதிபர் தேர்தலில் வென்றுள்ளார்?

அ. ஐக்கிய பேரரசு

ஆ. பிரான்ஸ்

இ. ஆஸ்திரேலியா ☑

ஈ. நியூசிலாந்து

✓ அண்மையில் நடைபெற்ற ஆஸ்திரேலிய அதிபர் தேர்தலில், தொழிலாளர் கட்சி 72 இடங்களை வென்றது. ஸ்காட் மோரிசனின் தாராளவாத தேசிய கூட்டணி 52 இடங்களை வென்றது. அந்தோனி அல்பானீஸ் தலைமையிலான தொழிலாளர் கட்சி 2013–க்குப் பிறகு முதன்முறையாக ஆட்சிக்கு வரவுள்ளது. பிரதமர் ஸ்காட் மோரிசனின் பழமைவாத அரசாங்கம் தனது தோல்வியை ஒப்புக்கொண்டது.

10. 2022 – பல்லுயிர் பெருக்கத்திற்கான உலக நாளின் கருப்பொருள் என்ன?

அ. Building a shared future for all life ☑

ஆ. Inclusive and Inspiring

இ. Rights for All life

ஈ. Co-exist and Co-operate

✓ பல்லுயிர் பெருக்கத்திற்கான உலக நாளானது ஒவ்வோர் ஆண்டும் மே.22 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. "Building a shared future for all life" என்பது நடப்பாண்டில் (2022) வரும் பல்லுயிர் பெருக்கத்திற்கான உலக நாளுக்கானக் கருப்பொருளாகும். உலகில் பல்லுயிர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாளை ஐநா சபை அறிவித்தது. சென்னையில் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் பல்லுயிர் பெருக்கங்குறித்த கண்காட்சியைத் தொடங்கிவைத்தார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'ஜன் சமர்த்' வலைதளத்தை இன்று தொடக்கி வைக்கிறார் பிரதமர் மோடி

மத்திய அரசு செயல்படுத்தி வரும் கடனுதவித் திட்டங்களை ஒருங்கிணைக்கும் 'ஜன் சமர்த்' வலைதளத்தைப் பிரதமர் நரேந்திர மோடி ஜூன்.6 அன்று தொடக்கிவைக்கிறார்.

நாடு சுதந்திரமடைந்த 75–ஆவது ஆண்டைக் கொண்டாடும் ஒருபகுதியாக மத்திய நிதித்துறை, வர்த்தகத்துறை அமைச்சகங்களுக்கான 'சிறப்பு வார' கொண்டாட்டங்களைப் பிரதமர் மோடி தொடக்கிவைக்கிறார். அதில், கடந்த 8 ஆண்டுகளில் இரு அமைச்சகங்களின் பயணங்களை விவரிக்கும் எண்ம கண்காட்சி இடம்பெறவுள்ளது. ஜூன்.6–ஆம் தேதி முதல் 11–ஆம் தேதி வரை இந்தக் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன.

மத்திய அரசு செயல்படுத்திவரும் கடனுதவித்திட்டங்களை ஒருங்கிணைக்கும் வகையில், 'ஜன் சமர்த்' வலைதளத் –தையும் பிரதமர் மோடி தொடக்கிவைக்கிறார். கடன் வழங்குவோரையும் பெறுவோரையும் ஒரே தளத்தில் சந்திக்கச் செய்து, கடன் பெறும் நடவடிக்கையை எளிதாக்குவதற்கு இந்த வலைதளம் உதவும்.

எளிமையான வழிமுறைகளைப் பின்பற்றி கடன் பெற்று பல்வேறு துறைகளின் வளர்ச்சியை ஊக்கப்படுத்த இந்த வலைதளம் வழிவகுக்கும் எனப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. மேலும், 75ஆவது சுதந்திர ஆண்டையொட்டி, ₹1, ₹2, ₹5, ₹10, ₹20 நாணயங்களின் சிறப்புத் தொகுப்பையும் பிரதமர் மோடி வெளியிடுகிறார்.

---

2. பெட்ரோலில் 10% எத்தனால் கலப்பு இலக்கு நிறைவேறியது

மத்திய அரசு திட்டமிட்டதைவிட ஐந்து மாதங்களுக்கு முன் பெட்ரோலில் 10 சதவீத எத்தனால் கலப்பு இலக்கு எட்டப்பட்டுள்ளது.

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துதல், அந்நியச் செலாவணியைச் சேமிப்பது, சுற்றுச்சூழல் பிரச்னைகளைத் தீர்ப்பது மற்றும் உள்நாட்டு விவசாயத் துறைக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டத்தை மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது.

கடந்த 2018–இல் அறிவிக்கப்பட்ட 'உயிரி எரிபொருள் மீதான தேசியக் கொள்கை' 2030–ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலில் 20% எத்தனால் கலப்பதை இலக்காகக் கொண்டிருந்தது. பின்னர், இந்த இலக்கை முன்கூட்டியே அடையும் நோக்கில், 2025–26–க்கு மாற்றியமைக்கப்பட்டது.

இதற்கான வழிமுறைகளை கடந்த ஆண்டு ஜூன் மாதம் பிரதமர் மோடி வெளியிட்டார். இந்நிலையில் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் காரணமாக பெட்ரோலில் 10 சதவீத எத்தனால் கலப்பு இலக்கானது தற்போது எட்டப்பட்டுள்ளது. வரும் நவம்பரில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், அதற்கு முன்னதாகவே இந்த இலக்கு எட்டப்பட்டுள்ளது. இதில் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் சராசரியாக 10 சதவீதத்தை எட்டியுள்ளன.

கடந்த 8 ஆண்டுகளில் இச்சாதனை இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை அதிகப்படுத்தியது மட்டுமின்றி, ₹41,500 கோடிக்கு மேல் அந்நிய செலாவணியை சேமிக்க வழிவகை செய்தது. மேலும் மாசு உமிழ்வை 27 லட்சம் மெட்ரிக் டன் குறைத்து, ₹40,600 கோடிக்கு மேல் விவசாயிகளுக்கு விரைவாக செலுத்த வழிவகுத்தது.

இதன்மூலம் 2025–26–க்குள் எத்தனால் கலப்பு திட்டம் 20 சதவீத இலக்கை எட்டும் என்றும், அடுத்த ஆண்டு ஏப்ரலுக்குள் 20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் ஒரு சில பெட்ரோல் நிலையங்களில் விநியோகிக்கப்பட்டு படிப்படியாக நாடு முழுவதும் விரிவடையும் என்றும் எண்ணெய் அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

3. சாம்பியன் நடால்: பிரெஞ்சு ஓபன்–14, கிராண்ட்ஸ்லாம்–22

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் நார்வேயின் கேஸ்பர் ரூடை 6–3 6–3, 6–0 என்ற நேர்செட்களில் வீழ்த்தி 14–ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி சாதனை புரிந்துள்ளார் ஜாம்பவான் ரபேல் நடால். மேலும் இது அவர் வெல்லும் 22–ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஆகும்.

டென்னிஸ் உலகில் பெடரர், நடால், ஜோகோவிச் உள்ளிட்டோர் 'பிக் 3' என அழைக்கப்படுகின்றனர். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இதில் நடால் 21 முறையும், பெடரர், ஜோகோவிச் ஆகியோர் தலா 20 முறையும் கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டங்களை கைப்பற்றியுள்ளனர். பிரெஞ்சு ஓபனில் மட்டுமே 13 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார் நடால்.

ஒரே ஆண்டில் ஆஸி, பிரெஞ்சு ஓபன் பட்டம்:

மேலும் ஒரே ஆண்டில் ஆஸ்திரேலிய ஓபன் மற்றும் பிரெஞ்சு ஓபன் பட்டங்களை நடால் வெல்வது இதுவே முதன் முறையாகும். மேலும் பிரெஞ்சு ஓபனில் சாம்பியன் பட்டம் வென்ற அதிக வயதான வீரர் என்ற பெருமையையும் பெற்றார் நடால்.

1. அரசின் கடனுதவித் திட்டங்களை ஒருங்கிணைக்கும் புதிய தேசிய வலைத்தளத்தின் பெயர் என்ன?

அ. PM ஆத்மநிர்பார் வலைத்தளம்

ஆ. ஜன் சமர்த் வலைத்தளம் ☑

இ. ஜன் சந்தேஷ் வலைத்தளம்

ஈ. பாரத் சமர்த் வலைத்தளம்

✓ 'ஜன் சமர்த்' என்ற பெயரில் அரசின் கடனுதவித் திட்டங்களை ஒருங்கிணைக்கும் புதிய தேசிய வலைத்தளத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். 'ஜன் சமர்த்' என்பது பயனாளிகளை கடன் வழங்குபவர்களுடன் இணைக்க, அரசின் கடனுதவித் திட்டங்களை ஒருங்கிணைக்கும் ஒரே டிஜிட்டல் தளம் ஆகும். இது எளிதான டிஜிட்டல் செயல் முறைகள்மூலம் சரியான அரசாங்க நன்மைகளை நாட்டு மக்களுக்கு வழங்குகிறது.

2. அதன் டியாங்காங் விண்வெளி நிலையத்திற்கு மனிதர்களை அனுப்பிய நாடு எது?

அ. ஜப்பான்

ஆ. இஸ்ரேல்

இ. சீனா ☑

ஈ. தென் கொரியா

✓ சீனா தனது புதிய விண்வெளி நிலையத்திற்கு ஆறு மாதங்களுக்குக் கட்டுமானப் பணிகளைத் தொடருவதற்காக 3 விண்வெளி வீரர்களை அனுப்பியுள்ளது. லாங் மார்ச் 2F ஏவுகலம்மூலம் ஷென்சோ–14 விண்கலம் ஏவப்பட்டதாக சீனாவின் மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் விண்வெளி நிறுவனம் அறிவித்தது. இந்தக் குழு டியாங்காங் விண்வெளி நிலையத்தின் தியான்ஹே மைய தொகுதியில் 6 மாதங்களுக்கு இருந்து பணிகளை மேற்கொள்ளும்.

3. 2022 – பிரெஞ்சு ஓபன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?

அ. நோவக் ஜோகோவிச்

ஆ. ரபேல் நடால் ☑

இ. காஸ்பர் ரூட்

ஈ. லூகாஸ் அல்கராஸ்

✓ டென்னிஸ் வீரர் ரபேல் நடால் இறுதிப்போட்டியில் காஸ்பர் ரூட்டை வீழ்த்தி தனது 14ஆவது பிரெஞ்சு ஓபன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றார். இந்த வெற்றியின்மூலம், நடால் தனது 14ஆவது ரோலண்ட் கரோஸ் (பிரெஞ்சு ஓபன்) சாம்பியன்ஷிப்பையும் ஒட்டுமொத்தமாக 22ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் வென்றார். பிரெஞ்சு ஓபன் என்பது ஒரு கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியாகும். இது பிரான்சின் பாரிஸில் உள்ள ஸ்டேட் ரோலண்ட் கரோஸில் உள்ள வெளிப்புற களிமண் மைதானத்தில் விளையாடப்படுகிறது.

4. 'சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கைமுறை (LiFE) இயக்கம்' என்ற உலகளாவிய முயற்சியை தொடங்கிய நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. ஐக்கிய பேரரசு

இ. இந்தியா ☑

ஈ. ஜப்பான்

✓ பிரதமர் மோடி, 2022 ஜூன்.5 அன்று, 'சுற்றுச்சூழல் இயக்கத்திற்கான வாழ்க்கைமுறை'யை காணொலி வாயிலாகத் தொடங்கி வைக்கிறார். லைப் யோசனையை, கிளாஸ்கோவில் கடந்த ஆண்டு நடைபெற்ற COP26 எனப்படும் ஐநா பருவநிலை மாற்ற மாநாட்டில் பேசியபோது பிரதமரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

✓ உலகம் முழுவதுமுள்ள தனிநபர்கள், சமுதாயத்தினர் மற்றும் நிறுவனங்கள், சுற்றுச்சூழல் உணர்வுடன்கூடிய வாழ்க்கைமுறையை பின்பற்றுவதற்கும், வலியுறுத்துவதற்கும், கல்வியாளர்கள், பல்கலைகழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை 'யோசனை கோருவதற்கான லைப் சர்வதேச அழைப்பு' தொடங்கும்.

5. 'Ex SAMPRITI–X' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான கூட்டு இராணுவப்பயிற்சியாகும்?

அ. இலங்கை

ஆ. ஜப்பான்

இ. வங்காளதேசம் ☑

ஈ. பிரான்ஸ்

✓ இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பின் ஒருபகுதியாக, இந்தியா மற்றும் வங்கதேசம் இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சியான 'SAMPRITI–X' வங்காளதேசத்தில் தொடங்கியது. இந்த இராணுவப்பயிற்சியானது இருபடைகளுக்கும் இடையே இயங்குதன்மை மற்றும் ஒத்துழைப்பின் அம்சங்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. டோக்ரா படைப்பிரிவானது இந்தியாவின் சார்பாக இந்தப் பயிற்சியில் பங்கேற்கிறது.

6. 'ஷெல்பிரேட்!' என்பது எந்தப் பன்னாட்டு நாளின் கருப்பொருளாகும்?

அ. உலக ஆமைகள் நாள் ☑

ஆ. உலக டுனா நாள்

இ. உலக நீர் நாள்

ஈ. உலக சுற்றுச்சூழல் நாள்

✓ உலக ஆமைகள் நாளானது மே.23 அன்று உலகளவில் கொண்டாடப்படுகிறது. ஆமைகள் அவற்றின் இயல் வாழ்விடங்களில் வாழ உதவும் வழிகள்பற்றிய விழிப்புணர்வை இந்த நாள் ஏற்படுத்துகிறது. 'Shellebrate!' என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் உலக ஆமைகள் நாளுக்கானக் கருப்பொருளாகும். இக்கருப்பொருள் ஆமைகளை நேசிக்கவும் காப்பாற்றவும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறது. இந்தச் சிறப்பு நாள் 1990இல் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பான அமெரிக்க டார்டாய்ஸ் ரெஸ்க்யூமூலம் நிறுவப்பட்டது.

7. உலக செஞ்சிலுவை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. மே.08 ☑

ஆ. மே.10

இ. ஜூன்.05

ஈ. ஜூன்.07

✓ பன்னாட்டு செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கத்தின் கொள்கைகளை நினைவுகூரும் வகையில், உலக செஞ்சிலுவை நாள் ஒவ்வோர் ஆண்டும் மே.8 அன்று அனுசரிக்கப்படுகிறது. பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் நிறுவனரும் அமைதிக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றவருமான ஹென்றி டுனான்ட்டின் பிறந்தநாளையும் இந்த நாள் குறிக்கிறது. 'Be Human Kind' என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள் ஆகும்.

8. **2022–23ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மொத்த உர மானியம் எவ்வளவு?**

அ. ரூ.1 இலட்சம் கோடி

ஆ. ரூ.2.15 இலட்சம் கோடி ☑

இ. ரூ.1.5 இலட்சம் கோடி

ஈ. ரூ.3.5 இலட்சம் கோடி

✓ உரங்களின் விலை உயர்வுக்கு இடையே நடுவண் அரசு கூடுதலாக ₹1.10 இலட்சம் கோடி உர மானியத்தை அறிவித்தது. இந்த வரவுசெலவுத்திட்டத்தில் உர மானியம் ₹1.05 இலட்சம் கோடி கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 2022–23ஆம் ஆண்டில் அரசின் மொத்த உர மானியம் ₹2.15 இலட்சம் கோடியாக உயரும். உர மானியம் 2021–22ஆம் ஆண்டில் ₹1.62 இலட்சம் கோடியாக இருந்தது.

9. **குரங்கம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 21 நாள் தனிமைப்படுத்தலை அறிமுகப்படுத்திய முதல் நாடு எது?**



அ. ஐக்கிய பேரரசு

ஆ. பிரான்ஸ்

இ. பெல்ஜியம் ☑

ஈ. நியூசிலாந்து

✓ உலகளவில் அதிகரித்துவரும் பாதிப்புகளுக்கிடையே குரங்கம்மை நோயாளிகளுக்கு இருபத்தொரு நாள் கட்டாய தனிமைப்படுத்தலை பெல்ஜியம் அறிமுகப்படுத்தியுள்ளது. உலக நலவாழ்வு அமைப்பானது இதுவரை 12 நாடுகளில் இதுபோன்ற 92 பாதிப்புகளை உறுதிப்படுத்தியுள்ளது. மேலும் 28 சந்தேகத்திற்கிடமான பாதிப்புகள் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. குரங்கம்மை என்பது பெரியம்மை குடும்பத்தின் ஓர் அங்கமான குரங்கம்மை வைரஸால் ஏற்படும் ஒரு நோயாகும். இது சொறி, காய்ச்சல், தலைவலி, தசைவலி, வீக்கம் மற்றும் முதுகுவலி உள்ளிட்ட நோய் அறிகுறிகளைக் கொண்டுள்ளது.

10. **வங்கிகள், NBFC–கள் மற்றும் பிற ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களில் வாடிக்கையாளர் சேவையின் தரத்தை மதிப்பிடுவதற்காக உருவாக்கப்பட்ட RBI குழுவின் தலைவர் யார்?**

அ. M D பத்ரா

ஆ. B P கனுங்கோ ☑

இ. M K ஜெயின்

ஈ. உர்ஜித் படேல்

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) வங்கிகள், NBFC–கள் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள பிற நிறுவனங்களில் வாடிக்கையாளர் சேவையின் செயல்திறன், போதுமை மற்றும் தரம் ஆகியவற்றை மதிப்பீடு செய்ய ஒரு குழுவை அமைத்துள்ளது. இக்குழு தனது முதல் கூட்டம் நடந்த நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உணவுப் பாதுகாப்பு நாளையொட்டி, 4ஆவது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டை மத்திய குடும்பநல அமைச்சகம் வெளியிட்டது.

நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பான உணவை உறுதிசெய்யும் பொருட்டு, மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களை ஊக்குவிக்க, இந்திய உணவுப்பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் 4ஆவது மாநில உணவுப் பாதுகாப்பு குறியீட்டை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார். உணவுப் பாதுகாப்புச் சூழலில், போட்டி மற்றும் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை உருவாக்கும் நோக்கத்துடன் 2018–19ஆம் ஆண்டில், ஐந்து அம்சங்களை அடிப்படையாககொண்ட உணவுப் பாதுகாப்புக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது. குடி மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுகளை வழங்குவதற்கு இந்தக் குறியீடு உதவிபுரியும்.

2021–22ஆம் ஆண்டுக்கான தரவரிசையின் அடிப்படையில் பெரிய மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்திலும், குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் இரண்டாவது இடத்திலும் உள்ளன. சிறிய மாநிலங்களில் கோவா முதலிடத்திலும், அதனை தொடர்ந்து மணிப்பூர், சிக்கிம் ஆகிய மாநிலங்களும் உள்ளன. யூனியன் பிரதேசங்களில் ஜம்மு & காஷ்மீர் முதலிடத்திலும், தில்லி இரண்டாம் இடத்திலும், சண்டிகர் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

---

2. IRCTC வலைதளத்தில் மாதம் 12 பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்யலாம் – ஆதார் இணைத்தால் 24 பயணச்சீட்டுகள்

இரயில் பயணச்சீட்டு முன்பதிவு வலைதளமான IRCTC (இந்திய இரயில்வே உணவு விநியோகம் மற்றும் சுற்றுலா கழகம்) ஒரு மாதத்துக்கான பயணச்சீட்டு முன்பதிவு எண்ணிக்கையை உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டது.

இரயில்களில் அடிக்கடி பயணிக்கும் பயணிகளுக்கு உதவும் வகையிலும், தனது ஒரே வலைதள கணக்கிலேயே குடும்ப உறுப்பினர்களுக்கும் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் பயணிகளின் சிரமத்தைப் போக்கும் வகையிலும் முன்பதிவு எண்ணிக்கையை IRCTC உயர்த்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து இரயில்வே அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: பயணிகளின் வசதிக்காக மாதம் 6 இரயில் பயணச்சீட்டுகளை மட்டுமே முன்பதிவு செய்ய முடியும் என்ற அளவை 12–ஆக உயர்த்த இரயில்வே முடிவு செய்துள்ளது. இதன்மூலம், பயணி தனது ஒரே IRCTC கணக்கில் மாதம் 12 பயணச்சீட்டுகள் வரை முன்பதிவு செய்ய முடியும். மேலும், IRCTC கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்கும் பயணிகள் ஒரே கணக்கிலிருந்து மாதம் 24 பயணச்சீட்டுகள் வரை முன்பதிவு செய்ய முடியும். இவ்வாறு முன்பதிவு செய்யப்படும் பயணச்சீட்டுகள் ஆதார் மூலமாக அவ்வப்போது ஆய்வுக்கும் உட்படுத்தப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

1. கீழ்காணும் எந்த மாநிலம் / UT–இல் 'தேசிய பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனம்' தொடங்கப்பட்டுள்ளது?

அ. கர்நாடகா

ஆ. புது தில்லி ☑

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஜார்கண்ட்

✓ விடுதலைப்பெருவிழாவின் ஒருபகுதியாக பழங்குடியினர் நல அமைச்சகத்தின் சார்பில், 'தேசிய பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித்ஷா புது தில்லியில் தொடங்கி வைத்தார். பழங்குடியினர் ஆராய்ச்சி மையங்கள், திறன் மேம்பாட்டு மையங்கள் ஆகிய திட்டங்களை தேசிய பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் கண்காணிக்கும். ஆராய்ச்சி மற்றும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்கான நெறிமுறைகளையும் அது வகுக்கும்.

2. டார்னியர் வானூர்தி மற்றும் Su–30 MKI ஏரோ எஞ்சின்களை, கீழ்காணும் எந்த நிறுவனம் தயாரிப்பதற்கு, பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் கவுன்சில் ஒப்புதலளித்துள்ளது?

அ. ISRO

ஆ. DRDO

இ. HAL ☑

ஈ. BHEL

✓ பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் கவுன்சில் (DAC), உள்நாட்டு தொழிற்சாலைகளிலிருந்து ₹76,390 கோடி மதிப்பிலான இராணுவ தளவாடங்கள் மற்றும் தளங்களை வாங்க ஒப்புதலளித்தது. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL)மூலம் டார்னியர் விமானம் மற்றும் Su–30 MKI ஏரோ–எஞ்சின்கள் தயாரிக்க DAC ஒப்புதல் அளித்தது. மேலும், 'டிஜிட்டல் கடலோர காவற்படை' திட்டத்திற்கும் DAC ஒப்புதல் அளித்துள்ளது.

3. அண்மையில் இந்தியாவால் சோதிக்கப்பட்ட, 'அக்னி–4' என்றால் என்ன?

அ. இடைநிலை நெடுக்க எறிகணை ☑

ஆ. அடுத்த தலைமுறை சேமக்கலன்

இ. நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்பு ஏவுகணை

ஈ. கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை

✓ அக்னி–4 என்ற இடைநிலை நெடுக்க எறிகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்தது. ஒடிசாவில் உள்ள ஆபஜெ அப்துல் கலாம் தீவிலிருந்து வெற்றிகரமாக இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அக்னி–4 என்பது 4,000 கிமீ தூரம் வரை சென்று தாக்கக்கூடிய ஓர் இடைநிலை நெடுக்க ஏவுகணையாகும். இது பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. 1,000 கிகி எடை வரை சுமந்து 900 கிமீ வரை செல்லக்கூடியது.

4. பன்னாட்டு அமைதி காக்கும் பயிற்சியான, 'கான் குவெஸ்ட் – 2022'ஐ நடத்திய நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. மங்கோலியா ☑

இ. கஜகஸ்தான்

ஈ. பிரான்ஸ்

✓ பன்னாட்டு அமைதி காக்கும் பயிற்சியான, 'Khan Quest – 2022' சமீபத்தில் மங்கோலியாவில் தொடங்கியது. இந்தப் பயிற்சியில் இந்தியா உட்பட 16 நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் பங்கேற்கின்றனர். இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சகத்தின்படி, இந்திய இராணுவம் லடாக் சாரணர்களின் ஒரு குழுவால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. 14 நாள் பயிற்சியானது, பங்கேற்கும் நாடுகளிடையே பாதுகாப்பு ஒத்துழைப்பின் அளவை மேம்படுத்தும்.

5. 'பைகோ பண்டிகை' கொண்டாடப்படுகிற இந்திய மாநிலம் எது?

அ. உத்தர பிரதேசம்

ஆ. பஞ்சாப்

இ. அஸ்ஸாம் ☑

ஈ. மகாராஷ்டிரா

✓ இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸ்ஸாமில் உள்ள மக்கள், 'பைகோ பண்டிகை' என்ற வசந்த விழாவைக் கொண்டாடுகிறார்கள். ஆண்டுதோறும் ஜூன் மாதத்தில் அஸ்ஸாம் மாநிலாத்திலுள்ள மக்களால் இது முக்கியமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. நன்னலத்துடன் கூடிய மங்களகரமான பயிர் அறுவடைக்காலத்தைக் கொண்டு வருவதே இந்தத் திருவிழாவின் நோக்கமாகும்.

6. KVIC–இன் தலைவர் வினைகுமார் சக்சேனா, கீழ்க்காணும் எந்த மாநிலம் / UT–இன் ஆளுநர் / துணைநிலை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்?

அ. கோவா

ஆ. புது தில்லி ☑

இ. புதுச்சேரி

ஈ. மேற்கு வங்கம்

✓ தற்போது காதி மற்றும் கிராமப்புற தொழிற்சாலைகள் ஆணையத்தின் (KVIC) தலைவராக பணியாற்றிவரும் வினை குமார் சக்சேனா, தில்லியின் புதிய துணைநிலை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் துணைநிலை ஆளுநர் அனில் பைஜாலின் இராஜினாமாவை இந்தியக்குடியரசுத்தலைவர் ஏற்றுக்கொண்டு அவரைத் தொடர்ந்து சக்சேனாவை நியமித்துள்ளார். இந்தியாவின் 75ஆவது விடுதலை நாளை நினைவுகூரும் வகையில் பிரதமர் தலைமையிலான தேசியக் குழுவின் உறுப்பினராகவும் அவர் இருந்தார்.

7. மூத்த இஆப அதிகாரி நிதி சிப்பர், கீழ்காணும் எந்த நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்?

அ. CBSE ☑

ஆ. AIIMS

இ. CSIR

ஈ. DRDO

✓ மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் (CBSE) தலைவராக மூத்த IAS அதிகாரி நிதி சிப்பர் நியமிக்கப்பட்டுள்ளார். சத்தீஸ்கர் கேடரின் 1994 தொகுதி இந்திய ஆட்சிப்பணி அதிகாரியான நிதி சிப்பர், தற்போது கனரக தொழிற்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராக உள்ளார். பணியாளர் அமைச்சகம் பிறப்பித்த ஆணையின்படி, தற்போதைய தலைவர் Dr வினீத் ஜோஷி இஆப–ஐத் தொடர்ந்து நிதி சிப்பர் பதவியேற்றார்.

8. 75ஆவது உலக சுகாதார அவையின் கருப்பொருள் என்ன?

அ. Invest in Health Service

ஆ. Health for Peace, Peace for Health ☑

இ. Health Amid Pandemic

ஈ. Health and Global Cooperation

✓ 75ஆவது உலக சுகாதார மாநாடு 2022 மே.22–28 வரை சுவிச்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் நடைபெறுகிறது. COVID–19 தொற்றுகாலத்திற்குப்பிறகு நேரடி முறையில் நடைபெற்ற முதல் சுகாதார மாநாடு இதுவாகும். "Health for Peace, Peace for Health" என்பது இந்த ஆண்டு (2022) நடைபெறும் சுகாதார பேரவையின் கருப்பொருளாகும். உலக சுகாதார அவை என்பது WHOஇன் முடிவெடுக்கும் அமைப்பாகும். இதில் அனைத்து WHO உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

9. இந்திய எரிவாயு பரிமாற்றகத்தில் வீட்டு உபயோக எரிவாயு வர்த்தகம் செய்யும் முதல் இந்திய நிறுவனம் எது?

அ. GAIL

ஆ. ONGC ☑

இ. IOCL

ஈ. HPCL

IGX
INDIAN GAS EXCHANGE
an IEX venture

✓ ONGC ஆனது இந்திய எரிவாயு பரிமாற்றகத்தில் வீட்டு உபயோக எரிவாயுவை வர்த்தகம் செய்யும் இந்தியாவின் முதல் ஆய்வு மற்றும் உற்பத்தி நிறுவனமாக மாறியுள்ளது. இந்தியாவின் முதல் தானியங்கி தேசிய அளவிலான எரிவாயு பரிமாற்றகமான IGX–இல் ONGCஆல் முதல் இணையவழி வர்த்தகம் சமீபத்தில் செய்யப்பட்டது. ONGC, கிருஷ்ணா கோதாவரி தொகுதியில் இருந்து எரிவாயு வர்த்தகம் மேற்கொள்கிறது.

10. 2022 – மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் நடைபெறும் இடம் எது?

அ. இஸ்தான்புல் ☑

ஆ. மங்கோலியா

இ. புது தில்லி

ஈ. டாக்கா

IBA WOMEN'S
WORLD BOXING
CHAMPIONSHIPS
İSTANBUL ★ 2022 ★ TURKEY

✓ சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் (IBA) 2022 – மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் துருக்கியின் இஸ்தான்புல்லில் நடைபெற்றது. இந்திய அணி மொத்தம் மூன்று பதக்கங்களுடன் (1 தங்கம் மற்றும் 2 வெண்கலம்) போட்டியை நிறைவுசெய்தது. தெலங்கானாவைச் சேர்ந்த குத்துச்சண்டை வீராங்கனை நிகத் ஜரீன் 52 கிலோ பிரிவில் தங்கமும், மனிஷா (57 கிலோ), பர்வீன் (63 கிலோ) வெண்கலமும் வென்றனர். சிறந்த குத்துச்சண்டை வீராங்கனையாக ஒலிம்பிக் மற்றும் உலக சாம்பியனான புசேனாஸ் சுர்மெனெலி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 1,000 மீனவ இளைஞர்களுக்கு உயிர்பாதுகாப்புப் பயிற்சி – முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கி வைத்தார்

தமிழ்நாட்டில் 14 கடலோர மாவட்டங்களைச்சேர்ந்த 1,000 மீனவ இளைஞர்களுக்கு உயிர் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பயிற்சியளிக்கும் திட்டத்தை முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடக்கிவைத்தார். இந்தத் திட்டத்தில், முதற்கட்டமாக செங்கல்பட்டு மாவட்டம் கோவளத்தில் 25 மீனவ இளைஞர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு 1,076 கிமீ நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது. இங்குள்ள 608 மீனவ கிராமங்களில் 10.48 இலட்சம் மீனவர்கள் வாழ்கின்றனர். கடற்கரைப் பகுதிகளுக்கு மக்கள் செல்லும்போது அங்கு ஏற்படும் விபத்துகளால் மனித உயிர்களை இழக்க நேரிடுகிறது. இதுபோன்ற விபத்துகளைக் குறைக்கவும், நீரில் தவறி மூழ்கி தவிப்பவர்களைக் காப்பாற்றிடும் வகையிலும் மீனவ இளைஞர்களுக்கு, 'கடற்கரை உயிர்காக்கும் பயிற்சிகள்' வழங்கப்பட உள்ளன.

இந்தப் பயிற்சியானது தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதி உதவியுடன் ₹53 லட்சம் மதிப்பீட்டில் தனியார் நிறுவனம்மூலம் மாநிலத்தின் 14 மாவட்டங்களைச் சேர்ந்த 1,000 மீனவ இளைஞர்களுக்கு அளிக்கப்படுகிறது.

---

2. உணவுத் தரக் கட்டுப்பாடு: தமிழ்நாடு முதலிடம்

உணவுப்பாதுகாப்பு துறை செயல்பாடுகளில் இந்திய அளவில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக தேர்ந்தெடுக்கப்-பட்டு, மத்திய அரசு சார்பில் தில்லியில் விருது வழங்கப்பட்டது.

இதுகுறித்து தமிழ்நாட்டின் மக்கள் நல்வாழ்வுத் துறை கூறியதாவது:

நாடு முழுவதும் 75 உணவுத் தரம் நிறைந்த மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டன இடம்பெற்றன. அதில், தமிழ்நாட்டில் இருந்து மட்டும் 11 மாவட்டங்களுக்கு அத்தகைய அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, திருவள்ளூர், காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், சென்னை, ஈரோடு, திருநெல்வேலி, திருப்பூர், தூத்துக்குடி, மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்ட உணவுப் பாதுகாப்பு துறைக்கு தர நிர்ணய பரிசுகள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.

---

3. நிகழ் நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.5%: உலக வங்கி திருத்தி மதிப்பீடு

நிகழ் நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 8 சதவீதமாக இருக்கும் என்று கடந்த ஏப்ரல் மாதம் தெரிவித்திருந்த அந்த வங்கி, அதனை திருத்தி மதிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை:

பணவீக்கம் (விலைவாசி உயர்வு விகிதம்) அதிகரிப்பு, விநியோக நடைமுறைகளில் இடர்ப்பாடுகள், புவி அரசியல் பதற்றம் ஆகியவை காரணமாக நிகழ் நிதியாண்டான 2022–23–இல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கும். தனியார்துறையின் நிலையான முதலீடு, தொழிற்துறை சூழலை மேம்படுத்த இந்திய அரசு அறிமுகம் செய்துள்ள ஊக்கத்தொகை திட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும்.

இந்திய பொருளாதார வளர்ச்சி 8.7 சதவீதமாக இருக்கும் என்று கடந்த ஜனவரி மாதம் தெரிவிக்கப்பட்டது. அதைவிட தற்போதைய மதிப்பீடு 1.2 சதவீதம் குறைவாகும். வேலைவாய்ப்பின்மை விகிதம் கரோனா பரவலுக்கு முன்பிருந்த நிலைக்குத் திரும்பியுள்ளது. எனினும் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் கரோனா பரவலுக்கு முன்பு இருந்ததைவிட குறைவாகத்தான் உள்ளது. உழைப்பாளர்களும் குறைந்த ஊதியம் கொண்ட பணிகளுக்கு மாறியுள்ளனர்.

தற்போது இந்தியாவில் உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதை நோக்கி அரசின் செலவினம் திரும்பியுள்ளது. தொழிலாளர் விதிமுறைகள் எளிமைப்படுத்தப்படுகின்றன. நஷ்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்படுகின்றன. அடுத்த நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.1 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. செஸ் ஒலிம்பியாடிலும் இனி 'ஜோதி ஓட்டம்' – எப்போதும் இந்தியாவில் தொடக்கம்

ஒலிம்பிக் போட்டிகள் தொடக்கத்துக்கு முன்பாக நடத்தப்படுவதைப் போன்று, செஸ் ஒலிம்பியாட் போட்டியின் தொடக்கத்துக்கு முன்பாகவும் 'ஜோதி ஓட்டத்தை' நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச செஸ் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை முதன்முதலாக, சென்னை அருகே மகாபலிபுரத்தில் வரும் ஜூலை – ஆகஸ்டில் நடைபெறவுள்ள 44–ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியிலிருந்து தொடங்க இருக்கிறது. அதன் பிறகு இனி செஸ் ஒலிம்பியாட் நடைபெறும்போதெல்லாம் அதற்கு முன்பாக இந்த 'ஜோதி ஓட்டம்' நடத்தப்படும். இந்தியாவில் முதன்முறையாக செஸ் ஒலிம்பியாட் போட்டி நடைபெறும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக்கிற்கு ஏதென்ஸ் போல, செஸ் விளையாட்டின் பிறப்பிடமாக இருக்கும் இந்தியாவிலிருந்தே இனி ஒவ்வொரு முறையும் இந்த ஒலிம்பியாட் ஜோதி ஓட்டம் தொடங்கும். அதன் பிறகு, சர்வதேச செஸ் சம்மேளனத்தில் உறுப்பினராக இருக்கும் நாடுகளில் வலம்வரும் அந்த ஜோதி, இறுதியாக போட்டி நடைபெற இருக்கும் நாட்டையும், சம்பந்தப்பட்ட நகரத்தையும் வந்தடையும்.

தற்போது மகாபலிபுரத்தில் நடைபெற இருக்கும் செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கு இன்னும் 50 நாள்களே இருப்பதால், இந்த அறிமுக 'ஜோதி ஓட்டமானது' இந்தியாவுக்குள்ளாக மட்டுமே நடக்கவுள்ளதாக சம்மேளனம் தெரிவித்துள்ளது. ஜோதியை ஏந்தி ஓடுபவர்களில் ஒருவராக இந்திய செஸ் நட்சத்திரமான விஸ்வநாதன் ஆனந்தும் இருப்பார்.

44–ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியானது மகாபலிபுரத்தில் வரும் ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 10 வரை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க இதுவரை 187 நாடுகளில் இருந்து 343 அணிகள் ஓபன் மற்றும் மகளிர் பிரிவுகளில் பதிவு செய்துள்ளன.

---

5. சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு: 180 நாடுகள் பட்டியலில் கடைசி இடத்தில் இந்தியா

அமெரிக்கக் கல்வி நிறுவனங்கள் மேற்கொண்ட ஆய்வில் 180 நாடுகள் அடங்கிய நிகழாண்டுக்கான சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டு பட்டியலில் இந்தியா கடைசி இடத்தைப் பிடித்துள்ளது.

180 நாடுகளின் சுற்றுச்சூழல் செயல்திறன் தொடர்பாக அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படும் யேல் சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் கொள்கை மையம், கொலம்பியா பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படும் சர்வதேச புவி அறிவியல் தகவல் மையம் ஆகியவை ஆய்வு மேற்கொண்டன. அந்த ஆய்வு முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டது. அந்த முடிவுகளின்படி, அப்பட்டியலில் இந்தியா கடைசி இடம் பிடித்துள்ளது.

நாடுகள் சுற்றுச்சூழல் செயல்திறன் தரவரிசை

- டென்மார்க் – 1
- பிரிட்டன் – 2
- பின்லாந்து – 3
- மால்டா – 4
- சுவீடன் – 5

ஆய்வின் பல்வேறு பிரிவுகள் இந்தியாவின் தரவரிசை

- பல்லுயிர்ப் பெருக்கம் பாதுகாத்தல் – 179
- உயிரினங்கள் பாதுகாப்பு குறியீடு – 175
- உயிரினங்கள் வாழ்விட குறியீடு – 80
- காடுகள் இழப்பு – 75
- புல்வெளிப் பகுதிகள் இழப்பு – 116
- சதுப்புநிலப் பகுதிகள் இழப்பு – 60
- காற்றின் தரம் – 179
- கடலில் நெகிழிக் கலப்பு – 135
- பருவநிலை மாற்றம் – 165
- கரியமில வாயு வெளியேற்றம் அதிகரிப்பு – 136
- வேளாண்மையில் பூச்சிக்கொல்லி பயன்பாடு – 47

---

1. ரிசர்வ் வங்கியின் 2022 ஜூன் மாத நிதிக் கொள்கைக் குழு கூட்டத்திற்குப் பிறகு ரெப்போ விகிதம் என்ன?

அ. 4.2 %

ஆ. 4.5 %

இ. 4.9 % ☑

ஈ. 5.0 %

✓ ரெப்போ விகிதத்தை 50 அடிப்படை புள்ளிகளாக 4.90% அளவிற்கு உயர்த்துவது என இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை குழு முடிவுசெய்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 7.2 சதவீதம் அளவுக்கு தொடரும் என்று இக்குழு கணித்துள்ளது. 2022–23ஆம் நிதியாண்டில் பணவீக்க விகிதம் 6.7 சதவீதமாக இருக்கும் என்றும் கூறியுள்ளது.

2. கார்டுகள் மற்றும் UPI (2022 ஜூனுக்குப்பிறகு) மூலம் செய்யப்படும் ஆட்டோ டெபிட் பரிவர்த்தனைகளுக்கான புதிய வரம்பு என்ன?

அ. ரூ.5000

ஆ. ரூ.10000

இ. ரூ.15000 ☑

ஈ. ரூ.20000

✓ கார்டுகள் மற்றும் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI) மூலம் மேற்கொள்ளப்படும் ஆட்டோ டெபிட் பரிவர்த்தனைகளுக்கான வரம்பை இந்திய ரிசர்வ் வங்கி முந்தைய ₹5,000இலிருந்து ₹15,000ஆக உயர்த்தியது. ஒவ்வொரு முறையும் பணஞ்செலுத்தும்போது வாடிக்கையாளர்கள் ஒருமுறை பயன்படுத்தக் கூடிய கடவுச்சொல் (OTP) கொடுத்து பணப்பரிவர்த்தனை மேற்கொண்டு வந்தனர். தற்போது ₹15,000 மதிப்பு வரையிலான பணப் பரிவர்த்தனைகளை OTP இல்லாமல் மேற்கொள்ளலாம் என ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

3. பாதுகாப்புப் பணியாளர்களின் தலைமைப் பதவிக்கு தகுதியுடைய அதிகாரிகளுக்கான வயது வரம்பு என்ன?

அ. 60

ஆ. 62 ☑

இ. 65

ஈ. 70

✓ உலங்கூர்தி விபத்தில் இந்தியாவின் முதல் பாதுகாப்புப் படைத் தலைவர் ஜெனரல் பிபின் ராவத் உயிரிழந்த ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஆயுதப்படைகளின் சேவை விதிகளில் மத்திய அரசு திருத்தஞ்செய்துள்ளது. அந்தப் புதிய விதிகளின்படி, 62 வயதுக்குட்பட்ட முப்படைச்சேவைகளைச்சேர்ந்த 3 நட்சத்திரங்கள் மற்றும் நான்கு நட்சத்திர அதிகாரிகள் அனைவரும் CDS பதவிக்கு தகுதியுடையவர்கள். இதில் கடந்த ஈராண்டுகளில் ஓய்வுபெற்றவர்களும் அடங்குவர். CDS என்பது தரவரிசையில் மிகவும் உயர்ந்த அதிகாரி பதவியாகும்.

4. 75 கிமீ நீளப்பாதையை அமைத்து கின்னஸ் சாதனை படைத்துள்ள அமைப்பு எது?

அ. BRO

ஆ. NHAI ☑

இ. இந்திய இராணுவம்

ஈ. L & T கட்டுமான நிறுவனம்

- அமராவதி மாவட்டத்தில் இருந்து அக்கோலா மாவட்டம் வரை NH53இல் ஒற்றை வழித்தடத்தில் பெட்ரோலிய உப பொருட்கள் மற்றும் சரளை கற்களுடனான கலவைமூலம் 105 மணி நேரம் 33 நிமிடங்களில் (5 நாட்களுக்குள்) சாலை அமைத்துள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது கின்னஸ் சாதனையாகப் பார்க்கப்படுகிறது.
- முன்னதாக கடந்த 2019இல் கத்தார் தலைநகரம் தோகாவில் 25.275 கிமீ தொலைவிற்கு இத்தகைய சாலை அமைக்கப்பட்டதே இதுநாள் வரை கின்னஸ் உலக சாதனையாக இருந்தது.

5. ஆறு உலகக்கோப்பைகளில் பங்கேற்ற முதல் கிரிக்கெட் வீராங்கனை யார்?

அ. ஜூலன் கோஸ்வாமி

ஆ. மிதாலி ராஜ் ☑

இ. சார்லோட் எட்வர்ட்ஸ்

ஈ. கிளேர் டெய்லர்

- பிரபல கிரிக்கெட் வீராங்கனை மிதாலி இராஜ், அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அண்மையில் அறிவித்தார். 39 வயதான இவர், இதுவரை ஆறு உலகக்கோப்பைகளில் பங்கேற்ற உலகின் முதல் மற்றும் ஒரே கிரிக்கெட் வீராங்கனை ஆவார். இந்தச் சாதனைக்காக அண்மையில் சச்சின் டெண்டுல்கர் மற்றும் பாகிஸ்தானின் ஜாவேத் மியாண்டட் முதலானோர் இடம்பெற்றுள்ள பட்டியலில் இணைந்தார். 232 ஒருநாள் போட்டிகளில் 7,805 ரன்கள் குவித்ததே பெண்களுக்கான ஒருநாள் போட்டியில் அதிகபட்சமாக உள்ளது. மொத்தம் 10,868 ரன்கள் குவித்து, இந்திய பெண்கள் கிரிக்கெட்டணியின் நீண்டகால அணித்தலைவராக இருந்தவர் மிதாலி.

6. உலகப் பொருளாதார மன்றத்தின் அதிநவீன உற்பத்தி மையங்களின் (AMHUB) உலகளாவிய வலையமைப்பில் இணைந்துள்ள இந்திய மாநிலம் எது?

அ. தெலுங்கானா

ஆ. ஆந்திர பிரதேசம் ☑

இ. ஒடிசா

ஈ. கர்நாடகா

- உலகப்பொருளாதார மன்றத்தின் (WEF) அதிநவீன உற்பத்தி மையங்களின் உலகளாவிய வலையமைப்பில் (AMHUBs) ஆந்திர பிரதேச மாநிலம் இணைந்துள்ளது. டாவோஸில் நடந்து வரும் WEF–இன் ஆண்டுக் கூட்டத்தின் ஒருபுறத்தில், ஆந்திர பிரதேச மாநிலமும் WEF–உம், "அதிநவீன உற்பத்தி & மதிப்பு சங்கிலிகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதில்" தங்களது கூட்டாண்மையை பரிமாறிக்கொண்டன. "மூவிங் இந்தியா" முயற்சிகளில் தெரிவான முதல் மாநிலமாக ஆந்திர பிரதேச மாநிலம் உள்ளது.

7. சர்க்கரை ஏற்றுமதிக்கான புதிய கட்டுப்பாடுகள் கீழ்காணும் எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வருகின்றன?

அ. 2022 மே.01

ஆ. 2022 ஜூன்.01 ☑

இ. 2022 ஆகஸ்ட்.01

ஈ. 2023 ஜனவரி.01

- கோதுமை ஏற்றுமதியை கட்டுப்படுத்திய பிறகு, சர்க்கரை ஏற்றுமதிக்கு இந்தியா கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. புதிய கட்டுப்பாடுகள் ஜூன்.1 முதல் அமலுக்கு வரும். உள்நாட்டு சந்தையில் பொருட்களின் கிடைக்கும் தன்மையை அதிகரிப்பதற்கும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புவிசார் அரசியல் பதட்டங்களால் தூண்டப்பட்ட பணவீக்கத்தின் காரணமான விலை உயர்வுக்குப் பிறகு, உள்நாட்டுச் சந்தைகளில் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு இந்தியா பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

8. 2022 – 'WEF பயண மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் குறியீட்டில்' இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?

அ. 34

ஆ. 45

இ. 54 ☑

ஈ. 43

✓ உலகப் பொருளாதார மன்றத்தின் ஒரு சமீபத்திய ஆய்வு, 117 நாடுகளை மதிப்பீடு செய்து 'பயண மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் குறியீட்டை' வெளியிட்டது. இந்தியா ஒட்டுமொத்த தரவரிசையில் 54ஆவது இடத்தில் உள்ளது. 2019–இல் 46ஆவது இடத்தில் இந்தியா இருந்தது. இவ்வாய்வின்படி, COVID–19 தொற்றுநோயால் ஏற்பட்ட ஈராண்டு மந்த நிலைக்குப் பிறகு, இந்தியாவின் பயண மற்றும் சுற்றுலாத்துறையானது மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியுள்ளது.

9. இந்தியக் கடற்படையானது எந்த நாட்டு கடற்படையுடன் இணைந்து போங்கோசாகர் பயிற்சியில் பங்கேற்கிறது?

அ. பிரான்ஸ்

ஆ. வங்காளதேசம் ☑

இ. மியான்மர்

ஈ. நேபாளம்

✓ இந்தியக் கடற்படை மற்றும் வங்காளதேச கடற்படை பங்கேற்கும் 3ஆவது இருதரப்பு பயிற்சியான, 'போங்கோசாகர்' வங்காளதேசத்தின் மோங்லா துறைமுகத்தில் தொடங்கியது. துறைமுகக் கட்டப் பயிற்சியைத் தொடர்ந்து வடக்கு வங்காள விரிகுடாவில் கடல்சார் பயிற்சிகள் நடைபெறும். போங்கோசாகர் பயிற்சியானது இரு கடற்படைகளுக்கு இடையே பரந்த அளவிலான கடல்சார் பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகளை நடத்துவதன்மூலம் கூட்டு செயல்பாட்டு திறன்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

10. 'ஊரகச் சாலைகளில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்த சர்வதேச மாநாடு' ஏற்பாடு செய்யப்பட்ட நகரம் எது?

அ. கான்பூர்

ஆ. புது தில்லி ☑

இ. வாரணாசி

ஈ. சென்னை

✓ "ஊரகச்சாலைகளில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள்" குறித்த மூன்று நாள் சர்வதேச மாநாட்டை மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் தொடங்கி வைத்தார். தொடக்க அமர்வின் போது, புதிய "தொழில்நுட்பப் பார்வை, 2022" உள்ளிட்ட ஆவணங்கள் வெளியிடப்பட்டன. இத்தொலைநோக்கு ஆவணத்தின்கீழ், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் மாற்றுப்பொருட்களைப் பயன்படுத்தி குறைந்தபட்சம் சரிபாதி ஊரகச்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்று ஊரக மேம்பாட்டு அமைச்சகம் கோருகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கைவிடப்படும் ஜயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி திட்டம்: நிலங்கள் திரும்ப ஒப்படைப்பு

ஜயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி திட்டத்துக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் உரிமையாளர்களிடம் வழங்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

அரியலூர் மாவட்டம், ஜயங்கொண்டம் பகுதியில் பழுப்பு நிலக்கரி திட்டத்துக்காக கடந்த 1992ஆம் ஆண்டில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு 24 ஆண்டுகளாகியும் திட்டம் தொடங்கப்படாததால், நிலத்தை உரிமையாளர்களிடம் திருப்பித் தர தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது. இதனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

---

2. அரசுப்பள்ளிகளில் LKG; UKG வகுப்புகள் மூடல் ஏன்? தொடக்கக்கல்வித்துறை விளக்கம்

அரசுப் பள்ளிகளில் செயல்பட்டு வந்த LKG; UKG வகுப்புகள் மூடப்பட்டது குறித்து தொடக்கக் கல்வி இயக்ககம் விளக்கமளித்துள்ளது.

இதுகுறித்து தொடக்கக் கல்வி இயக்குநரகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தி:

அரசு நடுநிலைப்பள்ளிகளில் உள்ள 2,381 அங்கன்வாடிகளில் மழலையர் வகுப்புகள் 2019–ஆம் ஆண்டு சோதனை முறையில் தொடங்கப்பட்டன. இந்த மழலையர் வகுப்புகளைக் கையாள தொடக்கப்பள்ளி இடைநிலை ஆசிரியர்கள் பணியிட மாற்றப்பட்டனர்.

இந்த ஆசிரியர்கள் அனுபவம் வாய்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் மழலையர் வகுப்பு குழந்தைகளை கையாள்வதில் சிக்கல்களும், புரிதல் இன்மையும் நீடித்தது. மறுபுறம் தொடக்கக்கல்வி இயக்குநரகத்தில் 2013–14ம் கல்வியாண்டு முதல் ஆசிரியர் பணிநியமனம் செய்யப்படவில்லை.

ஆசிரியர்கள் பற்றாக்குறை: இதனால் கடந்த கல்வியாண்டின் இறுதியில் இடைநிலை ஆசிரியர்கள் பணியிடங்களில் 4,863 காலிப்பணியிடங்கள் ஏற்பட்டது. இதனால் 3,800 தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5 வரையிலான வகுப்புகளை ஒரே ஒரு ஆசிரியர்தான் கவனித்துள்ளார்.

ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்களுக்கு சரியான முறையில்கல்வி போதிக்க இயலாத சூழல் ஏற்பட்டு அதன் விளைவாக மாணவர்களின் கல்வித்தரம் வெகுவாக குறைந்தது. இதற்கிடையே கரோனா பரவலுக்கு பின்னர், அரசுப்பள்ளிகளில் 5 லட்சத்துக்கு மேல் புதிதாக மாணவர்கள் சேர்ந்தனர். அதில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை மட்டும் 2.80 இலட்சம் பேர்கள் அரசுப்பள்ளிகளின் மேல் நம்பிக்கை வைத்து கூடுதலாக சேர்ந்துள்ளனர்.

இதன்காரணமகக மாணவர் ஆசிரியர் விகிதப்படி 4,500–க்கும் மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் கூடுதலாக தேவைப்படுகிறது. ஏற்கனவே உள்ள காலிப்பணியிடங்களோடு சேர்த்தால் மொத்தம் 9,000–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தேவைப்படும் நிலை ஏற்பட்டு கல்வித்தரம் குறைய வாய்ப்பு அதிகமானது. இதுகுறித்து அனைத்து உயர்மட்ட அலுவலர்கள் கூட்டத்தில் விவாதித்து எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, மழலையர் வகுப்புகளைக் கையாள நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் மீண்டும் தொடக்கப்பள்ளிகளில் பணியமர்த்தப்பட்டனர்.

எண்ணும்–எழுத்தும் திட்டத்துக்கு... இதுதவிர கரோனாவால் அரசுப்பள்ளி மாணவர்களிடம் ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியை சரிசெய்ய 'எண்ணும் எழுத்தும்' என்னும் திட்டம் வரும் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக அனைத்து மாவட்டங்களிலும் சுமார் 30,000 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தவும், சரியான பாதையில் மாணவர்களிடத்தில் கொண்டு சேர்க்கவும் தொடக்கக்கல்வி இயக்கக நிர்வாகத்துக்கு போதுமான எண்ணிக்கையில் இன்னும் அதிகமான இடைநிலை ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

பழைய நடைமுறையில்... இதைக்கருத்தில்கொண்டு அங்கன்வாடி மையங்களில் ஏற்கனவே இருந்த சிறார்களுக்கு முந்தைய நடைமுறையை பின்பற்றி இந்தாண்டு முதல் அங்கன்வாடி உதவியாளர்மூலம் தற்காலிகமாக கற்றல் செயல்பாட்டை மேற்கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது. மேலும், 'எண்ணும் எழுத்தும்' திட்டத்தை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு வெற்றிகரமாகச் செயல்படுத்தும் போது தமிழ்நாட்டில் தொடக்கப்பள்ளி மாணவர்கள் கற்றல்

நிலைகளில் மேம்படுவார்கள். இதுதவிர மூன்றாண்டுகளுக்கு பின்பு தேசிய அளவிலான கற்றல் அடைவு சோதனை முடிவுகளில் (நாஸ்) 27–ஆவது இடத்தில் இருக்கும் தமிழ்நாடு, முதல் 10 இடத்துக்குள் வந்துவிடும்.

---

3. வட்டி விகிதம் 4.9%–ஆக அதிகரிப்பு: ரிசர்வ் வங்கி அறிவிப்பு

வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுகிய காலக்கடன்களுக்கான வட்டி விகிதத்தை (ரெப்போ) 4.9 சதவீதமாக ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது. ரிசர்வ் வங்கி வட்டியை உயர்த்துவது கடந்த ஐந்து வாரங்களில் இது இரண்டாவது முறையாகும். இதனால், தனிநபர் கடன், வீடு, வாகனக்கடன் ஆகியவற்றுக்கான வட்டி அதிகரித்து மாதத்தவணைத் தொகையை கூடுதலாக செலுத்த வேண்டியிருக்கும்.

ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கைக்குழுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. அதில், ரெப்போ விகிதத்தை 4.4 சதவீதத்தில் இருந்து 0.5 சதவீதம் அதிகரித்து 4.9 சதவீதமாக நிர்ணயிப்பது என ஒருமனதமாக முடிவெடுக்கப்பட்டது. கடந்த மே மாதம் வட்டி விகிதம் 0.4 சதவீதம் உயர்த்தப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் உயர்ந்துள்ளது. 4 சதவீதமாக இருந்த வட்டி விகிதம், கடந்த 2 மாதங்களில் மட்டும் 0.9 சதவீதம் உயர்ந்துள்ளது.

இதுகுறித்து ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் கூறியதாவது: உக்ரைனில் நடைபெறும் போரால் உலக அளவில் பணவீக்கம் அதிகரித்துள்ளது. மேலும், அதிகபட்ச அளவைவிட அதிகமாக பணவீக்கம் அதிகரித்துள்ளது. அதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் வட்டி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. வட்டி விகிதத்தை ரிசர்வ் வங்கி உயர்த்தியபோதிலும், கரோனாவுக்கு முந்தைய நிலையான 5.15 சதவீதத்துக்கும் குறைவாகவே வட்டி விகிதம் உள்ளது.

மாநில அரசுகள் வரியைக் குறைக்க வேண்டும்: விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி கடந்த மே மாதம் 21–ஆம் தேதி குறைக்கப்பட்டது. எரிபொருள்கள் மீதான மதிப்புக் கூட்டு வரியை (வாட்) மாநிலங்கள் குறைத்தால் விலைவாசியைக் குறைக்க முடியும். முறைப்படி பதிவு செய்யாமல் செயலிகள்மூலம் கடன் வழங்கும் நிறுவனங்கள் மீது காவல்துறையில் பொதுமக்கள் புகாரளிக்கலாம் என்றார் அவர்.

கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதி: வீட்டுவசதித்திட்டங்களுக்கு ஊரக மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சந்தா தொகை, காப்பீட்டுத்தொகை, கல்விக்கட்டணம் ஆகியவற்றுக்கு ஒருமுறை செலுத்தும் தொகையை ₹5,000–இலிருந்து ₹15,000–ஆக உயர்த்தி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ரூபே கடன் அட்டைகளைப் பயன்படுத்தியும் யுபிஐ முறையில் பணம் செலுத்தும் வசதி அறிமுகம் செய்யப்படவுள்ளது. இது படிப்படியாக பிற வகை கடன் அட்டைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

பணவீக்கம் 6.7%: உக்ரைன்–ரஷியா போர்காரணமாக சர்வதேச அளவில் பணவீக்கம் அதிகரித்துள்து. எனவே நடப்பு நிதியாண்டில் (2022–23) பணவீக்கம் விகிதம் 6.7 சதவீதமாக இருக்கும் என ரிசர்வ் வங்கி கணித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் பணவீக்க விகிதம் 5.7 சதவீதமாக இருக்கும் என ரிசர்வ் வங்கி ஏப்ரலில் கணித்திருந்தது.

பொருளாதார வளர்ச்சி 7.2%

நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதமாக இருக்கும் என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. இதுகுறித்து RBI ஆளுநர் சக்திகாந்த தாஸ் கூறுகையில், 'கடந்த ஏப்ரல், மே மாதங்களின் தகவல்படி, உள்ளூர் பொருளாதாரச் செயல்பாடுகள் மீண்டு வருகின்றன. இது, பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதைக் காட்டுகிறது. நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதமாக இருக்கும்.

தென்மேற்குப் பருவமழையால் காரீப் பருவ சாகுபடியும் திருப்திகரமாக இருக்கும். இருப்பினும் சர்வதேச அளவிலான பதற்றம், பொருள்களின் விலை உயர்வு, சர்வதேச அளவிலான நிதிக் கட்டுப்பாடுகள் போன்றவை வளர்ச்சிக்கு பாதகமாக இருக்கும் என்றார் அவர். நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி கணிப்பு வெளியிட்டிருந்தது.

---

4. NSIL–உக்கு 10 தொலைத்தொடர்பு செயற்கைக்கோள்கள்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

பொதுத்துறை நிறுவனமான நியூ ஸ்பேஸ் இந்தியா நிறுவனத்துக்கு (NSIL) 10 தொலைத்தொடர்பு செயற்கைக் கோள்களை வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதலளித்தது.

இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கை: புவிவட்டப் பாதையில் வலம்வரும் 10 தொலைத்தொடர்பு செயற்கைக்கோள்களை NSIL நிறுவனத்துக்கு வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது தீவிர மூலதன திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதி விவகாரங்களில் அந்த நிறுவனம் சுதந்திரமாக முடிவெடுக்க வழிவகுக்கும். அதன்மூலம் இதர துறைகளுக்கு மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பளிக்கும் திறனும், தொழில்நுட்ப உபகரணங்களும் கிடைக்கும். இதுதவிர, NSIL நிறுவனத்தின் பங்கு மூலதனத்தை ₹1,000 கோடியில் இருந்து ₹7,500 கோடியாக அதிகரிக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்புதல் விண்வெளித் துறையில் உள்நாட்டு பொருளாதாரச் செயல்பாடுகளை ஊக்குவித்து, உலக அளவிலான விண்வெளி சந்தையில் இந்தியாவின் பங்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. NSIL என்பது இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (ISRO) வர்த்தகப் பிரிவாகும்.

UAE ஒப்பந்தப் பரிந்துரைக்கு ஒப்புதல்: இந்தியா–ஐக்கிய அரபு அமீரகம் இடையே தொழிற்துறை மற்றும் அதிநவீன தொழில்நுட்பத் துறையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் பரிந்துரைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

காற்றின் தரம் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பாக இந்தியாவின் ஆர்யபட்டா அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம், ஜப்பானின் தேசிய சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து மேற்கொள்ளும் கூட்டு ஆராய்ச்சி ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

---

5. ஹர்மன்ப்ரீத் கௌர் புதிய கேப்டன்

இந்திய மகளிர் ஒருநாள் அணியின் புதிய கேப்டனாக இளம் வீராங்கனை ஹர்மன்ப்ரீத் கௌர் நியமிக்கப்பட்டு உள்ளார். ஏற்கெனவே கேப்டனாக இருந்த மூத்த வீராங்கனை மிதாலி ராஜ் ஓய்வுபெற்ற நிலையில் இந்நியமனம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஹர்மன்ப்ரீத் கௌர் T20 அணியின் கேப்டனாக உள்ளார். இந்நிலையில் தற்போது ஒருநாள் அணிக்கும் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

1. 'லோகதந்திரா கே சுவர்' மற்றும் 'குடியரசு நெறிமுறைகள்' ஆகியன கீழ்காணும் எந்த இந்திய ஆளுமையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உரைகளாகும்?

அ. நரேந்திர மோடி

ஆ. இராம்நாத் கோவிந்த் ☑

இ. வெங்கையா

ஈ. S ஜெய்சங்கர்

✓ குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உரைகளின் நான்காம் தொகுதியை மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மற்றும் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் ஆகியோர் வெளியிட்டனர். தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் உள்ள வெளியீடுகள் பிரிவால் இந்தப் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2. உயிரி மருத்துவக் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் துறையில் கீழ்காணும் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?

அ. ஜப்பான்

ஆ. பிரான்ஸ்

இ. அமெரிக்கா ☑

ஈ. ஆஸ்திரேலியா

✓ மத்திய அரசின் உயிரித்தொழில்நுட்பத்துறை, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம், அமெரிக்காவின் சர்வதேச AIDS தடுப்பூசி முன்னெடுப்பு, இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளது. உயிர்க்கொல்லி நோய், காசநோய், COVID உள்ளிட்ட நோய்களைத்தடுப்பதற்கும், சிகிச்சையளிப்பதற்கும், தேவையான புதிய உயிரி மருத்துவக்கருவிகள் & தொழில்நுட்பங்களை கண்டறிவதற்காக இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) எந்த வகை வங்கிகளுக்கு வாடிக்கையாளரின் வீடுகளுக்கேச்சென்று வங்கிச் சேவைகளை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது?

அ. உள்ளூரக வங்கிகள்

ஆ. நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் ☑

இ. ஊரக கூட்டுறவு வங்கிகள்

ஈ. கொடுப்பனவு வங்கிகள்

✓ இந்திய ரிசர்வ் வங்கி கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்படும் வீட்டுக்கடன் வரம்பை இருமடங்காக உயர்த்தியது. அது முதல் நிலை நகரங்களுக்கு ₹30 முதல் ₹60 இலட்சமாகவும், இரண்டாம் நிலை நகரங்களுக்கு ₹70 இிலட்சம் முதல் ₹1.40 கோடியாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உள்ளடக்கிய வளர்ச்சியை ஆதரிப்பதற்காக மலிவு விலை வீடுகள் மற்றும் குடியிருப்புத் திட்டங்களுக்கு ஊரக கூட்டுறவு வங்கிகள் நிதியளிக்கவும் RBI அனுமதியளித்துள்ளது.

✓ வாடிக்கையாளர்களின், குறிப்பாக மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வங்கிச்சேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் அவர்களின் வீடுகளுக்கேச் சென்று வங்கிச் சேவைகளை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

4. தொழில்நுட்ப வளர்ச்சி நிதிய திட்டத்துடன் தொடர்புடைய ஒன்றிய அமைச்சகம் எது?

அ. அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம் ☑

இ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. MSME அமைச்சகம்

रक्षा मंत्रालय
MINISTRY OF DEFENCE
सत्यमेव जयते

✓ தொழில்நுட்ப வளர்ச்சி நிதிய (TDF) திட்டத்தின்கீழ் ஒரு திட்டத்திற்கு ₹10 கோடி முதல் ₹50 கோடி வரை உயர்த்த பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார். 2022–23 ஒன்றிய அரசு பட்ஜெட்டில், பாதுகாப்பு R&D பட்ஜெட்டின் 25 சதவீதம் தனியார் தொழிற்துறை, துளிர் நிறுவனங்கள் மற்றும் கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டது. TDF திட்டமானது MSME–கள் மற்றும் துளிர் நிறுவனங்களின் தயாரிப்புகள் மற்றும் தொழினுட்பங்களின் உள்நாட்டு வளர்ச்சியை ஆதரிக்கிறது.

5. OECD–இன் சமீபத்திய அறிக்கையின்படி (2022 ஜூன்) FY23இல் இந்தியாவின் GDP வளர்ச்சிக் கணிப்பு என்ன?

அ. 8.2%

ஆ. 7.5%

இ. 7.2%

ஈ. 6.9% ☑

✓ பொருளியல் கூட்டுறவு & வளர்ச்சிக்கான அமைப்பு (OECD) இந்தியாவின் வளர்ச்சியை 2022–23 நிதியாண்டிற்கு 8.1%–லிருந்து 6.9%–ஆகக் குறைத்துள்ளது. 2023ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 6.2 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது இந்திய ரிசர்வ் வங்கியின் 7.2% வளர்ச்சி மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவாகவுள்ளது. உலக வங்கியானது தனது ஏப்ரல் மாத மதிப்பாய்வில் இந்தியாவின் 2022–23 நிதியாண்டிற்கான முன்கணிப்பை 8.5%–இலிருந்து 7.5%–ஆகக் குறைத்தது.

6. அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய சாதனை ஆய்வு – 2021–இல் கீழ்காணும் எந்தெந்த வகையான பள்ளிகள் சேர்க்கப்பட்டிருந்தன?

அ. அரசுப் பள்ளிகள்

ஆ. அரசு உதவி பெறும் பள்ளிகள்

இ. உதவி பெறாத தனியார் பள்ளிகள்

ஈ. மேற்கண்ட அனைத்தும் ☑

✓ பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையானது தேசிய சாதனை ஆய்வு (NAS) 2021 அறிக்கையை வெளியிட்டது. இது நாட்டில் 3, 5, 8 மற்றும் 10ஆம் வகுப்புகளில் உள்ள மாணாக்கரின் கற்றல் திறன்பற்றிய விரிவான மதிப்பீட்டை வழங்குகிறது. கடைசியாக தேசிய சாதனை ஆய்வு 2017–இல் நடத்தப்பட்டது. அதேசமயம் NAS 2021 ஆனது 2021 நவ.12 அன்று அகில இந்திய அளவில் அரசுப்பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் உதவிபெறாத தனியார் பள்ளிகளை உள்ளடக்கியதாக நடத்தப்பட்டது.

✓ NAS 2021–இல் 720 மாவட்டங்களில் உள்ள 1.18 இஇலட்சம் பள்ளிகளில் இருந்து சுமார் 34 இஇலட்சம் மாணவர்கள் கலந்துகொண்டனர். மாணாக்கரின் முன்னேற்றம் மற்றும் கற்றல் திறனைக் கல்வி முறையின் திறமையின் குறிகாட்டியாக மதிப்பீடு செய்வதே 2021 – NASஇன் நோக்கமாகும்.

7. பிரதமர் மோடி அண்மையில் ₹1430 கோடி மதிப்பிலான பல்முனை சரக்குப் போக்குவரத்துப் பூங்காவிற்குக் கீழ்காணும் எந்தப் பெருநகரில் அடிக்கல் நாட்டினார்?

அ. மும்பை

ஆ. தில்லி

இ. சென்னை ☑

ஈ. கொல்கத்தா

✓ சென்னையில் ₹1430 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் பல்முனை சரக்குப் போக்குவரத்துப் பூங்காவிற்கு பிரதமர் சமீபத்தில் அடிக்கல் நாட்டினார். இதர தனித்துவமான பல்செயல்பாடுகொண்ட பூங்காக்களுக்கு இடையே தடையற்ற

சரக்குப் போக்குவரவை வழங்கும் வகையில் இப்பூங்கா வடிவமைக்கப்பட்டுள்ளது. 31,530 கோடி மதிப்பிலான 11 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட பிரதமர் மோடி சமீபத்தில் சென்னை வந்திருந்தார்.

8. கீழ்காணும் எந்த நகரத்தில், இராஜா மகேந்திர பிரதாப் சிங் பல்கலைக்கழகத்திற்கான அடிக்கல்லை பிரதமர் மோடி நாட்டினார்?

அ. அலிகார் ☑

ஆ. புனே

இ. குவாலியர்

ஈ. டேராடூன்



✓ அலிகாரில் உள்ள இராஜா மகேந்திர பிரதாப் சிங் மாநில பல்கலைக்கழகத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். விடுதலைப்போராட்ட வீரர், கல்வியாளர் மற்றும் சமூக சீர்திருத்தவாதியான இராஜா மகேந்திர பிரதாப் சிங்கின் நினைவாக உத்தர பிரதேச அரசு இந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவுகிறது. இப்பல்கலைக்கழகம் அலிகார் பிரிவின் 395 கல்லூரிகளுக்கு இணைப்பு வழங்கும்.

9. அண்மையில் இராணுவ வான்படையில் உலங்கூர்திகளை இயக்குவதற்காக போர் விமானியாகப் பதவியேற்ற முதல் பெண் அதிகாரி யார்?

அ. அபிலாஷா பராக் ☑

ஆ. பாட்ரிசியா யாப்

இ. நிலோபர் ரஹ்மானி

ஈ. பாவனா காந்த்

✓ கேப்டன் அபிலாஷா பராக் உலங்கூர்திகளை இயக்கும் போர் விமானியாக இராணுவ வான்படையில் சேர்ந்த முதல் பெண் அதிகாரி ஆனார். 2022 மே.25 அன்று நாசிக்கில் உள்ள காம்பட் ஆர்மி ஏவியேஷன் பயிற்சிப் பள்ளியில் நடைபெற்ற விழாவின்போது, டைரக்டர் ஜெனரல் மற்றும் கர்னல் கமாண்டன்ட் ஆர்மி ஏவியேஷன் அவர்களால் 36 இராணுவ விமானிகளுடன் அவர் கௌரவிக்கப்பட்டார்.

10. சமீபத்தில் "Abha" என்ற திறன்பேசிச் செயலியை அறிமுகப்படுத்திய ஆணையம் எது?

அ. இந்திய தனித்துவ அடையாள ஆணையம்

ஆ. உணவுப் பாதுகாப்பு ஆணையம்

இ. தேசிய நலவாழ்வு ஆணையம் ☑

ஈ. இந்திய விளையாட்டு ஆணையம்

✓ ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின்கீழ் சுகாதார பதிவுகளை நிர்வகிக்க தேசிய சுகாதார ஆணையம் (NHA) திருத்தப்பட்ட ஆயுஷ்மான் பாரத் ஹெல்த் அக்கவுண்ட் (ABHA) திறன்பேசிச்செயலியை அறிமுகப்படுத்தியது. 'ABHA' என்பது ஒரு தனிநபரின் உடல்நலப் பதிவுகளை எந்த நேரத்திலும் எங்கும் செயலியின்மூலம் அணுக உதவுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பாரத்நெட் திட்டத்தில் கண்ணாடி இழை கம்பிவடம் பதிக்கும் பணி: முதல்வர் தொடக்கிவைத்தார்

பாரத்நெட் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், கண்ணாடி இழை கம்பி வடம் பதிக்கும் பணியை முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடக்கிவைத்தார்.

இந்தத் திட்டம்மூலம் மாநிலத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் பாதுகாப்பான, விரைவான இணைய சேவையை பெறமுடியும் எனத் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், முத்தலகுறிச்சி ஊராட்சியில் கண்ணாடி இழை கம்பி வடத்தை பதிக்கும் பணியை, சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கிவைத்தார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாட்டில் உள்ள 12,525 ஊராட்சிகளையும் கண்ணாடி இழை கம்பி வடம்மூலம் இணைத்து, அதிவேக இணைய இணைப்பு வழங்குவதே பாரத்நெட் திட்டமாகும். இந்தத் திட்டமானது, தமிழ்நாடு அரசின், கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் மூலமாகச்செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நான்கு தொகுப்புகள்: 'பாரத்நெட்' திட்டம் நான்கு தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

தொகுப்பு ஏ–வில், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், கிருஷ்ணகிரி, செங்கல்பட்டு, சென்னை, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களும், தொகுப்பு பி–யில், கடலூர், அரியலூர், பெரம்பலூர், தருமபுரி, கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, நீலகிரி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களும் வருகின்றன.

தொகுப்பு சி–யில், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாமக்கல், கரூர், கோயம்புத்தூர், திருப்பூர், திருச்சி, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களும், தொகுப்பு டி–யில், கன்னியாகுமரி, மதுரை, ராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களும் வருகின்றன.

இந்தத்திட்டம்மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மின்னணு சேவைகள், இணையவழி கல்வி, தொலை மருத்துவம், தொலைபேசி, தொலைக்காட்சி மற்றும் இணையம் ஆகிய சேவைகளை வழங்க முடியும். அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள் ஆகியன அதிவேக இணையதள சேவையைப் பெறுவதன்மூலம் கிராம அளவில் அரசின் பல்வேறு திட்டங்கள் மக்களை விரைந்து சென்றடையும்.

---

2. மனிதக்கழிவுகளை அகற்றும் பணிக்கு, 'ஹோமோசெப்' ரோபோ தயார்: சென்னை ஐஐடி தகவல்

மனிதக்கழிவுகளை கைகளால் அகற்றும் முறையை ஒழிக்கும் பொருட்டு, 'ஹோமோசெப்' என்ற ரோபோ சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டு தற்போது களப்பணிக்கு முழுமையாகத் தயார்நிலையில் உள்ளது.

சென்னை ஐஐடி பேராசிரியர் பிரபு ராஜகோபால் தலைமையில், சென்னை ஐஐடி இயந்திரப் பொறியியல் துறை ஆசிரியர்களைக்கொண்ட குழுவினர் பல்லாண்டுகளாகப் பணியாற்றி இந்த ரோபோவை உருவாக்கியுள்ளனர்.

---

3. மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு: உறுதிசெய்ய உயர்நிலைக்குழு

மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் வழங்கப்பட்டுள்ள நான்கு சதவீத இடஒதுக்கீட்டை உறுதிசெய்ய உயர்நிலைக்குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இதற்கான உத்தரவை மாற்றுத்திறனாளிகள் நலத்துறைச் செயலர் பிறப்பித்துள்ளார்.

ஆணை விவரம்:

மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் 3 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதை கண்காணிக்க தலைமைச் செயலாளரின் தலைமையில் உயர்நிலைக்குழு 2012–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, இந்த உயர்நிலைக்குழுவில் மேலும் 3 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். இதனிடையே, 2016–ஆம் ஆண்டின் மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டப்படி, அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் 4 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென கூறப்பட்டது. இதனைச்செயல்படுத்தும் வகையிலான அறிவிப்பு சட்டப்பேரவையில் வெளியிடப்பட்டது.

அதன்படி, அரசு வேலைவாய்ப்பில் 4 சதவீத இடஒதுக்கீட்டை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கிட ஏதுவாக உகந்த பதவியிடங்கள் கண்டறியப்பட்டு பணிநியமனம் செய்வதை கண்காணிக்க உயர்நிலைக்குழு அமைக்கப்படும் என சட்டப்பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஏற்கெனவே அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவை மறுசீரமைப்பு செய்து கண்காணிப்புக்குழுவை அமைக்கலாம் என தமிழ்நாடு அரசை மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநரகம் கேட்டுக்கொண்டது. இயக்குநரகத்தின் கோரிக்கையை ஏற்று, உயர்நிலைக்குழு அமைக்கப்படுகிறது.

குழுவின் தலைவராக, மாற்றுத்திறனாளிகள் நலத்துறைச்செயலாளர் இருப்பார். உறுப்பினர்களாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, மனிதவள மேலாண்மை ஆகிய துறைகளின் செயலாளர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச்செயலாளர், ஆசிரியர் தேர்வு வாரியத்தலைவர், மருத்துவப்பணியாளர் தேர்வு வாரியத் தலைவர், வேலைவாய்ப்பு & பயிற்சித்துறை இயக்குநர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஆகியோர் இருப்பர்.

பணிகள் என்ன? அனைத்து அரசுத்துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றில் வழங்கப்படும் வேலைவாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு நான்கு சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கப்படுவதை உயர்நிலைக்குழு கண்காணிக்கும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்கள், மாற்றுத்திறனாளிகளைக்கொண்டு நிரப்பப்படாத பட்சத்தில், அந்தப்பணியிடங்கள் அடுத்த ஆண்டுக்கு முறையாக முன்கொண்டு வரப்படுகிறதா? என்பது கண்காணிக்கப்படும். மாற்றுத்திறனாளிகள் பணிபுரிய உகந்த பதவியிடங்கள் கண்டறியப்படுவதையும், மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மறுஆய்வு செய்வதையும் கண்காணிக்கும்.

---

4. மாமல்லபுரத்தில் செஸ் ஒலிம்பியாட்: இலச்சினை, சின்னம் வெளியீடு

மாமல்லபுரத்தில் 44ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி ஜூலை.28 தொடங்கி ஆகஸ்ட்.10 வரை நடைபெற உள்ளது. இந்த நிலையில் செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை மற்றும் சின்னத்தைச் சென்னை ரிப்பன் மாளிகையில் முதலமைச்சர் மு க ஸ்டாலின் வெளியிட்டார்.

மேலும் செஸ் ஒலிம்பியாட் தொடருக்கான ஐம்பது நாட்கள் கவுன்ட்–டௌனையும் முதலமைச்சர் தொடங்கிவைத்தார். அதேபோல், #ChessChennai2022 என்ற ஹாஷ் டாகையும் முதலமைச்சர் வெளியிட்டார். குதிரை வடிவிலான வெளியிடப்பட்ட சின்னத்துக்குத் 'தம்பி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

---

5. தமிழ்நாட்டில் இரண்டாவது ஆண்டாக அதிகரித்த மகப்பேறு உயிரிழப்புகள்

தமிழ்நாட்டில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மகப்பேறு உயிரிழப்பு அதிகரித்துள்ளது. கர்ப்ப காலங்களிலும், பிரசவத்தின்போதும் கர்ப்பிணிகள் உயிரிழப்பு என்பது பரவலாக காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த தேசிய சுகாதார இயக்கம் சார்பில் பல்வேறு தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்திலும் மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பத்தைப் பதிவு செய்தது முதல் பிரசவம் வரை கர்ப்பிணிகள் சுகாதார செவிலியர்கள்மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றனர்.

தவிர சிக்கலான பிரசவங்களுக்கு வாய்ப்புள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கென தனி வாட்ஸ் ஆப் குழு அமைத்து கண்காணிக்கப்படுவதாகவும் சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் முந்தைய ஆண்டைக் காட்டிலும் மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய சுகாதார இயக்கம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மகப்பேறு உயிரிழப்புகள் 1 லட்சத்துக்கு கணக்கிடப்பட்டு சராசரியில் குறிப்பிடப்படுகிறது. அதன்படியே மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்திய மாவட்டங்கள் வரிசைப்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் தமிழ்நாட்டில் முந்தைய ஆண்டைக் காட்டிலும் கடந்த ஆண்டு மகப்பேறு உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன.

தமிழ்நாட்டில் கடந்த 2020–21–ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் பேருக்கு சராசரியாக 73 பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் கடந்த ஆண்டு (2021–22) ஒரு இலட்சம் கர்ப்பிணிகளில் சராசரியாக 90 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவே கடந்த 2019–20 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்தில் 53 உயிரிழப்புகள் மட்டுமே பதிவாகியுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து மகப்பேறு உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன.

தமிழ்நாட்டில் கடந்த 2020-21 ஆம் ஆண்டில் 9 லட்சத்து 8 ஆயிரத்து 623 கர்ப்பிணிகள் குழந்தை பெற்றனர். அதேவேளை பிரசவத்தின்போதும், கர்ப்பகாலங்களிலும் 664 தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர். ஆனால், கடந்த 2021-22 ஆம் ஆண்டில் 9 லட்சத்து 12 ஆயிரத்து 436 பேர் குழந்தை பெற்றெடுத்த நிலையில், 827 மகப்பேறு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

முந்தைய ஆண்டைக் காட்டிலும் கடந்த ஆண்டு 163 உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன. தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக மகப்பேறுகால உயிரிழப்பு அதிகரித்து வருவது கர்ப்பகால கண்காணிப்பில் தொய்வு ஏற்பட்டுள்ளதை வெளிக்காட்டுகிறது.

வளர்ந்த மாவட்டங்களைப் பின்னுக்குத் தள்ளிய தருமபுரி: தமிழ்நாட்டில் சுகாதாரத் துறையின் வசதிக்காக 38 வருவாய்த் துறை மாவட்டங்கள் 46 சுகாதார மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு மாவட்ட அளவில் குறைந்த மகப்பேறு உயிரிழப்புகள் பதிவான சுகாதார மாவட்டங்களில் பழனி, பரமக்குடி, தருமபுரி, திருவாரூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்கள் முதல் 5 இடங்களில் உள்ளன. அதிக உயிரிழப்புகள் பதிவான மாவட்டங்களில் விருதுநகர், நாகப்பட்டினம், திருப்பூர், பெரம்பலூர், திருவள்ளூர் மாவட்டங்கள் கடைசி 5 இடங்களில் உள்ளன.

சுகாதார மாவட்ட அளவில் பழனி முதலிடத்தில் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக வருவாய்த் துறை மாவட்டங்கள் அளவில் கணக்கிடும்போது தருமபுரி மாவட்டமே முதலிடத்தில் உள்ளது.

மாநிலத்தில் மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்துவதில் சென்னை, மதுரை, கோவை, திருப்பூர் போன்ற வளர்ந்த மாவட்டங்களைப் பின்னுக்குத்தள்ளி தருமபுரி மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது. முந்தைய ஆண்டு மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்துவதில் முதல் மூன்று இடங்களில் இருந்த புதுக்கோட்டை, தூத்துக்குடி, கோவை ஆகிய மாவட்டங்கள் தற்போது முறையே 27, 34 மற்றும் 6-ஆவது இடத்தில் உள்ளன.

---

6. விலங்குகளுக்கான இந்தியாவின் முதல் கரோனா தடுப்பூசி: மத்திய அரசு அறிமுகம்

விலங்குகளுக்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் கரோனா தடுப்பூசியை மத்திய வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அறிமுகஞ்செய்தார்.

'அனோகோவாக்ஸ்' என்ற அத்தடுப்பூசி ஹரியாணாவிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் (ICAR) தேசிய குதிரைகளுக்கான ஆராய்ச்சி மையம் சார்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ICAR வெளியிட்ட அறிக்கையில், 'அனோகோவாக்ஸ்' தடுப்பூசியானது விலங்குகளுக்கான வீரியம் அழிக்கப்பட்ட சார்ஸ்-கோவிட் டெல்டா வகை தடுப்பூசியாகும். டெல்டா வகை தீநுண்மி எதிர்ப்புத்திறனும், துணை மருந்துப்பொருளாக அல்ஹைட்ரோஜெல்லையும் இந்தத் தடுப்பூசி பெற்றிருக்கும். கரோனாவின் டெல்டா மற்றும் ஒமைக்ரான் ஆகிய இருதிரிபுகளையும் நடுநிலைப்படுத்தக்கூடிய வகையில் நோய் எதிர்ப்புத்திறனை அனோகோவாக்ஸ் பெற்றுள்ளது. நாய்கள், சிங்கம், சிறுத்தை, எலிகள் மற்றும் முயல்களுக்கு இந்தத் தடுப்பூசி பாதுகாப்பானதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனோகோவாக்ஸ் தடுப்பூசியோடு, ICAR-NRC சார்பில் உருவாக்கப்பட்ட, விலங்குகளுக்கான நோய் கண்டறியும் உபகரணங்களையும் மத்திய அமைச்சர் தோமர் அறிமுகஞ்செய்தார்.

அதில் 'கேன்-கோவிட் எலிசா கிட்' என்ற உபகரணம் நாய்களில் கரோனாவுக்கு எதிரான எதிர்பொருளை கண்டறிய உதவுவதாகும். தற்போது சந்தையில் விலங்குகளில் எதிர்பொருளைக் கண்டறிவதற்கான எந்தவொரு உபகரணமும் இல்லை. அவ்வகையில் 'கேன்-கோவிட் எலிசா கிட்' உபகரணத்துக்கு காப்புரிமை பெறவும் இந்தியா விண்ணப்பித்துள்ளது.

அதுபோல, பலதரப்பட்ட விலங்களில் ரத்த ஒட்டுண்ணி நோய் பாதிப்பைக் கண்டறிய உதவும் 'சுரா எலிசா கிட்' என்ற உபகரணமும் அறிமுகஞ்செய்யப்பட்டது. இந்தச் சுரா ரத்து ஒட்டுண்ணி நோய் தாக்கம் காரணமாக, கால்நடை உற்பத்தியில் ஆண்டுக்கு ₹4,474 கோடி அளவுக்கு இழப்பை இந்தியா சந்தித்து வருகிறது.

---

1. சிறு வணிகங்களை ஆதரிப்பதற்காக SMB சாதி உத்சவத்தை அறிமுகப்படுத்திய சமூக ஊடக தளம் எது?

அ. முகநூல் (Facebook)

ஆ. புலனம் (WhatsApp) ☑

இ. கீச்சகம் (Twitter)

ஈ. கூ (Koo)

✓ வாட்ஸ்அப் இந்தியா, 'SMBSaathi Utsav' என்ற பெயரில் ஒரு முன்னெடுப்பை அறிவித்தது. இது வாட்ஸ்அப் பிசினஸ் செயலிபோன்ற டிஜிட்டல் ஊடகங்களைப் பின்பற்றுவதற்கு உதவுவதன்மூலம் சிறு வணிகங்களுக்கு உதவுதலை நோக்கமாகக்கொண்டுள்ளது. ஜெய்ப்பூரில் ஒரு சோதனைத் திட்டமாகத் தொடங்கப்பட்ட, 'SMBSaathi Utsav' அங்கு 500 சிறு வணிகங்கள் ஆன்லைனில் தங்கள் வணிகத்தை நடத்துவதற்கு பயிற்சியளித்தது. ஜோஷ் டாக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இந்த முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.

2. மெட்டாவெர்ஸில் அலுவலக வெளியைப்பெற்ற உலகின் முதல் அங்கீகாரம் பெற்ற அமைப்பு எது?

அ. இந்திய மருத்துவ கவுன்சில் (எம்சிஐ)

ஆ. அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கவுன்சில் (AICTE) ☑

இ. தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சில் (NAAC)

ஈ. இந்திய தர கவுன்சில் (QCI)

✓ அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலானது (AICTE) மெட்டாவெர்ஸில் அலுவலக வெளியைப் பெற்ற உலகின் முதல் அங்கீகாரம் பெற்ற அமைப்பாக மாறியுள்ளது. மிச்சிகனைச் சார்ந்த இன்ஃபர்மேஷன் டேட்டா சிஸ்டம்ஸ் இன்க் (IDS) AICTEஇன் மெட்டாவேர்ஸ் கண்ணோட்டத்தை வெளியிட்டது. இது ஆக்மென்டட் ரியாலிட்டி அல்லது விர்ச்சுவல் ரியாலிட்டி ஆகியவற்றைப் பயன்படுத்தும் உருவகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் சூழலாகும். IDS, கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் முன்னிலையில் பாரத் பிளாக்செயின் நெட்வொர்க் (அகாடமிக் பிளாக்செயின் கன்சோர்டியம்) மற்றும் பாலிவர்சிட்டி (கல்வி மெட்டாவர்ஸ்) ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது.

3. பிரிட்டிஷ் கவுன்சிலின், 'India/UK Together 2022, a Season of Culture' சீசன் தூதராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

அ. விராட் கோலி

ஆ. A R ரகுமான் ☑

இ. தீபிகா படுகோன்

ஈ. பா இரஞ்சித்

✓ இசையமைப்பாளர் A R ரகுமான், பிரிட்டிஷ் கவுன்சிலின், 'India/UK Together 2022, a Season of Culture' சீசன் தூதராக நியமிக்கப்பட்டார். இந்தியாவின் 75ஆம் ஆண்டு விழா மற்றும் இருநாடுகளுக்கு இடையேயான இருதரப்பு உறவுகளைக் கொண்டாடும் வகையில் இந்த முயற்சி தொடங்கப்பட்டது. திட்டத்தின்கீழ், இந்தியா–இங்கிலாந்தில் இருந்து 1,400 கலைஞர்கள் நடனம், இசை, நாடகம், கவிதை, இலக்கியம், காட்சிக்கலைகள் மற்றும் படைப்பாற்றல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வெளிப்படுத்துவார்கள்.

4. 'திறந்தநிலை பசுமை அணுகல் விதிகள் – 2022'ஐ அறிமுகப்படுத்திய ஒன்றிய அமைச்சகம் எது?

அ. அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

ஆ. எரிசக்தி அமைச்சகம் ☑

இ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. MSME அமைச்சகம்

✓ இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை விரைவுபடுத்துவதற்காக, 'திறந்தநிலை பசுமை அணுகல் விதிகள் – 2022'ஐ மத்திய எரிசக்தி அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தப் புதிய விதிகளின்படி, எரிசக்தி விநியோக

நிறுவனங்களிடம் நுகர்வோர் பசுமை எரிசக்தியைக் கோரலாம். திறந்தநிலை பசுமை அணுகல் அனைத்து நுகர்வோருக்கும் அனுமதிக்கப்படுகிறது. மேலும், பசுமை ஆற்றலுக்கான திறந்தநிலை அணுகல் பரிவர்த்தனையின் வரம்பு 1 மெகாவாட்டிலிருந்து 100 கிலோவாட்டாக குறைக்கப்பட்டுள்ளது.

5. 'அமெரிக்காவின் உச்சிமாநாடு – 2022' நடைபெறும் நகரம் எது?

அ. நியூயார்க்

ஆ. வாஷிங்டன் DC

இ. லாஸ் ஏஞ்சல்ஸ் ☑

ஈ. சிகாகோ

- ✓ அமெரிக்காவின் ஒன்பதாவது உச்சிமாநாட்டிற்காக லாஸ் ஏஞ்சல்ஸில் அமெரிக்க அதிபர் பிடனும் பல்வேறு நாட்டின் உலகத்தலைவர்களும் கூடினர். அமெரிக்காவின் உச்சிமாநாடு ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கும் நடத்தப்படுகிறது. குடியேற்றம், வணிகம் மற்றும் வறுமைபோன்ற பிரச்சினைகளை கையாளுதற்காக மேற்குப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பிரதிநிதிகளை இது ஒன்றிணைக்கிறது. அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன், கடந்த 1994ஆம் ஆண்டில் மியாமியில் இதன் முதல் உச்சிமாநாட்டை நடத்தினார்.

6. அண்மையில் விவாதத்திற்குள்ளான, 'Q-CHAMP' என்றால் என்ன?

அ. விளையாட்டுத் தொடர்பானது

ஆ. COVID-19 தொடர்பானது

இ. பயங்கரவாத தாக்குதல் தொடர்பானது

ஈ. காலநிலை மாற்றம் தொடர்பானது ☑

- ✓ காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான அவசரத்தேவையை உணர்ந்து, 2022 மே.24 அன்று QUAD (நாற்கர பாதுகாப்பு உரையாடல்) தலைவர்கள் "QUAD Climate Change Adaptation and Mitigation Package (QAAP)" 'தணிப்பு' மற்றும் 'ஏற்பு' ஆகியவற்றை இரண்டு கருப்பொருள்களாகக் கொண்டு அறிமுகப்படுத்தினர்.
- ✓ 'Q-CHAMP'இன் வெளியீட்டை பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பிடன், ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடா மற்றும் ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் ஆகியோர் கலந்துகொண்ட இரண்டாவது தனிப்பட்ட QUAD உச்சிமாநாட்டின் முடிவில் அறிவித்தனர்.

7. ஒவ்வோர் ஆண்டும் உலக தைராய்டு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. மே.25 ☑

ஆ. மே.27

இ. மே.29

ஈ. மே.30

- ✓ உலக தைராய்டு நாளானது ஒவ்வோர் ஆண்டும் மே.25 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது தைராய்டு நோய், அதன் அறிகுறிகள் மற்றும் அதன் சிகிச்சை தொடர்பான புரிதலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலக தைராய்டு நாள், முதன்முதலில் கடந்த 2008ஆம் ஆண்டில் ஐரோப்பிய தைராய்டு சங்கத்தின் (ETA) தீர்மானத்தால் அனுசரிக்கப்பட்டது.

8. பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சார பன்முகத்தன்மைக்கான உலக நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. மே.21 ☑

ஆ. மே.22

இ. மே.23

ஈ. மே.24

✓ கடந்த 2001ஆம் ஆண்டில், UNESCO ஆனது கலாச்சார பன்முகத்தன்மை குறித்த உலகளாவிய பேரறிவிப்பை ஏற்றுக்கொண்டது. 2002 டிசம்பரில், ஐநா பொதுச்சபை மே.21 அன்று பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சார பன்முகத்தன்மைக்கான உலக நாளாக அறிவித்தது. இந்த நாள், உலக கலாச்சாரங்களின் மகத்துவத்தை மட்டுமல்ல, அமைதி மற்றும் நிலையான வளர்ச்சியை அடைவதற்கான கலாச்சார உரையாடலின் பங்கையும் எடுத்துக்காட்டுகிறது. ஐநா பொதுச்சபை, 2015–இல் கலாச்சாரம் மற்றும் நிலையான வளர்ச்சி குறித்த தீர்மானத்தை ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

9. 2021 – பயண மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் குறியீட்டில் முதலிடம் பிடித்துள்ள நாடு எது?

அ. தென் கொரியா

ஆ. ஜப்பான் ☑

இ. ஹாங்காங்

ஈ. சிங்கப்பூர்

✓ 2021 – பயண மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் குறியீட்டில் ஜப்பான் முதலிடத்திலும், அமெரிக்கா, ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளும் தொடர்ந்துள்ளன. இந்தியா 4.2 மதிப்பெண்களுடன் 54ஆம் இடத்தில் உள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டின் குறியீட்டைவிட எட்டு இடங்கள் சரிந்துள்ளது.

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மொகிந்தர் கே மிதா சார்ந்த நாடு எது?

அ. ஐக்கிய பேரரசு ☑

ஆ. பிரான்ஸ்

இ. ஜெர்மனி

ஈ. அமெரிக்கா

✓ பிரிட்டனின் எதிர்க்கட்சியான லேபர் கட்சியின் இந்திய வம்சாவளி அரசியல்வாதியான கவுன்சிலர் மொகிந்தர் கே மிதா, மேற்கு இலண்டனில் உள்ள ஈலிங் கவுன்சிலின் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உள்ளூர் லண்டன் கவுன்சிலில் தலித் சமூகத்தைச் சேர்ந்த முதல் பெண் மேயரானார் அவர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஜூன் 13–இல் 'எண்ணும் எழுத்தும்' திட்டம்: முதல்வர் தொடக்கி வைக்கிறார்

தமிழ்நாட்டில் கோடை விடுமுறை முடிந்து வரும் திங்கள்கிழமை பள்ளிகள் திறக்கப்படும் நிலையில், அன்றைய நாளே, 'எண்ணும் எழுத்தும்' திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கி வைக்கவுள்ளார்.

தமிழ்நாட்டில் வரும் 2025–ஆம் ஆண்டுக்குள் மாணவர்கள் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவைப் பெற வேண்டும் என்பதே 'எண்ணும் எழுத்தும்' திட்டத்தின் நோக்கமாகும். இந்தத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள

அனைத்து மாணவர்களும் எட்டு வயதிற்குள் பொருள்புரிந்து படிக்கும் திறனையும் அடிப்படைக் கணிதச் செயல்பாடுகளைச் செய்யும் திறன்களையும் பெற்றிருக்க வேண்டும்.

கல்வியில் இதுவரை நடத்தப்பட்ட பல்வேறு ஆராய்ச்சிகளின் பயனாக அறிவியல் மனப்பான்மை மற்றும் சமூகத் திறன்களுடன் இணைந்த மொழிக் கற்பித்தலில் மாணவர்களின் கற்றல் நிலையை அடிப்படையாகக் கொண்டு (level based) ஒருங்கிணைத்து அளிக்கப்பட வேண்டும் என்பதையே எண்ணும் எழுத்தும் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. இதன்படி தமிழ்நாட்டில் உள்ள ஒன்று முதல் மூன்று வகுப்புகளில் தமிழ், ஆங்கிலம், கணக்குப் பாடங்கள் சூழ்நிலையியல் பாடக்கருத்துகளுடன் ஒருங்கிணைந்து கற்பிக்கப்படும்.

இதன்காரணமாக 2025–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள எட்டு வயதிற்குட்பட்ட அனைத்து மாணவர்களும் பொருள்புரிந்து படிப்பர், அடிப்படைக் கணிதச் செயல்பாடுகளை மேற்கொள்வர். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1, 2, 3–ஆம் வகுப்புகளுக்கு 2022–2023–ஆம் ஆண்டில் இருந்து 'எண்ணும் எழுத்தும்' என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு மாநில அளவிலான பயிற்சி நடைபெற்றது.

---

2. இன்னுமா இப்படி? | சிசு மரண விகிதம் குறித்த தலையங்கம்

ஒரு தேசத்தின் ஆரோக்கியத்துக்கான குறியீடு, குறைவான குழந்தைகள் மரண விகிதம் என்பது உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை அடிப்படையாக வைத்தே ஒட்டுமொத்த மக்கள்தொகையின் ஆரோக்கியம் பார்க்கப்படுகிறது. இந்தப் பின்னணியில், இந்தியாவின் தலைமைப் பதிவாளர் அலுவலகம் வெளியிட்டிருக்கும் அறிக்கை அதிர்ச்சி அளிப்பதாக இருக்கிறது.

2020–ஆம் ஆண்டுக்கான பல்வேறு வளர்ச்சிக் குறியீடுகளும், ஆய்வுகளும் தலைமைப் பதிவாளர் அலுவலகத்தால் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றில் சிசு மரணம் குறித்த விவரங்கள் கவலையளிக்கும் விதமாக இருக்கின்றன. 1000 பிரசவங்களில் 28 குழந்தைகள் பிறக்கும்போதோ, பிறந்த ஒரு மாதத்திற்குள்ளோ உயிரிழப்பதாகத் தெரிகிறது. இதைத்தான், 'சிசு மரண விகிதம்' என்று கூறுவார்கள்.

கடந்த 10 ஆண்டு புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது இந்தியாவின் சிசு மரண விகிதம் (Infant Mortality Rate) 44–லிலிருந்து 28–ஆகக் குறைந்திருக்கிறது. ஊரகப்புறங்களில் 48–லிருந்து 31–ஆகவும் நகர்ப்புறங்களில் 29–லிருந்து 10–ஆகவும் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கிறது அந்த அறிக்கை.

பத்து ஆண்டுகளில், 'சிசு மரண விகிதம்' குறைந்திருக்கிறது என்றாலும், ஊர்ப்புறம், நகர்ப்புறம் என்கிற வேறுபாடு இல்லாமல் தேசிய அளவில், பிறந்த முதலாண்டிலேயே 36 குழந்தைகளில் ஒரு குழந்தை உயிரிழப்பதாக 2022 மே மாத அறிக்கை தெரிவிக்கிறது. சிசு மரணம் போலவே குழந்தைகள் மரணமும் கவனத்துக்குரியது, கவலைக்குரியது.

பாகிஸ்தான் தவிர்த்த இந்தியாவின் அண்டைநாடுகளில் சிசு மரண விகிதம் குறைவாக இருப்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. வங்கதேசத்தின் சிசு மரண விகிதம் 24 என்றால், நேபாளம் 24, பூடான் 23 என்கிற அளவில் இருப்பதை நாம் உணரவேண்டும். பல்வேறு பிரச்னைகளுக்கு இடையிலும் இலங்கையின் 'சிசு மரண விகிதம்' ஆயிரத்தில் ஆறு மட்டுமே. பாகிஸ்தான் (56) நம்மைவிட மோசமாக இருக்கிறது என்று மகிழ்ச்சி அடையாமல், ஏனைய அண்டை நாடுகள் இந்தியாவை முந்துகிறது என்பது குறித்து நாம் கவலைப்பட்டாக வேண்டும்.

இந்தியா பெரிய நாடு, கூடுதல் மக்கள்தொகைகொண்ட நாடு என்றெல்லாம் காரணம் கூறி நாம் தப்பித்துவிட முடியாது. ஏனென்றால், நம்மைப் போலவே அதிகமான மக்கள்தொகையும், நிலப்பரப்பும் கொண்ட பிரேஸில், சீனா உள்ளிட்ட நாடுகளில் குறைந்த, 'சிசு மரண விகிதம்' காணப்படுகிறது.

பெரிய மாநிலங்களைவிட சிறிய மாநிலங்களில், 'சிசு மரண விகிதம்', குழந்தைகள் மரண விகிதம், ஊட்டச்சத்து குறைபாடு போன்றவை குறைவாகக் காணப்படுகின்றன. பெரிய மாநிலங்களில் இருந்து பிரிக்கப்பட்ட உத்தரகண்ட், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், தெலங்கானா ஆகியவை உதாரணங்கள். இந்தியாவுக்குள்ளே எடுத்துக்கொண்டாலும் சிசு மரண விகிதத்தில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. இந்தியாவின் மாநிலங்கள், ஒன்றிய பிரதேசங்கள் அனைத்தையும் சேர்த்துப்பார்க்கும்போது கேரள மாநிலத்தில் சிசு மரண விகிதம் ஒற்றை இலக்கத்தில் (ஆயிரத்துக்கு ஆறு) உள்ளது. இந்தியாவிலேயே குறைந்த சிசு மரண விகிதம், சிறிய மாநிலமான மிசோரத்தில் (3) காணப்படுகிறது

என்றால், வடகிழக்கு மாநிலங்களான நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, மணிப்பூர் ஆகியவற்றிலும் குறைவு. அந்தப் பட்டியலில் கோவாவையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

மனிதவளக் குறியீட்டில் பின்தங்கியிருக்கும் மாநிலங்கள் சிசு மரணத்தைக் கட்டுப்படுத்துவதிலும் பின்தங்கியே காணப்படுகின்றன. இந்தியாவிலேயே அதிகமான சிசு மரண விகிதம் (43) மத்திய பிரதேசத்தில்தான். அங்கே நகரங்களுக்கும் ஊரகப்புறங்களுக்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடும் காணப்படுகிறது. உத்தர பிரதேசத்தின் சிசு மரண விகிதம் 38. கடந்த ஐந்தாண்டுகளாக காட்டப்பட்ட முனைப்பின் விளைவாக மருத்துவமனை பிரசவங்கள் அதிகரித்திருக்கின்றன. அதனால், பிறந்த குழந்தைகளுக்கான உடனடி சிகிச்சைக்கு வழிகோலப்படுகிறது. பிறந்து ஓராண்டுக்குள் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை உத்தர பிரதேச மாநிலத்தில் இப்போது கணிசமாகக் குறைந்திருக்கிறது. குழந்தைகள் நலமாகவும், ஊட்டச்சத்துடனும் வளர்வதற்கு மருத்துவமனை பிரசவங்கள் முக்கியமான காரணி என்பதை நாடு தழுவிய அளவில் தாய்மார்கள் உணரத் தொடங்கியிருப்பது வரவேற்புக்குரிய மாற்றம்.

முதலாவது பிறந்த நாளை காண முடியாமல் குழந்தைகள் உயிரிழப்பதற்கும் பிரசவகால மரணத்துக்கும், சிசு மரணத்துக்கும் தொடர்புண்டு. அடித்தட்டு மக்கள் நிலையில் காணப்படும் படிப்பறிவின்மையும், வறுமையும், விழிப்பு உணர்வு இல்லாமையும் அனைவருக்கும் தெரிந்த காரணங்கள். சாலை வசதிகள் மேம்பட்டிருந்தாலும் மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் அருகில் இல்லாமையும் மிக முக்கியமான காரணம் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஊட்டச்சத்தின்மை இன்னொரு காரணம். கடுமையான ஊட்டச்சத்துக் குறைவு காரணமாக வயிற்றுப்போக்கு, நிமோனியா, மலேரியா உள்ளிட்ட குழந்தைப்பருவ உடல்நிலை பாதிப்புகளால் சிசு மரணம், குழந்தைகள் மரணம் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கிறது உலக சுகாதார அமைப்பு.

கடுமையான ஊட்டச்சத்துக் குறைவு, குழந்தைகளின் உடலில் நோய் எதிர்ப்பு ஆற்றல் இல்லாமல் செய்துவிடுகிறது. போதாக்குறைக்கு பிரசவ காலத்தில் தாய்மார்கள் ஊட்டச்சத்துள்ள உணவு உட்கொள்ளாததால் எடை குறைவான குழந்தைகள் பிறக்கின்றன. இவையிரண்டும் சேர்ந்துகொள்ளும்போது எதிர்ப்பு ஆற்றலே இல்லாத நிலையில் உயிரிழப்பு தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

---

3. அரசுப்பணியாளர் தேர்வாணைய பொறுப்பு தலைவராக சி முனியநாதன் நியமனம்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) பொறுப்புத் தலைவராக, தேர்வாணைய உறுப்பினர் சி முனியநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். தேர்வாணையத்தின் தலைவராக இருந்த க பாலச்சந்திரன், வயதடிப்படையில் கடந்த 9 அன்று ஓய்வுற்றார். இதைத்தொடர்ந்து, தேர்வாணையத்தின் பொறுப்புத் தலைவராக, அதில் ஏற்கெனவே உறுப்பினராக உள்ள ஓய்வுற்ற முன்னாள் இ ஆ ப அதிகாரி சி முனியநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

4. இந்தியாவின் 4–ஆவது பெரிய வர்த்தகக் கூட்டாளி ஆப்பிரிக்க ஒன்றியம்

இந்தியாவின் 4–ஆவது பெரிய வர்த்தகக் கூட்டாளியாக ஆப்பிரிக்க ஒன்றியம் திகழ்கிறது என்று தென் ஆப்பிரிக்காவில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி தலைமைச் செயல் அதிகாரி சியாம் பிரசாத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவுக்கு பெட்ரோலியம் பொருள்கள், மருந்துப் பொருள்கள், ரசாயனம், நூல் உள்ளிட்டவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதேவேளையில், ஆப்பிரிக்காவில் இருந்து காய்கறிகள், கச்சா எண்ணெய், விலை உயா்ந்த கற்கள் உள்ளிட்டவை இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆப்பிரிக்க ஒன்றியத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் மொத்த இறக்குமதியில் நைஜீரியா, அங்கோலா, அல்ஜீரியா நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் 61 சதவீத பங்கைக் கொண்டுள்ளது.

கானா, தென் ஆப்பிரிக்கா, போட்ஸ்வானாவில் இருந்து விலை உயர்ந்த கற்கள் மற்றும் கண்ணாடிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது ஆப்பிரிக்க ஒன்றியத்தில் இருந்து செய்யப்படும் இறக்குமதியில் 20 சதவீத பங்கைக் கொண்டுள்ளது. இதுதவிர பெனின், சூடான், ஸாம்பியா, மொராக்கோ, கோட் டிவார்போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து காய்கறிகள், உலோகங்கள், தாதுக்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. கடந்த 2019–20–ஆம் ஆண்டில் இந்தியா–ஆப்பிரிக்கா இடையிலான வர்த்தக மதிப்பு 68.33 பில்லியன் டாலராக (சுமார் ₹5.33 இலட்சம் கோடி) இருந்தது. உலக வர்த்தகத்தில் அதன் பங்கு 8.52 சதவீதம் ஆகும்.

1. 'ஷாங்க்ரி–லா பேச்சுவார்த்தையை (ஆசிய பாதுகாப்பு உச்சிமாநாடு) நடத்தும் நாடு எது?

அ. சீனா

ஆ. சிங்கப்பூர் ☑

இ. மலேசியா

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

✓ COVID–19 தொற்றுநோய்க்கு ஈராண்டுகளுக்குப் பிறகு, பன்னாட்டு உத்திசார் ஆய்வுகளுக்கான நிறுவனம் (IISS) நடத்திய 19ஆவது ஷாங்க்ரி–லா பேச்சுவார்த்தை சிங்கப்பூரில் தொடங்கியது. ஆசியாவின் முக்கியமான பாதுகாப்பு உச்சிமாநாடுகளுள் 'ஷாங்ரி–லா' வருடாந்திர பேச்சுவார்த்தையும் ஒன்றாகும். பிராந்தியத்தின் மிக முக்கியமான பாதுகாப்பு சவால்கள்குறித்து அமைச்சர்கள் விவாதிக்கும் தனித்துவமான கூட்டம் இது. இது 2002–இல் சிங்கப்பூர் அரசாங்கத்தின் ஆதரவுடன் பிரிட்டிஷ் மதியுரையகமான IISS–ஆல் தொடங்கப்பட்டது. 'ஷாங்ரி–லா' பேச்சுவார்த்தை ஆனது அதிகாரப்பூர்வமாக ஆசிய பாதுகாப்பு உச்சிமாநாடு என்று அழைக்கப்படுகிறது.

2. 'சுரக்ஷா–மித்ரா திட்டம்' என்ற வாகன கண்காணிப்பு அமைப்பை அறிமுகப்படுத்திய இந்திய மாநிலம் எது?

அ. தெலுங்கானா

ஆ. கேரளா ☑

இ. ஒடிஸா

ஈ. குஜராத்

✓ கேரள மாநில போக்குவரத்து அமைச்சகம், 'சுரக்ஷா–மித்ரா திட்டம்' என்ற பெயரில் வாகன கண்காணிப்பு அமைப்பை அறிமுகப்படுத்தியது. ஏதேனும் இடர் ஏற்பட்டால், உரிமையாளரின் கைபேசிக்கு அதுகுறித்து செய்தியை இவ்வமைப்பு அனுப்புகிறது. நிர்பயா திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், சாலைப் பயணத்தை பாதுகாப்பானதாக்கும் நோக்கில் அம்மாநிலத்தில் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

3. இதுவரை வெளியிட்டதிலேயே நிலவின் மிக விரிவான நிலப்பொதியியல் வரைபடத்தை வெளியிட்ட நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. ரஷ்யா

இ. சீனா ☑

ஈ. இஸ்ரேல்

✓ நிலவின் மிக விரிவான நிலப்பொதியியல் வரைபடத்தை சீனா வெளியிட்டுள்ளது. அதில் நிலவின் பள்ளங்கள் மற்றும் கட்டமைப்புகள் பற்றிய விவரங்கள் இடம்பெற்றுள்ளன. அமெரிக்க நிலப்பொதியியல் ஆய்வானது 2020இல் NASA உடன் இணைந்து முழு சந்திர மேற்பரப்பையும் வரைபடமாக்கி வகைப்படுத்தியது. இருப்பினும், இந்த வரைபடம் அமெரிக்க வரைபடத்தைவிட சிறந்த விவரங்களை கொண்டுள்ளது. நிலவின் புதிய விரிவான நிலப்பொதியியல் வரைபடம் 1:2500000 என்ற அளவைக் கொண்டுள்ளது.

4. 2022–இல் சென்னையில் நடத்தப்படும் 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் சின்னத்தின் பெயர் என்ன?

அ. வீரா

ஆ. தம்பி ☑

இ. அறிவு

ஈ. போதி

- ✓ 44ஆவது FIDE செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை மற்றும் 'தம்பி' என்ற போட்டிச்சின்னத்தை மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். தமிழில் 'தம்பி' என்றால் 'இளவல்' என்று பொருள். சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் நடக்கும் இந்தப் பன்னாட்டுப் போட்டியில், 186 நாடுகளைச்சேர்ந்த ஈராயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.

5. 'தேசிய சுங்க மற்றும் GST அருங்காட்சியகமானது' அண்மையில் எந்த மாநிலம்/UTஇல் திறக்கப்பட்டது?

அ. ஹரியானா

ஆ. கோவா ☑

இ. புது தில்லி

ஈ. மகாராஷ்டிரா

- ✓ மத்திய நிதியமைச்சகத்தின் சார்பில் கொண்டாடப்படும் விடுதலையின் 75ஆவது ஆண்டுப் பெருவிழா சிறப்பு வாரத்தின் ஒருபகுதியாக, கோவாவில் 'தரோஹர்' என்னும் தேசிய சுங்க மற்றும் GST அருங்காட்சியகத்தை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாட்டுக்கு அர்ப்பணித்தார். பல நூற்றாண்டு பழமையான பாரம்பரிய கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டிருந்த கலைநுட்பம்கொண்ட ஒற்றைப் பாறையிலிருந்து தங்க மணலை அகற்றி தனித்துவமான முறையில் அர்ப்பணிப்பு விழா நடைபெற்றது.
- ✓ கோவாவில் போர்த்துகீசிய ஆட்சியின்போது 'அல்பண்டேகா' என்று அழைக்கப்பட்ட இரண்டு மாடி 'நீலக்கட்டிடம்' பனாஜியில் உள்ள மண்டோவி ஆற்றின் கரையில் 400 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளது.

6. புது தில்லியில் வைத்து இந்திய வர்த்தக வலைத்தளத்தை அறிமுகப்படுத்திய ஒன்றிய அமைச்சகம் எது?

அ. பெருநிறுவன விவகாரங்களுக்கான இணையமைச்சகம்

ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறைக்கான இணையமைச்சகம் ☑

இ. நிதிக்கான இணையமைச்சகம்

ஈ. MSME க்கான இணையமைச்சகம்

- ✓ மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை இணையமைச்சர் அனுப்ரியா படேல், 2022 மே.27 அன்று புது தில்லியில் வைத்து இந்திய வர்த்தக வலைத்தளத்தை அறிமுகஞ்செய்துவைத்தார். இந்திய ஏற்றுமதியாளர்கள் மற்றும் அயல் நாட்டு வாங்குவோர்க்கு ஒரு பன்னாட்டு வணிக மையமாக இந்த வலைத்தளம் செயல்படும்.
- ✓ சிறு–நடுத்தர நிறுவன ஏற்றுமதியாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் உழவர்கள் தங்கள் தயாரிப்புகளுக்கான புதிய சந்தைகளை அடையாளங்கண்டு, உலகளவில் தங்கள் விற்பனையை அதிகரிக்க, வணிகத்திலிருந்தே வணிகத்திற்கான ஓர் எண்ம சந்தையாக இந்த வலைத்தளம் அமைந்துள்ளது.

7. R பிரக்ஞானந்தா என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. மட்டைப்பந்து

ஆ. பில்லியர்ட்ஸ்

இ. செஸ் ☑

ஈ. டென்னிஸ்

- ✓ 16 வயதான இந்திய செஸ் கிராண்ட்மாஸ்டர் R பிரக்ஞானந்தா, 2022 மே.27 அன்று மெல்ட்வாட்டர் சாம்பியன்ஸ் செஸ் டூர் செசபிள் மாஸ்டர்ஸ் போட்டியின் இறுதிப்போட்டியில் சீனாவின் டிங் லிரனிடம் வீழ்ந்து வெளியேறினார். அவர் அரையிறுதி ஆட்டத்தில் அனிஷ் கிரியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

8. உலக பால் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஜூன்.01 ☑

ஆ. ஜூன்.05

இ. ஜூன்.10

ஈ. ஜூன்.15

✓ உலக பால் நாளானது கடந்த 2001ஆம் ஆண்டில் ஐநா அவையின் (FAO) உணவு மற்றும் வேளாண் அமைப்பால் நிறுவப்பட்டது. இது உலகின் உணவாக பாலின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காகவும் பால்வளத்துறையை கொண்டாடுவதற்காகவும் கடைப்பிடிக்கப்படுகிறது. உலக பால் நாளைக் கொண்டாடும் வகையில் FAO ஆனது 'பால் பேரணியைக் கொண்டாடவும் – Enjoy Dairy Rally'ஐ ஏற்பாடு செய்தது. 'Dairy Net Zero' என்பது நடப்பு (2022) ஆண்டில் வரும் உலக பால் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

9. உலக பசி நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. மே.28 ☑

ஆ. மே.30

இ. ஜூன்.10

ஈ. ஜூன்.15

✓ உலக பசி நாள் என்பது 'தி ஹங்கர்' திட்டத்தின் ஒரு முன்னெடுப்பாகும். இது நியூயார்க்கைச் சார்ந்த ஓர் அமைப்பு ஆகும். இது உலகின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும் நிகழ்வுகளின்மூலம் உலகம் முழுவதும் பசியை முடிவுக்குக் கொண்டுவர உறுதிபூண்டுள்ளது. உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் மே.28 அன்று உலக பசி நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஐநா அவையின் சமீபத்திய தரவுகளின்படி, 2015–க்குப்பிறகு பசியால் அவதிப்படுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. "#YouthEndingHunger" என்பது நடப்பு (2022) ஆண்டில் வரும் உலக பசி நாளுக்கானக் கருப்பொருளாகும்.

10. உலக புகையிலை ஒழிப்பு நாள் விருது–2022–க்கு WHOஆல் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

இ. ஜார்கண்ட் ☑

ஈ. பீகார்

✓ புகையிலை நுகர்வைக் கட்டுப்படுத்துவதற்கான அதன் முயற்சிகளை அங்கீகரித்து, உலக சுகாதார அமைப்பு (WHO) உலக புகையிலை ஒழிப்பு நாள் (WNTD) விருது–2022–க்கு ஜார்க்கண்டைத் தேர்ந்தெடுத்துள்ளது. ஜார்கண்டின் தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டத்தின் (NTCP) மைய முகமை அதிகாரி லலித் இரஞ்சன் பதக், புது தில்லியில் உலக புகையிலை ஒழிப்பு நாளை முன்னிட்டு சுகாதாரத்துறையின் மாநில புகையிலை கட்டுப்பாட்டுப் பிரிவு இந்த விருதைப் பெறும் என்று தெரிவித்தார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தேசிய அரசு இணைய சேவை மதிப்பீடு: தமிழ்நாடு முன்னேற்றம்

மத்திய அரசின் தேசிய அரசு இணைய சேவை மதிப்பீட்டில் தமிழ்நாடு முன்னேற்றம் அடைந்துள்ளது.

இதுதொடர்பாக ஒன்றிய அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தேசிய அரசு இணைய சேவை மதிப்பீட்டில் 2019–ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021–ஆம் ஆண்டு தமிழ்நாடு மிகச்சிறப்பாக முன்னேற்றமடைந்துள்ளது. தமிழ்நாடு அரசின் சேவை வலைதளங்கள் அனைத்து அம்சங்களிலும் 75 சதவீதத்துக்கும் அதிகமாக தரநிலையைப் பூர்த்தி செய்துள்ளன. அந்த வரிசையில் பஞ்சாப், இராஜஸ்தானும் இடம் பெற்றுள்ளன. இதுதவிர, ஆந்திர பிரதேசம், கேரளம், பஞ்சாப், கோவா, ஒடிசா அரசுகளின் சேவை வலைதளங்கள் 100 சதவீதம் தரநிலையை மேம்படுத்தியுள்ளன.

இந்த மதிப்பீட்டில் யூனியன் பிரதேசங்கள் வரிசையில் ஜம்மு–காஷ்மீர் முதலிடத்தில் உள்ளது. வடகிழக்கு மாநிலங்கள் வரிசையில் மேகாலயம், நாகாலாந்து முன்னணியில் உள்ளன.

1. மாற்றுத்திறனாளிகள் தொடர்பான புதிய தேசிய கொள்கை வரைவை அறிமுகப்படுத்திய ஒன்றிய அமைச்சகம் எது?

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

இ. சட்டம் & நீதி அமைச்சகம்

ஈ. பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய கொள்கை வரைவு குறித்து பொதுமக்களிடம் கருத்து கேட்டுள்ளது. இது இயலாமை தடுப்பு, கல்வி, சுகாதாரம், சமூக பாதுகாப்பு மற்றும் அணுகல் ஆகியவற்றில் இடையீட்டுகளை முன்மொழிகிறது. ஊட்டச்சத்துக் குறைபாடு, மருத்துவ அலட்சியம் மற்றும் பேரிடர்களால் ஏற்படும் குறைபாடுபோன்ற இயலாமைக்கான பிற காரணங்களிலும் இது கவனஞ்செலுத்துகிறது.

2. NeSDA அறிக்கையின்படி, தேசிய மின்னாளுகை சேவை வழங்கல் மதிப்பீட்டில் (NeSDA) உயரிய இடத்தைப் பெற்றுள்ள மாநிலம் எது?

அ. தெலுங்கானா

ஆ. கேரளா ☑

இ. ஒடிஸா

ஈ. குஜராத்

kerala
God's Own Country

✓ தேசிய மின்னாளுகை சேவை வழங்கல் மதிப்பீட்டின் (NeSDA) அறிக்கையின்படி, கேரள மாநிலம் அனைத்து மாநிலங்களுக்கிடையில் அதிக ஒட்டுமொத்த இணக்க மதிப்பெண்ணைப் பெற்றுள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீர், முதன்முறையாக மதிப்பிடப்பட்டுள்ளது. அது யூனியன் பிரதேசங்களுள் மிகவுயரிய இடத்தைப்பிடித்துள்ளது.

✓ வடகிழக்கு மற்றும் மலைப்பாங்கான மாநிலங்களில் மேகாலயா மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்கள் முன்னணி இடங்களில் உள்ளன. கடந்த 2019ஆம் ஆண்டைவிட 2021ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மதிப்பெண் அதிகரித்துள்ளது.

3. 2022–இல் மேற்கு மண்டல கவுன்சில் கூட்டம் நடைபெறும் மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. கோவா

ஆ. குஜராத்

இ. டாமன் & டையூ ☑

ஈ. மகாராஷ்டிரா

✓ மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, COVID–19 தொற்றுநோய் காரணமாக ஈராண்டு இடைவெளிக்குப்பிறகு, டையூவில் மேற்கு மண்டல கவுன்சிலின் கூட்டத்திற்கு தலைமைதாங்கினார். மேற்கு மண்டல கவுன்சில் குஜராத், மகாராஷ்டிரா, கோவா மற்றும் தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கியது. மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம், 1956–இன் பகுதி–IIIமூலம் ஐந்து மண்டல கவுன்சில்கள் அமைக்கப்பட்டன. மற்ற கவுன்சில்கள் – வடக்கு மண்டல கவுன்சில், மத்திய மண்டல கவுன்சில், கிழக்கு மண்டல கவுன்சில் மற்றும் தெற்கு மண்டல கவுன்சில் ஆகும்.

4. 2022 – குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலக நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Universal Social Protection to End Child Labour ☑

ஆ. Rehabilitation and Restoration

இ. Importance of Education

ஈ. Commitment to End Child Labour

✓ குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலக நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.12 அன்று உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. குழந்தைத் தொழிலில் ஈடுபடும் குழந்தைகளைத் தன்னலத்திற்காக பயன்படுத்திக் கொள்வது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாகும். சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) 2002ஆம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலக நாளை அறிவித்தது. "Universal Social Protection to End Child Labour" என்பது இந்த ஆண்டுக்கான (2022) கருப்பொருளாகும்.

5. இந்திய கடற்படையால் அண்மையில் பணியிலமர்த்தப்பட்ட, 'சந்தாயக்' என்றால் என்ன?

அ. ஆய்வுக்கப்பல் ☑

ஆ. போர்க்கப்பல்

இ. விமானந்தாங்கிக் கப்பல்

ஈ. நீர்மூழ்கிக்கப்பல்

✓ இந்திய கடற்படையானது கொல்கத்தாவில் வைத்து நான்கு பெரிய ஆய்வுக்கப்பல்களுள் முதலாவதான, 'சந்தாயக்' ஆய்வுக்கப்பலை பணியிலமர்த்தியது. இந்த ஆய்வுக்கப்பல்களின் முதன்மைப் பணியானது துறைமுகங்கள் சார்ந்து ஆய்வுகளை மேற்கொள்வதாகும். கடல்சார் மற்றும் புவி இயற்பியல் தரவுகளைச் சேகரிப்பதற்கும், வழிசெலுத்தலைத் தீர்மானிப்பதற்கும் இக்கப்பல்கள் பயன்படுத்தப்படும். பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் இடையே கடந்த 2018–இல் இந்த நான்கு ஆய்வுக்கப்பல்களை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

6. NADI–3 ஆசிய சங்கம் நதி மாநாடு நடைபெற்ற இடம் எது?

அ. கௌகாத்தி ☑

ஆ. இம்பால்

இ. அகர்தலா

ஈ. திமாபூர்

✓ 2022 மே 28–29 ஆகிய தேதிகளில் கௌகாத்தியில் இரண்டு நாள் NADI–3 (வளர்ச்சி மற்றும் ஒன்றுக்கொன்று சார்ந்துள்ள இயற்கை கூட்டாளிகள்) ஆசிய சங்கம் நதி மாநாடு நடைபெற்றது. 'ஆறு' என்று பொருள்படும் 'NADI', உப பிராந்தியத்தின் கூட்டு நோக்கத்தைத் தெளிவுபடுத்துவதற்கும் செயல்படுத்துவதற்குமான ஒரு முன்னெடுப்பாகும். இது இமயமலையின் தெற்கே உள்ள பகுதியை கங்கை மற்றும் பிரம்மபுத்திரா முதல் மீகாங் வரையிலான நதி பள்ளத்தாக்குகளின் தொடர்ச்சியான சங்கமமாக அங்கீகரிக்கிறது.

7. பின்வருவோருள் பன்னாட்டு பனோரமா கோல்டன் விருதை வென்றவர் யார்?

அ. கேசப் மஹந்தா

ஆ. ஷௌனக் சென்

இ. K V இரகுபதி ☑

ஈ. இவருள் எவருமில்லை

✓ திருப்பதியைச் சார்ந்த எழுத்தாளர் KV இரகுபதி, 2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'The Mountain is Calling' என்ற நூலுக்காக, 'ஒயிட் பால்கன்' பதிப்பகத்தால் வழங்கப்படும் சர்வதேச பனோரமா கோல்டன் விருதுக்கு தேர்ந்தெடுக்கப் –பட்டுள்ளார். திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் இருந்து ஓய்வுபெற்ற ஆங்கிலப் பேராசிரியரான K V இரகுபதி, கடந்த 1980–களிலிருந்து எழுதி வருகிறார்.

8. இனப்பெருக்க உரிமைகளுக்கான உலக பெண்கள் வலையமைப்பால் மே 28 அன்று கொண்டாடப்படுகிற நாள் எது?

அ. பெண்களின் உடல்நலத்திற்கான பன்னாட்டு நடவடிக்கை நாள் ☑

ஆ. பன்னாட்டு பெண்கள் இனப்பெருக்க உரிமைகள் நாள்

இ. பன்னாட்டு மக்கள்தொகை நாள்

ஈ. பன்னாட்டு பாலின சமத்துவ நாள்

✓ பெண்களின் உடல்நலத்திற்கான பன்னாட்டு நடவடிக்கை நாளை ஒவ்வோர் ஆண்டும் மே.28 அன்று இனப் பெருக்க உரிமைகளுக்கான உலகளாவிய பெண்கள் வலையமைப்பு (WGNRR) கொண்டாடி வருகிறது. கடந்த 1987ஆம் ஆண்டு முதல் பல்வேறு பெண்கள் உடல்நல ஆதரவாளர்களும் அவர்களது சமூகங்களும் இந்தக் கொண்டாட்டத்திற்கு தலைமை தாங்கிவருகின்றனர். கோஸ்டாரிகாவில் நடந்த பன்னாட்டு பெண்கள் உடல்நலம் குறித்த சந்திப்பின்போது, இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் மகளிர் உடல்நல வலையமைப்பு, மே.28ஆம் தேதி பெண்களின் உடல்நலத்திற்கான பன்னாட்டு நடவடிக்கை நாளாகக் கொண்டாடுவதற்கு முன்மொழிந்தது.

9. நடப்பாண்டில் (2022) வரும் பன்னாட்டு ஐநா அமைதிகாப்போர் நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ. People. Peace. Progress. The Power of Partnerships ☑

ஆ. Honouring Peacekeeping

இ. Women, Peace and Security

ஈ. Risk of COVID–19 in peacekeeping

✓ அமைதிகாக்கும் படையினரின் பங்களிப்புக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மே.29 அன்று பன்னாட்டு ஐநா அமைதிகாப்போர் நாள் கொண்டாடப்படுகிறது. "People. Peace. Progress. The Power of Partnerships" என்பது நடப்பாண்டில் (2022) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐ நா பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம், 1325 நிறைவேற்றப்பட்ட இருபத்திரண்டாமாண்டு நிறைவையும் நடப்பாண்டு (2022) குறிக்கிறது. கடந்த 1948ஆம் ஆண்டு முதல், தங்கள் சேவையின்போது உயிரிழந்த 3,900'க்கும் மேற்பட்ட ஐ நா அமைதிகாக்கும் படையினரை ஐநா அவை கௌரவித்து வருகிறது.

10. ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி சிறார்களுக்கான பன்னாட்டு நாள் (International Day of Innocent Children Victims of Aggression) கடைப்பிடிக்கப்படும் தேதி எது?

அ. ஜூன்.04 ☑

ஆ. ஜூன்.05

இ. ஜூன்.06

ஈ. ஜூன்.07

✓ ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி சிறார்களுக்கான பன்னாட்டு நாள் என்பது ஆண்டுதோறும் ஜூன்.4 அன்று ஐ நா அமைப்பால் நினைவுகூரப்படும் ஒரு நாளாகும். இது, 1982 ஆகஸ்ட்.19 முதல் ஆண்டுதோறும் நினைவுகூரப்பட்டு வருகிறது. உடல், மனம் மற்றும் உணர்ச்சி ரீதியான பாதிப்புகளுக்கு ஆளான உலகெங்கிலும் உள்ள சிறார்கள் அனுபவிக்கும் வலியை உணர்ந்துகொள்வதே இதன் நோக்கமாகும். இந்த நாள் சிறார்களின் உரிமைகளைக் காப்பதற்கான ஐநா'இன் உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஜூன்.16, 17 ஆகிய தேதிகளில் தர்மசாலாவில் நடைபெறவுள்ள முதலாவது தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாட்டுக்கு பிரதமர் தலைமை வகிக்கிறார்

இமாச்சலப் பிரதேசத்தின் தர்மசாலா பிசிஏ மைதானத்தில் வரும் 16. 17 ஆகிய தேதிகளில் பிரதமர் திரு. நரேந்திர மோதி தலைமையில் முதலாவது தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முக்கிய நடவடிக்கையாக மாநாடு நடைபெறும்.

15 முதல் 17ஆம் தேதி வரை நடைபெறவுள்ள தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில், மத்திய அரசு அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகள் மற்றும் நிபுணர்கள் உட்பட 200–க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வார்கள். மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் மாநிலங்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் அதிவேக நீடித்த பொருளாதார வளர்ச்சி குறித்து கவனம் செலுத்தப்படும். இந்தியா ஒரே குழு என்ற உணர்வுடன் நடைபெறும் மாநாடு, நீடித்த உயர் வளர்ச்சி, வேலைகள் உருவாக்கம், கல்வி, எளிதாக வாழுதல், வேளாண்மையில் தற்சார்பு ஆகியவற்றுக்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைக்கான தளத்தை உருவாக்கும். பொதுவான வளர்ச்சியை செயல்படுத்துதல், மக்களின் விருப்பங்களை நிறைவேற்ற ஒருங்கிணைந்த நடவடிக்கைக்கான திட்டம் ஆகியவற்றை இந்த மாநாடு மதிப்பீடு செய்யும்.

இந்த மாநாட்டுக்கான கருத்துப்படிவு மற்றும் நிகழ்ச்சிநிரல், கடந்த 6 மாதங்களாக 100 தடவைகளுக்குமேல் கூடி விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது. மாநாட்டில் 3 கருப்பொருட்கள் குறித்து விரிவான விவாதம் நடத்த அடையாளம் காணப்பட்டுள்ளன. (i) தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது; (ii) நகர்ப்புற நிர்வாகம், (iii) பயிர் மாற்றம் மற்றும் எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகை மற்றும் இதர வேளாண் பொருட்களில் தன்னிறைவை அடைதல். தேசிய கல்விக் கொள்கையின்கீழ், பள்ளி மற்றும் உயர்கல்வி குறித்து விரிவாக விவாதிக்கப்படும். ஒவ்வொரு தலைப்பின்கீழும், மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் கடைபிடிக்கப்படும் சிறப்பான நடைமுறைகள் பரஸ்பரம் தெரிந்துகொள்வதற்காக விளக்கப்படும்.

முன்னேற விரும்பும் மாவட்டங்கள் குறித்த அமர்வு, இதுவரை எட்டப்பட்ட சாதனைகள், குறிப்பிட்ட மாவட்டங்களின் இளம் ஆட்சியர்கள் வழங்கிய தரவு அடிப்படையிலான நிர்வாகம் உள்ளிட்ட வெற்றிகரமான ஆய்வுகளுடன் விவாதிக்கும். 2047–க்கான 'விடுதலையின் அமிர்தப் பெருவிழா' வழிகாட்டுதல் திட்டம் குறித்த சிறப்பு அமர்வும் நடைபெறும். எளிதாக வர்த்தகம் புரிதல், திட்டங்களின் முழுமையான பலன்களை கடைசி மைல் வரையிலும் கொண்டு செல்வதை உறுதி செய்தல், பிரதமரின் விரைவு சக்தி மூலம் இந்தியாவின் உள்கட்டமைப்பை மாற்றியமைத்தல், ஒருங்கிணைந்த அரசு ஆன்லைன் பயிற்சியான கர்மயோகி இயக்கத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகிய நான்கு கூடுதல் கருப்பொருள்கள் குறித்தும் விவாதிக்கப்படும்.

மாநாட்டில் விவாதிக்கப்பட்ட பொருட்கள் குறித்து, உயர்மட்ட அளவில் விரிவான கருத்தொற்றுமையுடன் செயல்திட்டத்தை இறுதி செய்ய, மாநாட்டின் தொடர்ச்சியாக நடைபெறும், அனைத்து மாநில, யூனியன் பிரதேச முதலமைச்சர்கள், நிர்வாகிகள் கலந்துகொள்ளும் நித்தி ஆயோக்கின் நிர்வாகக் குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.

---

2. ஆயுதப்படைகளில் இளைஞர்களை பணியில் சேர்ப்பதற்கான, "அக்னிபத்" திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல்

ஆயுதப்படைகளில் இந்திய இளைஞர்களை பணியமர்த்தும் கவர்ச்சிகரமான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. 'அக்னிபத்' என்று அழைக்கப்படும் இந்தத்திட்டத்தின்கீழ் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படும் இளைஞர்கள் 'அக்னி வீரர்கள்' என்று அழைக்கப்படுவார்கள். தேசபக்தியுடன், துடிப்புமிக்க இளைஞர்கள் இராணுவத்தில் நான்கு ஆண்டு காலத்திற்கு பணியாற்ற "அக்னிபத்" அனுமதிக்கும்.

ஆயுதப்படைகளில் இளைஞர்களை பணியமர்த்துவதற்காக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் இருந்து சமகால தொழில்நுட்பப் போக்குகளுக்கு ஏற்ற வகையில் திறமைமிக்க இளைஞர்களை சீருடைப்பணிக்கு ஈர்க்க இது வாய்ப்புகளை வழங்கும். இளைஞர்களை படைகளில் சேர்ப்பதன்மூலம் வீரர்களின் சராசரி வயதை நான்கைந்து ஆண்டுகள் குறைக்க இது வகைசெய்யும். அரசு அறிமுகப்படுத்தியுள்ள மிகப்பெரிய பாதுகாப்புக்

கொள்கை சீர்திருத்தமான இது, முப்படைகளிலும் மனிதவளக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் புதிய அத்தியாயத்தை உருவாக்கும். உடனடியாக அமலுக்கு வரும் இந்தக் கொள்கை முப்படைகளிலும் ஆள்சேர்ப்பை நிர்வகிக்கும்.

---

3. சென்னை IIT பேராசிரியருக்கு சர்வதேச விருது; தங்கப்பதக்கத்துடன் ₹2 கோடி பரிசு

சென்னை IIT பேராசிரியர் தலப்பில் பிரதீப்புக்கு, மதிப்புமிக்க 'இளவரசர் சுல்தான்பின் அப்துல்அஜிஸ் தண்ணீருக்கான சர்வதேச விருது' அறிவிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு துறையிலும் நீர் தொடர்பான திருப்புமுனை கண்டுபிடிப்புக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. பேராசிரியர் பிரதீப்பின் குழுவினர், குடிநீரில் இருந்து ஆர்சனிக்கை விரைவாக அகற்றுவதற்கு, மலிவு விலையில் சிறிய அளவிலான பொருட்களை உருவாக்கி, சுற்றுச்சூழலுக்குகந்த தண்ணீரை வழங்கியது. அதற்காக இந்த விருதுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். இதன்மூலம் பேராசிரியர் பிரதீப் மற்றும் அவருடைய குழுவுக்கு விருதுடன் ₹2 கோடி ரொக்கப்பரிசு, தங்கப்பதக்கம், கோப்பை மற்றும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

---

1. 'இந்திய இரயில்வேக்கான புதுமைக் கொள்கையின்'படி, கண்டுபிடிப்பாளர்களுக்கு வழங்கப்படும் மானியத்தின் அதிகபட்ச வரம்பு என்ன?

அ. ரூ.10 இலட்சம்

ஆ. ரூ.25 இலட்சம்

இ. ரூ.50 இலட்சம்

ஈ. ரூ 1.5 கோடி ☑

✓ துளிர்–நிறுவல்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில், இரயில்வே அமைச்சர் அசுவினி வைஷ்ணவ், 'இந்திய இரயில்வேக்கான புதுமைக் கொள்கை'யை அறிமுகப்படுத்தினார். 'இரயில்வேக்கான துளிர்–நிறுவல்கள்' என்றும் குறிப்பிடப்படும் இந்தக் கொள்கையானது சமப்பகிர்வு அடிப்படையில் கண்டுபிடிப்பாளர்களுக்கு ₹1.5 கோடி நிதியைப் பகிர்ந்தளிக்கும்.

2. 2021 – கேலோ இந்தியா யூத் கேம்ஸில் முதலிடத்தைப் பிடித்துள்ள மாநிலம் எது?

அ. தெலுங்கானா

ஆ. ஹரியானா ☑

இ. ஒடிஸா

ஈ. குஜராத்

✓ 2021 – கேலோ இந்தியா யூத் கேம்ஸின் நான்காவது பதிப்பு பஞ்ச்குலாவில் நிறைவடைந்தது. இந்தப் போட்டிகளை நடத்திய ஹரியானா மாநிலம் 52 தங்கம், 39 வெள்ளி மற்றும் 46 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. மகாராஷ்டிராவும், கர்நாடகாவும் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்தன. கேலோ இந்தியா யூத் கேம்ஸின் நான்காவது பதிப்பில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து விளையாட்டு வீரர்கள் 25 வெவ்வேறு விளையாட்டுகளில் போட்டியிட்டனர்.

3. 'Farmer Registration & Unified Beneficiary Information System' (FRUITS) என்ற மென்பொருளை அறிமுகப்படுத்திய மாநிலம் / UT எது?

அ. கோவா

ஆ. குஜராத்

இ. டாமன் & டையூ

ஈ. கர்நாடகா ☑

✓ கர்நாடக மாநில அரசு பல்வேறு அரசுத்திட்டங்களின்கீழ் வழங்கப்படும் பலன்களை உழவர்கள் எளிதாகப் பெறுவதற்காக, ஆதார் அடிப்படையிலான, ஒற்றைச் சாளர பதிவுக்கான மென்பொருளை அறிமுகப்படுத்தியுள்ளது. 'Farmer Registration & Unified Beneficiary Information System' (FRUITS) என்ற அம்மென்பொருள் ஆதார் அட்டை மற்றும் கர்நாடகாவின் பூமி எண்ம மயமாக்கப்பட்ட நிலப்பதிவு முறையைப் பயன்படுத்தி ஒற்றைப் பதிவுக்கு உதவுகிறது. உழவு, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, வருவாய், உணவு, சிவில் சப்ளைஸ் மற்றும் மீன்வளம் ஆகிய மாநிலத்துறைகள் இந்த முன்னெடுப்பின்கீழ் வருகின்றன.

4. அண்மையில் தொடங்கப்பட்ட, 'அக்னிபத்' திட்டம், எந்தத் துறையின் சீர்திருத்தங்களுடன் தொடர்புடையது?

அ. காவல்துறை

ஆ. இராணுவம் ☑

இ. குடிமைப் பணிகள்

ஈ. பழங்குடியினர் நலன்

✓ இந்திய இராணுவம், இந்திய கடற்படை மற்றும் இந்திய விமானப்படை ஆகியவற்றில் வீரர்கள், மாலுமிகள் மற்றும் வான்படை வீரர்களைச் சேர்ப்பதற்காக பாதுகாப்பு அமைச்சகம், 'அக்னிபத்' என்ற பெரும் பாதுகாப்புக் கொள்கை சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் குறுகியகால ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்கள் 'அக்னிவீரர்கள்' என்று அழைக்கப்படுவார்கள்.

5. ஆசியாவின் மிகப்பெரிய உவர் நீர் தடாகம் அமைந்துள்ள இந்திய மாநிலம்/UT எது?

அ. ஒடிசா ☑

ஆ. ஜம்மு காஷ்மீர்

இ. ஹிமாச்சல பிரதேசம்

ஈ. சிக்கிம்

✓ ஒடிசா மாநிலத்தில் அமைந்துள்ள, 'சிலிகா ஏரி' ஆசியாவின் மிகப்பெரிய உவர்நீர் தடாகம் ஆகும். தி ஃபிஷிங் கேட் திட்டத்துடன் இணைந்து சிலிகா மேம்பாட்டு ஆணையம் நடத்திய கணக்கெடுப்பின்படி, ஏரியில் 176 மீன்பிடிப் பூனைகள் உள்ளன. இதுவே, 2010ஆம் ஆண்டு தொடங்கி தற்போது இந்தியாவில் மேற்கு வங்கம் மற்றும் ஒடிசா ஆகிய இரண்டு மாநிலங்களில் நடைபெற்றுவரும் மீன்பிடி பூனைகள்பற்றிய உலகின் மிகநீண்ட ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்புத் திட்டமாகும். மேற்கு வங்கம், 2012–இல் மீன்பிடிப் பூனைகளை மாநில விலங்காக அறிவித்தது மற்றும் மீன்பிடிப்பூனையானது 2020–இல் சிலிகா ஏரியின் தூதராக அறிவிக்கப்பட்டது.

6. 2022 – மும்பை சர்வதேச திரைப்பட விழாவில், 'Dr V சாந்தாராம் வாழ்நாள் சாதனையாளர் விருது' யாருக்கு வழங்கப்பட்டது?

அ. ஹேமா மாலினி

ஆ. ஆஷா பரேக்

இ. சஞ்சித் நார்வேகர் ☑

ஈ. குல்சார்

✓ ஆவணப்படம், குறும்படங்கள் மற்றும் அனிமேஷன் படங்களுக்கான மும்பை சர்வதேச திரைப்பட விழாவின் 17ஆம் பதிப்பு (MIFF–2022) சமீபத்தில் மும்பையில் நடைபெற்றது. மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் திரைப்படப்பிரிவு ஏற்பாடு செய்த ஏழு நாள் விழாவைத் தொடங்கி வைத்தார். 'Dr V சாந்தாராம் வாழ்நாள் சாதனையாளர் விருது' மூத்த ஆவணப்பட தயாரிப்பாளரும் எழுத்தாளருமான சஞ்சித் நர்வேகருக்கு திரைப்பட வரலாறு & ஆவணப்பட இயக்கத்திற்கான அவரது பங்களிப்பிற்காக வழங்கப்பட்டது.

7. சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் இயக்குநர்கள் குழுவின் தலைவராகவும் வாக்களிக்கும் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் யார்?

அ. மேரி கோம் **ஆ. லோவ்லினா போர்கோஹைன் ☑**

இ. நிகத் ஜரீன் ஈ. ஜமுனா போரோ

✓ ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற லோவ்லினா போர்கோஹைன், தடகளக் குழுவின் இயக்குநர்கள் குழுவின் தலைவராகவும், வாக்களிக்கும் உறுப்பினராகவும் தேர்வுசெய்யப்பட்டுள்ளார் என சர்வதேச குத்துச்சண்டை சங்கம் (IBA) தெரிவித்துள்ளது. இந்திய குத்துச்சண்டை வீரர் சிவ தாபாவும் IBA உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

8. இந்திய புவியியல் ஆய்வு மையம் நடத்திய ஆய்வின்படி, கீழ்காணும் எந்த மாநிலத்தில் 222.88 மில்லியன் டன் தங்கம் இருப்பு உள்ளது?

அ. கர்நாடகா

ஆ. பீகார் ☑

இ. கேரளா

ஈ. மத்திய பிரதேசம்

✓ இந்திய புவியியல் ஆய்வுமையம் நடத்திய ஆய்வின்படி, பீகார் மாநிலத்தில் 27.6 டன் கனிமவளங்கொண்ட தாது உட்பட சுமார் 222.88 மில்லியன் டன் தங்கம் இருப்பு உள்ளது. GSI மற்றும் தேசிய கனிம வளர்ச்சிக்கழகத்துடன் ஆலோசனை நடத்திய பீகார் மாநில அரசு, இந்தியாவின் மிகப்பெரிய தங்க இருப்பு என்று கூறப்படும் அவ்விருப்புப் பகுதியை ஆய்வுசெய்ய அனுமதி வழங்க முடிவுசெய்துள்ளது.

9. ரிசர்வ் வங்கியால் நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வின்படி, பெரும்பாலானோரால் மிகவும் விரும்பப்படும் பணத்தாள் எது?

அ. ரூ.100 ☑

ஆ. ரூ.200

இ. ரூ.500

ஈ. ரூ.2000

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) வங்கிப்பணத்தாள் கணக்கெடுப்பின்படி, இந்திய மக்களால் ₹100 மதிப்புள்ள ரூபாய் தாள்கள் அதிகம் விரும்பப்படுகின்றன. அதே சமயம் ₹2,000 மதிப்புள்ள ரூபாய் தாள்கள் மிகச் சொற்பமாகவே மக்களால் விரும்பப்படுகின்றன. நுகர்வோர் அளவில் பணத்திற்கான தேவை மற்றும் மதிப்பின் விருப்பத்தேர்வுகளை மதிப்பிடுவதற்காக இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. பதிலளித்த 10இல் 7 பேராவது புதிய ரூபாய் நோட்டுகளில் திருப்தி அடைந்துள்ளனர். பதிலளித்தவர்களில் சுமார் 3% பேருக்கு பணத்தாளின் பாதுகாப்பு அம்சம்பற்றி எதுவும் தெரியாது.

10. 2022 – சர்வதேச யோகா நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Yoga for Humanity ☑

ஆ. Yoga and Science

இ. Yoga for Heart

ஈ. Yoga for Life

✓ ஜூன்.21ஆம் தேதி இந்தியாவிலும் உலகெங்கிலும் ஏற்பாடு செய்யப்படும் எட்டாவது சர்வதேச யோகா நாளின் கருப் பொருளாக, "Yoga for Humanity" என்று AYUSH அமைச்சகம் அறிவித்துள்ளது. சர்வதேச யோகா நாளின் முதன்மை நிகழ்வு கர்நாடக மாநிலம் மைசூருவில் நடைபெற்றது. பல்வேறு நாடுகளில் இருந்து சூரியனின் இயக்கத்துடன் யோகாசனம் செய்யும் மக்களின் பங்கேற்பை வெளிப்படுத்த, "கார்டியன் ரிங்" என்ற திட்டம் மேற்கொள்ளப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மொத்த விலை பணவீக்கம் 15.88%–ஆக அதிகரிப்பு

மொத்த விற்பனை விலை அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் கடந்த மே மாதத்தில் 15.88 சதவீதமாக வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

கடந்த மே மாதத்தில் வெப்ப அலை காரணமாக காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை அதிகரித்தது. மேலும், கச்சா எண்ணெய் விலையும் உயர்ந்து காணப்பட்டது. அதன்விளைவாக, அந்த மாதத்தில் மொத்த விலை பணவீக்கம் வரலாறு காணாத அளவில் 15.88 சதவீதத்தை எட்டியது. தொடர்ந்து மூன்று மாதங்களாக இப்பணவீக்கம் உச்சத்தில் இருந்து வருகிறது. மேலும், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இப்பணவீக்கம் தொடர்ந்து 14–ஆவது முறையாக இரட்டை இலக்கத்தில் உள்ளது.

முந்தைய ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது மே மாதத்தில், மினரல் ஆயில், கச்சா பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, உணவுப் பொருள்கள், அடிப்படை உலோகம், உணவுசாரா பொருள்கள், இரசாயனம் உள்ளிட்டவற்றின் விலை கணிசமாக அதிகரித்ததே பணவீக்கம் வரலாற்று உச்சத்தை தொட்டதற்கு முக்கிய காரணம். இந்தப் பணவீக்கம் நடப்பாண்டு ஏப்ரலில் 15.08 சதவீதமாகவும், கடந்தாண்டு மே மாதத்தில் 13.11 சதவீதமாகவும் இருந்தது என வணிக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

2. தேசிய தடகளம்: தமிழ்நாடு ஒட்டுமொத்த சாம்பியன்

சென்னையில் நடைபெற்ற 61–ஆவது தேசிய தடகளப் போட்டியில் தமிழ்நாடு ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. ஹரியானா, உத்தர பிரதேசம் முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தன.

<u>**மும்முறை தாண்டுதல்:**</u> சென்னை ஜவாஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி நாளான செவ்வாய்க்கிழமை ஆடவர் மும்முறை தாண்டுதலில் தமிழ்நாட்டு வீரர் பிரவீன் சித்ரவேல் 17.18 மீ தூரம் தாண்டி புதிய போட்டி சாதனையுடன் ஒரேகான் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்கும் தகுதி பெற்றார். கேரளத்தின் அப்துல்லா 17.14 மீ, எல்டோஸ் பால் 16.81 மீ தூரம் தாண்டி வெள்ளி, வெண்கலம் வென்றனர்.

<u>**200 மீ ஓட்டம்:**</u> மகளிர் பிரிவில் தமிழ்நாட்டு வீராங்கனை தனலட்சுமி 23.27 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கம் வென்றார். 100 மீ ஓட்டத்தில் தங்கம் வென்ற ஹிமாதாஸை பின்னுக்கு தள்ளினார் தனலட்சுமி. அஸ்ஸாமின் ஹிமாதாஸ் 23.29 விநாடிகளிலும், மகாராஷ்டிரத்தின் ஐஸ்வர்யா கைலாஷ் 23.72 விநாடிகளிலும் வந்து முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர். ஆடவர் பிரிவில் அஸ்ஸாம் வீரர் அமலன் போரோகைன் 21.00 விநாடிகளில் இலக்கை அடைந்து தங்கம் வென்றார். இவர் 100 மீ ஓட்டத்திலும் தங்கம் வென்றிருந்தார். கர்நாடகத்தின் அபின் தேவதிகா, மகாராஷ்டிரத்தின் இராகுல் இரமேஷ் முறையே வெள்ளி, வெண்கலம் வென்றனர்.

<u>**400 மீ தடை தாண்டுதல்:**</u> மகளிர் பிரிவில் தமிழ்நாட்டின் வித்யா இராம்ராஜ் 57.08 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கம் வென்றார். கேரளத்தின் அனு (58.99), ஆரத்தி (59.26) வெள்ளி, வெண்கலம் வென்றனர். ஆடவர் பிரிவில் கேரளத்தின் ஜபீர் பள்ளியாலில் 49.76 விநாடிகளில் இலக்கை அடைந்து முதலிடம் பிடித்தார். தமிழகத்தின் சந்தோஷ்குமார் (50.16), குஜராத்தின் தவால் மகேஷ் (50.55) வெள்ளி, வெண்கலம் வென்றனர்.

<u>**5000 மீ ஓட்டம்:**</u> மகளிர் பிரிவில் மகாராஷ்டிரத்தின் சஞ்சீவனி பாபுராவ் 16:11.46 நிமிஷத்தில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கம் வென்றார். ஷரதா ரஜினி (குஜராத்), சீமா (ஹிமாச்சலம்) முறையே வெள்ளி, வெண்கலம் வென்றனர். ஆடவர் பிரிவில் தில்லியின் ஹரேந்திர குமார் 14.01:50 நிமிஷத்தில் இலக்கை அடைந்து முதலிடம் பிடித்தார். இராஜஸ்தானின் அமித் ஜாங்கிர் வெள்ளியும், தர்மேந்தர் வெண்கலமும் பெற்றனர்.

<u>**சுத்தியெறிதல்:**</u> ஆடவர் பிரிவில் இராஜஸ்தானின் நீரஜ்குமார் 65.52 மீ தூரம் எறிந்து தங்கம் வென்றார். உத்தர பிரதேசத்தின் ஹர்வேந்திர சிங், பஞ்சாபின் தம்நீத் சிங் அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர். மகளிர் பிரிவில்

இராஜஸ்தானின் மஞ்சுபாலா (64.19 மீ), உத்தர பிரதேசத்தின் சரிதா சிங் (62.20 மீ), ஹரியானாவின் ரேணு (59.83 மீ) முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் வென்றனர்.

4–400 மீ தொடரோட்டம்: மகளிர் பிரிவில் சுமி, படேரி, நிஷா, சிம்மி ஆகியோர்கொண்ட ஹரியானா அணி முதலிடமும் (3:41.90 நிமிஷம்), சுமதி, ஒலிம்பா, ரோஷினி, சுபா ஆகியோர் அடங்கிய தமிழ்நாட்டு அணி 2ஆம் இடமும் (3:42.39), ஜஸ்மிலா, சயானா, லிங்கெட், ஆரத்தி ஆகியோர்கொண்ட கேரள அணி 3ஆமிடமும் (3:42.92) பிடித்தன. ஆடவர் பிரிவில் முகமது அஜ்மல், நாகநாதன் பாண்டி, மிஜோ சாக்கோ, ஆரோக்கிய ராஜிவ் அடங்கிய இந்தியா ஏ அணி, அருணா, தேஷன், லக்ஷன், நிகி அடங்கிய இலங்கை ஜே அணி, சித்தாப்பா, அபின், லக்ஷ்மண், நிஹால் அடங்கிய கர்நாடக அணி முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் வென்றன.

நீளம் தாண்டுதல்: மகளிர் பிரிவில் கர்நாடகத்தின் ஐஸ்வர்யா 6.60 மீ தூரம் குதித்து தங்கம் வென்றார். கேரளத்தின் ஆன்சி சோஜன் 6.49 மீ, ஸ்ருதி லட்சுமி 6.35 மீ தூரம் குதித்து வெள்ளி, வெண்கலம் வென்றனர்.

1. 2022–இல் இந்தியாவின் 'முதல் தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாட்டுக்குத்' தலைமை வகித்தவர் யார்?

அ. மத்திய உள்துறை அமைச்சர்

ஆ. பிரதமர் ☑

இ. மத்திய நிதி அமைச்சர்

ஈ. மத்திய பாதுகாப்பு அமைச்சர்

✓ ஜூன்.16, 17 ஆகிய தேதிகளில் தர்மசாலாவில் நடைபெறவுள்ள முதலாவது தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாட்டுக்குப் பிரதமர் தலைமை வகிக்கிறார். மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதை நோக்கிய முக்கிய நடவடிக்கையாக இந்த மாநாடு இருக்கும். தேசிய கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது, நகர்ப்புற நிர்வாகம், பயிர் மாற்றம் மற்றும் வேளாண் பொருட்களில் தன்னிறைவை அடைதல் ஆகிய மூன்று கருப்பொருட்கள்குறித்து விரிவான விவாதம் இம்மாநாட்டின்போது நடைபெறும்.

2. ஐநா அவையில் பயன்படுத்தப்படவுள்ள, 'வழி கண்டறியும் வடிவமைப்புக்கருவி' உருவாக்கப்போவதாக அறிவித்து உள்ள நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. ரஷ்யா

இ. இந்தியா ☑

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

✓ ஜெனீவாவில் உள்ள ஐநா அலுவலகத்தில் பயன்படுத்தப்படவுள்ள, 'வழி கண்டறியும் வடிவமைப்புக் கருவி' குறித்து இந்தியா–ஐநா இடையேயான ஒப்பந்த ஆலோசனைக்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ 'தேசங்களின் அரண்மனை' என்று வர்ணிக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க 21 அடுக்குகளைக் கொண்ட ஐநா அலுவலகம் ஜெனீவாவில் உள்ளது. பல்வேறு கூட்டங்கள், மாநாடுகள், போன்றவற்றில் பங்கேற்பதற்கு ஏராளமானோர் பிரதிநிதிகளாகவும், பார்வையாளர்களாகவும் வந்து சேர்கின்றனர். இந்தக் கட்டடத்தின் பல்வேறு அரங்குகளைக் கண்டறிவதில் உள்ள சிரமங்களைக் கணக்கில்கொண்டு எளிதாக ஒவ்வொரு தளத்திலும் உள்ள தனித்தனி அரங்குகள்பற்றிய விவரங்களை GPS அடிப்படையில் கண்டறிந்து செல்வதற்கான செயலி உருவாக்கப்பட் –டுள்ளது. 2 மில்லியன் அமெரிக்க டாலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள இந்தச் செயலியை உருவாக்கவும், பராமரிக்கவும் இந்தியா முன்வந்துள்ளது. இதன்படி, ஐநா'இன் 75ஆம் ஆண்டு விழாவையொட்டி, இந்தச் செயலியை உருவாக்குவதற்கான தொகையை இந்தியா நன்கொடையாக வழங்கியுள்ளது.

3. ஓர் அண்மைய அறிவிப்பின்படி, 5G அலைக்கற்றை எத்தனை ஆண்டுகளுக்கு ஏலம் விடப்படும்?

அ. 5

ஆ. 10

இ. 20 ☑

ஈ. 25

✓ 72 GHz அலைக்கற்றையை இருபதாண்டு காலத்திற்கு ஏலம் விடுவதற்கான தொலைத்தொடர்புத்துறையின் முன்மொழிவுக்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது குடிமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு 5ஜி சேவைகளை வழங்க வழிசெய்யும். 5ஜி சேவைகள் 4ஜியைவிட சுமார் 10 மடங்கு வேகமானதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. வாகனம், சுகாதாரம், வேளாண்மை, எரிசக்தி & இதர துறைகளில் இயந்திரங்கள் இடையேயான தகவல் பரிமாற்றம், இணைய உபகரணங்கள், AI முதலிய தொழிற்துறை 4.0 செயல்பாடுகளில் புதுமைகளை ஊக்குவிக்க தனியார் இணைப்புகளை உருவாக்கவும் அமைச்சரவை முடிவு செய்தது.

4. அண்மையில் உருவாக்கப்பட்ட, 'I2U2 குழுமத்தில்' கீழ்காணும் எந்தெந்த நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன?

அ. இந்தியா, ஈராக், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து

ஆ. இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து

இ. இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ☑

ஈ. இந்தியா, ஈராக், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம்

✓ இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் மேற்கு ஆசிய QUAD தலைவர்கள் முதலாவது மெய்நிகர் உச்சிமாநாட்டில் பங்கேற்கவுள்ளனர். இந்தக் கூட்டத்திற்கு வெள்ளை மாளிகை அழைப்பு விடுத்துள்ளது. இதன் சமயம் அமெரிக்க அதிபர் ஜோ பிடன் உரையாற்றுவார். அமெரிக்க அதிபர் ஜோ பிடன் மேற்கு ஆசியாவிற்கும் – இஸ்ரேல் மற்றும் சௌதி அரேபியாவிற்கு விஜயம் செய்கிறார். இந்தியா, இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அமெரிக்கா முதலிய நாடுகளை உள்ளடக்கிய இந்தப் புதிய குழுவிற்கு 'I2U2' என வெள்ளை மாளிகை பெயரளித்துள்ளது.

5. BIMSTEC தொழில்நுட்ப பரிமாற்ற மையம் அமைந்துள்ள இடம் எது?

அ. புது தில்லி

ஆ. டாக்கா

இ. கொழும்பு ☑

ஈ. ஜகார்த்தா

✓ இலங்கையின் கொழும்புவில் 2022 மார்ச்.30 அன்று நடைபெற்ற 5ஆவது BIMSTEC உச்சிமாநாட்டில், BIMSTEC தொழில்நுட்ப பரிமாற்ற மையத்தை, கொழும்புவில் இந்தியா நிறுவுவதற்கு BIMSTEC உறுப்புநாடுகளால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு நடுவண் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

✓ தொழில்நுட்ப பரிமாற்றம், அனுபவப் பகிர்வு, திறன் கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்த BIMSTEC உறுப்பு நாடுகளிடையே, தொழில்நுட்பத்தை பரிமாற்றஞ்செய்வதை ஒருங்கிணைப்பது, ஒத்துழைப்பை வலுப்படுத்துவது ஆகியவை BIMSTEC தொழில்நுட்ப பரிமாற்ற வசதியின் நோக்கமாகும்.

6. பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டமானது (PMEGP) எந்த ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது?

அ. 2023-24

ஆ. 2024-25

இ. 2025-26 ☑

ஈ. 2026-27

✓ பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டம் (PMEGP) 2025–26 வரை தொடர ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது, இதன் மொத்தச் செலவு ₹13,554.42 கோடியாகும். இத்திட்டத்தின் நீட்டிப்பு 2021–22 முதல் 2025–26 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு 15ஆவது நிதி ஆணைய சுழற்சியின்கீழ் வந்துள்ளது. ஐந்து நிதியாண்டுகளில் சுமார் 40 இலட்சம் பேருக்கு நிலையான வேலைவாய்ப்புகளை இத்திட்டம் உருவாக்கும். இது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது.

7. இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கையின்படி, முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது, 2021–22இல் கள்ள இந்தியப் பணத்தாள்களின் போக்கு என்னவாக இருந்தது?

அ. அதிகரித்தது ☑ ஆ. குறைந்துள்ளது

இ. அப்படியே உள்ளது ஈ. கணக்கிடப்படவில்லை

- ✓ இந்திய ரிசர்வ் வங்கியானது RBI ஆண்டறிக்கை 2021–22–ஐ வெளியிட்டது. அறிக்கையின்படி, வங்கித்துறையில் கண்டறியப்பட்ட அனைத்து வகை கள்ள இந்தியப் பணத்தாள்களின் மொத்த எண்ணிக்கை 2,30,971ஆக அதிகரித்–துள்ளது. ₹10, ₹20, ₹200, ₹500, ₹2000 பணத்தாள்கள் முறையே 16.4%, 16.5%, 11.7%, 101.9% மற்றும் 54.6% அதிகரித்துள்ளது. 2021–2022–இல் பணத்தாள் அச்சடிப்பிற்கான மொத்தச்செலவு, முந்தைய ஆண்டிலிருந்த ₹4,012.1 கோடியிலிருந்து ₹4,984.8 கோடியாக அதிகரித்துள்ளது.

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற எட்டாலின் நீர்மின்திட்டம் அமையவுள்ள மாநிலம்/UT எது?

அ. பஞ்சாப்

ஆ. அருணாச்சல பிரதேசம் ☑

இ. இராஜஸ்தான்

ஈ. கேரளா

- ✓ எட்டாலின் நீர்மின்திட்டம் அருணாச்சல பிரதேச மாநிலத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 3,097 MW மின் உற்பத்தித் திறனுடைய இந்தத் திட்டத்திற்கு 1100 ஹெக்டேர்களுக்கு மேல் வன நிலம் மற்றும் 280,000 மரங்களை வெட்ட வேண்டும். அருணாச்சல பிரதேச மாநிலத்தின் வனவுயிர் ஆய்வாளர்கள் மற்றும் பாதுகாவலர்கள் இந்தத் திட்டத்தால் உள்ளூர் பல்லுயிர் பெருக்கத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்து மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வன ஆலோசனைக் குழுவிற்கு கடிதம் எழுதியுள்ளனர்.

9. 'இராஜீவ் காந்தி கேல் இரத்னா விருது' மற்றும் 'இராஜீவ் காந்தி ஊரக ஒலிம்பிக்' ஆகியவற்றை அறிவித்த மாநிலம் எது?

அ. சத்தீஸ்கர்

ஆ. இராஜஸ்தான் ☑

இ. பஞ்சாப்

ஈ. மணிப்பூர்

राजस्थान सरकार
GOVERNMENT OF RAJASTHAN
सत्यमेव जयते

- ✓ இராஜஸ்தான் மாநிலத்தின் விளையாட்டு வீரர்களுக்கு இராஜீவ் காந்தி கேல் இரத்னா விருது அறிமுகப்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் அசோக் கெலாட் அறிவித்துள்ளார். 'இராஜீவ் காந்தி ஊரக ஒலிம்பிக்' 2022 ஆகஸ்ட் முதல் தொடங்கும் என்றும், அனைத்து வயதுக்குட்பட்ட 27 லட்சத்துக்கும் அதிகமான வீரர்கள் இதில் பங்கேற்பார்கள் என்றும் முதலமைச்சர் கூறினார். இராஜஸ்தான் மாநில உயர் செயல்திறன் விளையாட்டு மற்றும் மறுவாழ்வு மையத்தையும் அவர் திறந்து வைத்தார்.

10. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற இளவேனில் வாலறிவன், ஸ்ரேயா அகர்வால் மற்றும் ரமிதா ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. மல்யுத்தம்

ஆ. துப்பாக்கிச் சுடுதல் ☑

இ. வாள்சண்டை

ஈ. படகோட்டம்

- ✓ 2022 – ISSF உலகக்கோப்பையில் 10 மீ 'ஏர் ரைபிள்' பெண்கள் குழு போட்டியில் இளவேனில் வாலறிவன், ஸ்ரேயா அகர்வால் மற்றும் இரமிதா ஆகியோரைக்கொண்ட இந்திய பெண்கள் துப்பாக்கிச் சுடுதல் அணி, இந்தியாவுக்காக தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது. அஜர்பைஜான் தலைநகரம் பாகுவில் நடைபெற்ற ISSF உலகக்கோப்பையில் இந்தியா வென்ற முதல் பதக்கம் இதுவாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மொழி, உரிமைகளுக்கு ஏற்ற வகையில் மாநில கல்விக் கொள்கை: நீதிபதி முருகேசன்

மொழி, உரிமைகளுக்கு ஏற்ற வகையில் மாநில கல்விக்கொள்கை வடிவமைக்கப்படும் எனக் குழுவின் தலைவரும் ஓய்வுபெற்ற நீதிபதியுமான த முருகேசன் கூறினார்.

மாநில கல்விக்கொள்கை வடிவமைப்பு தொடர்பான ஓய்வுபெற்ற நீதிபதி முருகேசன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினருடன் முதல்வர் மு க ஸ்டாலின் சில ஆலோசனைகளை வழங்கினார். ஆலோசனைக் கூட்டத்துக்குப்பிறகு நீதிபதி முருகேசன் செய்தியாளர்களிடம் கூறியது: முதல் ஆலோசனைக்கூட்டத்தில் அனைத்தையும் கேட்டறிந்தோம். இதையடுத்து வேலைவாய்ப்புக்கு ஏற்ற பாடத்திட்டம், பாடத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு தனித்தனியாக துணைக் குழுக்கள் அமைக்கப்படும். இந்தக் குழுவினா் நேரடியாக பள்ளி, கல்லூரிகளுக்கு சென்று அவா்கள் கூறக்கூடிய கருத்துகளையும் கேட்டு பதிவு செய்வாா்கள். பள்ளிக்கல்வி, உயா்கல்வி, தொழிற்கல்வி என அனைத்தும் மேம்பட கூடிய வகையில் இந்த அறிக்கையைத் தயாரிக்கவுள்ளோம். மொழி, உரிமைகளுக்கு ஏற்ற வகையில் புதிய கல்விக் கொள்கை அமையும் என்றார் அவர்.

---

2. தொழிற்துறையினருக்கு சேவைகள் அளிக்க தனி இணையதளம் தொடக்கம்

தொழில்துறையினர் உள்பட பல்வேறு தரப்பினருக்கான தேவைகள், பிரச்னைகளுக்குத் தீர்வுதர தனி இணைய தளம் (www.valar.tn.gov.in) தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்ட 'வளர் 4.0' என்ற இணையதளத்தை குறு, சிறு & நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா மோ அன்பரசன், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் த மனோ தங்கராஜ் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி: மாநிலத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் திறனை மேம்படுத்தவும், உற்பத்தியைப் பெருக்கவும், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவும், கருத்துகளைப் பரிமாறவும், பிரச்னைகள் மற்றும் சவால்களுக்குத் தீர்வுகாணவும் 'வளர் 4.0' என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள், சேவை வழங்குநர்களின் விவரங்கள், திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கும். இந்த இணையதளத்தில் தொழில் துறையினர், சேவை வழங்குநர்கள், கல்வி நிறுவனங்கள், உணவு பதப்படுத்துதல், மென்பொருள், வன்பொருள் மற்றும் பொருள்களின் தொகுப்புத் தேவைகள் போன்ற பல்வேறு பிரச்னைகள், சிக்கல்கள் மற்றும் சவால்களுக்கு யோசனைகள், தீர்வுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

279 சேவைகள், 20 திட்டங்கள் மற்றும் 389 நிபுணர்களின் விவரங்கள் இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த இணையதளத்தை தமிழ்நாடு மின்னாளுமை முகமையானது, இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் துணையுடன் வடிவமைத்து உருவாக்கியுள்ளது.

---

3. வேலையின்மை விகிதம் 4.2%–ஆக குறைந்தது

வேலையின்மை விகிதம் கடந்த 2020–21–இல் 4.2 சதவீதமாக குறைந்துள்ளதாக மத்திய அரசின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் வெளியிட்ட காலமுறை தொழிலாளர் திறன் கணக்கெடுப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொருளாதாரச் சீர்குலைவை ஏற்படுத்திய கரோனா பேரிடருக்கு மத்தியில் ஜூன் 2020–ஜூன் 2021 ஆண்டில் நாட்டில் வேலையின்மை விகிதம் 4.2 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய ஆண்டில் 4.8 சதவீதமாக காணப்பட்டது. மேலும், 2018–19–இல் வேலையின்மை விகிதம் 5.8 சதவீதமாகவும், 2017–18–இல் 6 சதவீதமாகவும் அதிகரித்து காணப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. 'பிலிபித் புலிகள் பாதுகாப்பு அறக்கட்டளை'யை அமைக்க ஒப்புதல் அளித்துள்ள மாநிலம் எது?

அ. உத்தரகாண்ட்

ஆ. உத்தர பிரதேசம் ☑

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. சிக்கிம்

✓ வனவுயிரி (பாதுகாப்பு) சட்டம், 1972இன் விதிகளின்கீழ் பிலிபித் புலி பாதுகாப்பு அறக்கட்டளையை அமைப்பதற்கான முன்மொழிவுக்கு உத்தரபிரதேச அமைச்சரவை ஒப்புதலளித்தது. மாநிலத்தின் முதல் முன்மொழியப்பட்ட மருத்துவச் சாதனப் பூங்காவில் அலகுகளை அமைப்பதற்கு ஊக்கத்தொகை வழங்க அமைச்சரவை முடிவுசெய்தது. பண்டித தீன தயாள் உபாத்யாய கிஸ்ஸான் சம்ருதி யோஜனா திட்டத்தை 2026–27 வரை மாநிலத்தில் செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

2. 2022 – உலகப் போட்டித்தன்மைக் குறியீட்டெண்ணில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ. 97

ஆ. 68

இ. 54

ஈ. 37 ☑

✓ மேலாண்மை மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் தொகுக்கப்பட்ட வருடாந்திர உலகப் போட்டித்தன்மைக் குறியீடு அண்மையில் வெளியிடப்பட்டது. ஆசியப் பொருளாதாரங்களில் இந்தியா மிகக்கூர்மையான உயர்வைப் பதிவு செய்துள்ளது; பொருளாதாரச் செயல்திறனில் ஏற்பட்ட ஆதாயங்களால் குறியீட்டில் 6 இடங்கள் முன்னேறி 43ஆவது இடத்தில் இருந்த இந்தியா 37ஆவது இடத்திற்கு சென்றுள்ளது.

✓ சிங்கப்பூர், ஹாங்காங், தைவான் மற்றும் சீனா ஆகியவை ஆசியப்பொருளாதாரத்தில் சிறந்து விளங்கின. டென்மார்க் முதலிடத்திலும், சுவிச்சர்லாந்து முதலிடத்திலிருந்து இரண்டாவது இடத்துக்கும் தள்ளப்பட்டது.

3. 'அக்னிவீரர்களுக்கு' திறனடிப்படையிலான இளங்கலை பட்டப்படிப்பை வழங்குகிற நிறுவனம் எது?

அ. ஐஐடி மெட்ராஸ்

ஆ. IGNOU ☑

இ. AICTE

ஈ. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்

✓ கல்வி அமைச்சகம், 'அக்னிவீரர்களுக்கான' சிறப்பு 3 ஆண்டு திறன் அடிப்படையிலான இளங்கலை பட்டப்படிப்பை தொடங்குவதாக அறிவித்தது. இந்திரா காந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகம் (IGNOU) வழங்கும் பட்டப்படிப்பு வேலைவாய்ப்பு மற்றும் கல்விக்காக இந்தியாவிலும் வெளிநாட்டிலும் அங்கீகரிக்கப்படும். புதிதாகத் தொடங்கப்பட்ட 'அக்னிபத்' திட்டத்தின்கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாதுகாப்புப் பணியாளர்கள் 'அக்னிவீரர்கள்' ஆவர்.

4. அணுவாயுதம் தாங்கிச்செல்லும் பிருத்வி–II ஏவுகணையை உருவாக்கிய அமைப்பு எது?

அ. போயிங்

ஆ. DRDO ☑

இ. HAL

ஈ. டஸ்ஸால்ட் ஏவியேஷன்

✓ இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, அணுவாயுதங்களை தாங்கிச் செல்லும் திறன்கொண்ட பிருத்வி–II ஏவுகணையை ஒடிஸா கடற்கரையில் உள்ள சோதனை வரம்பிலிருந்து வெற்றிகரமாக சோதனைசெய்தது. இந்த ஏவுகணையை இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கியுள்ளது. இது சுமார் 250 கிமீ தூரம் செல்லும் மற்றும் ஒரு டன் பேலோடை சுமந்து செல்லக்கூடியது.

✓ 4,000 கிமீ தூரம் வரை செல்லக்கூடிய இடைநிலை ஏவுகணையான அக்னி–IV–ஐ இந்தியா பரிசோதித்த பத்து நாட்களுக்குப் பிறகு இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5. 2021–22ஆம் ஆண்டில் நாட்டின் ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதிக்கு சிறந்த ஏற்றுமதி இடமாக இருந்த நாடு எது?

அ. ஐக்கிய அரபு அமீரகம்

ஆ. அமெரிக்கா ☑

இ. சீனா

ஈ. சிங்கப்பூர்

✓ 2021–22 நிதியாண்டில் $44.4 பில்லியன் டாலர்களாக இந்தியா இதுவரை இல்லாத அளவுக்கு ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதியை பதிவுசெய்துள்ளது. கைவினைப்பொருட்கள் உள்ளிட்ட ஏற்றுமதிகள் 2020–21 நிதியாண்டு தொடர்புடைய புள்ளிவிவரங்களைவிட 41 சதவீதம் அதிகரித்துள்ளது. நாட்டின் ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதியில் 27 சதவீத பங்குகளுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் (18%), வங்காளதேசம் (12%) மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (6%) ஆகியவை உள்ளன.

6. 2022–இல் தகவல் சமூக மன்றம் குறித்த உலக உச்சிமாநாடு நடைபெறும் இடம் எது?

அ. நியூயார்க்

ஆ. ஜெனிவா ☑

இ. பாரிஸ்

ஈ. டாவோஸ்

✓ 2022 – தகவல் சமூக (WSIS) மன்றம் குறித்த உலக உச்சிமாநாடானது 2022 மார்ச்.15 முதல் மெய்நிகர் வடிவத்தில் தொடங்கி நடந்து வருகிறது. இறுதி வார நிகழ்வு 2022 மே.30 முதல் ஜூன்.3 வரை சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள ITU தலைமையகத்தில் நடைபெற்றது. 'ICTs for Well–Being, Inclusion and Resilience: WSIS Cooperation for Accelerating Progress on the SDGs' என்ற கருப்பொருளின் கீழ் இந்த மன்றம் நடைபெற்றது. WSIS மன்றம் குறித்த மாநாடு ITU, UNESCO, UNDP மற்றும் UNCTAD ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

7. அண்மையில் இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் விஜயம் செய்த லிப்ரேவில் என்பது கீழ்க்காணும் எந்த நாட்டின் தலைநகரமாகும்?

அ. செனகல்

ஆ. காபோன் ☑

இ. கினியா

ஈ. கேமரூன்

✓ இந்தியத்துணைக்குடியரசுத்தலைவர் M வெங்கையா காபோன், செனகல் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தியத் துணைக்குடியரசுத் தலைவர் அளவில் இந்தியாவிலிருந்து இந்த 3 நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் முதல் பயணம் இதுவாகும். லிப்ரேவில் என்பது மத்திய–ஆப்பிரிக்க நாடான காபோனின் தலைநகரமாகும். காபோனின் நம்பகமான கூட்டாளராக இருப்பதற்கான இந்திய அரசின் உறுதி நிலைப்பாட்டை இந்தியத் துணைக்குடியரசுத் தலைவர் அப்போது வலியுறுத்தினார். இவ்விருநாடுகளுக்கு இடையேயான இருதரப்பு வர்த்தகம் 2021–22–இல் $1.12 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.

8. இந்தியாவின் முதல் லாவெண்டர் திருவிழாவை நடத்திய மாநிலம்/UT எது?

அ. சிக்கிம்

ஆ. நாகாலாந்து

இ. ஜம்மு காஷ்மீர் ☑

ஈ. அருணாச்சல பிரதேசம்

✓ மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், ஜம்மு–காஷ்மீர் மாநிலம் பதேர்வாவில் வைத்து இந்தியாவின் முதல் லாவெண்டர் திருவிழாவை தொடங்கி வைத்தார். தோடா மாவட்டத்தில் உள்ள பதேர்வா 'ஊதா புரட்சி'யின் பிறப்பிடமாகும்; மேலும் அது நிலம் மற்றும் காலநிலை அடிப்படையில் லாவெண்டர் சாகுபடிக்கு பெயர்பெற்றதாகும். CSIR–Aroma Mission, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ், நறுமணம் தொடர்பான அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உழவர்கள், தொழிற்துறை மற்றும் சமூகத்தை சென்றடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

9. பசிபிக் பருவத்தின் முதல் புயலான, 'அகதா' சமீபத்தில் எந்த நாட்டைத் தாக்கியது?



அ. கனடா

ஆ. மெக்ஸிக்கோ ☑

இ. டென்மார்க்

ஈ. ஜப்பான்

✓ பசிபிக் பருவத்தின் முதல் புயலான, 'அகதா' மெக்ஸிக்கோவைத் தாக்கியது. இதன்காரணமாக தெற்கு மெக்சிகோவில் குறைந்தது 10 பேராவது இறந்திருப்பர். மேலும் பொழிந்த கனமழையால் அந்த நாட்டில் நிலச்சரிவு மற்றும் வெள்ளம் ஏற்பட்டது. 1949இல் பதிவு செய்தல் தொடங்கியதிலிருந்து மே மாதத்தில் மெக்ஸிக்கோவின் பசிபிக் கரையோரத்தில் நிலச்சரிவை ஏற்படுத்திய மிகவும் வலிமையான புயல் இதுவாகும். மெக்ஸிக்கோ அதன் பசிபிக் மற்றும் அட்லாண்டிக் கடற்கரைகளின் காரணமாக மே மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் வெப்பமண்டலப் புயல்களால் தொடர்ந்து தாக்கப்படுகிறது.

10. உலகின் அதிவேக சூப்பர் கம்ப்யூட்டரான 'பிரான்டியர் – Frontier'ஐ உருவாக்கிய நாடு எது?

அ. அமெரிக்கா ☑

ஆ. ரஷ்யா

இ. சீனா

ஈ. இஸ்ரேல்

✓ லின்மார்க் பெஞ்ச்மார்க் ஸ்கோரான 1.1 எக்ஸாபிளாப்ஸ்கொண்ட உலகின் சக்திவாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்களின் டாப் 500 பட்டியலின்படி, 'பிரான்டியர்' உலகின் அதிவேக சூப்பர் கம்ப்யூட்டராக மாறியுள்ளது. இது Hewlett Packard Enterprise (HPE) கட்டமைப்பைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு சூப்பர் கம்ப்யூட்டர் ஆகும். அட்வான்ஸ்டு மைக்ரோ டிவைஸஸின் (AMD) செயலிகளை இது கொண்டுள்ளது. இது RIKEN மற்றும் Fujitsu லிட் இணைந்து உருவாக்கிய ஜப்பானின் சூப்பர் கம்ப்யூட்டரான 'Fugaku'ஐ விட திறன் மிகுந்ததாகும். இந்தக் கணினி 2020–இல் சூப்பர் கம்ப்யூட்டர் தரப்படுத்தல் குறியீட்டில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'அக்னிபத்' திட்டம்: நுழைவு வயது நீட்டிப்பு

'அக்னிபத்' திட்டம் தொடங்கப்பட்டுள்ளதையடுத்து, ஆயுதப்படைகளில் புதிதாகப் பணியமர்த்தப்படுவோருக்கான நுழைவு வயது 17½ – 21 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஈராண்டுகளில் பணியமர்த்தலை மேற்கொள்ள இயலாத காரணத்தால், 2022ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டுள்ள பணியமர்த்தல் சுழற்சிக்கு ஒருமுறை விலக்கு அளிக்கப்படும் என்று அரசு முடிவு செய்துள்ளது. எனவே, 2022–ஆம் ஆண்டிற்கான 'அக்னிபத்' திட்டத்தின் கீழ் பணியமர்த்தல் நடைமுறைக்கான அதிகபட்ச வயது வரம்பு 23–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

---

2. தமிழ்நாட்டில் புதிதாக 20 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்: முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

காவல்துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், அனைத்து உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 20 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை தமிழ்நாட்டு முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார்.

கடந்த 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல்துறையில் முதன்முதலில் மகளிர் காவல் பணியில் நியமிக்கப்பட்டனர். சட்டம் – ஒழுங்கைப் பராமரித்தல், குற்றங்களைத் தடுத்தல் மற்றும் கண்டறிதல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பணிகளில் மகளிர் காவல் துறையினர் திறம்பட செயலாற்றி வருகின்றனர். தற்போது மாநிலத்தில் 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படுகின்றன.

புதிதாக திறக்கப்பட்ட மகளிர் காவல் நிலையங்கள்:

சென்னை பெருநகர காவல் ஆணையரகத்திற்குட்பட்ட வளசரவாக்கம்.

தாம்பரம் மாநகரம் – சேலையூர், ஆவடி மாநகரம் – எஸ்ஆர்எம்சி.

தாம்பரம் மாநகரம் – வண்டலூர்.

வேலூர் மாவட்டம் – காட்பாடி; திருவண்ணாமலை மாவட்டம் – திருவண்ணாமலை ஊரகம்.

கடலூர் மாவட்டம் – திட்டக்குடி; கரூர் மாவட்டம் – கரூர் ஊரகம்; புதுக்கோட்டை மாவட்டம் – கோட்டைப்பட்டினம்.

தஞ்சாவூர் மாவட்டம் – ஒரத்தநாடு; திருவாரூர் மாவட்டம் – முத்துப்பேட்டை.

கோயம்புத்தூர் மாவட்டம் – மேட்டுப்பாளையம்; ஈரோடு மாவட்டம் – பெருந்துறை.

கிருஷ்ணகிரி மாவட்டம் – ஊத்தங்கரை; மதுரை மாவட்டம் – ஊமச்சிக்குளம்; திண்டுக்கல் மாவட்டம் – திண்டுக்கல் ஊரகம்; தேனி மாவட்டம் – பெரியகுளம்; இராமநாதபுரம் மாவட்டம் – முதுகுளத்தூர்; திருநெல்வேலி மாவட்டம் – சேரன்மாதேவி; தென்காசி மாவட்டம் – புளியங்குடி.

---

1. 2022 – தொழிற்துறையில் கரியமலவாயு வெளியேற்றத்தை நிறுத்துவதற்கான உச்சிமாநாடு நடைபெறும் இடம் எது?

அ. புது தில்லி ☑

ஆ. மும்பை

இ. காந்தி நகர்

ஈ. டேராடூன்

✓ மத்திய சாலைப்போக்குவரத்து & நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி, புது தில்லியில் 'தொழிற்துறையில் கரியமலவாயு வெளியேற்றத்தை நிறுத்துவதற்கான உச்சிமாநாடு – 2022'ஐத் தொடங்கி வைத்தார். 2070–க்குள் கரியமலவாயு வெளியேற்றத்தை முற்றிலும் தடுப்பதற்கான செயல் திட்டத்தில் இது கவனஞ்செலுத்தியது.

✓ வாழ்க்கைச்சூழல், சுற்றுச்சூழல், வளர்ச்சி ஆகியவற்றிற்கிடையே சமநிலையை பராமரிப்பது குறித்து அமைச்சர் நிதின் கட்கரி வலியுறுத்தினார். பசுமை ஹைட்ரஜன் நமது முன்னுரிமை எனக்கூறிய அவர், உயிரித்தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதன்மூலம் உயிரின உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியும். இதன்மூலம் நாம் உயிரி–எத்தனால், உயிரி திரவ எரிவாயு, உயிரி – அழுத்தப்பட்ட எரிவாயு ஆகியவற்றை உருவாக்க முடியும் என்றார்.

2. 2022 –உலகளாவிய போக்குகள் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. UNEP

ஆ. UNHCR ☑

இ. WEF

ஈ. IMF

✓ ஐநா'இன் அகதிகள் முகமையான UNHCR ஆனது '2022 – உலகளாவிய போக்குகள் அறிக்கையை' வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, உலகளவில் 100 மில்லியன் மக்கள் தற்போது தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திலுள்ளனர். UNHCR ஆனது உலகளாவிய உணவுப் பாதுகாப்பின்மை, காலநிலை நெருக்கடி, உக்ரைனில் போர் மற்றும் ஆப்பிரிக்காவிலிருந்து ஆப்கானிஸ்தான் வரையிலான பிற அவசரநிலைகளை முக்கிய காரணங்களாக எடுத்துக்காட்டியுள்ளது.

✓ இவ்வறிக்கையின்படி, 2021ஆம் ஆண்டின் இறுதியில், போர், வன்முறை, துன்புறுத்தல் மற்றும் மனித உரிமை மீறல்களால் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 89.3 மில்லியனாக இருந்தது.

3. 2022–இல் SCO–இன் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் (SCO–RATS) கூட்டத்தை நடத்தும் நாடு எது?

அ. சீனா

ஆ. இந்தியா ☑

இ. வங்காளதேசம்

ஈ. பாகிஸ்தான்

✓ SCO–RATS–இன் தலைவராக இந்தியா SCO–இன் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் (SCO–RATS) கூட்டத்தை நடத்தியது. பயங்கரவாத அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட பாதுகாப்பு சவால்கள் குறித்து விவாதிப்பதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும். சீனா, பாகிஸ்தான் மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) மற்ற உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் புதுதில்லியில் நடந்த இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். 2022 மேயில் SCO நாடுகளின் பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்களின் கூட்டத்தை இந்தியா நடத்தியது.

4. ஐரோப்பாவின் மிகப்பெரிய துளிர் நிறுவல்கள் மாநாடான விவாடெக்கில் ஆண்டின் சிறந்த நாடாக அங்கீகாரம் பெற்ற நாடு எது?

அ. சீனா

ஆ. இந்தியா ☑

இ. பிரான்ஸ்

ஈ. அமெரிக்கா

✓ ஐரோப்பாவின் மிகப்பெரிய துளிர் நிறுவல்கள் மாநாடான விவாடெக், இந்தியாவை 'ஆண்டின் சிறந்த நாடு' என்று அங்கீகரித்துள்ளது. மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், விவாடெக் தொழில்நுட்ப கண்காட்சியில் இந்திய அரங்கினை திறந்து வைத்தார். இந்தியாவில் இருந்து சுமார் 65 துளிர் நிறுவனங்கள் இம்மாநாட்டில் அரசாங்க ஆதரவுடன் பங்கேற்கின்றன.

5. ஆண்டுதோறும் செலவுப் பணவீக்கக் குறியீட்டை (CII) அறிவிக்கிற நிறுவனம்/துறை எது?

அ. இந்திய ரிசர்வ் வங்கி

ஆ. மத்திய நேரடி வரிகள் வாரியம் ☑

இ. தேசிய புள்ளியியல் அலுவலகம்

ஈ. பொருளாதார விவகாரங்கள் துறை

सत्यमेव जयते

✓ மத்திய நேரடி வரிகள் வாரியமானது சமீபத்தில் 2022-23 நிதியாண்டுக்கான செலவுப்பணவீக்கக் குறியீட்டை (CII) 331 என அறிவித்தது. முந்தைய ஆண்டிற்கு (2021-22 நிதியாண்டு) CII 317 ஆக அறிவிக்கப்பட்டது. CII ஆனது சொத்தின் பணவீக்கம்-சரிகட்டப்பட்ட செலவு விலையைக் கணக்கிட பயன்படுத்தப்படுகிறது. இந்த அறிவிப்பு, மதிப்பீட்டு ஆண்டு 2023-24 மற்றும் எதிர்கால ஆண்டுகளுக்குப் பொருந்தும்.

6. 2022 ஜூன் முதல், ஐநா அவையால் அறிவிக்கப்பட்ட துருக்கியின் புதிய பெயர் என்ன?

அ. துருக்கியே ☑

ஆ. டர்க்கி

இ. டிரக்கி

ஈ. துர்க்

✓ அனைத்து மொழிகளிலும் 'துருக்கியே' என அழைக்க முற்படும் துருக்கியின் அதிகாரப்பூர்வ கோரிக்கையை ஐநா அவை பெற்றது. இந்த மாற்றம் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்று ஐநா தலைமைச் செய்தித் தொடர்பாளர் அறிவித்தார். கடந்த சில ஆண்டுகளாக, துருக்கி தனது தயாரிப்புகளில், 'மேட் இன் துருக்கி' என்பதற்கு மாறாக 'மேட் இன் துருக்கியே' எனப் பிராண்டிங் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

7. 2022 – GLOBSEC மன்றம் நடத்தப்படுகிற நாடு எது?

அ. சுலோவாக்கியா ☑

ஆ. செக் குடியரசு

இ. ருவாண்டா

ஈ. கானா

- ✓ வெளியுறவுத்துறை அமைச்சர் Dr S ஜெய்சங்கர் ஐந்து நாள் பயணமாக சுலோவாக்கியா மற்றும் செக் குடியரசிற்கு சென்றுள்ளார். அவர் சுலோவாக்கியாவில் நடைபெறும் 'GLOBSEC–2022' மன்றத்தில் கலந்துகொண்டு, 'நட்பை அடுத்த நிலைக்கு எடுத்துச்செல்வது: இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் நட்பு நாடுகள்' என்ற தலைப்பில் பேசவுள்ளார்.
- ✓ 'GLOBSEC–2022' மன்றத்தின் ஒருபுறம் அவர் ஆஸ்திரியாவின் ஐரோப்பிய மற்றும் சர்வதேச விவகார அமைச்சர் அலெக்சாண்டர் ஷாலன்பெர்க்கை சந்திக்கவுள்ளார். அடுத்த மாதம் முதல் செக் குடியரசு ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்கவுள்ளது.

8. ஆண்டுதோறும், 'உலக மிதிவண்டி நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஜூன்.01

ஆ. ஜூன்.02

இ. ஜூன்.03 ☑

ஈ. ஜூன்.04

- ✓ உலக மிதிவண்டி நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.3 அன்று கொண்டாடப்படுகிறது. உடல் மற்றும் மன நலத்தை வலுப்படுத்துவதில் மிதிவண்டியின் பங்குகுறித்து எடுத்தியம்பும் நோக்கில் இந்நாள் கொண்டாடப்படுகிறது. மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், 2022 உலக மிதி வண்டி நாளையொட்டி, தில்லியில் உள்ள மேஜர் தியான் சந்த் மைதானத்தில் இருந்து நாடு தழுவிய, 'கட்டுடல் இந்தியா பிரீடம் ரைடர் சைக்கிள் பேரணியை'த் தொடங்கி வைத்தார்.

9. "Appreciate all parents throughout the world" என்பது ஜூன்.01 அன்று கடைப்பிடிக்கப்பட்ட எந்த நாளின் கருப்பொருளாகும்?

அ. உலகளாவிய பெற்றோர் நாள் ☑

ஆ. உலக மிதிவண்டி நாள்

இ. உலக பூமி நாள்

ஈ. உலக காற்று நாள்

- ✓ தங்கள் குழந்தைகளுக்கான பெற்றோர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டுவதற்காக ஆண்டுதோறும் ஜூன்.1ஆம் தேதி உலகப் பெற்றோர் நாள் கொண்டாடப்படுகிறது. ஐநா பொதுச்சபையானது 1994ஆம் ஆண்டை சர்வதேச குடும்ப ஆண்டாகவும், ஒவ்வோர் ஆண்டும் மே.15ஆம் தேதியை சர்வதேச குடும்பங்களின் நாளாகவும் அறிவித்தது. UNGA, பின்னர் ஜூன்.1ஆம் தேதி உலகளாவிய பெற்றோர் நாளாக அனுசரிக்கப்படும் என்று அறிவித்தது. 2022ஆம் ஆண்டுக்கான உலகப் பெற்றோர் நாளின் கருப்பொருள், "Appreciate all parents throughout the world" என்பதாகும்.

10. இந்தியாவின் முதல் திரவ–கண்ணாடி தொலைநோக்கி அமைக்கப்பட்டுள்ள மாநிலம்/UT எது?

அ. சிக்கிம்

ஆ. ஜம்மு காஷ்மீர்

இ. உத்தரகாண்ட் ☑

ஈ. ஹிமாச்சல பிரதேசம்

- ✓ இந்தியாவின் முதல் திரவ–கண்ணாடி தொலைநோக்கியான சர்வதேச திரவக்கண்ணாடி தொலைநோக்கி (ILMT) உத்தரகாண்ட் மாநிலம் நைனிடாலில் அமைந்துள்ள ஆரியபட்டா ஆய்வு அறிவியல் கழகத்தின் (ARIES) தேவஸ்தல ஆய்வகத்தின் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தொலைநோக்கி இமயமலையில் 2,450 மீட்டர் உயரத்தில் இருந்து சிறுகோள்கள், சூப்பர்நோவாக்கள், விண்வெளிக்குப்பைகள் மற்றும் பிற அனைத்து விண்பொருட்களையும் கண்காணிக்கும். உலகளவில் வானியல் நோக்கங்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட முதல் திரவ–கண்ணாடித் தொலைநோக்கி இதுவாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஆதார்–வாக்காளர் அட்டை இணைப்பு: அரசாணை வெளியீடு

வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதாரை இணைப்பதற்கான விதிமுறைகள் அடங்கிய அரசாணையை மத்திய அரசு வெளியிட்டது. கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் சட்டத்திருத்தத்தின்படி, நான்கு அரசாணைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையின்படி இந்த அரசாணைகளை வெளியிட்டுள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு கீச்சகத்தில் தெரிவித்துள்ளார்.

வாக்காளராக பதிவுசெய்ய வருபவர்களிடம் தேர்தல் அதிகாரிகள் ஆதார் அடையாள அட்டையைக் காண்பிக்க கோருவதற்கு இந்தப் புதிய சட்டத்திருத்தம் அனுமதியளிக்கிறது. வாக்காளர்களின் பெயர் வேறிடங்களிலும் பதிவுப் பெற்றுள்ளதா என்பதை உறுதி செய்யவும் சம்பந்தப்பட்டவர்களிடம் ஆதார் அடையாள அட்டையைக் கோருவதற்கும் அனுமதியளிக்கிறது. எனினும், ஆதார் அடையாள அட்டை இல்லை என்ற காரணத்தால் மட்டும் வாக்காளர் பதிவை நிராகரிக்கக்கூடாது என்றும் சட்டத்திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேபோல், வாக்காளர் பட்டியலில் ஆண்டுக்கு நான்கு முறை பெயர்களைச் சேர்க்கலாம் என்ற அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 18 வயதை பூர்த்தி செய்தவர்கள் ஒரே ஆண்டில் ஜன.1, ஏப்ரல் 1, ஜூலை 1, அக்டோபர் 1 ஆகிய தேதிகளில் தங்கள் பெயர்களைச் சேர்த்துகொள்ளலாம். முன்பு ஜன.1–ஆம் தேதி மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தது.

இதேபோல், வெளிநாடு அல்லது இராணுவத்தில் அரசுப்பணியாற்றும் தம்பதியில் ஒருவர், தன் துணைவருக்கும் சேர்த்து வாக்களிக்கும் முறையும் புதிய அரசாணையில் இடம்பெற்றிருக்கிறது.

---

2. 1969–க்கு பிந்தைய பிறப்பு – இறப்புகள்: இணையப் பதிவேற்றம் தொடக்கம்

தமிழ்நாடு முழுவதும் 1969ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளன.

பொதுச்சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் நூற்றாண்டு விழா, பன்னாட்டு பொதுச் சுகாதார மாநாட்டுக்கான இலச்சினை வெளியீட்டு நிகழ்வு சென்னையில் நடைபெற்றது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

பிறப்பு, இறப்பு பதிவேடுகளை ₹75 இலட்சம் செலவில் இணையப் பதிவேற்றமாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. 1969ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த பிறப்பு, இறப்பு பதிவேடுகள் CSR இணையதளத்தில் பதிவேற்றப்படுகின்றன. தமிழகத்திலுள்ள 38 மாவட்டங்களில் வருவாய்த்துறை, நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சி மற்றும் சுகாதாரத்துறைசார்ந்த பிறப்பு, இறப்பு பதிவாளர்களால் 16,348 பதிவு மையங்களில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பணிகள் நிறைவடைந்த பிறகு பொதுமக்கள் எவ்வித இன்னல்களுமின்றி பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை இணையதளம்மூலம் பதிவிறக்கஞ்செய்யலாம்.

சர்வதேச பொதுச்சுகாதாரத்துறை மாநாடு: தமிழகத்தில் பொதுச்சுகாதாரத்துறை 1922–ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கர்னல் எஸ் டி இரஸ்ஸல் என்பவரை இயக்குநராகக் கொண்டு தொடங்கப்பட்டது. 2022–ஆம் ஆண்டில் நூறு ஆண்டுகள் நிறைவுபெற்ற இந்தத் தருணத்தில் தமிழக பொதுச்சுகாதாரத்துறை தொன்மையைப் போற்றும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக வரும் டிசம்பர் மாதத்தில் 3 நாள்கள் சர்வதேச பொதுச் சுகாதாரத்துறை மாநாடு சென்னையில் நடத்தப்படவுள்ளது.

---

3. ஜூன் 23–இல் பெய்ஜிங்கில் BRICS உச்சிமாநாடு: பிரதமர் மோடி பங்கேற்பு

BRICS கூட்டமைப்பின் 14–ஆவது உச்சிமாநாடு, பெய்ஜிங்கில் வரும் 23–ஆம் தேதி காணொலி முறையில் நடைபெறும் என்று சீனா அறிவித்துள்ளது. இந்த மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி, ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், பிரேசில் அதிபர் ஜெயிர் போல்சொனாரோ, தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா ஆகியோர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளை உறுப்பினர்களாகக்கொண்ட BRICS கூட்டமைப்புக்கு இந்த ஆண்டு சீனா தலைமைதாங்குகிறது. இந்த நிலையில், அந்தக் கூட்டமைப்பின் வருடாந்திர உச்சிமாநாட்டை சீன வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் ஹுவா சன்யங் அறிவித்தார். அவர் கூறியதாவது:

BRICS மாநாடு, சீன அதிபர் ஷி ஜின்பிங் தலைமையில் ஜூன்.23–ஆம் தேதி காணொலி முறையில் நடைபெற உள்ளது. 'சர்வதேச வளர்ச்சிக்கான புதிய சகாப்தத்தில் BRICS நட்புறவை வளர்த்தெடுத்தல்' என்ற தலைப்பில் மாநாடு நடைபெறும். மறுநாள், ஜூன்.24–ஆம் தேதி, BRICS நாடுகளின் தலைவர்களும் வளரும் நாடுகளின் தலைவர்களின் தலைவர்களும் பங்கேற்கும் உயர்நிலை கூட்டம் நடைபெறவுள்ளது. முன்னதாக, மாநாட்டின் தொடக்கமாக, BRICS வர்த்தகக்குழுக்கூட்டம் காணொலி முறையில் 22–ஆம் தேதி நடைபெறவுள்ளது. அதில், ஷி ஜின்பிங் உரையாற்றுகிறார் என்றார் அவர்.

---

4. இந்திய பிரஸ் கவுன்சிலுக்குப் புதிய தலைவர்

இந்திய பிரஸ் கவுன்சிலின் புதிய தலைவராக ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் (72) நியமிக்கப்பட்டுள்ளார். பிரஸ் கவுன்சிலின் தலைவர் பதவியை ஏற்கும் முதல் பெண் இவராவார்.

இதற்கான அரசாணையை மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

உச்சநீதிமன்ற நீதிபதியாக 2011 முதல் 2014, அக்டோபர்.29 வரையில் அவர் பணியாற்றினார். அதன்பின்னர் ஜம்மு காஷ்மீர் பேரவைத்தொகுதிகள் மறுசீரமைப்பு ஆணையத்தின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். பிரஸ் கவுன்சில் தலைவர் பதவிக்காலத்தை நீதிபதி சந்திரமௌலி குமார் பிரசாத் கடந்த நவம்பர் மாதம் பூர்த்தி செய்த பிறகுப்புதிய தலைவராக தற்போது இரஞ்சனா பிரகாஷ் தேசாய் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

5. 'அக்னி' வீரர்களுக்கு 10% இடஒதுக்கீடு! – பாதுகாப்பு, உள்துறை அமைச்சகங்கள் அறிவிப்பு

'அக்னிபத்' திட்டத்தின்கீழ் பணியாற்றும் அக்னி வீரர்களுக்கு மத்திய பாதுகாப்பு, உள்துறை அமைச்சகங்களில் 10% இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று மத்திய உள்துறை, பாதுகாப்பு அமைச்சகங்கள் அறிவித்துள்ளன.

முப்படைகளில் தற்காலிகமாகப் பணியாற்ற வாய்ப்பளிக்கும் 'அக்னிபத்' திட்டத்தைப் பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் அறிவித்தார். 17.5 வயதில் இருந்து 21 வயது வரையிலான இளைஞர்கள் இத்திட்டத்தில் சேரலாம். இந்தத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் வீரர்களில் 25 சதவீதம் பேர் மட்டுமே 4 ஆண்டுகளுக்குப் பிறகு பணியில் தொடர்வார்கள். மற்றவர்களுக்கு கட்டாய ஓய்வு அளிக்கப்படும். அவர்களுக்கு பணிக்கொடை, ஓய்வூதியப்பலன்கள் எதுவும் கிடைக்காது. வீரர்களுக்கு முதலாவது ஆண்டில் ₹30,000, இரண்டாவது ஆண்டில் ₹33,000, மூன்றாவது ஆண்டில் ₹36,500, நான்காவது ஆண்டில் ₹40,000 மாத ஊதியமாக வழங்கப்படும். இந்த ஊதியத்தில் 30 சதவீதம் பிடித்தம் செய்யப்பட்டு 4 ஆண்டுகள் முடிவில் சேவா நிதியாக ₹11.71 இலட்சம் வழங்கப்படும் என்று இராஜ்நாத் சிங் அறிவித்தார்.

10% இடஒதுக்கீடு: இந்நிலையில், மத்திய ஆயுதக்காவல் படை, அஸ்ஸாம் ரைபிள்ஸ் படைகளில் அக்னி வீரர்களுக்கு 10% இடஒதுக்கீடு அளிக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. அவர்களுக்கு வயது வரம்பில் 3 ஆண்டுகள் தளர்வளிக்கப்படும் என்றும், முதல் முறை சேர்க்கப்படும் வீரர்களுக்கு வயது வரம்பில் 5 ஆண்டுகள் தளர்வளிக்கப்படும் என்றும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. தற்சமயம் துணை இராணுவப்படைகளில் 18–23 வயதுக்கு உள்பட்டவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

இதேபோல், இந்திய கடலோரக்காவல் படை, பாதுகாப்புத்துறையின் 16 பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிகளில் 'அக்னி' வீரர்களுக்கு 10% இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. முன்னாள் இராணுவ வீரர்களுக்கான இடஒதுக்கீடுக்கு பாதிப்பின்றி இந்த இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கப்பல் போக்குவரத்து அமைச்சகமும் 6 துறைகளில் 'அக்னி' வீரர்களுக்கு பணிவாய்ப்பு வழங்குவதாக அறிவித்துள்ளது.

1. அண்மையில் மேகாலயாவில் கண்டுபிடிக்கப்பட்ட, *Glischropus meghalayanus* சார்ந்த இனம் எது?

அ. பாம்பு

ஆ. ஆமை

இ. வெளவால் ☑

ஈ. சிலந்தி

✓ மேகாலயாவில் உள்ள மூங்கில் காட்டில் இருந்து மூங்கிலில் வாழும் புதிய வெளவால் இனத்தை அறிவியலாளர்கள் குழு கண்டுபிடித்துள்ளது. மேகாலயா அதன் 50ஆம் ஆண்டு மாநில நாளைக்கொண்டாடுவதன் நினைவாக அந்தப் புதிய உயிரினத்திற்கு, '*Glischropus meghalayanus*' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

✓ இக்கண்டுபிடிப்பின்மூலம், இந்தியாவில் உள்ள வெளவால் இனங்களின் மொத்த எண்ணிக்கை 131 இனங்களாக மாறியுள்ளது. அதில், 67 இனங்கள் மேகாலயாவில் காணப்படுகின்றன.

2. SCO உறுப்புநாடுகளுக்கு, 'Solidarity-2023' என்ற கூட்டு எல்லைசார் நடவடிக்கையை மேற்கொள்ள முன்வந்த நாடு எது?

அ. இந்தியா

ஆ. சீனா ☑

இ. நேபாளம்

ஈ. வங்காளதேசம்

✓ இந்தியாவும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) மற்ற உறுப்புநாடுகளும் அடுத்த ஆண்டு கூட்டு எல்லைசார் நடவடிக்கையான, 'Solidarity-2023'ஐ ஏற்பாடு செய்தற்கான சீனாவின் முன்மொழிவை ஆதரித்தன. இந்தியாவின் தலைமையில் தில்லியில் நடந்த SCO உறுப்புநாடுகளின் எல்லைசார் அதிகாரிகளின் தலைவர்களின் எட்டாவது கூட்டத்தின் முடிவில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) இயக்குநர் இதனை அறிவித்தார்.

3. 'பேமெண்ட் விஷன் 2025' என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. NPCI

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி ☑

இ. NITI ஆயோக்

ஈ. உலக வங்கி

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) சமீபத்தில் பணஞ்செலுத்துவதற்கான வழிகாட்டுதல்களுடன், 'பேமெண்ட் விஷன் 2025' என்ற ஆவணத்தை வெளியிட்டது. இந்த ஆவணம் டிஜிட்டல் நிதியின் கட்டமைப்பிலும் கவனஞ்செலுத்துகிறது. இதில் பெரும் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிதிசார் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான பணஞ் செலுத்துவதற்கான விதிமுறைகள் உள்ளன; 'இப்போது வாங்கு பிறகு பணஞ்செலுத்து' சேவைகளை உள்ளடக்கிய பணஞ்செலுத்துவதற்கான வழிகாட்டுதல்கள்; மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்தை அறிமுகப்படுத்துதல்; மற்றும் கடனட்டைகள் மற்றும் வங்கி தயாரிப்புகளின் கடன்சார் கூறுகளை UPI உடன் இது இணைக்கிறது.

4. சமீபத்தில் அதன் 'புஜியன்' என்ற பெயரிலான அதிநவீன விமானந்தாங்கிக்கப்பலை அறிமுகப்படுத்திய நாடு எது?

அ. சீனா ☑ ஆ. இந்தியா

இ. பிரான்ஸ் ஈ. அமெரிக்கா

✓ சீனா தனது மூன்றாவது விமானந்தாங்கிக்கப்பலை, 'புஜியான்' என்ற பெயரில் சமீபத்தில் அறிமுகப்படுத்தியது. இது சீனத்தின் மிகவும் மேம்பட்ட மற்றும் முழுமையாக உள்நாட்டில் கட்டப்பட்ட முதல் கடற்படைக் கப்பலாகும். 'புஜியன்'

என்பது சீனாவின் கீழைக்கடற்கரை மாகாணமான புஜியானின் பெயராகும். லியோனிங் மற்றும் ஷான்டாங் ஆகியவை சீனாவின் முந்தைய இரண்டு விமானந்தாங்கிக்கப்பல்களின் பெயர்களாகும்.

5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'காயா மிஷன்' என்பதுடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?

அ. NASA

ஆ. CNA

இ. ESA ☑

ஈ. ஸ்பேஸ்X

- ✓ ஐரோப்பிய விண்வெளி முகமையின் 'காயா திட்டமானது' புதிய தரவுகளின் தொகுப்பை வெளியிட்டுள்ளது; அது 'ஸ்டார்குவாக்கு'களின் நிகழ்வுகளை வெளிப்படுத்தியுள்ளது. விண்மீன் நிலநடுக்கம் என்பது பூகம்பத்தைப் போன்ற நட்சத்திரங்களின் மேற்பரப்பில் ஏற்படும் பேரசைவுகள் ஆகும். விண்மீன் வரைபடமிடல் பணியை மேற்கொள்ளும் காயா ஆய்வூர்தி பால்வெளி விண்மீன் மண்டலத்தில் கிட்டத்தட்ட 1.8 பில்லியன் விண்மீன்களை வரைபடமாக்கி உள்ளது.

6. ஜெனிவாவைச் சார்ந்த மார்ட்டின் என்னல்ஸ் அறக்கட்டளையால் கௌரவிக்கப்பட்ட இந்தியர் யார்?

அ. பாதிரியார் ஸ்டான் சுவாமி ☑

ஆ. வரவர இராவ்

இ. சுதா பரத்வாஜ்

ஈ. ஆனந்த் டெல்டும்டே

- ✓ மார்ட்டின் என்னல்ஸ் அறக்கட்டளை பாதிரியார் ஸ்டான் சுவாமிக்கு அவரது மறைவிற்குப்பின் அஞ்சலி செலுத்த முடிவு செய்துள்ளது. அவர் பீமா கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்ட ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ஜேசுட் பாதிரியார் மற்றும் பழங்குடியினர் உரிமை ஆர்வலர் ஆவார். அவர் ஆதிவாசி சமூகங்களின் நிலம், காடு மற்றும் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க அவர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றினார்.
- ✓ மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான நோபல் பரிசாகக் கருதப்படும் இவ்விருதை ஜெனிவாவைச் சார்ந்த மார்ட்டின் என்னல்ஸ் அறக்கட்டளை ஒவ்வோர் ஆண்டும் வழங்கி வருகிறது. இந்த ஆண்டுக்கான விருதுகளைப் பெற்றவர்களில் புர்கினா பாசோவைச் சேர்ந்த Daouda Diallo, வியட்நாமைச் சேர்ந்த Pham Doan Trang மற்றும் பஹ்ரைனின் அப்துல்–ஹாடி அல்–கவாஜா ஆகியோர் அடங்குவர்.

7. உத்தரகாண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, எந்தத் தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் வெற்றி பெற்றார்?

அ. சம்பாவத் ☑

ஆ. காதிமா

இ. கங்கோத்ரி

ஈ. யமுனோத்ரி

- ✓ உத்தரகாண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, சம்பாவத் இடைத்தேர்தலில் 55,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். உத்தரகாண்ட் மாநில சட்டமன்றத் தேர்தல் 2022–இல் அவர் காதிமா சட்டமன்றத் தொகுதியில் தோல்வி அடைந்திருந்தார். உத்தரகாண்ட் மாநிலத்தில் பாஜக பெரும்பான்மையைப் பெற்றிருந்தாலும்கூட முதல்வர் பதவிக்கு உரியவர் தோற்றிருந்தார். அவரின் இந்த வெற்றி பெற மிகமுக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

8. 'சாதி ஆதார் கணனா' என்ற சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்த முடிவு செய்துள்ள மாநிலம் எது?

அ. பீகார் ☑

ஆ. உத்தரப்பிரதேசம்

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஜார்கண்ட்

✓ பீகார் மாநிலத்தில் சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்த மாநில அரசு முடிவுசெய்துள்ளது. முதல்வர் நிதிஷ்குமார் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இது, 'சாதி ஆதார் கணனா' என்று அழைக்கப்படும் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு தொடர்பான தரவுகளை செய்தித்தாள்களில் விளம்பரங்கள்மூலம் மாநில அரசு வெளியிடும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

9. 2021 பார்ச்சூன் 500 பட்டியலில் அதிக இழப்பீடுபெற்ற CEO–களின் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளவர் யார்?

அ. ஜாக் மா

ஆ. எலோன் மஸ்க் ☑

இ. டிம் குக்

ஈ. ஜென்சன் ஹுவாங்

✓ ஸ்பேஸ்X மற்றும் டெஸ்லாவின் தலைமைச்செயலதிகாரியான எலோன் மஸ்க், 2021ஆம் ஆண்டுக்கான பார்ச்சூன் 500 பட்டியலில் அதிக இழப்பீடு பெற்ற தலைமைச் செயல் அதிகாரிகளின் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். 2021ஆம் ஆண்டில், மஸ்க் கிட்டத்தட்ட 23.5 பில்லியன் டாலர் மதிப்பிலான இழப்பீட்டைப்பெற்றார். அதே நேரத்தில் டெஸ்லா இந்த ஆண்டின் பார்ச்சூன் 500 பட்டியலில் 65ஆவது இடத்தைப்பிடித்தது. ஆப்பிள் Inc. CEO டிம் குக் 2021இல் $770.5 மில்லியனையும், NVIDIA தலைவரான ஜென்சன் ஹுவாங் 2021இல் $561 மில்லியனையும் பெற்றனர்.

10. 2022ஆம் ஆண்டு எந்த மாதத்தில், GST வருவாய் தொடங்கப்பட்டதிலிருந்து முதன்முறையாக ₹1.40 இலட்சம் கோடியைத் தாண்டியது?

அ. பிப்ரவரி 2022

ஆ. மார்ச் 2022 ☑

இ. ஏப்ரல் 2022

ஈ. மே 2022

✓ மே மாதத்திற்கான GST வருவாய் கிட்டத்தட்ட ₹1.41 இலட்சம் கோடியாக பதிவாகியுள்ளது. இது கடந்த ஆண்டு இதே மாதத்தில் பெற்றதைவிட 44% அதிகமாகும் என்று நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. GST தொடங்கப்பட்டதிலிருந்து இது நான்காவது முறையாக மாதாந்திர GST வசூல் ₹1.40 இலட்சம் கோடியைத்தாண்டியுள்ளது மற்றும் 2022 மார்ச் முதல் தொடர்ந்து மூன்றாவது மாதமாக இவ்வாறாக உள்ளது. மார்ச் மாதத்தில் GST வருவாய் ₹1.42 இலட்சம் கோடியாகவும், பிப்ரவரியில் ₹1.33 லட்சம் கோடியாகவும் இருந்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி 28% அதிகரிப்பு

நடப்பு நிதியாண்டில் இதுவரை உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி 28 சதவீதம் அதிகரித்திருப்பதாக மத்திய மின்சார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மின்சார அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம்:

கடந்த 2021–22 நிதியாண்டில் 777 மில்லியன் டன்னாக இருந்த உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி, நடப்பு நிதி ஆண்டிலும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2022–23ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி மே 31 நிலவரப்படி, 137.85 மில்லியன் டன் ஆகும். இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் இருந்த 104.83 மில்லியன் டன் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 28.6% அதிகமாகும். இந்த நிலைமை ஜூன் மாதத்திலும் நீடிக்கும்.

கோல் இந்தியா நிறுவனத்தின் நிலக்கரி உற்பத்தி, முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் (ஜூன் 16, 2022) உற்பத்தியை விட 28% அதிகமாகும். நடப்பு நிதியாண்டில் உள்நாட்டில் நிலக்கரி உற்பத்தி இலக்கு 911 மில்லியன் டன் ஆகும். இது முந்தைய ஆண்டைவிட 17.2% அதிகமாகும்.

உள்நாட்டு நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்களுக்கான நிலக்கரி இறக்குமதி 2021–22ஆம் ஆண்டில் 8.11 மில்லியன் டன்னாக குறைந்துள்ளது. இது கடந்த எட்டு ஆண்டுகளில் மிகக்குறைந்த நிலக்கரி இறக்குமதியாகும். உள்நாட்டு மூலங்களிலிருந்து வலுவான நிலக்கரி வழங்கல் மற்றும் உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக மட்டுமே இது சாத்தியமானது. கடந்த ஐந்து ஆண்டுகளில், நிலக்கரி அடிப்படையிலான மின்னுற்பத்தி அதிகரித்துள்ளது.

---

2. பள்ளிக்கல்வியில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம்: UNESCO விருது

கரோனா பரவல் தீவிரமாக இருந்த காலத்தில், 'பிரதமரின் இ–வித்யா' திட்டத்தின்கீழ் பள்ளிக்கல்வியில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியதற்காக UNESCO விருது கிடைத்துள்ளது.

கடந்த 2020–ஆம் ஆண்டு மத்திய கல்வி அமைச்சகத்தால் தற்சார்பு இந்தியா திட்டத்தின் பகுதியாக 'பிரதமரின் இ–வித்யா திட்டம்' தொடங்கப்பட்டது, இது தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கல்வி புகட்ட டிஜிட்டல், இணைய வழிமுறைசார்ந்த அனைத்து முயற்சிகளையும் ஒருங்கிணைக்கிறது. இதன்மூலம் கற்றல் இழப்பை குறைப்பதே நோக்கமாகும்.

---

1. ஸ்கைடிராக்ஸ் உலக வானூர்தி நிலைய விருதுகளில், 'இந்தியா மற்றும் தெற்காசியாவின் சிறந்த பிராந்திய வானூர்தி நிலையம்' என அறிவிக்கப்பட்ட இந்திய வானூர்தி நிலையம் எது?

அ. சென்னை சர்வதேச வானூர்தி நிலையம்

ஆ. தில்லி சர்வதேச வானூர்தி நிலையம்

இ. பெங்களூரு சர்வதேச வானூர்தி நிலையம் ☑

ஈ. கொச்சி சர்வதேச வானூர்தி நிலையம்

Kempegowda INTERNATIONAL AIRPORT BENGALURU

✓ ஸ்கைடிராக்ஸ் உலக வானூர்தி நிலைய விருதுகளில், 'இந்தியா மற்றும் தெற்காசியாவின் சிறந்த பிராந்திய வானூர்தி நிலையம்' என பெங்களூருவில் அமைந்துள்ள கெம்பேகௌடா சர்வதேச வானூர்தி நிலையம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. வருகை, இடமாற்றம், ஷாப்பிங், பாதுகாப்பு, குடியேற்றம் மற்றும் புறப்படும் வாயில்களில் உள்ள ஏற்பாடுகள் வரையிலான அனுபவம் குறித்து உலகளவில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் வாடிக்கையாளர்களின் கருத்துகளின் அடிப்படையில் இந்த விருது வழங்கப்படுகிறது. முன்னதாக விங்ஸ் இந்தியா விருதுகளில் பெங்களூரு வானூர்தி நிலையம் சிறந்த வானூர்தி நிலையம் விருதை வென்றிருந்தது.

2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஷிண்டே சாம்பாஜி சிவாஜி, உஜ்ஜல் புயான், அம்ஜத் அஹ்தேஷாம் சயீத் ஆகியோருடன் தொடர்புடையது எது?

அ. அறிவியலாளர்கள்

ஆ. நீதியரசர்கள் ☑

இ. அரசியல்வாதிகள்

ஈ. அதிகாரத்துவவாதிகள்

✓ சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்தின்படி, 5 உயர்நீதிமன்றங்களில் புதிய தலைமை நீதிபதிகளை நியமிக்க அரசு அனுமதியளித்துள்ளது. உத்தரகண்ட் உயர்நீதிமன்றம் மற்றும் தெலுங்கானா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக முறையே நீதிபதி விபின் சங்கி மற்றும் நீதிபதி உஜ்ஜல் புயான் ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

✓ நீதிபதி அம்ஜத் அஹ்தேஷாம் சயீத் மற்றும் நீதிபதி ஷிண்டே சாம்பாஜி சிவாஜி ஆகியோர் முறையே ஹிமாச்சல பிரதேச உயர்நீதிமன்றம் மற்றும் இராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பதவியேற்கவுள்ளனர். தலைமை நீதிபதி சதீஷ் சந்திர சர்மா மற்றும் நீதிபதி ரஷ்மின் எம் சாயா ஆகியோர் முறையே தில்லி மற்றும் கௌகாத்தி உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டனர்.

3. கல்வியில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான UNESCOஇன் அங்கீகாரத்தைப்பெற்ற நிறுவனம் எது?

அ. மத்திய கல்வி தொழில்நுட்ப நிறுவனம் ☑

केन्द्रीय शैक्षिक प्रौद्योगिकी संस्थान Central Institute of Educational Technology

ஆ. மத்திய இடைநிலைக் கல்வி வாரியம்

இ. பல்கலைக்கழக மானியக் குழு

ஈ. அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில்

✓ 2021ஆம் ஆண்டிற்கான கல்வியில் ICT (தகவல் & தொடர்பு தொழில்நுட்பம்) பயன்பாட்டிற்காக UNESCOஇன் கிங் ஹமத் பின் இசா அல்–கலிபா பரிசு NCERT–இன் ஒரு பிரிவான மத்திய கல்வி தொழில்நுட்ப நிறுவனம் பெற்றுள்ளது. COVID தொற்றுகாலத்தின்போது, 'PM eVidya' திட்டத்தின்கீழ் ICT–ஐ அது பயன்படுத்தியது. டிஜிட்டல், ஆன்லைன், ஆன்–ஏர் கல்வி தொடர்பான அனைத்து முயற்சிகளையும் ஒருங்கிணைக்க 2020 மேயில், 'ஆத்மநிர்பார் பாரத் அபியான்' திட்டத்தின் ஒருபகுதியாக 'PM eVIDYA' திட்டம் தொடங்கப்பட்டது.

4. வெளிநாட்டவர் குறித்த தரவு வங்கியை விரிவுபடுத்துவதற்காக, 'புலம்பெயர்வு கணக்கெடுப்பு' நடத்துவதாக அறிவித்துள்ள மாநிலம் எது?

அ. மகாராஷ்டிரா

ஆ. கேரளா ☑

இ. பஞ்சாப்

ஈ. குஜராத்

✓ கேரள 'புலம்பெயர்தல் கணக்கெடுப்பின்'மூலம் கேரளத்திலிருந்த புலம்பெயர்ந்த மலையாளிகளின் தரவு வங்கி விரிவுபடுத்தப்படும் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் அறிவித்தார். இந்தக்கணக்கெடுப்புக்காக ஒரு, 'பிரவாசி தரவுத்தளம்' தயாரிக்கப்படும் என அவர் அறிவித்தார்.

5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஆபரேஷன் சங்கல்ப்' என்பதுடன் தொடர்புடைய ஆயுதப்படை எது?

அ. இந்திய இராணுவம்

ஆ. இந்திய கடற்படை ☑

இ. இந்திய வான்படை

ஈ. இந்திய கடலோர காவல்படை

✓ இந்திய கடற்படையின் மறைந்திருந்து தாக்கும் போர்க்கப்பலான INS தல்வார், இந்தியாவின் கடல்சார் நலன்களைப் பாதுகாப்பதற்காக வளைகுடாவில் பணியாற்றி வருகிறது. அது தனது 3ஆமாண்டு பணிநிறைவை இவ்வாண்டு நினைவுகூர்ந்தது. 'ஆபரேஷன் சங்கல்ப்' என்ற நடவடிக்கைக்காக அது பயன்படுத்தப்படுகிறது. 2019 ஜூனில் ஓமன் வளைகுடாவில் வணிகக்கப்பல்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் வளைகுடா பிராந்தியத்தில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்ததை அடுத்து, இந்திய கடற்படையானது வளைகுடா பிராந்தியத்தில் 'Op SANKALP' என பெயரிடப்பட்ட கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியது.

6. 2022 – ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியாவின் நிலை என்ன?

அ. முதலில்

ஆ. இரண்டாவது

இ. மூன்றாவது ☑

ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை

✓ ஜகார்த்தாவில் நடைபெற்று வரும் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் 8 அணிகள் பங்கேற்ற போட்டியில் இந்தியா இரண்டாவது முறையாக ஜப்பானை வீழ்த்தி வெண்கலம் வென்றது. இறுதிப்போட்டியில் தென் கொரியா 2–1 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்தி தங்கப்பதக்கத்தைத் தட்டிச்சென்றது. தென் கொரியா ஐந்தாவது முறையாக ஆசிய கோப்பையை வென்றது. இந்தியாவும் பாகிஸ்தானும் மும்முறை ஆசிய கோப்பையை வென்றுள்ளன.

7. 'ஆபரேஷன் மகிளா சுரக்ஷா' என்பது எதன் முன்னெடுப்பாகும்?

அ. தேசிய பெண்கள் ஆணையம்

ஆ. இரயில்வே பாதுகாப்புப் படை ☑

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. NITI ஆயோக்

✓ இரயில்வே பாதுகாப்புப் படை (RPF) ஒரு நாடு தழுவிய இயக்கமாக, 'ஆபரேஷன் மகிளா சுரக்ஷா'வை மே.3 முதல் மே.31, 2022 வரை தொடங்கியது. இதன்போது, RPF, பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட பெட்டிகளில் அங்கீகாரம் இல்லாமல் பயணம் மேற்கொண்ட 7,000–க்கும் மேற்பட்டவர்களை கைதுசெய்தது. ஆட்கடத்தலுக்கு ஆளான 150 பெண்களை RPF மீட்டுள்ளது. பெண் பயணிகளுக்கு பாதுகாப்பை வழங்க மற்றொரு நாடு தழுவிய முயற்சியான 'மேரி சஹேலி'யும் செயல்பட்டு வருகிறது.

8. சிங்கப்பூரில் நடக்கும் உலக நகரங்களின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்ட முதலமைச்சர் யார்?

அ. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்

ஆ. பினராயி விஜயன்

இ. அரவிந்த் கெஜ்ரிவால் ☑

ஈ. அசோக் கெலாட்

✓ சிங்கப்பூரில் நடைபெறும் உலக நகரங்கள் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்கு தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அங்கு அவர் 'தில்லி மாதிரி'யை வழங்கவும், நகர்ப்புற தீர்வுகள் குறித்து மற்ற தலைவர்களுடன் விவாதிக்கவும் செய்வார். சிங்கப்பூரின் வாழக்கூடிய நகரங்களுக்கான மையம் மற்றும் நகர்ப்புற மறுவடிவமைப்பு ஆணையம் ஆகியவை கூட்டாக இதனை ஏற்பாடு செய்துள்ளன.

9. லோகார்னோ திரைப்பட விழாவில் 'லோகார்னோ கிட்ஸ் அவார்டு லா மொபிலியார்' விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட இந்திய திரைப்பட இயக்குநர் யார்?

அ. கீதாஞ்சலி இராவ் ☑

ஆ. லோகேஷ் கனகராஜ்

இ. ஸ்ரீராம் இராகவன்

ஈ. K S இரவிக்குமார்

✓ லோகார்னோ திரைப்பட விழாவின் 75ஆவது பதிப்பின்போது இந்திய திரைப்பட இயக்குநர் கீதாஞ்சலி இராவுக்கு விருது வழங்கப்படவுள்ளது. அவர், லோகார்னோ கிட்ஸ் விருது லா மொபிலியாரேவைப் பெறுவார். இது இளைய பார்வையாளர்களுக்கு நோக்கி திரைக்கலையின் நேசத்தை வெளிப்படுத்தும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் சுவிச்சர்லாந்தில் உள்ள லோகார்னோவில் நடைபெறும் இந்தத் திரைப்பட விழாவில் இந்த விருது வழங்கப்படுகிறது.

10. 2023 முதல் யூரோ நாணயத்தை ஏற்றுக்கொள்ளும் 20ஆவது ஐரோப்பிய நாடு எது?

அ. மொனாக்கோ

ஆ. மால்டா

இ. குரோஷியா ☑

ஈ. லக்சம்பர்க்

✓ குரோஷியா ஐரோப்பிய ஆணையத்தில் சேருவதற்கான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பின்னர் 2023ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து யூரோ நாணயத்தை ஏற்றுக்கொள்ளவுள்ளது. இந்த நடவடிக்கையானது யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் 20ஆவது ஐரோப்பிய நாடாக குரோஷியாவை உருவாக்கும். ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஓர் அறிக்கையில், குரோஷியா யூரோ பொது நாணயத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஒருபடி எடுத்துள்ளது எனக் கூறினார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. காமன்வெல்த் ஹாக்கி: மன்பிரீத் தலைமையில் இந்திய அணி

பிர்மிங்ஹாம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய ஹாக்கி அணி மன்பிரீத் சிங் தலைமையில் 18 பேருடன் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், சீனாவில் நடைபெறுவதாக இருந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இடையேயான கால இடைவெளி குறைவாக இருந்ததால் பிரதான இந்திய அணியை ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கும், 2ஆம் நிலை அணியை காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கும் அனுப்புவதென ஹாக்கி இந்தியா முடிவு செய்திருந்தது.

ஏனெனில், ஆசிய விளையாட்டுப் போட்டியானது 2024 பாரீஸ் ஒலிம்பிக்கிற்கான தகுதிப் போட்டியாக இருந்தது. இந்நிலையில், COVID சூழல்காரணமாக ஆசிய விளையாட்டுப்போட்டிகள் அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதனால், தற்போது பிரதான இந்திய அணியையே காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுப்ப ஹாக்கி இந்தியா முடிவு செய்துள்ளது.

காமன்வெல்த் போட்டிகள் ஜூலை 28–ஆம் தேதி தொடங்குகிறது. இதில் ஹாக்கி விளையாட்டில் இந்திய அணி குரூப் 'பி'–யில் பட்டியலிடப்பட்டுள்ளது. இப்பிரிவில் இங்கிலாந்து, கனடா, வேல்ஸ், கானா அணிகள் உள்ளன. இந்தியா தனது முதல் ஆட்டத்தில் கானாவை ஜூலை.31–ஆம் தேதி எதிர்கொள்கிறது.

மன்பிரீத் சிங் தலைமையிலான இந்திய அணி கடந்த ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்று அசத்தியிருந்தது. அதன் பிறகு எஃப்ஐஹெச் புரோ லீக் போட்டியின் ஆட்டங்களுக்கு அமித் ரோஹிதாஸ் அணியின் கேப்டனாகச் செயல்பட்டிருந்தார். தற்போது காமன்வெல்த் போட்டிகளுக்காக மன்பிரீத் மீண்டும் அணித் தலைவராக்கப்பட்டுள்ளார்.

---

2. 21–06–2022: உலக யோகா நாள்

கருப்பொருள்: "Yoga for Humanity".

---

3. கடலோர காவல் படையில் கிழக்குப் பிராந்தியத்தில் இணைந்த அதிநவீன புதிய ஹெலிகாப்டர்

இந்தியக் கடலோரக் காவல்படையின் கிழக்குப் பிராந்தியத்தில் மேம்படுத்தப்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் ரோந்துப் பணியில் இணைக்கப்பட்டது.

இந்தியக் கடலோரக் காவல்படை கிழக்குப் பிராந்தியப் பிரிவு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கன்னியாகுமரி முதல் ஆந்திர மாநிலத்தின் கிருஷ்ணாபட்டனம் வரை கடலோர பகுதி இப்பிராந்தியத்தின் கண்காணிப்பில் இருந்து வருகிறது. ரோந்துக் கப்பல்கள், இடைமறிக்கும் படகுகள், டோர்னியர் ரோந்து விமானங்கள், நீரிலும் நிலத்திலும் பயணிக்கும் ஹோவர்கிராப்ட், சேடக் ஹெலிகாப்டர்கள் ரோந்து வாகனங்கள் கண்காணிப்பு மற்றும் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

அதிநவீன வசதிகள் கொண்ட ஹெலிகாப்டர்:

இதில் தற்போது மேம்படுத்தப்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் இணைக்கப்பட்டது. சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள கடலோர காவல்படை விமானதளத்தில் நடைபெற்ற நிகழ்வில் இப்புதிய ஹெலிகாப்டர் இணைக்கப்பட்டது. இப்புதிய ஹெலிகாப்டர் உள்நாட்டுத் தொழில்நுட்பத்துடன் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோநாடிக்கல் லிமிடெட் மூலம் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்புதிய ஹெலிகாப்டர்மூலம் இந்திய பொருளாதாரக் கடல் எல்லைக்குள் பயணிக்கும் வணிகக் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிப்பது, கடத்தல்களைக் கண்காணிப்பது உள்ளிட்ட பணிகளில் கூடுதல் கவனம் செலுத்திட இயலும்.

---

1. கட்டுமானத் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்துவதற்கான நாடு தழுவிய முன்னெடுப்பான, 'NIPUN' என்பது கீழ்க்காணும் எந்த நடுவண் அமைச்சகத்தின் முன்னெடுப்பாகும்?

அ. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑

ஆ. MSME அமைச்சகம்

இ. வணிகம் & தொழிற்துறை அமைச்சகம்

ஈ. பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ நடுவண் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அண்மையில் கட்டுமானத் தொழிலாளர்களின் திறன்பயிற்சிக்கான 'NIPUN' என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இது கட்டுமானத் தொழிலாளர்களின் திறமையை மேம்படுத்துவதற்கான ஒரு நாடு தழுவிய முன்னெடுப்பாகும். இது தீனதயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (DAY–NULM) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் முன்னெடுப்பாக உள்ளது. இது 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திறன் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் பயிற்சியளிப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

2. இந்தியாவில் எட்டாவது சர்வதேச யோகா நாளின் கொண்டாட்டங்கள் முதன்மையாக நடைபெற்ற இடம் எது?

அ. தென்காசி

ஆ. மைசூரு ☑

இ. ஹைதராபாத்

ஈ. காந்தி நகர்

✓ கர்நாடக மாநிலம் மைசூருவில் நடைபெற்ற எட்டாவது சர்வதேச யோகா நாள் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். இந்த ஆண்டு யோகா நாள் கொண்டாட்டத்தின் கருப்பொருள், 'Yoga for Humanity' என்பதாகும். உலகம் முழுவதும் 25 கோடிக்கும் அதிகமானோர் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று யோகாசனம் செய்தனர்.

3. பன்னாட்டு அமைதிகாக்கும் பயிற்சியான, 'கான் குவெஸ்ட்–2022' நடத்தப்பட்ட நாடு எது?

அ. பிரான்ஸ்

ஆ. ஓமான்

இ. மங்கோலியா ☑

ஈ. ஈரான்

✓ 'கான் குவெஸ்ட்–2022' என்ற பன்னாட்டு அமைதிகாக்கும் பயிற்சி மங்கோலியாவில் உள்ள உலான்பாதரில் நடத்தப்பட்டது. இந்தப்பயிற்சியானது 16 நாடுகளைச் சேர்ந்த இராணுவத்தினரிடையே பரஸ்பர கற்றல் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு வாய்ப்பினை வழங்கியது. இப்பயிற்சியில் லடாக் சாரணர்களின் பணியாளர்கள் அடங்கிய இந்தியக்குழு பங்கேற்றது. ஐக்கிய நாடுகள் (UN) அவையின் ஆணையின்படி, உத்திசார் ஒத்திகைகள் இதன் சமயம் நடத்தப்பட்டன.

4. உலகின் மிகப்பெரிய நன்னீர் மீனானது அண்மையில் எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது?

அ. ஆஸ்திரேலியா

ஆ. சீனா

இ. கம்போடியா ☑

ஈ. சிலி

- ✓ கம்போடியாவில் பாயும் மீகாங் ஆற்றில் பிடிபட்ட 300 கிலோகிராம் எடையுள்ள திருக்கை மீன், உலகில் இதுவரை ஆவணப்படுத்தப்பட்ட மிகப்பெரிய நன்னீர் மீன் ஆகும். உலகின் மிகப்பெரிய நன்னீர் மீன்பற்றிய அதிகாரப்பூர்வ தரவு இல்லை என்றாலும், இதற்குமுன் பதிவுசெய்யப்பட்டதிலேயே மிகப்பெரிய மீன் 293 கிலோ எடையுள்ள மீகாங் பெருங்கெளுத்தி ஆகும்; அது 2005இல் தாய்லாந்தில் பிடிபட்டது. மீகாங் ஆறு திபெத்திய பீடபூமியிலிருந்து சீனா, மியான்மர், தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா மற்றும் வியட்நாம் வழியாகப் பாய்கிறது.

5. ICICI வங்கி, HDFC வங்கி மற்றும் NPCI ஆகியவற்றின் சில வளங்களை, 'முக்கியமான தகவல் உட்கட்டமைப்பு' என அறிவித்துள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

ஆ. நிதியமைச்சகம்

இ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

- ✓ மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது ICICI வங்கி, HDFC வங்கி மற்றும் இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (NPCI) ஆகியவற்றின் தகவல் தொழில்நுட்ப வளங்களை, 'முக்கியமான தகவல் உட்கட்டமைப்பு' என அறிவித்துள்ளது. தகவல் தொழில்நுட்பச் சட்டம் – 2000 'முக்கியமான தகவல் உட்கட்டமைப்பை' ஒரு 'கணினி வளமாக' வரையறுக்கிறது. எந்தவொரு தரவு, தரவுத்தளம், தகவல் தொழில்நுட்ப வலையமைப்பு அல்லது தகவல் தொடர்பு உட்கட்டமைப்பு ஆகியவற்றை இவ்வாறு அறிவிக்க அரசாங்கத்திற்கு அதிகாரமுள்ளது.

6. 2022 – உலக சுற்றுச்சூழல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Invest in our Planet

ஆ. Only One Earth ☑

இ. 50th Environment Day

ஈ. Live with the Nature

- ✓ பாழான சுற்றுச்சூழல் நிலைமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.5 அன்று உலக சுற்றுச்சூழல் நாள் கொண்டாடப்படுகிறது. ஐநாஇன் சுற்றுச்சூழல் திட்டம் என்பது உலகெங்கிலும் உள்ள நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடத்தும் ஒரு மைய நிறுவனமாகும்.
- ✓ 2022ஆம் ஆண்டு 50ஆம் உலக சுற்றுச்சூழல் நாளைக்குறிக்கிறது. சுவீடன், இந்த ஆண்டு நிகழ்வின் தொகுப்பாளராக உள்ளது. "Only One Earth" என்பது இந்நாளின் கருப்பொருளாகும். இது 1972 ஸ்டாக்ஹோம் மாநாட்டின் முழக்கமாக இருந்தது.

7. இந்திய வான்படையானது இந்திய வான்படை பாரம்பரிய மையத்தை அமைப்பதற்காக எந்த மாநிலம்/UT உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

அ. சிக்கிம்

ஆ. கேரளா

இ. சண்டிகர் ☑

ஈ. தெலுங்கானா

- ✓ சண்டிகர் யூனியன் பிரதேச நிர்வாகமும் இந்திய வான்படையும் இந்திய வான்படை பாரம்பரிய மையம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இம்மையத்தில் சிமுலேட்டர்கள், பணிநீக்கஞ்செய்யப்பட்ட விமானம், ஏரோ எஞ்சின்கள் மற்றும் பிற IAF கலைப்பொருட்கள் இருக்கும். இந்த மையத்தில் விர்ச்சுவல் ரியாலிட்டி மற்றும் AI தொழில்நுட்பமும் இருக்கும். பாரம்பரிய மையம் தகவல் தருவதாகவும், நாட்டின் இளைஞர்களை ஆயுதப்படைகளில் சேர ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்திருக்கும்.

8. காப்புக்காடுகள், வனவுயிரிகள் சரணாலயத்திற்கு குறைந்தபட்சம் எத்தனை கிமீட்டர் தொலைவில் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தை (ESZ) கட்டாயமாக அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது?

அ. 0.5 கிமீ

ஆ. 1 கிமீ ☑

இ. 2 கிமீ

ஈ. 3 கிமீ

✓ நாடு முழுவதுமுள்ள ஒவ்வொரு காப்புக்காடு, தேசியப்பூங்கா மற்றும் வனவுயிரி சரணாலயம் ஆகியவை அவற்றின் வரையறுக்கப்பட்ட எல்லையிலிருந்து தொடங்கி குறைந்தபட்சம் ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு கட்டாய சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களின்படி, சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலம் குறைந்த பாதுகாப்பை உள்ளடக்கிய பகுதிகளுக்கான ஒரு மாறுதல் மண்டலமாகச் செயல்படும்.

9. 2022 – பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?

அ. ஆஷ்லே பார்ட்டி

ஆ. இகா ஸ்விடெக் ☑

இ. மரியா சக்காரி

ஈ. நவோமி ஒசாகா

✓ 2022–பிரெஞ்சு ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகின் நெ:1 வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாடெக் அமெரிக்க இளம் வீராங்கனையான கோகோ காப்பை வீழ்த்தி பட்டத்தை வென்றார். 21 வயதான அவர் மூன்று ஆண்டுகளில் தனது இரண்டாவது பட்டத்தை 6–1, 6–3 என்ற நேர் செட்களில் காப்புக்கு எதிராக வென்றார். முதல் 10 இடங்களுக்குள் வந்த இளம் வீராங்கனை இவராவார். 2020–பிரெஞ்சு ஓபன் சாம்பியனான இகா, போலந்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தை வென்ற முதல் வீராங்கனை ஆவார்.

10. 2022இன், 'செலண்ட் மாதிரி' வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ள வங்கி எது?

அ. இண்டஸ்இண்ட் வங்கி ☑

ஆ. HDFC வங்கி

இ. ஐசிஐசிஐ வங்கி

ஈ. ஆக்சிஸ் வங்கி

✓ இண்டஸ்இண்ட் வங்கியானது அதன் வகையில் சிறந்த நிறுவன கொடுப்பனவு மையத்தைக் கட்டமைத்ததற்காக 'Payments System Transformation' பிரிவின்கீழ் உலகளாவிய, 'செலண்ட் மாதிரி வங்கி' விருதைப் பெற்றுள்ளது. முகிலடிப்படையிலான நடுவண் கொடுப்பனவு மையத்தை உருவாக்குவதில் வங்கியின் சிறந்த பயணத்தை இந்த விருது அங்கீகரிக்கிறது. உலகளவில் நிதி நிறுவனங்களுக்கான தொழில்நுட்பத்தில் கவனஞ்செலுத்தும் முன்னணி ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிறுவனமான 'செலண்ட்' இந்த விருதை வழங்குகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழ்நாடு: கரோனா பாதித்தோரில் 25% பேருக்கு பிஏ–5 வகை தாக்கம் – பொதுச்சுகாதாரத்துறை ஆய்வில் தகவல்

இந்த மாதத்தில் COVID–19 தொற்றுக்கு உள்ளானவர்களில் 25 சதவீதம் பேர் ஒமைக்ரான் பிஏ–5 வகையால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதாரத் துறை தெரிவித்தது.

இதுகுறித்து பொதுச்சுகாதாரத்துறை கூறியதாவது:

கடந்த மே மாதத்தில் பிஏ–2 வகை தொற்று பாதித்தவர்களின் விகிதம் 36 சதவீதமும், பிஏ–2.38 வகை பாதிப்புக்கு உள்ளானவர்கள் விகிதம் 35 சதவீதமாகவும் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் பிஏ–4, பிஏ–5 ஆகியவை முறையே 1.4 சதவீதம் மற்றும் 4 சதவீத பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தன. இந்த நிலையில், ஜூன் மாதத்தைப் பொருத்தவரை பிஏ–2.38 வகை தொற்றுக்குள்ளானோர் 35 சதவீதமாகவும், பிஏ–5 வகை பாதிப்புக்குள்ளானோர் 25.2 சதவீதமாகவும் உள்ளது.

---

2. விம்பிள்டன்

டென்னிஸ் காலண்டரில், ஓர் ஆண்டில் நடைபெறும் 3–ஆவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன், வரும் 27–ஆம் தேதி தொடங்கி, ஜூலை.10–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான இருபாலர் தகுதிச்சுற்று ஆட்டங்கள் திங்கள்கிழமை தொடங்கி நடைபெற்று வருகின்றன. அடுத்தகட்டமாக பங்கேற்பாளர்களுக்கான போட்டித்தரவரிசையும் (சீட்) செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புல்தரையில் நடைபெறும் ஒரே கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன் குறித்த சில விவரங்கள், இதோ.

போட்டி தொடக்கம்: 1877

நடப்பு ஆண்டு போட்டி: 135–ஆவது சீசன்

நடப்பு சாம்பியன்கள்

ஆடவர்: நோவக் ஜோகோவிச் (செர்பியா)

மகளிர்: ஆஷ்லி பார்ட்டி (ஆஸ்திரேலியா) (ஓய்வு)

ஆடவர் இரட்டையர்: நிகோலா மெக்டிச்/மேட் பாவிச் (குரோஷியா)

மகளிர் இரட்டையர்: சியே சுவெய் (தைவான்)/எலிஸ் மெர்டன்ஸ் (பெல்ஜியம்)

கலப்பு இரட்டையர்: டெஸைரே கிராவ்ஸிக் (அமெரிக்கா)/நீல் ஸ்குப்ஸ்கி (இங்கிலாந்து)

மொத்த பரிசுத்தொகை: ரூ.386 கோடி

சாதனைகள்...

அதிகமுறை சாம்பியன்

ஒற்றையர்: ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) (8)

இரட்டையர்: டாட் வூட்பிரிட்ஜ் (ஆஸ்திரேலியா) (9)

வயதான சாம்பியன்

ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) (35 வயது / 2017)

இளம் சாம்பியன்

போரிஸ் பெக்கர் (ஜெர்மனி) (17 வயது / 1985)

'சென்டர் கோர்ட்' நூற்றாண்டு

விம்பிள்டன் போட்டி நடத்தப்படும் டென்னிஸ் கோர்ட்டுகளில் பிரதானமானதாக இருக்கும், 'சென்டர் கோர்ட்' இந்த ஜூன் மாதத்துடன் நூற்றாண்டை எட்டுகிறது. அதைக் கொண்டாடும் வகையில் சிறப்பு ஏற்பாடுகளை போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

---

3. ஐநா–உக்கு புதிய தூதர் நியமனம்

ஐநா–உக்கான இந்தியத்தூதராக, மூத்த வெளியுறவு அதிகாரி ருசிரா கம்போஜ் நியமிக்கப்பட்டார். தற்போது அந்தப் பொறுப்பை வகித்து வரும் டி எஸ் திருமூர்த்திக்குப் பதிலாக அவர் அந்தப் பதவியை ஏற்கவுள்ளார். 1987–ஆம் ஆண்டில் இந்திய வெளியுறவுப் பணி அதிகாரியான அவர், தற்போது பூடானுக்கான இந்தியத் தூதராக இருந்து வருகிறார். ஐநா–உக்கான இந்தியத்தூதராக ருசிரா கம்போஜ் கூடிய விரைவில் பொறுப்பேற்பார் என வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. விண்ணில் பாய்ந்தது தென் கொரிய ஏவுகணை

உள்நாட்டில் முழுமையாக வடிவமைக்கப்பட்ட ஏவுகணை முதல்முறையாக தென் கொரியா வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: முழுக்க முழுக்க தென் கொரியாவிலேயே உருவாக்கப்பட்ட இந்த ஏவுகணையின்மூலம் முதல்முறையாக செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. 3 நிலைகளில் இயங்கக்கூடிய, 'நூரி' என்ற இந்த ஏவுகணை பூமியிலிருந்து 700 கிமீ தொலைவில் செயற்கைக்கோளை துல்லியமாகச் செலுத்தியதாக அதிகாரிகள் கூறினர்.

---

1. இந்தியாவின் முதன்மை தகவல் உட்கட்டமைப்பைப் பாதுகாப்பதற்குப் பொறுப்பான நிறுவனமாகும்?

அ. தேசிய சைபர் ஒருங்கிணைப்பு மையம்

ஆ. தேசிய தகவலியல் மையம்

இ. ICERT

ஈ. NCIIPC ☑

✓ தேசிய முதன்மை தகவல் உட்கட்டமைப்பு பாதுகாப்பு மையம் (NCIIPC) என்பது இந்தியாவின் முதன்மையான தகவல் உட்கட்டமைப்பைப் பாதுகாக்கும் பொறுப்புவாய்ந்த நிறுவனமாகும். இது 2014–இல் IT சட்டம், 2000–இன் பிரிவு 70A இன்கீழ் நிறுவப்பட்டது. இது NSA–இன் கீழ் உள்ள உளவுத்துறை நிறுவனமான தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்பின் (NTRO) ஒருபகுதியாகும்.

2. சமீப செய்திகளில் குறிப்பிடப்பட்ட விடுதலை அறிவிப்புடன் (Emancipation Proclamation) தொடர்புடையது எது?

அ. பிளாக் லைவ்ஸ் மேட்டர் இயக்கம்

ஆ. கருக்கலைப்புக்கான உரிமை

இ. வாக்குரிமை

ஈ. அடிமைத்தனத்தின் முடிவு ☑

✓ அமெரிக்க முன்னாள் அதிபர் ஆபிரகாம் லிங்கன், பிரிவினைவாத கூட்டமைப்பு நாடுகளில் உள்ள ஆப்பிரிக்க அமெரிக்கர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்காக 1863 ஜன.1ஆம் தேதி அன்று விடுதலை அறிவிப்பை வெளியிட்டார். அடிமைகளை வைத்திருந்தோர் தங்கள் அடிமைகளிடம் இதுகுறித்த தகவலை மறைத்து வைத்ததால், ஈராண்டுகளுக்கும் மேலாக அது பயனற்றதாக இருந்தது. இறுதியாக அடிமைப்படுத்தப்பட்ட ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் 1865 ஜூன்.19 அன்று விடுவிக்கப்பட்டனர்.

3. இந்திய அரசியலமைப்பின் எந்தப்பிரிவின்கீழ் மாநிலங்களுக்கிடையேயான கவுன்சில் நிறுவப்பட்டது?

அ. பிரிவு 246

ஆ. பிரிவு 257

இ. பிரிவு 263 ☑

ஈ. பிரிவு 267

✓ இந்திய அரசியலமைப்பின் பிரிவு 263, பல்வேறு நிர்வாகப் பிரச்சனைகளைப்பற்றி விவாதிப்பதற்கான பொதுவான ஒரு மேடையில் அரசு நிறுவனங்களை ஒன்றிணைக்கும் மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சிலை நிறுவ குடியரத்தலைவருக்கு அதிகாரம் வழங்குகிறது. மாநிலங்களுக்கிடையேயான கவுன்சில் 1990–இல் நிறுவப்பட்டது. அதன் தலைவர் பிரதமரும் அதன் உறுப்பினர்களில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முதல்வர்கள் மற்றும் நிர்வாகிகளும் உள்ளனர்.

4. 'UNESCO மன்னர் ஹமத் பின் இசா அல்–கலிபா பரிசு' பின்வரும் எந்தத் துறையில் செய்யப்பட்ட பணிகளை அங்கீகரிக்கிறது?

அ. இலக்கியம்

ஆ. உயிரியல் அறிவியல்

இ. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

ஈ. தகவல் & தொடர்பு தொழில்நுட்பம் ☑

- ✓ UNESCO மன்னர் ஹமத் பின் இசா அல்–கலிபா பரிசு / கல்வியில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பங்களின் பயன்பாடு (ICT) குறித்த விருதானது 2005–இல் பஹ்ரைன் பேரரசின் உதவியுடன் நிறுவப்பட்டதாகும். இது கல்வித் துறையில் ICT–இன் புதுமையான பயன்பாடுகளை அங்கீகாரமளிக்கிறது.

5. இந்தியாவின் முதல், 'டார்க் ஸ்கை ரிசர்வ்' அமைந்துள்ள வனவுயிரிகள் சரணாலயம் எது?

அ. சாங்தாங் வனவுயிரிகள் சரணாலயம் ☑

ஆ. சக்ரஷிலா வனவுயிரிகள் சரணாலயம்

இ. காரகோரம் வனவுயிரிகள் சரணாலயம்

ஈ. போபிடோரா வனவுயிரிகள் சரணாலயம்

- ✓ இலடாக்கில் உள்ள சாங்தாங் வனவுயிரிகள் சரணாலயத்தின் ஒருபகுதி 'டார்க் ஸ்கை ரிசர்வ்' ஆக மாறவுள்ளது. இது வானியல்–சுற்றுலாவை மேம்படுத்த உதவும். இப்பகுதி 'ஹான்லே டார்க் ஸ்கை ரிசர்வ்' என அறிவிக்கப்பட்ட உடன், இரவு வானை மிதமிஞ்சிய ஒளி மாசுபாட்டிலிருந்து பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

6. வருடாந்திர BALTOPS கடற்படை பயிற்சியை நடத்துகிற சங்கம் எது?

அ. ஐரோப்பிய ஒன்றியம்

ஆ. நேட்டோ ☑

இ. எஸ்சிஓ

ஈ. ஆசியான்

- ✓ நேட்டோ 16 நாடுகளைச் சேர்ந்த 7000 மாலுமிகள், விமானப் பணியாளர்கள் மற்றும் கடற்படையினருடன் பால்டிக் கடலில் இருவாரகால அமெரிக்கா தலைமையிலான கடற்படைப்பயிற்சியைத் தொடங்கியது. ராணுவக்கூட்டணியில் சேர விண்ணப்பித்த பின்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றன. வருடந்தோறும் நடக்கும் BALTOPS கடற்படைப் பயிற்சி கடந்த 1972ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'D2M ஒளிபரப்பு' என்பதன் விரிவாக்கம் என்ன?

அ. Digital-to-Mobile

ஆ. Direct-to-Mobile ☑

இ. Device-to-Mobile

ஈ. Direct-to-Movie

- ✓ தொலைத்தொடர்புத் துறையும் இந்தியாவின் பொது சேவை ஒளிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதியும், 'Direct–to–Mobile (D2M) ஒளிபரப்பு' என்ற தொழில்நுட்பத்தின் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகின்றன. செயலில் உள்ள இணைய இணைப்பின் அவசியமில்லாமல், நேரடியாக திறன்பேசிகளில் காணொளி & பல்லூடக உள்ளடக்கத்தின் பிற வடிவங்களை ஒளிபரப்ப இது அனுமதிக்கிறது. இந்தத் தொழில்நுட்பம் அகலக்கற்றை இணைய பயன்பாடு பயன்பாட்டை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

8. 2022 – உலக உணவுப் பாதுகாப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Prevent foodborne risks.

ஆ. Safer Food, Better Health. ☑

இ. Manage foodborne infections.

ஈ. Safe food to children.

✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.7 அன்று உலக உணவுப்பாதுகாப்பு நாள் உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. உணவினால் ஏற்படும் இடர்களைத்தடுப்பது, கண்டறிவது மற்றும் நிர்வகித்தற்கான விழிப்புணர்வை ஊக்குவிப்பதே இந்த நாளின் நோக்கமாகும். உணவுப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2018ஆம் ஆண்டு ஐநா அவையால் இந்த நாள் அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு, உலக உணவு பாதுகாப்பு நாளின் கருப்பொருள், "Safer Food, Better Health" என்பதாகும். WHO–இன் அறிக்கையின்படி, உலகில் ஆண்டுதோறும் 600 மில்லியனுக்கும் அதிகமான பேர் உணவினால் பரவும் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

9. காலநிலை நடவடிக்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்காக, இந்தியா, சமீபத்தில் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

அ. பிரான்ஸ்

ஆ. கனடா ☑

இ. ஆஸ்திரேலியா

ஈ. சிலி

✓ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் நெகிழி மாசுபோன்ற துறைகளில் பல்வேறு முன்னெடுப்புகள்மூலம் காலநிலை நடவடிக்கை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியாவும் கனடாவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இருநாடுகளும் ஒத்துழைத்து, தகவல் பரிமாற்றம் செய்து, பரஸ்பர காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் இலக்குகளை அடையும்.

10. 'எம்பிரஸ்' என்ற சொகுசுக்கப்பல் எந்த மாநிலம்/UTஇலிருந்து கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்

✓ சென்னை துறைமுகத்திலிருந்து, 'எம்பிரஸ்' என்ற சொகுசுக் கப்பலை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அண்மையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டில் இருந்து இயக்கப்படும் முதல் சொகுசுக்கப்பல் இதுவாகக் கருதப்படுகிறது. பதினோரு மாடிகளைக் கொண்ட இந்தச் சுற்றுலாக் கப்பலில் 2000 பயணிகள் மற்றும் 800 பணியாளர்கள் வரை பயணிக்க முடியும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சூரியவொளிமூலம் இயங்கும் அடுப்பு: இந்தியன் ஆயில் நிறுவனம் உருவாக்கம்

வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ஆயிரத்தைத் தாண்டி விற்பனை செய்யப்படும் நிலையில், இந்தியன் ஆயில் நிறுவனம் சூரியவொளிமூலம் இயங்கும் அடுப்பை உருவாக்கியுள்ளது. சூரியவொளியின்மூலம் உருவாகும் வெப்ப ஆற்றலைச் சேமித்து வைத்து, இரவிலும் இந்த அடுப்பைப் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

'சூர்யா நுடன்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த அடுப்பின் விலை ₹18,000 முதல் ₹30,000 வரை இருக்கும் என்றும், 3 லட்சம் அடுப்புகளை உருவாக்கினால் இதன் விலை ₹10,000 முதல் ₹12,000 ஆயிரமாக குறையும் என்றும் இந்தியன் ஆயில் நிறுவனம் தெரிவித்தது.

---

2. மறுசுழற்சி செய்யப்படும் தங்கம்: 4–ஆவது இடத்தில் இந்தியா

பழைய நகைகளை மாற்றிவிட்டு, புதிய வடிவமைப்பைக்கொண்ட தங்க நகைகளை வாங்குவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன்காரணமாக இந்தியாவில் பழைய தங்க ஆபரணங்களை மறுசுழற்சி செய்வது அதிகரித்து உள்ளது. உலக தங்க கவுன்சிலின் அறிக்கையும் இதை உறுதி செய்கிறது.

கடந்த 2021–ஆம் ஆண்டில் மட்டும் 75 டன் தங்கத்தை இந்தியா மறுசுழற்சி செய்துள்ளது. இதில் சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியா 4–ஆவது இடம் வகிக்கிறது. சீனா, இத்தாலி, அமெரிக்கா ஆகிய நாடுகள் முதல் 3 இடங்களில் உள்ளதாக உலக தங்க கவுன்சிலின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

3. ஜூன் 30–இல் விண்ணில் பாய்கிறது பிஎஸ்எல்வி சி–53

மூன்று செயற்கைக்கோள்களுடன் பிஎஸ்எல்வி சி–53 ஏவுகலம் வரும் 30–ஆம் தேதி விண்ணில் ஏவப்படுகிறது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆராய்ச்சி மையத்தின் இரண்டாம் ஏவுதளத்திலிருந்து அன்றைய தினம் மாலை 6 மணிக்கு அந்த ஏவுகலம் செலுத்தப்படவிருக்கிறது. அதற்கான 25 மணி நேர கவுன்ட் டவுன் ஜூன் 29–ஆம் தேதி தொடங்கவுள்ளது.

சிங்கப்பூர் நாட்டின் புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள்கள் அதில் இடம்பெற்றுள்ளன. முழுக்க, முழுக்க வர்த்தக நடவடிக்கைகளுக்கான திட்டமாக இதனை இஸ்ரோ முன்னெடுத்துள்ளது. இஸ்ரோ தலைவராக சோமநாத் பொறுப்பேற்ற பிறகு செலுத்தப்படும் இரண்டாவது பிஎஸ்எல்வி ஏவுகலம் திட்டம் இதுவாகும்.

பிஎஸ்எல்வி சி–53 ஏவுகலம் தாங்கிச்செல்லும் டிஎஸ்–இஓ செயற்கைக்கோள், பூமியிலிருந்து 570 கிமீ உயரத்தில் சூரிய வட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்படவுள்ளது. பிரேசில் நாட்டில் வடிவமைக்கப்பட்ட அந்த செயற்கைக் கோள், சிங்கப்பூரின் புவி கண்காணிப்பு, வேளாண், வனம் சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இந்தச் செயற்கைக்கோள் அனைத்து பருவநிலைகளிலும் துல்லியமான படங்களை வழங்கும் திறன் கொண்டது. இதனுடன் ஆய்வுத்திட்டத்தின்கீழ் வடிவமைக்கப்பட்ட 2 செயற்கைக்கோள்களும் ஏவப்படவுள்ளன.

---

1. ஓசியானிக்ஸ் சிட்டி என்ற பெயரிலான மிதக்கும் நகரம் அமைக்கப்படவுள்ள நகரம் எது?



அ. மாலத்தீவுகள்

ஆ. மலேசியா

இ. தென் கொரியா ☑

ஈ. சிங்கப்பூர்

✓ உலகின் முதல் மிதக்கும் நகரமான ஓசியானிக்ஸ் சிட்டியை ஐநா இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அறிவித்தது. தென் கொரியாவின் இரண்டாவது பெரிய நகரமான புசான் கடற்கரையில் இது அமைக்கப்படவுள்ளது. அடுத்த ஆண்டு இதற்கானக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பாஷி வாய்க்கால், பசிபிக் பெருங்கடலில் உள்ள எந்த நீரிணையின் ஒரு பகுதியாகும்?

அ. தைவான் நீரிணை

ஆ. லூசன் நீரிணை ☑

இ. கரிமாடா நீரிணை

ஈ. மலாக்கா நீரிணை

✓ தென்சீனக்கடலை மேற்கு பசிபிக் பெருங்கடலுடன் இணைக்கும் பாஷி வாய்க்கால், பிலிப்பைன்ஸின் வடக்குத் தீவான லூசானுக்கும் தைவானின் ஆர்க்கிட் தீவுக்கும் இடையிலான நீர்வழிப்பாதையாகும். இது பிலிப்பைன்ஸ் கடலையும் தென் சீனக்கடலையும் இணைக்கும் லூசன் நீரிணையின் ஒருபகுதியாகும்.

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற உருசிய புறநில ஆட்சிப் பகுதியான கலினின்கிராட் அமைந்துள்ள கடல் எது?

அ. வட கடல்

ஆ. லாப்ரடார் கடல்

இ. பால்டிக் கடல் ☑

ஈ. பியூபோர்ட் கடல்

✓ உருசிய புறநில ஆட்சிப் பகுதியான கலினின்கிராட் கலினின்கிராட் பால்டிக் கடலில் அமைந்துள்ளது. இது லிதுவேனியாவிற்கும் போலந்துக்கும் இடையில் அமைந்துள்ளது. இது 1945 ஏப்ரலில் நாஜி ஜெர்மனியிடமிருந்து சோவியத் ஒன்றியத்தால் கைப்பற்றப்பட்டது. போட்ஸ்டாம் ஒப்பந்தத்தின் விளைவாக இது சோவியத் ஒன்றியத்தின் ஒருபகுதியாக மாறியது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைவிதிப்பின் காரணமாக லிதுவேனியா அதன் எல்லை வழியாக கலினின்கிராட்டுக்கு சரக்குகள் அனுப்பப்படுவதைத் தடை செய்ய முடிவெடுத்ததைத் தொடர்ந்து இது சமீபத்திய செய்திகளில் இடம்பெற்றது.

4. மனித உடலின் எந்தத் திசு / உறுப்பு மைலோடிஸ்பிளாஸ்டிக் நோய்க்குறியால் பாதிக்கப்படுகிறது?



அ. இரத்த அணுக்கள் ☑

ஆ. தைமஸ் சுரப்பி

இ. நிணநீர் நாளங்கள்

ஈ. கணையம்

✓ மைலோடிஸ்பிளாஸ்டிக் நோய்க்குறி என்பது ஓர் அரிய வகை இரத்தப்புற்றுநோயாகும்; இது எலும்பு மஜ்ஜையில் நலமான இரத்த அணுக்களை உருவாக்கும் உடலின் திறனைப்பாதிக்கிறது. இது இரத்த அணுக்களை உற்பத்தி

செய்யும் உடலின் திறனைத் தடுக்கிறது. இரத்தமாற்றம், கீமோதெரபி அல்லது ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை போன்றவற்றின்மூலம் இந்நோயைக் குணப்படுத்தலாம்.

5. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் NIPUN திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பான அமைப்பு எது?

அ. தேசிய திறன் பயிற்சி நிறுவனம்

ஆ. தேசிய திறன் மேம்பாட்டு நிதி

இ. தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் ☑

ஈ. தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில்

N·S·D·C National Skill Development Corporation Transforming the skill landscape

- ✓ மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகத்தின்கீழ் வரும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம், வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் NIPUN திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பாகும். இது இந்த முன்முயற்சியின்கீழ் சாத்தியமான பங்கேற்பாளர்களுக்கு பயிற்சியளிக்கும்.

6. 'கருடா ஏரோஸ்பேஸின்' விளம்பரத்தூதராக கையெழுத்திட்டுள்ள இந்தியர் யார்?

அ. சிவகார்த்திகேயன்

ஆ. மகேந்திர சிங் தோனி ☑

இ. இரஜினிகாந்த்

ஈ. கமல்ஹாசன்

- ✓ மகேந்திர சிங் தோனி கருடா ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் விளம்பரத்தூதராகவும் சிறுபான்மை பங்குதாரராகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இது சென்னையைச் சார்ந்த வானூர்தி மற்றும் விண்வெளி உதிரிபாக உற்பத்தி நிறுவனமாகும். அது ஆளில்லா வான்வழி வாகனங்களை வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல் ஆகியவற்றைக் கையாள்கிறது. குறைந்த விலை டிரோன்களை உருவாக்குவதில் அந்நிறுவனம் புகழ்பெற்றுள்ளது.

7. தனது மாநிலப்பட்டாம்பூச்சியாக, 'புளூ டியூக் – Blue Duke'ஐ அறிவித்த இந்திய மாநிலம்/UT எது?

அ. அருணாச்சல பிரதேசம்

ஆ. சிக்கிம் ☑

இ. நாகாலாந்து

ஈ. பஞ்சாப்

- ✓ சிக்கிம் மாநில முதலமைச்சர் பிரேம் சிங் தமாங், உலக சுற்றுச்சூழல் நாளை முன்னிட்டு, 'நீல டியூக்'கை மாநிலப் பட்டாம்பூச்சியாக அறிவித்தார். 'நீல டியூக்'கின் அறிவியல் பெயர் '*Bassarona durga*' ஆகும். சிக்கிம் மற்றும் கிழக்கு இமயமலையைப் பூர்வீகமாகக் கொண்டதாகும் இவை. 'நீல டியூக்', வனவுயிர்கள் பாதுகாப்புச் சட்டம், 1972–இன் அட்டவணை–2இன்கீழ் உள்ளது. இது இமயமலையில் ஒரு பாதுகாக்கப்பட்ட இனமாக உள்ளது. சிக்கிம் மாநிலத்தில் 720 வகையான பட்டாம்பூச்சிகள் காணப்படுகின்றன.

8. 2022 – சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?

அ. 120

ஆ. 140

இ. 160

ஈ. 180 ☑



- ✓ 2022 – சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை 180ஆக உள்ளது. 180 நாடுகள் இடம்பெற்று உள்ள இக்குறியீட்டில் இந்தியா மிகக்குறைந்த மதிப்பெண்களையே பெற்றுள்ளது. காலநிலை மாற்ற செயல்திறன், சுற்றுச்சூழல் நலம் மற்றும் சுற்றுச்சூழல் உயிராற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட 11 சிக்கல் வகைகளில் நாற்பது செயல்திறன் குறிகாட்டிகளில் அது நாடுகளை தரவரிசைப்படுத்தியுள்ளது. கொள்கை நடவடிக்கையின் அடிப்படையில் இந்த அளவுருக்களில் இந்தியாவின் செயல்திறன் மிகமிகமோசமாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

9. அண்மையில் சர்வதேச கிரிக்கெட்டில் 17,000 இரன்கள் எடுத்த ஜோ ரூட், எந்த நாட்டுக்காக விளையாடுகிறார்?

அ. தென்னாப்பிரிக்கா

ஆ. இங்கிலாந்து ☑

இ. ஆஸ்திரேலியா

ஈ. மேற்கிந்திய தீவுகள்

- ✓ சர்வதேச கிரிக்கெட்டில் 17,000 இரன்களைக் கடந்த முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமையை இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் பெற்றார். முன்னதாக, ஜோ ரூட் டெஸ்ட் கிரிக்கெட்டில் 10,000 இரன்களைக் கடந்திருந்தார். இந்தச் சாதனையை எட்டிய இரண்டாவது இங்கிலாந்து வீரரும் ஒட்டுமொத்தமாக 14ஆவது வீரரும் ஆனார் ஜோ ரூட். இப் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர் (15,921), ரிக்கி பாண்டிங் (13,378), ஜாக் காலிஸ் (13,289) ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

10. 2022–இல் FSSAI–இன் நான்காவது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் முதலிடம் பிடித்த மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்

- ✓ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் 4ஆவது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார். உணவுப் பாதுகாப்புச் சூழலில், போட்டி மற்றும் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை உருவாக்கும் நோக்கத்துடன் 2018–19ஆம் ஆண்டில், 5 அம்சங்களை அடிப்படையாகக்கொண்ட உணவுப் பாதுகாப்புக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ இந்த ஆண்டு, தரவரிசையின் அடிப்படையில் பெரிய மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்திலும், குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் இரண்டாவது இடத்திலும் உள்ளன. சிறிய மாநிலங்களில் கோவா முதலிடத்திலும், அதனை தொடர்ந்து மணிப்பூர், சிக்கிம் ஆகிய மாநிலங்களும் உள்ளன. யூனியன் பிரதேசங்களில் ஜம்மு & காஷ்மீர் முதலிடத்திலும், தில்லி இரண்டாமிடத்திலும், சண்டிகர் மூன்றாமிடத்திலும் உள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. NIA தலைவராக மூத்த ஐபிஎஸ் அதிகாரி தினகர் குப்தா நியமனம்

தேசிய புலனாய்வு முகமை (NIA) தலைவராக மூத்த இ கா ப அதிகாரி தினகர் குப்தா நியமிக்கப்படுவதாக மத்திய பணியாளர் அமைச்சகம் தெரிவித்தது. 1987 பஞ்சாப் இ கா ப பிரிவைச் சேர்ந்த தினகர் குப்தா, வரும் 2024 மார்ச்.31–ஆம் தேதி வரை அதாவது பணி ஓய்வுறும் வரை இந்தப்பொறுப்பில் நீடிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது நியமனத்துக்கு அமைச்சரவையின் நியமனக் குழுமம் ஒப்புதல் அளித்துவிட்டதாக மத்திய பணியாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

2. 24-06-2022 - 'கவியரசு' கண்ணதாசன் அவர்களின் 96ஆவது பிறந்தநாள்.

---

3. G20 மாநாடு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பு

ஜம்மு-காஷ்மீரில் வரும் 2023ஆம் ஆண்டில் G20 நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்புக் குழுவை அந்த மாநில அரசு அமைத்தது.

உலகின் மிகப்பெரிய பொருளாதார சக்திகளாக விளங்கும் அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட 20 நாடுகள் அங்கம் வகிக்கும் G20 கூட்டமைப்பின் அடுத்த கூட்டத்தொடர் 2023இல் ஜம்மு-காஷ்மீரில் நடைபெறுகிறது. இதனை இந்தியா தலைமையேற்று நடத்துகிறது. இதற்கான தூதராக மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், G20 நாடுகளின் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள ஜம்மு-காஷ்மீர் வீட்டுவசதி, நகர்ப்புற மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் தலைமையில், ஐவர்கொண்ட குழுவை அந்த மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது.

உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்துக்கு அதிகமாகவும், சர்வதேச வர்த்தகத்தில் 75 சதவீதத்தையும், மக்கள்தொகையில் 60 சதவீதத்தையும் G20 நாடுகள் கொண்டுள்ளன.

---

1. இந்திய அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணை பின்வரும் எதனை குறிக்கிறது?

அ. அதிகாரப்பூர்வ மொழிகள்

ஆ. நிலச்சீர்திருத்தங்கள்

இ. கட்சித்தாவல் தடை சட்டம் ☑

ஈ. பஞ்சாயத்து இராஜ்

✓ 52ஆவது திருத்தச்சட்டம், 1985இன் விளைவாக, கட்சித்தாவல் தடைச்சட்டம் எனப் பிரபலமாக அறியப்படும் பத்தாவது அட்டவணை, இந்திய அரசியலமைப்பின் ஒருபகுதியாக மாறியது. மற்றோர் அரசியல் கட்சிக்குத் தாவுவதன் அடிப்ப –டையில் சட்டமன்ற உறுப்பினர்களைத் தகுதிநீக்கம் செய்வதற்கு இது அனுமதிக்கிறது. மகாராஷ்டிர அரசியல் நெருக்கடி காரணமாக சமீபத்திய செய்திகளில் இடம்பெற்றது.

2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற வரதா ஆறு என்பது கீழ்க்காணும் எவ்வாற்றின் கிளையாறாகும்?

அ. கிருஷ்ணா ஆறு

ஆ. காவிரியாறு

இ. காளியாறு

ஈ. துங்கபத்திரை ஆறு ☑

✓ நடுக்கர்நாடகாவில் பாயும் வரதா ஆறு துங்கபத்திரை ஆற்றின் கிளையாறாகும். கர்நாடகா மாநில அரசு பெட்டி–வரதா ஆறுகளை இணைக்கும் திட்டத்திற்கு எதிராக சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் விமர்சனங்களைத் தற்சமயம் எதிர் கொண்டுவருகிறது. பெட்டி–வரதா ஆறுகளை இணைக்கும் திட்டம் உத்தரகன்னடாவில் உள்ள சிர்சியில் இருந்து ரைச்சூர் மற்றும் கொப்பல் மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்கு சுமார் 524 மில்லியன் கன மீட்டர் தண்ணீரை ஏற்றம் செய்ய எண்ணுகிறது. இத்திட்டம் மேற்குத்தொடர்ச்சி மலையின் சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த பகுதிகளில் உள்ள 2,125 ஏக்கர் காடுகளை அழிக்கும் என்று உள்ளூர் ஆர்வலர்கள் எச்சரித்து வருகின்றனர்.

3. NDA–இன் குடியரசுத்தலைவர் தேர்தல் வேட்பாளரான திரௌபதி முர்மு, எந்தப் பழங்குடியைச் சார்ந்தவர்?

அ. கோண்டு

ஆ. சந்தால் ☑

இ. பில்

ஈ. முண்டா

✓ சந்தால் பழங்குடிகள் கோண்டுகள் மற்றும் பில்களைத் தொடர்ந்து இந்தியாவின் மூன்றாவது பெரிய பழங்குடிச் சமூகமாக உள்ளது. சந்தால் பழங்குடிகள் ஜார்கண்ட், ஒடிசா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் பரவலாக வாழ்ந்து வருகிறார்கள். தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசுத்தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் திரௌபதி முர்முவின் சொந்த மாவட்டமான மயூர்பஞ்ச், சந்தால் மக்கள் அதிகம் வசிக்கும் மாவட்டங்களுள் ஒன்றாகும். திரௌபதி முர்மு, சந்தால் பழங்குடியினத்தைச் சேர்ந்தவராவார்.

4. சமீப செய்திகளில் இடம்பெற்ற இரகுராஜ்பூர், பின்வரும் எந்த வகையான ஓவியங்களுக்காக அறியப்படுகிறது?

அ. மதுபானி

ஆ. பட்டாச்சித்ரா ☑

இ. காளிகாட்

ஈ. பகாடி

✓ பட்டாச்சித்ரா ஓவியமானது ஒடிஸா மற்றும் மேற்கு வங்காளத்தின் பாரம்பரிய ஓவியமாகும். பாரம்பரிய துணிகளில் அச்சுகளை உருளச்செய்து உருவாக்கும் துணி அடிப்படையிலான ஓவியமான இவை 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். ஹிந்து புராணங்களைச்சித்தரிக்கும் ஜகந்நாதர் / வைஷ்ணவ பிரிவுகளைக் கருப்பொருளாகவும் கொண்ட ஓவியங்கள் இவை. வாடிகன் நகரத்தில், போப் பிரான்சிசுக்கு ஒடிஸா முதலமைச்சர் நவீன் பட்டாச்சித்திரம் ஒன்றை பரிசாக வழங்கியது அடுத்து சமீப செய்திகளில் இது இடம்பெற்றது. பூரி மாவட்டத்தில் உள்ள இரகுராஜ்பூர் கிராமத்தைச்சேர்ந்த கலைஞர் அபிந்த்ரா சுவைன் மற்றும் அவரது குடும்பத்தினரால் இந்தப் பட்டாச்சித்திரம் உருவாக்கப்பட்டது. இரகுராஜ்பூர், பட்டாச்சித்திரம் ஓவியங்களுக்கு உலகப்புகழ்பெற்றதாகும்.

5. மத்திய தகவல் தொடர்பு பணியகம் முன்பு என்னவாக அறியப்பட்டது?

அ. தொலைத்தொடர்புத் துறை

ஆ. C-DOT

இ. விளம்பர மற்றும் காட்சி விளம்பர இயக்குநரகம்

ஈ. வெளிக்கள மற்றும் தொடர்புப் பணியகம் ☑

✓ நடுவண் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகமானது, வெளிக்கள மற்றும் தொடர்புப் பணியகத்தை (BOC), நடுவண் தகவல்தொடர்புப் பணியகம் எனப்பெயர்மாற்றஞ்செய்துள்ளது. நடுவண் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் பழைய ஊடகப்பிரிவுகள் ஒன்றென இணைந்ததைத் தொடர்ந்து, கடந்த 2017–இல் BOC நிறுவப்பட்டது.

6. அண்மையில் வெளியிடப்பட்ட, 'ஆயுர்வேத ஆகார்' இலச்சினையானது கீழ்க்காணும் எந்த வண்ணத்தொனியில் வடிவமைக்கப்பட்டுள்ளது?

அ. சிவப்பு

ஆ. பச்சை ☑

இ. நீலம்

ஈ. பழுப்பு

✓ ஜூன்.7 அன்று உலக உணவுப்பாதுகாப்பு நாளை முன்னிட்டு, 'ஆயுர்வேத ஆகார்' இலச்சினையை மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார். 'ஆயுர்வேத ஆகார்' என்பது FSSAI விதிமுறைகளின் 'அட்டவணை A'இன் கீழ் உள்ள ஆயுர்வேத நூல்களில் விவரிக்கப்பட்டுள்ள செய்முறைகள், பொருட்கள் மற்றும் செயல்முறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட ஓர் உணவாகும்.

✓ பச்சை வண்ணத் தொனியில் வடிவமைக்கப்பட்டுள்ள இதன் இலச்சினையில் தேவநாகரி மற்றும் ஆங்கிலத்தில் 'ஆயுர்வேதம்' மற்றும் 'ஆகார்' என்ற சொற்களின் தொடக்க எழுத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

7. 'கீர் பவானி மேளா' கொண்டாடப்படுகிற இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. அருணாச்சல பிரதேசம்

ஆ. ஜம்மு & காஷ்மீர் ☑

இ. நாகாலாந்து

ஈ. பஞ்சாப்

✓ ஜம்மு மற்றும் காஷ்மீரின் கந்தர்பாலில் உள்ள புகழ்பெற்ற ரக்னியா தேவி கோவிலில் வருடாந்திர மாதா 'கீர்பவானி மேளா' தொடங்கியது. காஷ்மீரின் பல்வேறு சமூகங்களுக்கிடையில் பல நூற்றாண்டுகள் பழமையான கலாச்சாரம் மற்றும் சகோதரத்துவத்தின் சின்னமாக துல்முல்லா ஆலயம் உள்ளது. COVID–19 தொற்றுநோய் காரணமாக ஈராண்டுகளுக்குப்பிறகு இந்த மேளா கொண்டாடப்படுகிறது.

8. 'Revitalisation: Collective Action for the Ocean' **என்பது ஜூன்.8 அன்று கொண்டாடப்பட்ட எந்த நாளின் கருப் பொருளாகும்?**

அ. உலக கடல்வாழ் விலங்குகள் நாள்

ஆ. உலகப் பெருங்கடல்கள் நாள் ☑

இ. உலக கடற்கரை நாள்

ஈ. உலக அன்னை பூமி நாள்

✓ பெருங்கடல்களை எவ்வாறு பாதுகாப்பது மற்றும் எதிர்காலத்தில் அவற்றை நிலையாகப் பயன்படுத்துவது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐநா அவை ஜூன்.8–ஐ உலகப் பெருங்கடல்கள் நாளாக அறிவித்தது. "Revitalisation: Collective Action for the Ocean" என்பது 2022ஆம் ஆண்டின் உலகப் பெருங்கடல்கள் நாளின் கருப்பொருளாகும். இந்த ஆண்டின் (2022) கருப்பொருள் கடலுக்கு தீங்கு விளைவிப்பதை நிறுத்துவதோடல்லாமல், கூட்டுமுயற்சிகள்மூலம் கடல்சார் மீட்பு நடவடிக்கைகள் குறித்து கவனஞ்செலுத்துகிறது.

9. மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் முதல் திட்டமான ககன்யான் மற்றும் சமுத்திரயான் ஆகிய திட்டங்களுக்கு இந்தியா நிர்ணயித்துள்ள இலக்கு ஆண்டு எது?

அ. 2022

ஆ. 2023 ☑

இ. 2024

ஈ. 2025

✓ புவி அறிவியல் அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், 2023ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் இந்தியா தனது முதல் மனிதனை விண்ணுக்கு அனுப்பும் திட்டமான, 'ககன்யான்' மற்றும் 'சமுத்திரயான்' திட்டத்தை தொடங்கும் என்று அறிவித்தார். புது தில்லியில் உலகப் பெருங்கடல்கள் நாள் கொண்டாட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் இதுகுறித்து மேலும் கூறினார். இந்திய அரசாங்கம் விரைவில் நீலப் பொருளாதாரக் கொள்கையை வெளியிடும் என்றும் 2030 ஆம் ஆண்டளவில் கடல்சார் தொழில்களால் சுமார் 40 மில்லியன் மக்கள் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் என அவர் அறிவித்தார்.

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'EASE 5.0 சீர்திருத்தங்கள்' என்பதுடன் தொடர்புடையது எது?

அ. பல்கலைக்கழகங்கள்

ஆ. பொதுத்துறை வங்கிகள் ☑

இ. வானூர்தி நிலையங்கள்

ஈ. காவல் நிலையங்கள்

✓ Enhanced Access and Service Excellence–EASE 5.0 EASE Next திட்டத்தின் 'பொதுச் சீர்திருத்த நிகழ்ச்சி நிரல்' சமீபத்தில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் தொடங்கப்பட்டது. பொதுத்துறை வங்கிகளில் சீர்திருத்தங்களுக்காக அவை உருவாக்கப்பட்டுள்ளன. PSB மந்தன், 2022 ஆனது EASENext திட்டத்தை வெளியிட்டது; இது 2 முக்கிய முயற்சிகளை உள்ளடக்கியது; அதாவது EASE 5.0 சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மற்றும் தனிப்பட்ட வங்கியின் வணிக முன்னுரிமைகளின் அடிப்படையில் வங்கியின் குறிப்பிட்ட உத்திசார் 3–ஆண்டு செயல்திட்டமாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஆயத்த ஆடை உற்பத்தியில் நாட்டில் முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு; ஜவுளி உற்பத்தியிலும் இரண்டாம் இடம் வகிக்கிறது: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல்

மத்திய ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயல், மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் இரண்டாவது அதிக பங்களிப்பை வழங்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்றார். மொத்த மின்சார உற்பத்தியில், காற்றலை வாயிலாக அதிக பங்களிப்பை வழங்குவதில் தமிழ்நாடு உலக அளவில் ஒன்பதாம் இடத்தில் உள்ளதாகவும் குறிப்பிட்டார். கார் உற்பத்தியிலும் உலகின் பத்து பெரிய உற்பத்தி மையங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது.

நாட்டின் மொத்த ஜவுளி உற்பத்தி நிறுவனங்களில் மூன்றில் ஒரு பகுதி நிறுவனங்கள் அமைந்திருப்பதன்மூலம் தமிழ்நாடு, இந்தியாவின் ஜவுளி பள்ளத்தாக்காகவும், மொத்த நூல் உற்பத்தியில் நாற்பது சதவீதத்தை பெற்றிருப்பதன் மூலம் இந்தியாவின் நூல் கிண்ணமாகவும் திகழ்வதாக கூறினார்.

இந்தியாவில் உள்ள ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனங்களில் பாதி அளவுக்கு (13,000–ல் 6,500) தமிழ்நாட்டில் இருப்பதுடன், ஆயத்த ஆடை உற்பத்தியில் முதலிடத்திலும், ஜவுளி உற்பத்தியில் இரண்டாம் இடத்திலும் இருப்பதாக தெரிவித்தார். 35 சதவீத மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் துறையாக ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை தொழில் துறை திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புத்தெழுச்சி பெறும் ஜவுளித்தொழில்

ஜவுளித் தொழில் துறை கொவிட் நெருக்கடியை வாய்ப்பாக மாற்றி, 3 மாத காலத்திற்குள் இரண்டாவது பெரிய ஏற்றுமதியாளராக உருவெடுத்துள்ளது. COVID பாதிப்புக்கு பிந்தைய காலத்தில், ஜவுளி ஏற்றுமதி சாதனை அளவாக 44 பில்லியன் டாலரை எட்டியுள்ள நிலையில், 2025ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலரை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். தற்சார்பு இந்தியாவுக்கு மிக முக்கியமாக திகழும் ஜவுளித்துறை, ஏற்றுமதி, வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்றவற்றிலும் முன்னணியில் இருப்பதாக அவர் கூறினார்.

மாற்றத்தை ஏற்படுத்தும் சீர்திருத்தங்கள்

ஜவுளித்தொழிலுக்கான உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை: எம்எம்எஃப் மற்றும் தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு ₹10,683 கோடி மதிப்பிலான ஊக்கத்தொகை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாட்டில் ஆறு நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ரூ.964 கோடி முதலீடும், 12 ஆயிரத்து 600 பேருக்கு வேலைவாய்ப்பும், ரூ.14,600 கோடி விற்று வரவும், ரூ. 360 கோடி அளவுக்கு ஊக்கத்தொகை கிடைக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் மித்ரா பூங்காக்கள்:

பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆயத்த ஆடை (PM MITRA) பூங்கா திட்டத்தின் கீழ் 7 பூங்காக்களை உலகத்தரம்வாய்ந்த கட்டமைப்புடன், ₹4,045 கோடி மதிப்பீட்டில், 2027–2028க்குள் அமைக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டின் விருதுநகரில் பிரதமரின் மித்ரா பூங்காவை அமைக்க தமிழ்நாடு அரசு திட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

ஒருங்கிணைந்த ஜவுளித் தொழில் பூங்கா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ₹740 கோடி செலவில் 8 பூங்காக்களை அமைக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதில் 4 பூங்காக்களின் பணிகள் முடிவடைந்துள்ளது. 4 இடங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன.

தமிழ்நாட்டின் கொலப்பலூரில் தொழில்நுட்ப ஜவுளி பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கோவையில் தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சி சங்கம் SITRA சார்பில் மெடிடெக் உயர் சிறப்பு மையமும், PSG பொறியியல் கல்லூரியில் இந்து டெக் உயர் சிறப்பு மையமும் அமைக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியுதவி திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 5 ஆண்டுகளில் ₹8,024 கோடி நிதியுதவி மற்றும் ₹595 கோடி மானிய உதவியுடன், சுமார் 6 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் விதமாக, மொத்தம் 1405 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சமர்த் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 2 லட்சம் பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இதுவரை ₹1.71 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2. திருப்பூர், விழுப்புரத்தில் மினி டைடல் பூங்காக்கள்: முதல்வர் அடிக்கல்

திருப்பூர், விழுப்புரம் மாவட்டங்களில் ₹76.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மினி டைடல் பூங்காக்களுக்கு முதல்வர் மு க ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

டைடல் பூங்காவில் ₹212 கோடியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையம், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஓசூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் ₹33.46 கோடியில் அமைக்கப்பட்டு உள்ள 2 சிப்காட் தொழில் புத்தாக்க மையங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

திருப்பூர், விழுப்புரம் மாவட்டங்களில் ₹76.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மினி டைடல் பூங்காக்களுக்கு –ம் காணொலிக்காட்சிமூலம் அடிக்கல் நாட்டினார்.

இரண்டாவது பொருளாதார மாநிலம்: 295 பில்லியன் அமெரிக்க டாலர் உள்நாட்டு உற்பத்தி என்ற வகையில், அகில இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

இவற்றோடு மனநிறைவு அடைந்துவிடாமல், 2030–ஆம் ஆண்டில், தமிழகத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ₹78 லட்சம் கோடி) பொருளாதாரமாக வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்றார்.

2. பத்திரிகையாளர் மாலனுக்கு சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பு விருது

நிகழாண்டு சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்புக்கான விருதுக்கு எழுத்தாளரும், மூத்த பத்திரிகையாளருமான மாலன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். சைரஸ் மிஸ்திரி எழுதிய ஆங்கில நாவலான 'குரோனிக்கல் ஆப் கார்ப்ஸ் பியரர்' நூலை 'ஒரு பிணந்தூக்கியின் வரலாற்றுக்குறிப்புகள்' என்ற தலைப்பில் மாலன் தமிழில் மொழிபெயர்த்தமைக்காக இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

சாகித்திய அகாதெமி சார்பில் ஆண்டுதோறும் சிறந்த மொழியாக்கப் படைப்புகளுக்கு விருது வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி நிகழாண்டில் 22 இந்திய மொழிகளில் வெளிவந்த மொழிபெயர்ப்பு நூல்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. விருது பெற்றோர்க்கு ₹50,000 ரொக்கமும் செப்புப்பட்டயமும் வழங்கப்படவிருக்கிறது.

3. FIFA 17 வயது உலகக்கோப்பை: குரூப் ஏ பிரிவில் இந்தியா

வரும் அக்டோர் மாதம் நடைபெறவுள்ள FIFA 17 வயது மகளிர் உலகக்கோப்பை போட்டியில் குரூப் ஏ பிரிவில் இந்தியா இடம்பெற்றுள்ளது. சர்வதேச கால்பந்து சம்மேளனம் (FIFA), அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு (AIFF) சார்பில் இந்தியாவில் உலகக்கோப்பை கால்பந்து போட்டி வரும் அக்.11 முதல் 30–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. புவனேசுவரம், கோவா, நவி மும்பை உள்ளிட்ட 3 நகரங்களில் நடைபெறும் இப்போட்டியில் மொத்தம் 16 அணிகள் கலந்துகொள்கின்றன.

குரூப் ஏ பிரிவில் இந்தியா:

போட்டியை நடத்தும் இந்தியா, குரூப் ஏ பிரிவில் வலுவான அமெரிக்கா, பிரேசில், மொராக்கோ உள்ளிட்ட நாடுகளுடன் இடம்பெற்றுள்ளது. குரூப் பி பிரிவில் ஜெர்மனி, நைஜீரியா, சிலி, நியூசிலாந்தும், குரூப் சி பிரிவில் ஸ்பெயின், கொலம்பியா, மெக்ஸிகோ, சீனாவும், குரூப் டி பிரிவில் ஜப்பான், தான்சானியா, கனடா, பிரான்ஸ் அணிகளும் இடம்பெற்றுள்ளன.

4. NITI ஆயோக்கின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக பரமேஸ்வரன் நியமனம்!

NITI ஆயோக் தலைமை நிர்வாக அதிகாரியாக பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய திட்டக்குழுவுக்கு மாற்றாக கடந்த 2015இல் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு உருவாக்கிய அமைப்பு NITI ஆயோக். தேசிய வளர்ச்சிக் கொள்கைகளை இது பரிந்துரை செய்கிறது.

இதன் அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருக்கும் அமிதாப் காந்தின் பதவிக்காலம் வருகிற ஜூன்.30 அன்று நிறைவடைவதையடுத்து, பரமேஸ்வரன் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் அறிவிப்பின்படி, ஆரம்ப பதவிக்காலமாக ஈராண்டுகள் பதவிவகிப்பார் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

5. G7 மாநாடு: பிரதமர் மோடி ஜெர்மனி பயணம்

G7 மாநாட்டில் பங்கேற்க விரைவில் பிரதமர் மோடி ஜெர்மனி செல்லவுள்ளார்.

ஜெர்மனி அதிபர் ஓலாப் ஸ்கோல்ஸின் அழைப்பின் பேரில் G7 மாநாட்டில் கலந்துகொள்ள பிரதமர் மோடி விரைவில் ஜெர்மனி செல்கிறார். ஜுன்.26, 27 தேதிகளில் நடக்கும் மாநாட்டில் சுற்றுச்சூழல், பருவநிலை, எரிசக்தி, உணவுப் பாதுகாப்பு, பாலின சமத்துவம், குடியரசு மற்றும் சர்வதேச உறவு ஆகியவை குறித்து விவாதிக்கப்படும் என இந்திய வெளியுறவுத்துறை அறிவித்துள்ளது. இம்மாநாட்டில் பங்கேற்க அர்ஜெண்டினா, இந்தோனேசியா, செனகல் மற்றும் தென்னாப்பிரிக்கா நாடுகளுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

---

6. வங்கதேசத்தின் நீளமான பாலம்

வங்கதேசத்தில் பத்மா நதியின் குறுக்கே சுமார் ₹2,700 கோடியில் கட்டப்பட்ட 6.15 கி.மீ. நீளம் கொண்ட பாலத்தை பிரதமர் ஷேக் ஹசீனா திறந்துவைத்தார். தலைநகரம் டாக்காவையும் நாட்டின் தென்மேற்குப் பகுதியையும் இணைக்கும் வகையில் பத்மா நதியின் குறுக்கே சாலை–ரயில் பாலமாக இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. வெளிநாடுகளின் நிதியுதவி ஏதுமின்றி இந்தப் பாலத்தை வங்கதேச அரசு கட்டியுள்ளது. நாட்டின் மிகநீண்ட இந்தப் பாலத்தை பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

---

1. ஐநா பொதுச்சேவை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஜூன்.18

ஆ. ஜூன்.21

இ. ஜூன்.23 ☑

ஈ. ஜூன்.25

✓ உலகெங்கிலும் உள்ள அனைத்து துறைகளின் வளர்ச்சியை உறுதிசெய்வதில் அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு ஊழியர்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காக ஐநா பொதுச்சேவை நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.23 அன்று அனுசரிக்கப்படுகிறது. "Building back better from COVID-19: Enhancing innovative partnerships to meet the Sustainable Development Goals" என்பது 2022-இல் அனுசரிக்கப்பட்ட இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

2. ஐநா அவையின் பொதுச்சேவை விருதுகளால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட, 'மோ பேருந்து சேவை'யை தொடங்கிய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. தெலுங்கானா

ஆ. புது தில்லி

இ. மேற்கு வங்கம்

ஈ. ஒடிஸா ☑

✓ ஒடிஸாவின் தலைநகர மண்டல நகர்ப்புற போக்குவரத்து (CRUT) ஆணையம், பெண் பயணிகளுக்கான நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் பாதுகாப்பான போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக 'மோ பேருந்து சேவை'யை கடந்த 2018 நவம்பரில் அறிமுகப்படுத்தியது. நடப்பு 2022ஆம் ஆண்டிற்கான ஐநா-இன் பொதுச்சேவை விருதுகளால் இந்தச் சேவை அண்மையில் அங்கீகரிக்கப்பட்டது.

3. இந்தியா அண்மையில் எந்த நாட்டுடன் இணைந்து 'காமன்வெல்த் டிப்ளமேடிக் அகாடமி' திட்டத்தை அறிவித்தது?

அ. ஆஸ்திரேலியா

ஆ. இங்கிலாந்து ☑

இ. இத்தாலி

ஈ. பிரான்ஸ்

✓ இங்கிலாந்து (UK) மற்றும் இந்தியாவின் வெளியுறவு அமைச்சர்களால் இந்தியா-இங்கிலாந்து இணைந்த கூட்டுத் திட்டமான, 'காமன்வெல்த் டிப்ளமேடிக் அகாடமி' திட்டம் அண்மையில் அறிவிக்கப்பட்டது. அனைத்து காமன்வெல்த் உறுப்புநாடுகளின் தூதரக அதிகாரிகளை உலக அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தும் வளர்ந்துவரும் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான திறன்களில் நிபுணத்துவம் வாய்ந்தவராக மாற்றுவதற்கு இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அகாடமி நிகழ்வு புதுதில்லியில் நடத்தப்படும்.

✓ ஜூன்.24 முதல் ஜூன்.25 வரை கிழக்கு ஆப்பிரிக்காவின் ருவாண்டாவில் நடைபெற்ற 26ஆவது காமன்வெல்த் அரச தலைவர்கள் மாநாட்டின்போது (CHOGM) இது அறிவிக்கப்பட்டது.

4. நார்கோடிக் மருந்துகள் மற்றும் உளச்சார்புள்ள பொருட்கள் சட்டம், 1985 ஆனது எந்த மத்திய அமைச்சகத்தின் அதிகார வரம்பிற்கு (ஜூன் 2022 நிலவரப்படி) உட்பட்டதாக உள்ளது?

அ. நிதி அமைச்சகம் ☑

ஆ. வணிகம் & தொழிற்துறை அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. சட்டம் & நீதி அமைச்சகம்

✓ நிதியமைச்சகத்தின்கீழ் உள்ள வருவாய்த்துறை, 1985ஆம் ஆண்டின் நார்கோடிக் மருந்துகள் மற்றும் உளச்சார்புள்ள பொருட்கள் சட்டத்தை நிர்வகிக்கிறது. இந்தச் சட்டத்தின் நிர்வாகத்தை நிதியமைச்சகத்திடம் இருந்து நடுவண் உள்துறை அமைச்சகத்திற்கு மாற்ற நடுவணரசு திட்டமிட்டு, போதைப்பொருள் தொடர்பான அனைத்துப் பிரச்சனைகளையும் ஒரே துறையின்கீழ் கொண்டுவர எண்ணுகிறது.

5. 'MEDISEP' என்ற விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அறிவிக்கவுள்ள மாநிலம் எது?

அ. கேரளா ☑

ஆ. பீகார்

இ. குஜராத்

ஈ. மத்திய பிரதேசம்

✓ கேரள மாநில அரசு MEDISEP திட்டத்தை 2022 ஜூலை.1 முதல் தொடங்கவுள்ளது. இது மாநில அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர் மற்றும் அவர்களது தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டமாகும். இது ஆண்டுக்கு ₹3 இலட்சம் வரையிலான விரிவான காப்பீட்டுடன் இலவச மருத்துவ உதவியை வழங்கும்.

6. 'உலக முதலீட்டு அறிக்கை' என்பது கீழ்க்காணும் எந்த நிறுவனத்தின் முதன்மை அறிக்கையாகும்?

அ. IMF

ஆ. உலக வங்கி

இ. UNCTAD ☑

ஈ. WTO

✓ அதன் சமீபத்திய உலக முதலீட்டு அறிக்கையில், வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐநா அமைப்பு (UNCTAD) இந்தியாவுக்கான அந்நிய நேரடி முதலீடு முந்தைய ஆண்டில் இருந்த $64 பில்லியன் டாலரிலிருந்து 2021–இல் $45 பில்லியன் டாலராக குறைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது. 2021 ஆங்கில ஆண்டில் அந்நிய நேரடி முதலீட்டை (FDI) அதிகமாகப் பெறும் நாடுகளுள் இந்தியாவின் தரவரிசை ஓரிடம் முன்னேறி 7ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. அமெரிக்கா ($367 பில்லியன்) அந்நிய நேரடி முதலீட்டில் முதலிடத்தில் உள்ளது.

7. 2022–இல் ஐநா குளோபல் காம்பாக்ட் நெட்வொர்க்கால் குளோபல் SDG முன்னோடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் யார்?

அ. இராமகிருஷ்ணா முக்கவில்லி ☑

ஆ. P V சிந்து

இ. யாஷ் துல்

ஈ. சுமந்த் சின்ஹா

✓ ஐதராபாத்தைச் சார்ந்த துளிர் நிறுவனமான மைத்ரி அக்வாடெக்கின் தலைவரான ராமகிருஷ்ணா முக்கவில்லி, ஐநா குளோபல் காம்பாக்ட் நெட்வொர்க்கால் (UNGC) குளோபல் SDG முன்னோடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2022ஆம் ஆண்டிற்கான 10 புதிய SDG முன்னோடிகளில் ஒருவராக UNGCஆல் அங்கீகரிக்கப்பட்ட முதல் இந்தியர் இவர். முன்னதாக ஐக்கிய நாடுகள் குளோபல் காம்பாக்ட் நெட்வொர்க் இந்தியாவால் இந்தியாவின் SDG முன்னோடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வளிமண்டல நீர் உற்பத்தியைப் பயன்படுத்தி, அவரது நிறுவனம் வளியிலிருந்து 100 மில்லியன் லிட்டர் தூய நீரை உருவாக்கியுள்ளது.

8. இங்கிலாந்தால், 'Companion of Honour' என்று அறிவிக்கப்பட்ட இந்திய எழுத்தாளர் யார்?

அ. இரஸ்கின் பாண்ட்

ஆ. சல்மான் ருஷ்டி ☑

இ. அருந்ததி ராய்

ஈ. விக்ரம் சேத்

✓ இந்திய எழுத்தாளரான சல்மான் ருஷ்டி, இலக்கியத்திற்கான சேவைகளுக்காக இங்கிலாந்து, 'மரியாதைக்குரிய தோழராக' அறிவிக்கப்பட்டார். இராணியின் பவள விழாவைக் குறிக்கும் நான்கு நாட்கள் கொண்டாட்டத்தின்போது 'மிட்நைட்ஸ் சில்ட்ரனின்' ஆசிரியரான சல்மான் ருஷ்டி கௌரவிக்கப்பட்டார். அவர் இதற்கு முன்பு கடந்த 2007–இல் 'நைட்ஹூட்' பட்டம் பெற்றார். 'கம்பேனியன் ஆப் ஹானர்' என்பது இலக்கியத்திற்கான சேவைகளுக்காக எந்த நேரத்திலும் 65 பேர் மட்டுமே உறுப்பினர்களாக இருக்கும் ஒரு பிரத்யேக குழுமம் ஆகும்.

9. பன்னாட்டு செலவாணி நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் துறையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

அ. உர்ஜித் படேல்

ஆ. நிர்மலா சீதாராமன்

இ. கிருஷ்ணா சீனிவாசன் ☑

ஈ. வைரல் ஆச்சார்யா

✓ பன்னாட்டு செலவாணி நிதியத்தின் (IMF) ஆசிய மற்றும் பசிபிக் துறையின் இயக்குநராக இந்தியாவைச் சார்ந்த கிருஷ்ணா சீனிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார். IMFஇல் 27 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்த அவர், சிறிய பசிபிக் மாகாணங்களான பிஜி மற்றும் வனுவாட்டு மற்றும் சீனா மற்றும் கொரியாபோன்ற அமைப்பு ரீதியாக முக்கியமான நாடுகளின் மீதான துறையின் கண்காணிப்புப் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.

10. 'தயா பே அணுவுலை நியூட்ரினோ பரிசோதனையகம்' செயல்படுகிற நாடு எது?



அ. சீனா ☑

ஆ. உருசியா

இ. இஸ்ரேல்

ஈ. ஆஸ்திரேலியா

✓ தயா விரிகுடா அணுவுலை நியூட்ரினோ பரிசோதனையகமானது சீனாவின் குவாங்டாங்கில் செயல்பட்டு வருகிறது. இது ஹாங்காங்கிலிருந்து வடகிழக்கே சுமார் 52 கிமீ தொலைவில் தயா விரிகுடாவில் அமைந்துள்ளது. பன்னாட்டு ஒத்துழைப்பின்கீழ் சீனா, சிலி, அமெரிக்கா, தைவான், உருசியா மற்றும் செக் குடியரசு ஆராய்ச்சியாளர்கள் இங்கு பணியில் உள்ளனர். இதன் உணர்கருவிகள் அருகிலுள்ள அணுமின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து ஸ்ட்ரீமிங் செய்யும் ஆன்டிநியூட்ரினோக்களால் உருவாக்கப்பட்ட ஒளி சமிக்ஞைகளை பெற்றுக்கொள்கின்றன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சுகாதாரக் கட்டமைப்பு: தமிழநாட்டுக்கு ₹404 கோடி: மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா

தமிழ்நாட்டின் சுகாதார உட்கட்டமைப்புத் திட்டத்துக்காக மத்திய அரசு ₹404 கோடி ஒதுக்கியுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

தமிழகத்தில் செலுத்தப்பட்டுள்ள 11 கோடியே 26 லட்சம் கரோனா தடுப்பூசிகளில் 94 சதவீதம் முதல் தவணை, 82 சதவீதம் இரண்டாவது தவணை.

காசநோய் பாதிப்பு: 2025–ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் காசநோயை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில், பொதுநோக்கம் உள்ள எந்த ஒரு நபரும், அரசு சாராத அல்லது அரசு சார்ந்த, தனியார் மற்றும் அரசு நிறுவனங்களைச் சேர்ந்த தனிநபர்கள் காசநோயாளிகளைத் தத்தெடுக்கலாம்.

தமிழ்நாட்டின் 17 மாவட்டங்களில் மலேரியா பாதிப்பு இல்லை. யானைக்கால் நோயை தமிழ்நாடு முற்றிலும் ஒழித்துள்ளது.

தேசிய டயாலிசிஸ் திட்டம்: 2030–ஆம் ஆண்டுக்குள் நாட்டிலிருந்து மலேரியாவை முற்றிலும் ஒழிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது. பிரதமரின் தேசிய டயாலிசிஸ் திட்டத்தின்கீழ், 'ஒரே தேசம் ஒரே டயாலிசிஸ்' திட்டத்தை பிரதமர் விரைவில் தொடக்கிவைப்பார். அதன்மூலம், டயாலிசிஸ் தேவை ஏற்படும் நோயாளி, நாட்டின் எந்த ஒரு பகுதியிலிருந்தும் அந்த வசதியைப்பெற முடியும்.

ஆயுஷ்மான் பாரத் – சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் திட்டத்தின் கீழ் 2022, டிசம்பருக்குள் 9,135 சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் தற்போது 7,052 மையங்கள் (ஜூன் 2022 வரை) அந்தத் திட்டத்தின்கீழ் செயல்படுகின்றன. இந்த மையங்களில் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், பொதுவான புற்றுநோய் உள்ளிட்டவற்றுக்கு இதுவரை (மார்ச் 2022 வரை) 542.07 இலட்சம் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

---

2. முகக்கவசம் அணியாவிடில் அபராதம்: தமிழ்நாடு அரசு அறிவிப்பு

முகக்கவசம் அணியாதவர்கள், COVID நோய்த்தடுப்பு விதிகளைக் கடைப்பிடிக்காதோர்க்கு அபராதம் விதிக்கப்படும்.

இதுகுறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

பொது இடங்களில் முகக்கவசம் அணியாமல் இருப்பவர்களிடமும், COVID–19 வழிமுறைகளை முறையாக கடைப் பிடிக்காதவர்கள் மீதும் தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு பொதுச்சுகாதாரச்சட்டம், 1939–இன்படி இனி அபராதம் விதிக்கப்படும்.

---

1. $600 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான உலகளாவிய உட்கட்டமைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்திய கூட்டமைப்பு எது?

அ. BRICS

ஆ. G7 ☑

இ. G20

ஈ. ஐரோப்பிய ஒன்றியம்

- ✓ அமெரிக்க அதிபர் ஜோ பிடன் மற்றும் பிற G7 தலைவர்கள் ஜெர்மனியில் உள்ள சுக்லோஸ் எல்மாவ் என்ற இடத்தில் நடைபெற்ற வருடாந்திர கூட்டத்தில், 'உலகளாவிய உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டிற்கான கூட்டாண்மை'யை மீண்டும் தொடங்கினர். இது வளரும் நாடுகளின் உட்கட்டமைப்புக்கு நிதியளிப்பதற்கும், சீனாவின் பட்டை மற்றும் பாதை திட்டத்தை எதிர்ப்பதற்கும் 5 ஆண்டுகளில் $600 பில்லியன் டாலர்களை தனியார் மற்றும் பொது நிதியில் திரட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ ஐந்து ஆண்டுகளில் அமெரிக்கா $200 பில்லியன் டாலர்களை மானியங்கள், கூட்டாட்சி நிதிகள் மற்றும் தனியார் முதலீட்டில் திரட்டும், ஐரோப்பா 300 பில்லியன் யூரோக்களை திரட்டும்.

2. 'EIU உலகளாவிய வாழத்தகுந்த நகரங்கள் குறியீட்டின்'படி, உலகில் மிகவும் வாழத்தகுந்த நகரம் எது?

அ. லண்டன்

ஆ. வியன்னா ☑

இ. நாகர்கோவில்

ஈ. ஜெனிவா

- ✓ Economist Intelligence Unit (EIU) ஆனது, 2022ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் வாழத்தகுந்த நகரங்களின் (Global Liveability Index) வருடாந்திர தரவரிசையை வெளியிட்டது. உட்கட்டமைப்பு, அரசியல் நிலைத்தன்மை, குற்ற விகிதங்கள் & பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் மொத்தம் 173 நகரங்கள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. வியன்னா (ஆஸ்திரியா), கோபன்ஹேகன் (டென்மார்க்) மற்றும் சூரிச் (சுவிச்சர்லாந்து) ஆகியவை இந்தக்குறியீட்டில் முதல் மூன்று இடங்களில் உள்ள நகரங்களாகும்.

3. 'குறு–சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஜூன்.18

ஆ. ஜூன்.21

இ. ஜூன்.27 ☑

ஈ. ஜூன்.30

- ✓ ஜூன் 27, குறு–சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSMEs) நாளாகக் கொண்டாடப்படுகிறது. உலகளாவிய பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கு MSME–களின் பங்களிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்டது இந்த நாள். ஐநா பொதுச்சபையானது 2017ஆம் ஆண்டு இந்நாளை அறிவித்தது.

4. 'சுல்ஜானா' என்ற திட எரிபொருளில் இயங்கும் ஏவுகணையை ஏவியுள்ள நாடு எது?

அ. இஸ்ரேல் **ஆ. ஈரான் ☑**

இ. ரஷ்யா ஈ. வட கொரியா

✓ ஈரான், 'சுல்ஜானா' என்ற பெயரில் திட எரிபொருளில் இயங்கும் ஏவுகணையை விண்ணில் செலுத்தியுள்ளது. 25.5 மீ நீளமுள்ள இந்த ஏவுகணை, 220 கிலோ எடையுள்ள செயற்கைக்கோளை சுமந்துசெல்லும் திறன்கொண்டது. இச்செயற்கைக்கோள்கள் பூமியின் தாழ்சுற்றுப்பாதையில் தரவுகளைச் சேகரிக்கும். முகமது நபியின் பேரனான இமாம் ஹுசைனின் குதிரையின் பெயர் 'சுல்ஜானா' ஆகும்.

5. NITI ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரியாக (அமிதாப் காந்த்க்குப் பிறகு) நியமிக்கப்பட்டவர் யார்?

அ. உர்ஜித் படேல்

ஆ. சுபாஷ் சந்திர கார்க்

இ. பரமேஸ்வரன் ☑

ஈ. ராஜேஷ் பன்சால்

✓ 1981ஆம் ஆண்டு உத்தரபிரதேச தொகுதியின் இஆப அதிகாரியான பரமேஸ்வரன், NITI ஆயோக்கின் தலைமைச் செயலதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய அரசாங்கத்தின் தூய்மை இந்தியா இயக்கத்தை வழிநடத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் முன்னாள் செயலாளரும் ஆவார் இவர். இந்த ஆண்டு ஜூன்.30ஆம் தேதி ஓய்வுறும் அமிதாப் காந்த்க்குப் பிறகு புதிய தலைமைச் செயலதிகாரி அவர் பதவியேற்றார்.

6. கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அணு எரிபொருளை வழங்கிய நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. ரஷ்யா ☑

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. சீனா

✓ கூடங்குளம் அணுமின் நிலையத்தின் அலகு 1 & 2–க்கு, ரஷ்யாவின் ரோசாட்டம் ஸ்டேட் கார்ப்பரேஷன், ஏற்கனவே உள்ளதைவிட நம்பகமான மற்றும் மலிவான அணு எரிபொருளின் முதல் தொகுதிகளை வழங்கியது. தற்போதுள்ள எரிபொருள் 'TVS–2M அணு எரிபொருள்' ஆகும். அது தீர்ந்தவுடன் இந்தப் புதிய எரிபொருள் நிரப்பப்படும். அதன்பின், அணுமின்னுற்பத்தி அலகு–1 18 மாத எரிபொருள் சுழற்சியில் செயல்படத் தொடங்கும்.

7. உலக வர்த்தக அமைப்பின் (WTO) 12ஆவது அமைச்சர்கள் மாநாடு (MC12) நடைபெறும் இடம் எது?

அ. ஜெனிவா ☑

ஆ. டோக்கியோ

இ. நியூயார்க்

ஈ. பாரிஸ்

✓ ஜெனிவாவில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் (WTO) 12ஆவது அமைச்சர்கள் மாநாட்டில் (MC12) இந்தியா சார்பில் மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் கலந்துகொண்டார். MC12–இன் முழுமையான அமர்வில் அமைச்சர் பேசுகையில், உணவுப்பாதுகாப்பிற்கான பொது இருப்புப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண்பது முதன்மையான முன்னுரிமையாக இருக்கவேண்டும் எனக்கூறினார். 2021–இல் WTOஇல் நிரந்தர பங்கு வைத்திருப்பதற்கான தீர்வுக்கான G–33 திட்டத்திற்கு இந்தியா இணை அனுசரணை வழங்கியது.

8. விண்வெளியில் சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான திட்டத்தை அறிவித்துள்ள நாடு எது?

அ. இந்தியா ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

இ. சீனா ☑ ஈ. தென் கொரியா

✓ புதுப்பிக்கப்பட்ட திட்டத்தின் ஒருபகுதியாக, 2028ஆம் ஆண்டில் வற்றாத மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை விண்வெளியில் தொடங்க திட்டமிட்டுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

✓ முன்னதாக, 2030ஆம் ஆண்டுக்குள் 1 MW சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை விண்வெளியில் நிறுவ சீனா இலக்கு வைத்துள்ளது. 400 கிமீ உயரத்திலிருந்து தரைக்கு கம்பியில்லா மின்சாரப் பரிமாற்ற தொழில்நுட்பத்தைச் சோதிக்க 2028ஆம் ஆண்டில் சீனா ஒரு செயற்கைக்கோளை ஏவவுள்ளது. இது சூரிய ஆற்றலை நுண்ணலை அல்லது லேசர் அலைகளாக மாற்றும்.

9. இந்தியக் கடற்படையின் எந்த உள்நாட்டு ஏவுகணை தாங்கிக்கப்பல் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது?

அ. INS விக்ராந்த்

ஆ. INS குக்ரி ☑

இ. INS கட்டபொம்மன்

ஈ. INS ஷிவாலிக்

✓ இந்தியக் கடற்படையின் முதல் உள்நாட்டு ஏவுகணையான INS குக்ரி (P49), தேசத்திற்கும் கடற்படைக்கும் 32 ஆண்டுகள் சேவையாற்றிய பிறகு, கப்பல் அருங்காட்சியகமாக மாற்றப்படுவதற்காக டையூ நிர்வாகத்திற்குக்கொண்டு செல்லப்பட்டது. சமீபத்தில் குக்ரி அருங்காட்சியகத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா திறந்துவைத்தார். புதிதாக திறக்கப்பட்ட இக்கப்பல் அருங்காட்சியகமும் தற்போதுள்ள INS குக்ரி நினைவகமும் டையூவில் உள்ளன.

10. "United in Making Our Voice Heard" என்பது 2022 ஜூனில் கடைப்பிடிக்கப்படும் எந்த உலக நாளின் கருப்பொருளாகும்?

அ. உலக அல்பினிசம் விழிப்புணர்வு நாள் ☑

ஆ. வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளின் உலக நாள்

இ. குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலக நாள்

ஈ. உலக முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு நாள்

✓ ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது கடந்த 2015இல் ஜூன்.13ஆம் தேதியை உலக அல்பினிசம் விழிப்புணர்வு நாள் என அறிவித்தது. அல்பினிசம் உள்ளவர்களின் உரிமைகள்பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இது ஒரு பிறவிக்கோளாறு ஆகும். இது தோல், கண்கள் மற்றும் முடியில் நிறமி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இல்லாததால் ஏற்படுகிறது. "United in Making Our Voice Heard" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்நாளிற்கான கருப்பொருளாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 2022 ஜூன்.29 அன்று புள்ளியியல் தினம் கொண்டாடப்படவுள்ளது

பொருளாதார திட்டமிடல் மற்றும் புள்ளியியல் துறைக்கு மறைந்த பேராசிரியர் பிரசந்த சந்திர மகாலனோபிஸ் வழங்கிய மதிப்புமிகு பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அவரது பிறந்தநாளான ஜூன்.29 ஒவ்வோர் ஆண்டும் புள்ளியியல் நாளாக மத்திய அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாட்டின் சமூக–பொருளாதார திட்டமிடல், வளர்ச்சிக்கான கொள்கை வகுத்தல் ஆகியவற்றில் புள்ளியியலின் பங்களிப்பும், முக்கியத்துவமும் குறித்து பொதுமக்களிடையே குறிப்பாக இளந்தலைமுறையினரிடையே விழிப்பு உணர்வை ஏற்படுத்தியது புள்ளியியல் நாளின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வோர் ஆண்டும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மையப்பொருளில் இந்த விழா கொண்டாடப்படும். இந்த ஆண்டு "நீடித்த வளர்ச்சிக்கான தரவுகள்" என்பது மையப்பொருளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மாணவிகளுக்கு மாதம் ₹1,000: விண்ணப்பிக்க தனி இணையதளம்

பட்டப்படிப்பு படிக்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் தொடர்பான விவரம்பெற கட்டணமில்லாத தொலைபேசி எண் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க பிரத்யேக இணையதளமும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சான்றிதழ் படிப்பு, பட்டயம், பட்டம், தொழிற்கல்வி ஆகியன படிக்கும் மாணவிகளுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தின்கீழ், மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. அரசுப்பள்ளிகளில் 6–ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை பயின்று இருக்க வேண்டும். கல்வி உரிமைச்சட்டத்தின்கீழ், தனியார் பள்ளியில் 6–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை பயின்று அதன்பின்பு 9 முதல் பிளஸ் 2 வரை அரசுப் பள்ளியில் படித்த மாணவிகளும் இந்த நிதியுதவித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

அரசுப் பள்ளிகள் எவை? ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், நகராட்சிப்பள்ளிகள், மாநகராட்சிப்பள்ளிகள், பழங்குடியினர் நலப்பள்ளிகள், கள்ளர் சீர்மரபினப்பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலப்பள்ளிகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை பள்ளிகள், வனம், சமூக பாதுகாப்புத் துறைகளின் பள்ளிகள் போன்றவற்றில் பயிலும் மாணவிகளும் நிதியுதவித் திட்டத்தின்கீழ் பயன் பெறலாம்.

எந்தெந்த படிப்புகள்? எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 வகுப்புகளில் படித்து பின்னர் முதன்முறையாக உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் படிப்புக்கு மட்டுமே திட்டம் பொருந்தும். ஐடிஐ., ஆசிரியர் பட்டயப்படிப்பு, பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்., பிபிஏ., பிசிஏ, உள்பட அனைத்து கலை மற்றும் அறிவியல், கவின்கலை கல்லூரி பாடங்கள், பிஇ., பி.டெக்., எம்.பி.பி.எஸ்., பிடிஎஸ்., பி.எஸ்.சி., (வேளாண்மை), இளங்கலை கால்நடை அறிவியல், சட்டம், இணை மருத்துவப்படிப்புகள் (நர்சிங், பார்மஸி, பிசியோதெரபி) ஆகியன படிக்கும் மாணவிகள் விண்ணப்பிக்கலாம்.

இரண்டாம், மூன்றாம் ஆண்டுகள்: தொலைதூரக்கல்வி மற்றும் திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவிகளுக்கு இத்திட்டம் பொருந்தாது. நிகழ் கல்வியாண்டில் மாணவிகள் புதிதாக மேற்படிப்பில் முதலாமாண்டு சேர்ந்த பின்னர், இணையதளம் வழியாக இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பம் செய்யலாம்.

மேலும், முதலாம் ஆண்டிலிருந்து இரண்டாம் ஆண்டு செல்லும் மாணவியரும், இரண்டாம் ஆண்டில் இருந்து மூன்றாம் ஆண்டு செல்வோரும் விண்ணப்பிக்கலாம். தொழில் மற்றும் மருத்துவப்படிப்புகளில் இறுதி ஆண்டு செல்லும் மாணவிகளும் இந்தத் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

கடந்த கல்வியாண்டில் (2021–22) இறுதியாண்டு பயிலும் மாணவிகள் இந்தத்திட்டத்தின்கீழ் பயனடைய இயலாது. இந்த மாணவிகள் ஒரு சில மாதங்களில் தங்களது படிப்பை நிறைவு செய்வர். இந்தத்திட்டத்தின்கீழ், இளநிலை படிப்பு பயிலும் மாணவிகள் மட்டுமே பயனடைய முடியும். முதுநிலை படிப்பு பயிலும் மாணவிகள் பயன்பெற இயலாது. இந்தத் திட்டத்தின் பயன்பெறுவது குறித்து தங்களுக்குத் தேவையான தெளிவுரைகள், கூடுதல் விவரங்களை கட்டணமில்லாத தொலைபேசி (14417) எண்ணை தொடர்புகொண்டு பெறலாம் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. 'India's Booming Gig and Platform Economy' என்ற தலைப்பில் அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. உலக வங்கி

ஆ. உலக தொழிலாளர் அமைப்பு

இ. NITI ஆயோக் ☑

ஈ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ "இந்தியாவில் பெருகிவரும் வேலைவாய்ப்பு மற்றும் சாலையோர பொருளாதாரம்" என்ற தலைப்பிலான அறிக்கை ஒன்றை NITI ஆயோக் வெளியிட்டுள்ளது. இந்திய சாலையோர தொழில்புரிகுவோரின் எண்ணிக்கை 2029-30 ஆம் ஆண்டுக்குள் 23.5 மில்லியனாக விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது; அது தற்போதுள்ள 7.7 மில்லியனை ஒப்பிடும்போது 200 சதவீதம் அதிகமாகும். 2029-2030-க்குள் இந்தியாவில் உள்ள மொத்த பணியாளர்களில் இவர்களின் சதவீதம் மட்டும் 4.1 சதவீதத்தைக் கொண்டிருக்கும் என இவ்வறிக்கை மதிப்பிடுகிறது; அது தற்போது 1.5 சதவீதமாக உள்ளது.

2. மாவட்டங்களுக்கான செயல்திறன் தர அட்டவணையை (PGI-D) வெளியிட்ட நடுவண் அமைச்சகம் எது?

அ. MSME அமைச்சகம்

ஆ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

இ. கல்வி அமைச்சகம் ☑

ஈ. ஜல் சக்தி அமைச்சகம்

✓ கல்வி அமைச்சகமானது 2019-20ஆம் ஆண்டிற்கான மாவட்டங்களுக்கான செயல்திறன் தரவரிசை குறியீட்டை (PGI-D) வெளியிட்டது. மேலும், இந்தியா முழுவதும் உள்ள பள்ளிகள் டிஜிட்டல் கற்றல் வகையின்கீழ் மிகமோசமாக செயல்பட்டதாக அது குறிப்பிட்டது. இராஜஸ்தானில் உள்ள ஜெய்ப்பூர், சிகார் மற்றும் ஜுஞ்சுனு மாவட்டங்கள் சிறப்பாக செயல்பட்டுள்ளன. PGI-D அமைப்பு ஆறு வகைகளின்கீழ் 600 புள்ளிகளைக்கொண்டு இதனை தயார் செய்துள்ளது.

3. கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைக்காகமானது கீழ்க்காணும் எந்த நகரத்தில் 'One Health – ஒரு சுகாதாரம்' என்ற முன்னோடித் திட்டத்தைத் தொடங்கவுள்ளது?

அ. சென்னை

ஆ. பெங்களூரு ☑

இ. ஆமதாபாத்

ஈ. மைசூர்

✓ நடுவண் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை, இந்திய அரசின் மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து 'ஒரு சுகாதார' முன்னோடித் திட்டத்தை செயல்படுத்தவுள்ளன.

✓ மனிதர்கள், விலங்குகள் எதிர்கொள்ளும் சுகாதாரப்பிரச்சனைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை ஒரே தளத்தில் எதிர்கொள்வதற்கான இம்முன்னோடித் திட்டம், பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை, இந்திய தொழில்கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறையால் கர்நாடகா, உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் செயல்படுத்தப்படவுள்ளன.

4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற T-ஹப் என்பது எந்த மாநிலத்தில் உள்ள துளிர் நிறுவன அடைவகமாம்?

அ. தமிழ்நாடு

ஆ. தெலுங்கானா ☑

இ. திரிபுரா

ஈ. கர்நாடகா

✓ தெலுங்கானா மாநில முதலமைச்சர் K சந்திரசேகர் இராவ் அண்மையில் ஹைதராபாத்தில் 'T–ஹப்' என்ற வணிக அடைவகத்தை திறந்து வைத்தார். 'T–Hub 2.0' என்று அழைக்கப்படும் இந்தப் புதிய கட்டிடம், உலகின் மிகப்பெரிய புத்தாக்க வளாகம் எனக் கூறப்படுகிறது. இந்த வசதி ஒரே கூரையின் கீழ் 2,000 துளிர்நிறுவல்களை ஆதரிக்கும். கடந்த 2015இல் நிறுவப்பட்ட, T–ஹப் (தொழில்நுட்ப மையம்) என்பது ஹைதராபாத் நகரத்தைச் சார்ந்த ஒரு புத்தாக்க மையமாகும்.

5. 2023–இல் G20 உச்சிமாநாட்டை நடத்தும் இந்திய மாநிலம்/UT எது?

அ. கேரளா

ஆ. ஜம்மு காஷ்மீர் ☑

இ. ஒடிஸா

ஈ. சிக்கிம்

✓ 2023இல் இந்தியா நடத்தும் G20 உச்சிமாநாட்டின்போதான கூட்டங்களுக்கு ஜம்மு மற்றும் காஷ்மீரை வெளியுறவு அமைச்சகம் தேர்ந்தெடுத்துள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசாங்கம் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பிற்காக ஐந்துபேர் கொண்ட உயரதிகாரங்கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது. யூனியன் பிரதேசத்தில் நடைபெறும் முதல் G20 கூட்டங்களாம் இவை. ஜம்மு–காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து இரத்துசெய்யப்பட்ட பிறகு அங்கு நடைபெறும் முதல் சர்வதேச மாநாடு இதுவாகும்.

6. விரிவான புற்றுநோய் கண்டறியும் சேவைகளுக்காக நாட்டின் முதல் புற்றுநோயியல் ஆய்வகத்தை தொடக்கிய மாநிலம் எது?



அ. தமிழ்நாடு

ஆ. கேரளா ☑

இ. குஜராத்

ஈ. கர்நாடகா

✓ விரிவான புற்றுநோய் கண்டறியும் சேவைகளுக்கான நாட்டின் முதல் புற்றுநோயியல் ஆய்வகமான புற்றுநோய் கண்டறிதல் மற்றும் ஆராய்ச்சி மையத்தை கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் தொடங்கி வைத்தார். கார்கினோஸ் ஹெல்த்கேரின் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் ஆராய்ச்சிக்கான இம்மேம்பட்ட மையம் ஒரு மைய ஆய்வகமாக செயல்படும். தொடக்கக்கால நோயறிதல் கருவிகள், துல்லியமான மருத்துவத்திற்கான மூலக்கூறு மதிப்பீடுகள் ஆகியவற்றில் கவனஞ்செலுத்தப்படுகிறது. TATA குழுமம் ₹110 கோடியை கார்கினோஸில் முதலீடு செய்கிறது. இரகுடென் மெடிக்கல், மேயோ கிளினிக் மற்றும் ரிலையன்ஸ் டிஜிட்டல் ஹெல்த் முதலானவை மற்ற பங்குதாரர்கள் ஆகும்.

7. 'இந்திய இரயில்வேக்கான புதுமைக்கொள்கையின்'படி, கண்டுபிடிப்பாளர்களுக்கு வழங்கப்படும் மானியத்தின் அதிகபட்ச வரம்பு என்ன?

அ. ரூ.10 இலட்சம்

ஆ. ரூ.25 இலட்சம்

இ. ரூ.50 இலட்சம்

ஈ. ரூ 1.5 கோடி ☑

✓ துளிர்–நிறுவல்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில், ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், 'இந்திய இரயில்வேக்கான புதுமைக்கொள்கை'யை அறிமுகப்படுத்தினார். 'இரயில்வேக்கான துளிர்–நிறுவல்கள்' என்றும் குறிப்பிடப்படும் இந்தக் கொள்கையானது ₹1.5 கோடி மதிப்பில் சம பகிர்வு அடிப்படையில் கண்டுபிடிப்பாளர்களுக்கு மூலதன மானியத்தை வழங்கும்.

8. தொற்றுநோய் காலத்தில் இந்தியாவிலிருந்து அரிசியை அதிகம் வாங்கிய நாடு எது?

அ. மாலத்தீவுகள் ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

இ. சீனா ☑ ஈ. தென் கொரியா

✓ 2021–22 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த அரிசி ஏற்றுமதியில் 16.34 லட்சம் மெட்ரிக் டன்கள் (LMT) அல்லது 7.7 சதவீதத்தை இறக்குமதி செய்து, தொற்றுநோய்களின்போது இந்திய அரிசியை அதிக அளவில் வாங்கிய நாடாக சீனா உருவெடுத்தது. 2021–22இல், இந்தியாவின் மொத்த அரிசி ஏற்றுமதி (பாசுமதி மற்றும் பாசுமதி அல்லாத இரண்டும்) 212.10 LMT ஆக இருந்தது. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சீனாவின் மொத்த அரிசியில், கிட்டத்தட்ட 97% உடைந்த அரிசியாகும்; இது அந்த நாட்டின் அதீத தேவையை உணர்த்துகிறது. இந்தியா முன்பு பெரும்பாலும் உடைந்த அரிசியை ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தது.

9. இந்தியா சமீபத்தில் அந்தமான் கடல் மற்றும் மலாக்கா நீரிணையில் எந்த நாட்டுடன் இணைந்து ஒருங்கிணைந்த ரோந்துப்பயிற்சியை மேற்கொண்டது?

அ. வங்காளதேசம்

ஆ. இந்தோனேசியா ☑

இ. இலங்கை

ஈ. பிரான்ஸ்

✓ இந்திய மற்றும் இந்தோனேசிய கடற்படைக்கு இடையிலான 38ஆம் இந்தியா–இந்தோனேசியா ஒருங்கிணைந்த ரோந்துப்பயிற்சி (IND–INDO CORPAT) அந்தமான் கடல் மற்றும் மலாக்கா நீரிணையில் நடத்தப்படுகிறது. அந்தமான் மற்றும் நிக்கோபார் படைப்பிரிவின் கடற்படைப் பிரிவுகள் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இரு நாடுகளுக்கும் இடையிலான முதல் தொற்றுநோய்க்குப் பிந்தைய ஒருங்கிணைந்த ரோந்து (CORPAT) இதுவாகும். இருகடற்படைகளும் கடந்த 2002ஆம் ஆண்டு முதல் பன்னாட்டு கடல் எல்லைக்கோட்டின் வழியாக 'CORPAT'ஐ மேற்கொண்டு வருகின்றன.

10. 'பிரதம மந்திரி தேசிய தொழிற்பயிற்சி மேளா'வுடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம் ☑

ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

இ. MSME அமைச்சகம்

ஈ. கல்வி அமைச்சகம்

कौशल विकास और
उद्यमशीलता मंत्रालय
MINISTRY OF
SKILL DEVELOPMENT
AND ENTREPRENEURSHIP
सत्यमेव जयते

✓ திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம் ஒவ்வொரு மாதமும் பிரதம மந்திரி தேசிய தொழிற்பயிற்சி மேளாவை ஏற்பாடு செய்யும். ஒரு நபரின் பயிற்சிக்காலத்தின் முடிவில், அவர்களுக்கு தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்–கான தேசிய கவுன்சில்மூலம் (NCVET) அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும். இம்மேளாவின் முதன்மை நோக்கம் நகரங்களிலிருந்து தொழில்பழகுநரை பணியமர்த்துவதை ஊக்குவிப்பதாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நெகிழி தடை ஜூலை 1 முதல் அமல்

ஒருமுறை மட்டும் பயனபடுத்தக்கூடிய நெகிழி (பிளாஸ்டிக்) பொருள்களுக்கு விதிக்கப்பட்ட தடை வரும் ஜூலை 1–ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. நெகிழி கழிவு மேலாண்மை திருத்த விதிமுறைகளை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 12–ஆம் தேதி மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிவித்தது.

அதன்படி, ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருள்களின் உற்பத்தி, இறக்குமதி, இருப்பு வைத்தல், விநியோகித்தல், விற்பனை, பயன்பாட்டிற்கு வரும் ஜூலை 1 முதல் நாடு முழுவதும் தடை விதிக்கப்படுகிறது. ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழி குப்பைகளால் நிலப்பரப்பிலும், நீர் நிலைகளிலும், ஆழ்கடல் பரப்பிலும் பாதிப்பு ஏற்படுகிறது.

2019–இல் நடைபெற்ற ஐ.நா.வின் நான்காவது சுற்றுச்சூழல் மாநாட்டில், ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருள்களால் சுற்றுச்சூழல் மாசுபாடு குறித்து உலக அளவில் கவனஞ்செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இந்தியா முன்மொழிந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தடை செய்யப்படும் நெகிழிப் பொருள்கள்: நெகிழி குச்சிகளுடன் கூடிய காது குடையும் பஞ்சு, நெகிழி குச்சிகளுடன் கூடிய பலூன்கள், நெகிழி கொடிகள், ஐஸ்கிரீம் குச்சிகள், அலங்காரத்திற்கான தெர்மோகோல், நெகிழி தட்டுகள், குவளைகள், நெகிழி கத்தி, ஸ்பூன், போர்க், உறிஞ்சுக்குழல், டிரே, சுவீட் பாக்ஸ், அழைப்பிதழ் அட்டைகள், சிகரெட் பாக்கெட்டுகள், 100 மைக்ரானுக்கும் குறைவான நெகிழி அல்லது பிவிசி பேனர்கள் போன்றவை தடைசெய்யப்பட்ட பொருள்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இதில் அரசுக்கு உதவும் வகையில், மக்களுக்கு அதிகாரம் அளிக்க குறைதீர்ப்பு செயலியை மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் உருவாக்கியுள்ளது என்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 'பிரக்ரித்தி' என்ற இலட்சினை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

---

2. 29–06–2022 – தேசிய புள்ளியியல் நாள்

பொருளாதார திட்டமிடல் மற்றும் புள்ளியியல் துறைக்கு மறைந்த பேராசிரியர் பிரசந்த சந்திர மகாலனோபிஸ் வழங்கிய மதிப்புமிகு பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அவரது பிறந்தநாளான ஜூன்.29 ஒவ்வோர் ஆண்டும் புள்ளியியல் நாளாக ஒன்றிய அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாட்டின் சமூக–பொருளாதார திட்டமிடல், வளர்ச்சிக்கான கொள்கை வகுத்தல் ஆகியவற்றில் புள்ளியியலின் பங்களிப்பும், முக்கியத்துவமும் குறித்து பொதுமக்களிடையே குறிப்பாக இளந்தலைமுறையினர் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது புள்ளியியல் நாளின் முக்கிய நோக்கமாகும். ஆண்டுதோறும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருப்பொருளில் இந்த நாள் கொண்டாடப்படும். இந்த ஆண்டு (2022) "நீடித்த வளர்ச்சிக்கான தரவுகள்" என்பது கருப்பொருளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

3. தொழில்நுட்ப குளறுபடியை தீர்க்க 50 ஆயிரம் மாணவர்களுக்கு பயிற்சி

கல்லூரி மாணவர்கள் 50 ஆயிரம் பேருக்கு, தொழில்நுட்ப கோளாறுகளை சரி செய்யும், 'நாளைய திறன்' பயிற்சி திட்டம் விரைவில் தொடக்கப்படும் என, தமிழக தகவல் தொழில்நுட்பவியல் துறை தெரிவித்துள்ளது.

இதன்படி, 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ், 'நாளைய திறன்' என்ற திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ், கல்லூரி மாணவர்கள் 50 ஆயிரம் பேருக்கு, தொழில்நுட்பத்தை பயன்படுத்தும்போது ஏற்படும் கோளாறுகளை சரி செய்வதற்கான பயிற்சியளிக்கப்படும்.

---

4. தொழிலணங்கு – பெண்களை தொழில்முனைவோராக்கும் தமிழ்நாடு அரசின் திட்டம்

தமிழ்நாட்டில் துளிர் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் வகையில் இளைஞர்களை தொழில்முனைவோராக்கும் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு புத்தொழில்கள் மற்றும் புத்தாக்க இயக்கம் (Tamil Nadu Startup and Innovation Mission) மேற்கொண்டு வருகிறது. அவ்வகையில் தற்போது பெண்களின் மறுமலர்ச்சிக்காக 'தொழிலணங்கு' என்ற புதிய திட்டத்தை கையில் எடுத்துள்ளது தமிழ்நாடு புத்தொழில்கள் மற்றும் புத்தாக்க நிறுவனம்.

சுய உதவிக் குழுக்களின் செயல்முறையை முற்றிலுமாக மாற்றி அதன் உறுப்பினர்களை ஆக்கபூர்வமான தொழில் முனைவோர்களாக உருவாக்குவதே இம்முயற்சியின் நோக்கம். இதனடிப்படையில் பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து 'Smart SHG' குழுக்களில் இருந்து உருவாகும் தொழிற்முயற்சிகளுக்கு பல்வேறு உதவிகளைத் தொடர்ந்து செய்யவிருக்கின்றன.

---

5. உயர்நீதிமன்றத்தில் முதல் முறை பெண் தபேதார் நியமனம்

சென்னை உயர்நீதிமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக திலானி என்ற பெண் தபேதாராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அண்மையில் நடந்த சென்னை உயர்நீதிமன்ற பணியாளர்கள் நியமனத்தில், இவர் தேர்வு செய்யப்பட்டு, தற்போது தபேதாராக நீதிபதி மஞ்சுளாவிடம் பணிபுரிந்து வருகிறார்.

---

6. 11ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சார்ஜாவில் 2023ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெறும்

11ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சார்ஜாவில் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு சிகாகோவில் 10ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. உலகத் தமிழாராய்ச்சி ஆனது 1966ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தி வருகிறது.

---

1. அண்மையில் தொடங்கப்பட்ட, 'தக் கர்மயோகி' இணையதளத்தின் நோக்கம் என்ன?

அ. குறை நிவர்த்தி

ஆ. ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல் ☑

இ. சிறந்த கலைஞர்களுக்கு விருது வழங்கல்

ஈ. பொதுமக்கள் பங்கேற்பு

✓ அஞ்சல் துறையின், 'தக் கர்மயோகி' என்னும் இ–கற்றல் இணையத்தளத்தை தகவல் தொடர்புத்துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தொடங்கி வைத்தார். அரசு ஊழியர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக பிரதமர் மோடியால் உருவாக்கப்பட்ட, 'மிஷன் கர்மயோகி' திட்டத்தின்கீழ் இது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஹெர்மிட்' என்றால் என்ன?

அ. ஏவுகணை

ஆ. செயற்கைக்கோள்

இ. உளவு நிரல் ☑

ஈ. தடுப்பூசி

✓ அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'ஹெர்மிட்' என்பது சமீபத்திய அதிநவீன உளவு நிரலின் பெயராகும். இது இத்தாலி மற்றும் கஜகஸ்தானில் ஐபோன்கள் மற்றும் ஆண்ட்ராய்டு சாதனங்களை குறிவைத்ததாக நம்பப்படுகிறது. 'RCS லேப்' என்ற இத்தாலிய விற்பனையாளரால் இந்த உளவு நிரல் உருவாக்கப்பட்டுள்ளது. கூகிளின் அச்சுறுத்தல் பகுப்பாய்வுக்குழு சமீபத்தில் 'ஹெர்மிட்' எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது குறித்த ஒரு விரிவான வலைப்பதிவு இடுகையை வெளியிட்டது.

3. தேசிய நெடுஞ்சாலைகள் சிறப்புறு விருதுகள் (NHEA) எவ்வகையினரைப் பாராட்டுவதற்காக நிறுவப்பட்டது?

அ. நிறுவனங்கள் ☑

ஆ. பொதுமக்கள்

இ. அதிகாரத்துவவாதிகள்

ஈ. பணியாளர்கள்

✓ நாட்டில் சாலைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த மற்றும் வலுப்படுத்துவதற்காக, சாலைகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்கப்படுத்த, நடுவண் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை, கடந்த 2018ஆம் ஆண்டு முதல் தேசிய நெடுஞ்சாலைகள் சிறப்புறு விருதுகளை வழங்கி வருகிறது. இது சாலைக் கட்டுமான மற்றும் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுவோரிடையே ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தும். நாடு முழுவதுமுள்ள சாலை சொத்துக்களை சரியாகப் பராமரித்து வரும் மற்றும் சுங்கச்சாவடிகளுக்கான நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக விருது வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற RAMP திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகத்துடன் எது?

அ. கல்வி அமைச்சகம்

ஆ. MSME அமைச்சகம் ☑

இ. வேளாண் அமைச்சகம்

ஈ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

✓ புது தில்லியில் நிகழ்ந்த 'உத்யமி பாரத்' நிகழ்வில், 'MSME செயல்திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல்' (RAMP) திட்டத்தைத் தொடங்க பிரதமர் மோடி பங்கேற்றார். 'முதன்முறை MSME ஏற்றுமதியாளர்களின் திறனைக் கட்டமைத்தல்' திட்டத்தையும், 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' (PMEGP) புதிய அம்சங்களையும் அவர் தொடங்கினார். MSME Idea Hackathon, 2022–இன் இறுதி முடிவுகள் அறிவிக்கப்பட்டு தேசிய MSME விருதுகள் அப்போது வழங்கப்பட்டன.

5. 'தேசிய காப்பீட்டு விழிப்புணர்வு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஜூன்.25

ஆ. ஜூன்.27

இ. ஜூன்.28 ☑

ஈ. ஜூன்.30

✓ காப்பீட்டுத்திட்டத்தில் முதலீடு செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்–காக ஆண்டுதோறும் ஜூன்.28ஆம் தேதி தேசிய காப்பீட்டு விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்படுகிறது. லண்டனில் நிகழ்ந்த ஒரு பெரிய தீ விபத்துக்குப்பிறகு, நிக்கோலஸ் பார்பன் என்பார் கிபி 1666–இல் முதல் தீ காப்பீட்டு நிறுவனத்தை நிறுவினார். அதன்பிறகு, காப்பீட்டு சந்தை பல புதிய துறைகளுக்கு விரிவடைந்துள்ளது.

6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'கிஹோடோ ஹோலோஹான்' தீர்ப்புடன் தொடர்புடைய மாநிலம் எது?

அ. சிக்கிம்

ஆ. மகாராஷ்டிரா ☑

இ. மத்திய பிரதேசம்

ஈ. குஜராத்

✓ மகாராஷ்டிர மாநில அரசியல் நெருக்கடிக்கு இடையில், துணை சபாநாயகரின் பங்கு மற்றும் அதிகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு வருகிறது. 'கிஹோடோ ஹோலோஹான் எதிர் சாசில்ஹு & அதர்ஸ்' (1992) என்ற வரலாற்றில் பதிந்த தீர்ப்பில், எம்எல்ஏக்கள் தகுதி நீக்கம் தொடர்பான வழக்குகளை முடிவெடுப்பதில் சபாநாயகருக்கு இருக்கும் முழுமையான விருப்புரிமையை உச்சநீதிமன்றம் உறுதிசெய்திருந்தது.

7. இந்தியாவில், 'குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு வாரம்' கடைப்பிடிக்கப்பட்டது எப்போது?

அ. ஜூன் 01-07

ஆ. ஜூன் 12-20 ☑

இ. ஜூன் 20-27

ஈ. ஜூலை 01-07

✓ குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக நாளை முன்னிட்டு (ஜூன்.12) ஜூன்.12 முதல் ஜூன்.20 வரை 75 இடங்களில் தேசிய சிறார் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், NCPCR 'குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு வாரம்' கடைப்பிடித்தது. இவ்வார கடைப்பிடிப்பின்போது மாநில ஆணையம், மாவட்ட அதிகாரிகள், குழந்தைகள் நலக் குழுக்கள்போன்ற அதிகாரிகளின் உதவியுடன், நாடு முழுவதும் 75 இடங்களில் வேலையில் ஈடுபட்டுள்ள குழந்தைகள் மீட்கப்படுவார்கள்.

8. எந்த நாட்டில் நடைபெற்ற பாவோ நூர்மி விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா தனது தேசிய சாதனையை முறியடித்தார்?

அ. இந்தோனேசியா ஆ. மங்கோலியா

இ. பின்லாந்து ☑ ஈ. துருக்கி



✓ பின்லாந்தின் துர்கு நகரத்தில் நடைபெற்ற பாவோ நூர்மி விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா தனது தேசிய சாதனையை முறியடித்தார். அங்கு அவர் 89.30 மீட்டர் தூரம் ஈட்டியெறிந்து, அவரின் டோக்கியோ ஒலிம்பிக் சாதனையை (87.58 மீட்டர்) விஞ்சி புதிய தேசிய சாதனையைப் படைத்தார். இது அவரை தடகளத்தில் தங்கப்பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் வீரர் எனவாக்கியது. அவரது சமீபத்திய ஈட்டியெறிதல், அவருக்கு வெள்ளியைப் பெற்றுத்தந்தது.

9. இந்திய இரயில்வேயின் 'பாரத் கௌரவ்' திட்டத்தின்கீழ் இயக்கப்பட்ட முதல் இரயில் கீழ்க்காணும் எவ்விரு நகரங்களுக்கு இடையே கொடியசைத்து தொடக்கி வைக்கப்பட்டது?

அ. மும்பை-ஆமதாபாத்

ஆ. கோயம்புத்தூர்-ஷீரடி ☑

இ. இராமேஸ்வரம்-அயோத்தி

ஈ. பூரி-ஹைதராபாத்

✓ இந்திய ரயில்வேயின், 'பாரத் கௌரவ்' திட்டத்தின்கீழ் முதல் இரயில், மகாராஷ்டிர மாநிலத்தின் சாய்நகர் ஷீரடிக்கும் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் வடக்கு ரயில் நிலையத்திற்கும் இடையே கொடியசைத்துத் தொடக்கிவைக்கப்பட்டது. இக்குறிப்பிட்ட இரயிலை, 'சௌத் ஸ்டார் ரயில்' என்ற தனியார் நிறுவனம் இயக்கும். ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் கோயம்புத்தூரிலிருந்து புறப்படும் இது வியாழக்கிழமைகளில் ஷீரடியை சென்றடையும். இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் வரலாற்று இடங்களை இந்தியா மற்றும் உலக மக்களுக்கு காட்சிப்படுத்துவதே இந்த 'பாரத் கௌரவ்' திட்டத்தின் நோக்கமாகும்.

10. இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உலகளாவிய மாநாட்டை நடத்திய நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. ஜப்பான்

இ. எகிப்து ☑

ஈ. பிரான்ஸ்

✓ எகிப்து, ஷர்ம் எல் ஷேக்கில் இளம் பாராளுமன்ற உறுப்பினர்களின் எட்டாவது உலகளாவிய மாநாட்டை நடத்தியது. இம்மாநாட்டைப் பிரதிநிதிகள் சபை மற்றும் நாடாளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியம் (IPU) கூட்டாக ஏற்பாடு செய்துள்ளது. 60 நாடுகளைச் சேர்ந்த சுமார் இருநூறு இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கான உத்திகள் குறித்து விவாதிக்கவுள்ளனர். நாகாலாந்தின் முதல் பெண் மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ் பாங்கோன் கொன்யாக் இந்த மாநாட்டில் இந்தியாவின் சார்பாக பங்கேற்றார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அட்டர்னி ஜெனரல் வேணுகோபாலுக்கு 3 மாதங்கள் பணி நீட்டிப்பு

அட்டர்னி ஜெனரலாக (நடுவணரசுத்தலைமை வழக்குரைஞர்) K K வேணுகோபால் (91) மேலும் 3 மாதங்களுக்கு பணியாற்ற ஒப்புக்கொண்டுள்ளார். மத்திய அரசின் வேண்டுகோளை அடுத்து அவர் பணி நீட்டிப்பை ஏற்றுக் கொண்டார். அவரது பதவிக்காலம் ஜூன்.30–ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. தனிப்பட்ட காரணங்களால் அவர் பதவியில் தொடர விரும்பம் தெரிவிக்கவில்லை. எனினும், மத்திய அரசின் வேண்டுகோளை ஏற்று அவர் அடுத்த 3 மாதங்களுக்கு பணியில் தொடரவிருக்கிறார்.

2017 ஜூலை முதல் அவர் அட்டர்னி ஜெனரலாகப் பணியாற்றி வருகிறார். மூத்த வழக்குரைஞரான அவர், அரசியல்சாசன சட்டம், பெருநிறுவனச்சட்டங்கள் தொடர்பான வழக்குகளில் ஆஜராகி வருகிறார். 1979–80–ஆம்

ஆண்டுகளில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாகவும் அவர் பதவி வகித்துள்ளார். 2002–ஆம் ஆண்டு 'பத்ம பூஷண்' விருதும், 2015–ஆம் ஆண்டு 'பத்ம விபூஷண்' விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.

---

2. ஆஸ்கர் குழுவில் உறுப்பினராக அழைக்கப்பட்ட முதல் தென்னிந்திய நடிகர் சூர்யா

ஆஸ்கர் விருது கலை மற்றும் அறிவியல் குழுவில் உறுப்பினராக அழைப்புவிடுவிக்கப்பட்ட முதல் தென்னிந்திய நடிகர் என்ற பெருமையை சூர்யா பெற்றுள்ளார். ஒவ்வோர் ஆண்டும் ஆஸ்கர் விருது குழுவில் உறுப்பினராக சேர பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் அழைக்கப்படுவார்கள். அந்த வகையில் இந்த ஆண்டு கலை மற்றும் அறிவியல் பிரிவில் இந்தியா சார்பாக நடிகர் சூர்யா அழைக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து ஆஸ்கர் விருது குழுவில் உறுப்பினராகவிருக்கும் முதல் தென்னிந்திய நடிகர் என்ற பெருமையை நடிகர் சூர்யா பெற்றுள்ளார். அவருடன் ஹிந்தி நடிகை கஜோலுக்கும் அழைப்புவிடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்திய சார்பில் இயக்குநர் பிரிவில் பான் நலின் என்பவருக்கும் ஆவணப் படங்கள் பிரிவில், சுஷ்மித் கோஷ் மற்றும் ரிண்டு தாமஸ் ஆகிய இருவருக்கும், எழுத்தாளர்கள் பிரிவில் ரீமா காக்டி என்பவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

---

3. தமிழ்நாட்டில் உறுப்பினர்கள் எண்ணிக்கை

குடியரசுத்தலைவர் தேர்தலில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மக்களவை, மாநிலங்களவை, சட்டப்பேரவை உறுப்பினர்கள் வாக்களிக்கவுள்ளனர். தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் 234 பேரும், மக்களவை உறுப்பி–னர்கள் 39 பேரும், மாநிலங்களவை உறுப்பினர்கள் 18 பேரும் உள்ளனர். மொத்தமாக 291 பேர் வாக்காளர்கள்.

---

4. சிறந்த மாணவ நகரங்கள் தரவரிசை: 125–ஆவது இடத்தில் சென்னை

பிரிட்டன் தலைநகரம் லண்டனில் உள்ள குவாக்வரெல்லி சிமண்ட்ஸ் (QS) உயர்கல்வி பகுப்பாய்வு நிறுவனம், வெளிநாட்டு மாணவர்கள் உயர்கல்வி படிப்பதற்கான சிறந்த நகரங்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. 2023ஆம் ஆண்டுக்கான அந்தப்பட்டியலில் சென்னை 125–ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் உயர்கல்வியின் நிலை குறித்து அறிய, கடந்த 2010–11–ஆம் ஆண்டு முதல் அனைத்து இந்திய உயர்கல்வி ஆய்வை மத்திய கல்வி அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது. 2018–19–ஆம் ஆண்டு ஆய்வின்படி, இந்தியப்பல்கலைக்கழகங்களில் 47,427 வெளிநாட்டு மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

---

5. வான்வழி இலக்கை அழிக்கும் அதிவேக, 'அப்யாஸ்' சோதனை வெற்றி

உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிவேக 'அப்யாஸ்' வான்வழி இலக்கு வாகனம் (ஹீட்) ஒடிஸா கடற்கரையில் உள்ள சந்திப்பூர் ஒருங்கிணைந்த சோதனை மையத்திலிருந்து ஏவப்பட்டு வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

இதுகுறித்து ஒடிஸா சந்திப்பூர் ஐடிஆர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (DRDO) கீழ் உள்ள வானூர்தி அபிவிருத்தி நிறுவனத்தால் 'அப்யாஸ்' உருவாக்கப்பட்டது. வானிலுள்ள இலக்குகளைக் குறைந்த உயரத்தில் விரைந்து சென்று தாக்குவதும், தரையிலிருந்து கட்டுப்படுத்தும் வகையில் ஆளில்லாத விமானம் போலச் செயல்படுவதும் 'அப்யாஸ்' வாகனத்தின் சிறப்பாகும். இச்சோதனையின்போது, குறைந்த உயரத்தில் பாயும் தன்மையுள்ள இலக்கு வாகனத்தின் செயல்திறன், நிலைத்தன்மை, அதிக தாக்கும் திறன் உள்ளிட்டவை உறுதிசெய்யப்பட்டன. இந்த இலக்கு வாகனம், தரைக் கட்டுப்பாட்டிலிருந்து முன்னரே நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நோக்கி குறைந்த உயர விமானப்பாதையில் பறந்தது.

இது ரேடார் மற்றும் எலக்ட்ரோ–ஆப்டிக்கல் இலக்கமைப்பு உள்ளிட்ட ஒருங்கிணைந்த சோதனை மையத்திலிருந்து ஏற்கெனவே நிறுவப்பட்ட பல்வேறு கண்காணிப்பு சென்சார்களால் கண்காணிக்கப்பட்டது.

ஒலியின் வேகத்தில் பாதி வேகத்துடன் (சப்–சோனிக்) நீண்ட தூரத்துக்கு பயணம் செய்யும் வகையில் எரிவாயு டர்பைன்களால் இந்த வாகனம் இயங்குகிறது. மைக்ரோ–எலக்ட்ரோ மெக்கானிக்கல் சிஸ்டம்ஸ் அடிப்படையிலான கட்டுப்பாட்டுக் கருவிகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. தவிர, முழுமையாக தானியங்கி முறையில் இயங்கும் வகையில் இது திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.